www.padippakam.com

# வடபுலத்து பொதுவுடமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும்





சி.கா.செந்திவேல்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# வடபுலத்து பொதுவுடமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும்

சி.கா. செந்திவேல்

புதிய பூமி வெளியீட்டகம்



படிப்பகம்

www.padippakam.com


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | வடபுலத்து பொதுவுடமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும் |
| எழுதியவர் | : | சி.கா. செந்திவேல் |
| முதல் பதிப்பு | : | 30-03-2003 |
| வெளியீடு | : | புதிய பூமி வெளியீட்டகம்<br>47, 3வது தளம்,<br>கொழும்பு மத்திய சந்தைத் தொகுதி,<br>கொழும்பு-11, இலங்கை |
| அச்சகம் | : | கௌரி அச்சகம் |
| விநியோகம் | : | சவுத் ஏசியன் புக்ஸ், வசந்தம் (பிறைவேற்) லிமிடட்,<br>44, மூன்றாம் மாடி,<br>கொழும்பு மத்திய சந்தைக் கூட்டுத்தொகுதி,<br>கொழும்பு -11.<br>தொலைபேசி : 335844.<br><br>வசந்தம் புத்தக நிலையம்<br>405, ஸ்ரான்லி வீதி,<br>யாழ்ப்பாணம். |
| விலை | : | ரூபா. 200/= |

| | | |
|---|---|---|
| Title | : | Vadapulathu<br>Pothuvudamai Iyakkamum<br>Tholar Karthigesanum |
| Author | : | S.K. Senthivel |
| First Edition | : | 30-03-2003 |
| Publishers | : | Puthiya Poomi Publication<br>47, 3rd Floor, C.C.S.M. Complex<br>Colombo-11, Sri Lanka |
| Printers | : | Gowry Printers |
| Distributors | : | South Asian Books,<br>Vasantham (Pvt) Ltd,<br>No. 44, 3rd Floor, C.C.S.M. Complex,<br>Colombo -11. Tel : 335844.<br><br>Vasantham Book House,<br>405, Stanly Road,<br>Jaffna. |
| Price | : | Rs. 200/= |




படிப்பகம்

www.padippakam.com

## பதிப்புரை

இந்நூலின் ஆசிரியர் சின்னத்தம்பி காசிப்பிள்ளை செந்திவேல். வடபுலத்து புத்தூர்-சிறுபிட்டியைச் சேர்ந்தவர். நிலவுடமை வர்க்க-சாதிய அமைப்புமுறை இறுகி நின்ற சமூகச் சூழலை உடைத்துக் கொண்டு உழைப்பாளி வர்க்க குடும்பத்தில் இருந்து பொதுவுடமை இயக்கத்திற்கு வந்தவர். தனது பதினேழாவது வயதில் மாணவனாக இருந்தபோது மாக்சிசத்தால் ஈர்க்கப்பட்டவர். அதன் வழியில் பொதுவுடமை இயக்கத்தின் மாணவர் அமைப்பிலும் பின் 1960களின் முற்கூறில் இளைஞர் இயக்கத்திலும் அவற்றின் ஊடாக கட்சியிலும் இணைந்து கொண்டவர். பாடசாலைக் கல்வியை முடித்த பின் 1965ம் ஆண்டில் புரட்சிகரப் பொதுவுடமைக் கட்சியின் வடபுலத்திற்கான முழுநேர அரசியல் ஊழியராகி இன்றுவரை முழுநேர அரசியல் பணியில் இருந்து வருபவர். வாலிபர் இயக்கத்தின் வடபிரதேசச் செயலாளர், பின் வடபிரதேச கட்சிச் செயலாளராக இருந்து வந்தவர். 1989ல் இருந்து புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளராகப் பணிபுரிந்து வருகிறார். புரட்சிகர பொதுவுடமைக் கட்சியின் இளைஞர் போராட்டங்கள், வெகுஜனப் போராட்டங்கள், தொழிற்சங்கப் போராட்டங்கள் என்பனவற்றில் முன்னணியில் நின்றுவந்த தோழர் சி.கா.செ. கட்சிப் பத்திரிகைகளான தொழிலாளி, பாட்டாளி, செம்பதாகை ஆகியவற்றின் ஆசிரியர் குழுக்களில் பொறுப்பாக இருந்து செயலாற்றி வந்தவர். புதியபூமி பத்திரிகையின் பொறுப்பாசிரியாராக இருந்தும் வருகிறார். கலை இலக்கியத்தில் மாக்சிசப் பார்வையைச் செலுத்தி அதன் வளத்திற்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து வருபவர். ஏற்கனவே மூன்று நூல்களை எழுதியுள்ள தோழர் செந்தில் இப்போது **வடபுலத்து பொதுவுடமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும்** என்னும் இந் நூலை எழுதியுள்ளார். அவர் நாற்பது வருடங்களுக்கு மேலாக பொதுவுடமை இயக்க முழுநேர அரசியல் பணி ஊடாகச் செயற்பட்டு வருகிறார். அதன் மூலம் இலங்கைத் தமிழர் மத்தியில் இந்நூலை எழுதக்கூடிய தகுதிப்பாடுடையவராக தோழர் சி.கா.செ. விளங்குகின்றார்.

தமிழ் மக்களின் அரசியல் பரப்பில் மறக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட அரசியல் வரலாற்றின் மறுபக்கத்தை தோழர் சி.கா. செந்திவேல் இந்நூல் மூலம் பிரகடனப்படுத்தி சுவைபடத் தொகுத்துள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் என்பது ஆண்டபரம்பரையின் ஒரு வழிப்பாதையாக இருந்து வந்த வரலாற்றை மாற்றியமைத்து அடக்கப்பட்டோரின் புது வரலாற்றைப் புத்தாக்கம் செய்த செம்படையணி வரிசையில் முன்னின்றுழைத்து வரும் தோழர் சி.கா.செ.யின் எழுத்துப்பணி தமிழ் மக்களின் அரசியல் இலக்கியத்துக்கு வளம் சேர்ப்பதாகும்.

ஒடுக்கப்பட்ட தமிழ் மக்கள் தமது வரலாற்றையும் பண்பாட்டையும் திரும்பிப் பார்ப்பதற்கேற்றதும் நிகழ்கால- எதிர்கால வரலாற்றின் சிற்பிகளாக மக்கள் தம்மைத்தாமே ஆக்கிக்கொள்ளும் ஆளுமை பெறும் வகையில் வல்லமை தரும் பாடநூலாக இந்நூல் அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

நூல் வெளியீட்டில் எமக்குத் தொடர்ந்தும் ஆதரவாக உள்ள புத்தகப் பண்பாட்டு ஆர்வலர்களுக்கும், அச்சிட்டு உதவிய கௌரி அச்சகத்தினருக்கும், நண்பர் எஸ். இராஜரட்ணம் அவர்களுக்கும், அட்டை அமைப்பிற்குப் பொறுப்பாய் செயலாற்றிய நண்பர்களுக்கும், நூலுருப்பெற உதவிய நந்தனுக்கும், கணனி வடிவமைத்த சிந்தியா, சோபனா ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

புதியபூமி வெளியீட்டகம்

47, மூன்றாம் மாடி
கொழும்பு மத்திய சந்தைக் கூட்டுத்தொகுதி
கொழும்பு -11
இலங்கை.



படிப்பகம்

# முன்னுரை

உலக பொதுவுடமை இயக்கத்தின் ஒரு பகுதியே இலங்கையின் பொதுவுடமை இயக்கம். அதன் ஒரு அங்கமாக வளர்ச்சி பெற்று வந்ததே வடபுலத்து பொதுவுடமை இயக்கம். உலக பொதுவுடமை இயக்கத்தின் மூலவர்கள் மாபெரும் சிந்தனையாளர்களான மாக்சும் ஏங்கல்சும். 1848ல் அவர்கள் வெளியிட்ட "கம்யூனிஸ்ட் அறிக்கை" என்பது உலக முதலாளியத்தின் மீது தொடுக்கப்பட்ட போர்ப் பிரகடனமாகும். அவ் இரு மாமேதைகளும் வகுத்தளித்த மாக்சிசக் கோட்பாடு பொதுவுடமையாளர்களின் அடிப்படை உலகக் கண்ணோட்டமாகியது. முற்றிலும் அறிவியல் தளத்திலும் புறநிலை யதார்த்தத்தின் அடிப்படையிலும் கட்டியெழுப்பப்பட்ட மாக்சிசக் கோட்பாடும் அதன் ஊடான நடைமுறையும் உலகை மாற்றியமைக்கும் பாதையில் வளர்ச்சி கண்டது. முதலாளியத்தை மட்டுமன்றி அதற்கு முந்திய நிலவுடமை வழிவந்த சகல பழமைவாத பிற்போக்குத்தனங்களுக்கு எதிராகவும் மாக்சிசம் தன்னை நிலைநிறுத்தி நின்றது.

நிலவுடமைப் பழமைவாதமும் அது சார்ந்த மத வைதீக பண்பாட்டு நடைமுறைகளும் சமூக ஏற்றத்தாழ்வை படி நிலைகளுக்கு ஊடாகப் பேணி நின்றன. உயர்நிலையில் உள்ள "மேலானவர்களும்" தாழ்ந்த நிலையிலிருந்து வந்த "கீழானவர்களும்" என்ற கெட்டியான கருத்தியலும் அவை சார்ந்த நடைமுறைகளும் வடபுலத்தில் யாழ்ப்பாண பண்பாடாகவும் மரபார்ந்த சிந்தனைகளாகவும் சமூக ஆதிக்கம் பெற்றிருந்தன. அவை வடபுலத்து பொருளாதார அரசியல் சமூகப் பண்பாட்டுத் தளங்களில் மேலோங்கி அதன் பிரதிநிதிகளாகவே தமிழர் தலைமைகள் தொடர்ந்தும் ஆதிக்க அரசியல் சக்திகளாக இருந்து வந்துள்ளன.

இவற்றின் மீது விரல் சுட்டிக் கேள்வி எழுப்பியது இடதுசாரி இயக்கமாகும். முதலில் சமசமாஜக் கட்சியும் அதனைத் தொடர்ந்து பொதுவுடமைக் கட்சியும் வடபுலத்து சமூக சூழலில் அதிர்வுகளை ஏற்படுத்திய கட்சிகளாகும். இருப்பினும் பொதுவுடமை கட்சியானது தொடர்ச்சியானதும் பரந்துபட்டதுமான தளங்களில் நின்று பழமைவாதத்திற்கும் அதன் ஆதிக்கக் கருத்தியல்களுக்கும் எதிர்தாக்குதல் கொடுத்து நின்றது. தொழிலாளர்கள், விவசாயிகள், சமூக அடிநிலையில் இருந்து வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் என்போர் மத்தியில் மாக்சிசத்தை அறிவு பூர்வமாகவும் நடைமுறைகள் வாயிலாகவும் முன்னெடுத்துச் சென்றது.

சமூக இயக்கம், சமூக முரண்பாடுகள், சமூக ஒடுக்குமுறைகள் சமூக ஏற்றத்தாழ்வுகள் எவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதைப் பொதுவுடமைக் கட்சி மக்கள் மத்தியில் விரிவாக விளக்கியது. சொத்து சுகம் வசதி வாய்ப்புகள் ஒரு சிலரிடம் மட்டும் இருக்க ஏகப் பெரும்பான்மையினரிடம் அவை இல்லாதிருப்பதற்கான காரண காரியங்களை எடுத்துக் காட்டியது. மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களுக்கும் ஏற்றத் தாழ்வுகளுக்கும் முற்பிறப்பில் செய்த பாவங்களோ அன்றி தலையில் மறைவாக எழுதப்பட்டிருக்கும் தலைவிதியோ காரணம் அல்ல என்பதை எடுத்து விளக்கி நின்றது பொதுவுடமை இயக்கம். யாவும் நிலவுடமை ஆதிக்க சக்திகளினால் நேரடியான மறைமுகமான ஒடுக்குமுறைகளும் மத பாண்பாட்டுக் கருத்தியல்களும் மக்கள் மீது திணிக்கப்பட்டு அதனையே ஒரு சிந்தனை மரபாக்கி வளர்த்து விட்டதன் விளைவுதான் என்பதை பொதுவுடமையாளர்களே மக்களுக்கு விரிவுபட விளக்கி நின்றனர். வெறுமனே விளக்கங்களுடன் மட்டுமன்றி பல்வேறு தளங்களில் நின்று பல இயக்கங்களையும் போராட்டங்களையும் முன்னெடுத்து வந்துள்ளனர். அப்போராட்டங்களில் மக்களே நடுநாயகர்களாகவும் உந்து சக்திகளாகவும் இருந்து வந்துள்ளனர்.

இத்தகைய வடபுலத்து பொதுவுடமை இயக்கத்தின் முதல் வித்தினை நாட்டியவரான தோழர் மு. கார்த்திகேசனின் நினைவாகவே இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஐம்பத்தேழு வருடகால வடபுலத்து பொதுவுடமை இயக்கத்தின் வளர்ச்சியும் சாதனைகளும் குறைபாடுகளும் முன்னேற்றங்களும் பின்னடைவுகளும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. முழுமையாக இல்லாதுவிடினும் கிடைத்த தகவல்களும் சொந்த அனுபவங்களும் இந்நூலிலே எடுத்தாளப் பட்டுள்ளன. வடபுலத்து பொதுவுடமை இயக்க வரலாற்றைத் திரித்தும் மழுப்பியும் அல்லது மறைத்தும் காட்டுவதே சில தேசியவாதம் பேசுவோரது கைங்கரியமாக இருந்து வந்துள்ளது. அத்தகையோரது புரட்டுக்களும் புனைவுகளின் மத்தியிலும் இந்நூல் சிறு அளவாவது தனது பங்கினைச் செலுத்த வேண்டும் என்பது என் அவாவாகும்.

மேலும் இந்நூல் இன்றைய வடபுலத்துச் சூழலில் கடந்த காலத்தையும் சமகாலத்தையும் தீவிரமான தேடல் பார்வையின் ஊடே நாடி நிற்கும் இளைய தலைமுறையினருக்கு உதவும் என நம்ப முடியும். மாக்சிசத்தின் வாயிலாக சமூக விடுதலை சமூக மாற்றம் நோக்கி சிந்திக்கவும் செயல்படவும் முன் வருகின்ற ஒவ்வொருவருக்கும் இந்நூல் ஒரு பயன் உள்ளதாக அமைய முடியுமாயின் அதுவே திருப்தி தருவதாகும். அத்துடன் சகல

www.padippakam.com

வடபுலத்து பொதுவுடமை இயக்கப் போக்கில் பங்கேற்று வழிநடந்து பயணித்து வரும் புதிய தலைமுறையினருக்கு தமது முன்னோடிகளான தோழர்கள் எவ்வாறு செயற்பட்டுச் சென்றார்கள் என்பதை எடுத்துக் கூறுவதாகவும் இந்நூல் அமைகின்றது.

ஒவ்வொரு பொதுவுடமைத் தோழர்கள் பின்னாலும் போராட்ட வரலாறு வளர்ந்து வந்துள்ளது. அவ் வரலாற்றுத் தாக்கங்கள் தனித்து நோக்கப்பட்டுத் தொகுக்கப்படுவது காலத்தின் தேவையாகும்.

மேலும் இந்நூலில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகள், சம்மந்தப்பட்ட தோழர்கள் என்பனவற்றுக்கு அப்பாலும் பல்வேறு நிகழ்வுகளும் அதில் சம்மந்தப்பட்ட தோழர்களும் இருந்து வந்திருக்கிறார்கள். அவை யாவும் இந்நூலில் இடம்பெறாது இருக்குமாயின் அவை வேண்டுமென்றே நிராகரித்து விடப்பட்டதாகக் கொள்ள வேண்டியதில்லை. இந்நூலின் பக்கங்களது மட்டுப்பாடும் முக்கியமானவற்றை எடுத்துக் கூறும் அடிப்படையிலுமே எழுதப்பட்டதாகும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

இந்நூலில் தவறவிடப்பட்ட பகுதிகள், சம்பவங்கள், தோழர்கள், பற்றிய தகவல்கள்-விமர்சனங்கள் ஏதேனும் இருப்பின் அவை பற்றித் தெரியப்படுத்தி உதவினால் மேலும் இந்நூலை மறுபிரசுரத்தில் முழுமை குன்றாமல் வெளியிட உதவும் என எதிர்பார்க்கிறேன். திறந்த மனதுடனான விமர்சனங்களை வரவேற்கிறேன்.

இந்நூல் வெளிவருவதற்கு பல்வேறு தகவல்கள், நூல்கள், பத்திரிகைகள், படங்கள் தந்துதவிய அனைத்து தோழர்கள் நண்பர்களுக்கு நன்றி கூறுவது மிக முக்கியமானது. அத்துடன் நூல் வெளிவருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து நூலாக்க முயற்சியில் முன்னின்ற தோழர்கள் சோ. தேவராஜா, இ. தம்பையா, பேராசிரியர். சி. சிவசேகரம், ஆகியோருக்கு எனது நன்றி. இந்நூலை கணனியில் வடிவமைத்த சிந்தியா, சோபனா ஆகியோருடன் அச்சுப்பதித்துத் தந்த கௌரி அச்சகத்தாருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். நன்றி.

சி.கா. செந்திவேல்
'தாயகம்'
சிறுபிட்டி வடக்கு
நீர்வேலி
30-03-2003



படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்

பக்கம்


| | | |
|---|---|---|
| I. | அறிமுகம் | 1 |
| 2. | இடதுசாரி இயக்கத்தின் தோற்றம் | 4 |
| 3. | பொதுவுடமை இயக்கத்தின் ஆரம்பம் | 7 |
| 4 | கார்த்திகேசனின் கட்சிப் பிரவேசம் | 9 |
| 5. | வடபுலத்தில் பொதுவுடமை இயக்கத்தின் தோற்றம் | 14 |
| 6. | தோழர் கார்த்திகேசனின் வடபுலத்து வருகை | 18 |
| 7. | கட்சியின் ஆரம்ப உறுப்பினர்களும் வேலைமுறையும் | 21 |
| 8. | தோழர் கார்த்திகேசனின் ஆசிரியப் பணி | 24 |
| 9. | கட்சியின் அடுத்த கட்ட வளர்ச்சி | 30 |
| 10. | 1950களில் கட்சியின் வளர்ச்சி | 33 |
| 11. | உள்ளூராட்சி மன்றங்களில் பொதுவுடமைக் கட்சியினர் | 49 |
| 12. | பெண்கள் மத்தியில் பொதுவுடமைக் கருத்துக்கள் | 51 |
| 13. | முற்போக்குச் சட்டங்களும் தமிழர் தலைமைகளும் | 53 |
| 14. | பொதுவுடமை இயக்கத்தின் பிளவு | 55 |
| 15. | புதிய கட்சியும் போராட்டங்களும் | 59 |
| 16. | புதிய பொதுவுடமைக் கட்சியின் போராட்ட முனை | 71 |
| 17. | 1967-68 ஆண்டுகளில் | 77 |
| 18. | தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் | 84 |
| 19. | தொழிற்சங்க இயக்கமும் போராட்டங்களும் | 97 |
| 20. | விவசாயிகளும் பொதுவுடமைக் கட்சியும் | 106 |
| 21. | சட்டரீதியானதும் சட்டமறுப்பானதுமான போராட்டங்கள் | 109 |
| 22. | பாராளுமன்றப் பொதுவுடமைக் கட்சியும் அதன் செயற்பாடுகளும் | 115 |
| 23. | 1972ம்-78ம் ஆண்டுகளில் பொதுவுடமை இயக்கம் | 117 |
| 24. | எண்பதுகளில் பொதுவுடமை இயக்கம் | 127 |
| 25. | பொதுவுடமைக் கருத்துக்களும் புத்தூர் கிராமமும் | 135 |
| 26. | தேர்தல்களும் பொதுவுடமை இயக்கமும் | 142 |
| 27. | தேசிய இனப்பிரச்சினையும் பொதுவுடமை இயக்கமும் | 145 |
| 28. | தமிழ் மொழியும் பண்பாடும் பொதுவுடமை இயக்கமும் | 158 |
| 29. | முடிவுரை | 163 |



படிப்பகம்

www.padippakam.com

# சமர்ப்பணம்



கடந்த ஐம்பத்தியேழு ஆண்டுகளில் வடபுலத்து பொதுவுடமை இயக்கத்தை கட்டியெழுப்பி பாதுகாத்து முன்னெடுத்து வழிநடந்ததில் தமது வியர்வை, இரத்தம், உயிர், உடமை அனைத்தையும் பரித்தியாக உணர்வோடு அர்ப்பணித்து செயலாற்றி மறைந்த தோழர்களின், தியாகிகளின் புரட்சிகர நினைவுகளுக்கு இந்நூல் சமர்ப்பணம்.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# வடபுலத்து பொதுவுடமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும்

## 1 அறிமுகம்

'கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்' என வடபுலத்தில் நன்கு அறியப்பட்டவர் தோழர் மு. கார்த்திகேசன். அவர் மறைந்து 2002ம் ஆண்டு செப்டம்பர் 10ம் திகதி இருபத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. அவரது நினைவுகளை வெறுமனே சம்பிரதாயநிலை நின்று நோக்குதல் அர்த்தமற்றதாகும். ஏனெனில் தோழர் கார்த்திகேசன் தனது வாழ்வு முழுவதையும் இலங்கையின் பொதுவுடமை இயக்கத்திற்கும் அதன் மூலம் மக்களுக்கும் அர்ப்பணித்து செயல்புரிந்து மறைந்தவர்.

தோழர் கார்த்திகேசன் மாக்சிசம் லெனினிசத்தையும் அதன் அடிப்படையிலான பாட்டாளி வர்க்க அரசியலையும் தனது வாழ்நாள் முழுவதும் முதன்மை இடத்தில் வைத்து அதற்காகப் பணி புரிந்து கொண்டவர். அவரது அரசியல் சமூக கல்விப் பணிகள் பரந்த தளங்களில் விரிந்து நின்றன. கடந்த நூற்றாண்டின் நடுக்கூறிலே யாழ்ப்பாணத்து பழமைவாத மேட்டுக்குடி ஆதிக்க அரசியல் சூழலில் பொதுவுடைமை இயக்கத்தை முன்னெடுத்துச் சென்ற முன்னோடிகளில் கார்த்திகேசன் முன்னிலை வகித்தவர். அதற்குரிய துணிவும் ஆற்றலும் அர்ப்பணிப்பும் அவரிடம் நிறைந்திருந்தது.



படிப்பகம்

இன்று இலங்கையில் இடதுசாரி இயக்கமும் அதன் கூறான பொதுவுடைமை இயக்கமும் பலவீனமடைந்து காணப்படுகின்றது என்ற உண்மை மறைக்கப்பட வேண்டிய ஒன்றல்ல. கடந்த நூற்றாண்டிலே பொதுவுடைமை இயக்கம் இலங்கை அரசியலில் காத்திரமான சாதனைகளை நிலைநாட்டி வந்த வரலாற்று உண்மைகளை மார்க்சிச விரோத ஆய்வாளர்கள் மறைத்தும் திரித்தும் வருகிறார்கள். அத்துடன் இடதுசாரி இயக்கத்தில் இடம்பெற்ற தவறுகள் தோல்விகளை மட்டுமே பெரிதாக எடுத்துக் காட்டி இடதுசாரி இயக்கம் குறிப்பாக வடபுலத்தில் எதையும் சாதிக்கவில்லை என்ற விதமாக அர்த்தப்படுத்தி தமது மார்க்சிச விரோதப் போக்கிற்கு வலிமை சேர்த்துக் கொள்ளவும் முயலுகிறார்கள்.

வரலாற்றில் மார்க்சிசம் சோஷலிசத்திற்கு பலவீனமும் பின்னடைவும் ஏற்பட்டமை இப்போதுதான் முதல் தடவையல்ல. வரலாற்றை நேர்மையுடன் படிக்கும் எவரும் பலவீனங்கள் பின்னடைவுகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களையும் அவை காலத்தால் களையப்பட்டு பலமாக மாற்றப்பட்டு வெற்றிகள் கொள்ளப்பட்ட வரலாற்றுக் காலகட்டங்களையும் காணுவார்கள்.

இன்று ஏகாதிபத்திய உலகமயமாக்கல் நாடுகளையும் மக்களையும் தனது கொடிய மூலதனச் சுரண்டல் மூலம் சூறையாடி விழுங்கி வருகின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியம் தனி உலக வல்லரசாகி பொருளாதார அரசியல் ராணுவப் பலத்தின் ஊடாக உலகம் முழுவதையும் தனது ஆதிக்கக் குடையின் கீழ் கொண்டுவர முயன்று வருகின்றது. இதன்மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் உலக மக்களுக்குமிடையிலான முரண்பாடு வேகமாகக் கூர்மையடைந்தும் வருகின்றது.

இத்தகைய முரண்பாட்டில் உலக மக்களுக்கு உரிய மாற்றும், நம்பிக்கையும் மார்க்சிச லெனினிசமாகவும் சோசலிசமாகவும் மட்டுமே இருக்க முடியும். மாக்சிசத்திற்கும் சோஷலிசத்திற்கும் மாற்றாக ஏகாதிபத்தியத்தால் முன் தள்ளப்பட்டு பிரசாரப்படுத்தப்பட்ட அனைத்து முக மூடிகளும் ஒன்றன்பின் ஒன்றாக கழன்று அம்பலமாகி வருவதை உலகில் காணமுடிகின்றது.

www.padippakam.com

இந் நிலையில் நாடுகளுக்கும் மக்களுக்கும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்பதற்கு சகலவகையான நம்பிக்கையையும் மாற்றையும் தரவல்ல மார்க்சிசத்தையும் சோஷலிசத்தையும் உயர்த்தி நிற்க வேண்டியது இன்றைய வரலாற்றுக் கடமையாகின்றது. அவற்றின் கடந்தகால வெற்றிகள் சாதனைகளை மட்டுமன்றி தவறுகள் தோல்விகள் பற்றியும் அவற்றுக்கான அக புறக் காரண காரியங்களையும் கண்டறிந்து கொள்வதும் தேவையாகின்றது. வெறுமனே ஆய்வும் வாதப்பிரதிவாதங்களும் மட்டுமன்றி நடைமுறைச் செயற்பாடுகள் மூலம் புதிய தலைமுறையினர் மத்தியில் அவற்றை எடுத்துச் சென்று கடுமையான பணிகளை மார்க்சிச லெனினிஸவாதிகள் முன்னெடுக்க வேண்டும்.

அத்தகைய வேலை முறைக்கு கடந்த காலத்தின் ஒவ்வொரு சாதனைகளும் வெற்றிகளும் எடுத்துச் சொல்லப்படல் வேண்டும். அதற்காகத் தம்மை அர்ப்பணித்து பணிபுரிந்து மறைந்த ஒவ்வொரு முன்னோடிகளைப் பற்றியும் கூறுதல் வேண்டும். அவர்களது செயற்திறன் தியாகம் அர்ப்பணிப்பு வாழ்வுமுறை இலட்சியப் பற்றுதி போன்றவை புதிய தலைமுறையினரிடம் கொண்டு செல்லப்பட வேண்டும். அந்தவகையில் இலங்கையின் பொதுவுடமை இயக்கப் பரப்பில் தனது ஆற்றல்கள் அனைத்தையும் கொண்டு அரசியல் சமூக கல்விப்பணி புரிந்து மறைந்த தோழர் மு. கார்த்திகேசன் பற்றி எடுத்துரைப்பது இந்நூலின் தேவையாகின்றது. குறிப்பாக தோழர் கார்த்திகேசன் வடபுலத்தில் பொதுவுடமை இயக்கத்தின் தொடக்கத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் வழங்கிய பங்களிப்பு போற்றுதற்குரியதாகும். அவர் நாட்டி வைத்த முதல் விதையானது பிற்காலத்தில் பெருமரமாகி யாழ்ப்பாண சமூகச் சூழலில் பல சாதனைகளை நிலை நாட்டிக் கொண்டது. எனவே தோழர் கார்த்திகேசனை நினைவு கூரும்போது அவரது வாழ்வுடன் பின்னிப் பிணைந்து நின்ற வடபுலத்து பொதுவுடமை இயக்கத்தின் வரலாற்றுக் குறிப்புகளை இந்நூலில் கொண்டுவருவது புதிய தலைமுறையினருக்குப் பயன்தரும் ஒன்றாக அமையும் என நம்புகின்றேன். அதேவேளை தத்தமது சுய ஈடேற்றங்களுக்கும் பழமைவாத ஆதிக்க அரசியல் நோக்கங்களுக்கும் வரலாற்றுக் குறிப்புகளை மறைத்தும் திரித்தும் வருகின்ற சக்திகளை அம்பலப்படுத்துவதற்கும் இந்நூல் உதவும் என நம்பலாம். இந்நூல் வரலாற்றுக் குறிப்புக்களைச் சுருக்கமாகக் கூறும் ஒன்றாகவே



படிப்பகம்

www.padippakam.com

வெளிவருகின்றது. அதற்கு அடிப்படைக்காரணம் சேகரித்து வைத்த பெறுமதிமிக்க நூல்களும் ஆவணக் குறிப்புகளும் கொடுமையான யுத்த சூழலாலும் மீண்டும் மீண்டும் இடம்பெற்ற இடப்பெயர்வுகளாலும் அழிந்து போய்விட்டமை வேதனைக்குரிய ஒன்றாகும். எனவே எஞ்சியுள்ளவற்றையும் இப்போது தேடிக் கொண்டவற்றையும் கொண்டே இந்நூல் வெளிவருகின்றது. எதிர்காலத்தில் விரிவான ஒரு நூலுக்கான முயற்சி செய்யப்படும் போது இந்நூலின் குறிப்புகள் அடிப்படையானவையாக அமையும் என்பது என் துணிபாகும்.

## 2 இடதுசாரி இயக்கத்தின் தோற்றம்

இலங்கையின் கொலனித்துவ ஆட்சியின் கீழான அரசியல் பரப்பில் கடந்த நூற்றாண்டின் முப்பதுகள் மிக முக்கிய அரசியல் நிகழ்வுகளின் காலகட்டமாகும். டொனமுர் ஆணைக்குழுவின் சிபார்சுகள் எதிர்ப்புக்கும் ஆதரவுக்குமிடையில் முப்பதுகளின் ஆரம்பத்தில் நடைமுறைக்கு வந்து கொண்டது. அதன் நடைமுறையாக இலங்கையில் இருபத்தியொரு வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது. அதன் கீழான முதலாவது அரசாங்க சபைக்கு 1931ல் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தல் வடபுலத்தில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் முடிவினால் முற்றாகப் பகிஷ்கரிக்கப்பட்டது. எவருமே போட்டியிடவில்லை. இதனால் நான்கு ஆசனங்கள் வெற்றிடமாகவே இருந்தன. அன்றைய கொலனித்துவ ஆட்சிச் சூழலில் மேற்படி பகிஷ்கரிப்புத் தீர்மானம் துணிவான அரசியல் முடிவாகவும் புரட்சிகரம் மிக்கதாகவும் அமைந்திருந்தது. இத் தேர்தலில் தென்னிலங்கையின் மொரவக்க தொகுதியில் இருந்து டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா இடதுசாரியாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவர் இங்கிலாந்தில் மருத்துவக்கல்வி கற்று வைத்தியராகிய அதேவேளை அங்கு இடதுசாரிக் கருத்துக்களையும் குறிப்பாக பொதுவுடமைக் கட்சியின் தொடர்பால் அதன் சாராம்சங்களை உள்வாங்கியவராகவும் நாடு திரும்பினார். அத்துடன் அவரது இங்கிலாந்து மனைவி டொறின் விக்கிரமசிங்காவும் அதே கருத்துக்களுடன் இங்கு மக்கள் சேவைக்கு தன்னை அர்ப்பணித்தவராகவும் இருந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறே இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் கல்வி கற்று நாடு திரும்பிய ஒரு இளைஞர் குழாம் இடதுசாரிக் கருத்துக்கள் நிரம்பப் பெற்றவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் மக்கள் மத்தியில் சென்று தமது கருத்துக்களை பரப்புபவர்களாக மட்டுமன்றி பின்தங்கிய பிரதேசங்களில் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளோடும் அனுபவித்த துன்ப துயரங்களோடும் தம்மைப் பிணைத்து வந்தனர். சிங்கள மக்கள் மத்தியில் சாதியத்தால் ஒடுக்கப்பட்டு அடிநிலையில் வாழ நிர்பந்திக்கப்பட்ட சிங்கள மக்களிடையே இவர்கள் சமூகப் பணிகள் புரிந்தனர். அதன் காரணமாகவே (சூரிய மல் இயக்கம்) சூரிய மலர் விற்பனை மூலம் கிடைத்த நிதியில் இருந்து தாழ்த்தப்பட்டோர் என அழைக்கப்பட்ட ரொடியா சாதி மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு நிதி வழங்கப்பட்டமை ஓர் உதாரணமாகும்.

இவ்வாறான கல்வி கற்ற இளைஞர்கள் வாலிபர் இயக்கங்களை தோற்றுவித்து வந்தனர். அன்று இலங்கையில் கொடிய உயிர்க் கொல்லி நோயாகக் காணப்பட்ட மலேரியா ஒழிப்பில் இவர்கள் கிராமங்களில் கடுமையான வேலை செய்தனர். அது ஒரு பரந்த மக்கள் இயக்கமாகியதும் மக்களிடையே இவ் இளைஞர் யுவதிகளுக்கு பலமான செல்வாக்குத் தளத்தை ஏற்படுத்தியது.

தேசிய சுதந்திரத்தை வற்புறுத்தி அந்நிய எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுத்ததுடன் யுத்த எதிர்ப்பு இயக்கமாகவும் சூரியமலர் இயக்கம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இது அடிப்படையில் ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமாகவே அமைந்து கொண்டது. இதன் முதலாவது தலைவராக திருமதி டொறின் விக்கிரமசிங்கா இருந்தார்.

இவ்வாறு முப்பதுகளின் ஆரம்பம் தொட்டு அதன் நடுக்கூறுவரை இடதுசாரிக் கருத்துக்களோடும் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய சுதந்திரம் என்பனவற்றை முன்னிறுத்தி கிராமப்புற மக்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் மத்தியில் செயலாற்றி வந்த இளைய தலைமுறையினர் அடுத்தகட்ட நடவடிக்கைக்குள் காலடி எடுத்து வைத்தார்கள். அதுவே முதலாவது இடதுசாரி அரசியல் கட்சியை ஆரம்பித்தமையாகும்.



படிப்பகம்

1935ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி லங்கா சமசமாஜக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது. இதன் தலைமைக் குழுவில் கொல்வின் ஆர்.டி. சில்வா, எஸ்.ஏ. விக்கிரமசிங்கா, என்.எம். பெரேரா, பிலிப் குணவர்த்தனா, ரொபர்ட் குணவர்த்தன, லெஸ்லி குணவர்த்தனா போன்றோர் இருந்து ஆரம்ப செயற்பாட்டை முன்னெடுத்தனர். இச்சமசமாஜக் கட்சி கொலனித்துவத்திடமிருந்து பூரண சுதந்திரத்தைக் கோரி நின்றது. அதேவேளை தொழிலாளர் வர்க்கத்திடம் சென்று அவர்களை அணிதிரட்டும் முயற்சியில் இறங்கியது. இவ்வேளை ஏ.ஈ. குணசிங்காவினால் தொழிலாளர் இயக்கத்தின் மத்தியில் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாதத்திற்கு எதிராகவும் சமசமாஜ இயக்கம் அன்று போராடி நின்றது.

அன்றைய தேசிய இயக்கம் பலவீனமானதாகவும் நிலவுடமை மேட்டுக்குடிகளின் அரசியல் பிரதிநிதித்துவ சக்திகளால் மெதுவானதும் மிதவாதத்துடனும் முன்னெடுக்கப்பட்டு வந்தது. அதேவேளை சமசமாஜ இயக்கத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் தீவிரம் கொண்டதாகவும் நம்பிக்கை அளிப்பதாகவும் இருந்த காரணத்தால் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளும் தொழிலாளர் விவசாய மக்களும் அதனை நெருங்கிச் சென்று ஆதரவளிக்கும் நிலை வளர்ச்சி கண்டது.

சமசமாஜ இயக்கம் மாக்சிசத்தை ஏற்றுக்கொண்ட போதிலும் சமூக மாற்றத்தை ஆட்சி அதிகாரத்தை தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் புரட்சிகரப் போராட்டங்கள் மூலமாக வென்றெடுக்கும் மார்க்சிச லெனினிச மூல உபாயத்தை கொண்டிருக்கவில்லை. அதன் தூரநோக்கு உரியவாறு வகுக்கப்படவில்லை. அதன் பின்னாட்களிலான பாராளுமன்ற அரசியல் சந்தர்ப்பவாதம் அதன் ஆரம்ப காலத் தவறுகள் போதாமைகள் போன்றவற்றில் அடையாளம் காணக்கூடியதாக அமைந்திருந்தது. அத்துடன் அதன் தலைமைத்துவத்தில் ட்ரொட்சிசத்தை உள்வாங்கிக் கொண்டவர்களும், மார்க்சிசம் லெனினிசத்தை ஏற்று நின்ற கம்யூனிஸ்டுகளும், மற்றும் ஜனநாயக தேசபக்த சக்திகளும் எனப் பலதரப்பட்ட சக்திகள் இருந்து வந்தன. இதன் காரணமாக 1939-40 காலகட்டத்தில் தீவிர கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெற்றன. சமசமாஜக் கட்சிக்குள் ட்ரொட்சிசத்தை வழிகாட்டும் கோட்பாடாக ஏற்றுக் கொள்ளும் நிலை உருவாகியபோது அதை எதிர்த்து நின்ற கம்யூனிஸ்டுக்கள் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

அவர்களில் எஸ்.ஏ. விக்கிரமசிங்கா, அ. வைத்தியலிங்கம், எம்.ஜி. மென்டிஸ், கே. இராமநாதன் போன்றோர் முக்கியமானவர்களாகக் காணப்பட்டனர்.

இலங்கையின் முதலாவது இடதுசாரிக் கட்சியாகத் தோற்றம் பெற்று வளர்ந்து வந்த சமசமாஜக் கட்சியானது ட்ரொட்சிசம்-மாக்சிசம் லெனினிசம் என்னும் அடிப்படையில் 1940ல் பிளவு அடைந்து கொண்டது. இப்பிளவானது இலங்கை இடதுசாரி இயக்கத்தில் இரண்டு பிரதான கூறுகளை நிரந்தரமாக்கிக் கொண்டது. இன்றுவரை அவற்றுக்கிடையிலான தத்துவார்த்த முரண்பாடும் நடைமுறை அரசியல் அணுகுமுறைகளும் வேறுபட்டவையாக இருந்து வருவதை அடையாளம் காணமுடியும்.

## 3 பொதுவுடமை இயக்கத்தின் ஆரம்பம்

சமசமாஜக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள் 1940 ஆண்டில் ஐக்கிய சோஷலிசக் கட்சியை உருவாக்கி தமது வேலைகளை முன்னெடுத்தனர். இக்கட்சி கொலனிய ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்த எதிர்ப்பு காரணமாக கொலனித்துவ ஆட்சியின் கடும் அடக்குமுறையை எதிர்கொண்டது. எஸ்.ஏ. விக்கிரமசிங்காவும் வேறு சிலரும் சிறைத் தண்டனை பெற்றனர். சிலர் தலைமறைவாகினர். பத்திரிகைகள், பிரசுரங்கள் பறிமுதலுக்கும் தடைகளுக்கும் ஆளாக்கப்பட்டன. இருப்பினும் சுதந்திரத்திற்கான கோரிக்கையை வலியுறுத்தியும் ஏகாதிபத்திய எதிர்ப்பும் சோவியத் யூனியன் ஆதரவும் முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவுவதற்கான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நகர்ப்புறத் தொழிலாளர்கள் மத்தியில் அரசியல் கல்வியும் தொழிற்சங்க இயக்கத்திற்கான ஆரம்ப நடவடிக்கைகளும் செயற்படுத்தப்பட்டன. தொழிலாளர்கள், மாணவர்கள், புத்திஜீவிகள், கிராமப்புற விவசாயிகள் என்போர் ஆரம்ப அணியில் சேர்ந்துநின்ற நிலை காணப்பட்டது.

இச்சூழலிலேயே 1943ம் ஆண்டு யூலை மாதம் 3ம் திகதி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. கடுமையான கண்காணிப்பும் அடக்குமுறையும் நிலவிய அன்றைய நாட்களில்

மேற்படி கட்சியின் ஆரம்பம் இரகசியமாகவே மேற்கொள்ளப்பட்டது. இக்கட்சியின் ஆரம்ப முன்னோடிகளாக டாக்டர் எஸ்.ஏ. விக்கிரமசிங்கா, பீற்றர் கெனமன், அ. வைத்தியலிங்கம், எம்.ஜி. மென்டிஸ், பொன் கந்தையா, டபிள்யூ. ஆரியரட்ணா, ஏ. குணசேகரா, கே. இராமநாதன், மு. கார்த்திகேசன், வை. யசோதிஸ், நா. சண்முகதாசன் போன்றவர்கள் முன்னின்று செயற்பட்டனர்.

அன்றைய தேசிய சர்வதேசிய நிலைமைகள் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சிக்கு சாதகமானதாக அமைந்தது. நாட்டின் சுதந்திரம் வற்புறுத்தப்பட்டு சகலவிதமான சுரண்டல் ஒடுக்குமுறைகளில் இருந்தும் விடுதலை பெறுவதை கட்சி வற்புறுத்தியது. சமூக மாற்றமும் சோஷலிசமும் இலக்காக வரையறுக்கப்பட்டன. அதேவேளை நகர்ப்புறத் தொழிலாளர்கள் மத்தியில் தொழிற்சங்க இயக்கம் கட்சியின் தலைமையில் உருவாக்கப்பட்டு பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அத்துடன் அன்றைய நிலையில் சோஷலிச சோவியத் யூனியனைப் பாதுகாக்கும் இயக்கத்தை பரந்த அடிப்டையில் கட்சி முன்னெடுத்தது. மேலும் இரண்டாவது உலக யுத்தத்தின் பிரதான போக்காக இருந்த பாசிசத்திற்கு எதிரான இயக்கத்தையும் கட்சி முன்னெடுத்தது.

மேலும் கட்சி மூன்று மொழிகளிலும் வாராந்த பத்திரிகைகளை வெளியிட்டது. மலையாள மொழியிலும் பத்திரிகை வெளிவந்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களும் உறுப்பினர்களும் அமைப்பு ரீதியாக வேலைகளை முன்னெடுப்பதிலும் மாக்சிச லெனினிச தத்துவார்த்த அரசியல் வகுப்புகளை நடாத்துவதையும் கிரமமாக மேற்கொண்டனர்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்பமானது அன்றைய நிலையில் காலத்தின் தேவையாகவும் சரியான திசை நோக்கியதாகவும் இருந்தது. அதன் தலைமையானது ட்ரொட்சித்தை ஏற்றுக்கொண்ட சமசமாஜக் கட்சி இயக்கத்திலிருந்து வேறுபட்டு கட்சி அமைப்பிலும் கொள்கை வகுப்பிலும் நடைமுறையிலும் மாக்சிச லெனினிச அடிப்படைகளைக் கொண்டிருந்தது.

www.padippakam.com

# இலங்கையின் பொதுவுடமை இயக்கத்திற்கு வடபுலம் தந்த நான்கு ஆரம்ப முன்னோடிகள்



தோழர் பொன் கந்தையா



தோழர். அ. வைத்தியலிங்கம்



தோழர் மு. கார்த்திகேசன்



தோழர் நா. சண்முகதாசன்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

அதேவேளை இக்கட்சியின் தலைவர்கள் பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தமையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் போக்கைப் பின்பற்ற முனைந்தமையும் அதன் எதிர்கால வளர்ச்சியில் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்திக் கொண்டன. மேலும் தோழர் ஸ்டாலினுக்குப் பின்னான சோவியத் கட்சியின் தவறான போக்கை உள்வாங்கிக் கொண்டமையும் பிற்காலத்தின் பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியல் சீரழிவிற்கு காரணமாகிக் கொண்டன. இதன் அடிப்படையில் 1963-64 கால கட்டத்தில் பொதுவுடமை இயக்கத்தில் பிளவு ஏற்பட்டு இரு கூறுகளாகிக் கொண்டன. இவை பற்றி விரிவான நோக்கு வேறொரு சந்தர்ப்பத்தில் நோக்க முடியும்.

## 4 கார்த்திகேசனின் கட்சிப் பிரவேசம்

தோழர் கார்த்திகேசன் யாழ்ப்பாணத்தின் வட்டுக்கோட்டையின் நடுத்தர வர்க்கக் குடும்பத்தில் இருந்து வந்தவர். அவரது தந்தையார் முருகபிள்ளை. தாயார் தங்கரத்தினம். மலேசியாவில் தொழில் பெற்று குடும்பமாகச் சென்று அங்கு உதவி வைத்தியராகக் கடமை புரிந்து வந்தவர் முருகபிள்ளை. அவர்களது நான்கு பிள்ளைகளில் மூத்தவரே கார்த்திகேசன். மலேசியாவில் 1919ல் பிறந்த அவர் தனது ஐந்தாவது வயதில் தாயாருடன் நாடுதிரும்பி வட்டுக்கோட்டையில் ஆரம்பக் கல்வியைப் பயின்றார். பின்பு மீண்டும் மலேசியா சென்று நடுத்தரக் கல்வியைக் கற்றார். அவரது கல்வி ஆற்றலைக் கண்ட பெற்றோர் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் உயர்கல்வி கற்பதற்காக அவரது 18வது வயதில் இலங்கைக்கு அனுப்பி வைத்தனர். கார்த்திகேசனின் பல்கலைக்கழகக் காலம் 1937-41 ஆகும்.

இக்காலம் தேசிய ரீதியில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் முனைப்படைந்து அவற்றுக்கான கோரிக்கைகள் வற்புறுத்தப்பட்ட காலமாகும். நாட்டின் சுதந்திரம், தொழிலாளர்கள் எதிர்நோக்கிய இன்னல்களுக்கான கோரிக்கைகள், விவசாயிகளின் பிரச்சினைகள், கொலனித்துவ ஆட்சியினரின் அடக்குமுறைகள் போன்றன மேல் கிளம்பி வந்தன. இதேகாலப் பகுதியில்தான் இடதுசாரி இயக்கமாக சமசமாஜக் கட்சி வளர்ந்து கொண்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

அதேவேளை சர்வதேச நிலைமைகள் இரண்டாவது உலக யுத்தமாகவும் அன்றைய சோஷலிச சோவியத் யூனியனைப் பற்றிய வாதப்பிரதிவாதங்களாகவும் நடைபெற்று வந்தன. ஜேர்மனி, இத்தாலி, யப்பான் ஆகியன இணைந்து பாசிசமாக உலக மக்களுக்கு எதிராக அணிவகுத்து நின்றன. சோவியத் யூனியனை அழிப்பதும் எகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களில் இணைந்து நின்ற உலக மக்களையும் நாடுகளையும் அடக்குவது என்றும் ஹிட்லர் நாஜிப் படைகளுடன் உலக ஆதிக்க வெறியோடு நின்றான். ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையில் போர், சோஷலிசத்திற்கு எதிரான போர், சீனாவில் தேசிய விடுதலைப் போர், ஸ்பெயினில் உள்நாட்டு பிற்போக்கு சக்திகளுக்கு எதிரான விடுதலைப்போர் ஆகிய நான்கும் அன்றைய உலகச் சூழலில் பிரதான போக்காகக் காணப்பட்டது.

இவை அனைத்தும் இலங்கையிலும் எதிரொலித்தன. குறிப்பாக பல்கலைக் கழகக் கல்வியில் ஈடுபட்டிருந்த மாணவர்களில் மேற்கூறிய தேசிய சர்வதேசிய அரசியல் நிகழ்வுப் போக்குகள் சிந்தனை ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தின. அதேவேளை ஏற்கனவே இடதுசாரிச் சிந்தனைகளுடன் செயற்பட்டு வந்தவர்கள் இப்பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் அரசியல் வகுப்புகளையும் விவாதங்களையும் நடாத்தி வந்தனர். இவற்றின் காரணமாக பலர் மாக்சிசத்தினாலும் இடதுசாரி அரசியல் கருத்துக்களாலும் ஈர்க்கப்பட்டனர். அத்தகையவர்களில் தோழர் கார்த்திகேசனும் ஒருவராகிக் கொண்டார். பல்கலைக்கழக இறுதி ஆண்டுகளில் அரசியலில் தீவிரப் பங்காற்றும் ஒருவராக அவர் மாறிக்கொண்டார்.

1941ல் பல்கலைக்கழகப் படிப்பை முடித்து பட்டதாரியாகி கார்த்திகேசன் வெளியில் வந்ததும் மேலும் கல்வி பெற்று நீதித்துறையில் பெரும்பதவி வகிக்க வேண்டும் என்பதையே அவரது பெற்றோர் எதிர் பார்த்தனர். அன்றைய சூழலில் அவ்வாறு பதவியை நோக்கிச் செல்வதும் அதனை அடைவதும் கல்வி ஆற்றல் மிக்கவர்களுக்கு இலகுவானதாகவே இருந்தது. ஆனால் தோழர் கார்த்திகேசன் அவ்வழி செல்லவில்லை. கட்சி வேலைகளில் ஈடுபட்டு கட்சியின் முழுநேர ஊழியராகிக் கொள்வதையே தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

கட்சியின் முழுநேர ஊழியர் என்பது இலகுவான பணி ஒன்றல்ல. அரசியல் வேலையில் கடுமையாக வேலைசெய்ய



படிப்பகம்

www.padippakam.com

வேண்டியிருந்தது. தொழிலாளர்கள் மத்தியில், பின்தங்கிய மக்களிடையில், மாணவர்களிடம் எனப் பலதரப்பட்ட மக்களிடமும் சென்று அரசியல் வேலைகள் செய்யப்படுவதற்கு இம்முழுநேர ஊழியர்களே அச்சாணியாகத் திகழ்ந்தனர்.

அக்காலத்தில் கொழும்பில் பொதுவுடமை இயக்கத்தின் தலைமை உறுப்பினர்கள் அனைவரும் முழுநேரப் பணியாற்றுபவர்களாகவே இருந்தனர். அதற்குரிய கொள்கையும் லட்சியப்பற்றும், தத்தமது ஆற்றல்களைப் பயன்படுத்தும் ஓர்மமும், தங்களை முற்றாக அர்ப்பணித்துச் செயற்படும் மனோதிடமும், எத்தகைய எதிர்ப்புக்கும் முகம் கொடுத்து நிற்கும் தியாக சிந்தையும் இம்முழுநேர கட்சி ஊழியர்களிடையே காணப்பட்டது. இவர்களுக்கு சம்பளம் என்பது கிடையாது. பொதுவுடமைக் கட்சி ஊழியர்களுக்கு அலவன்ஸ் எனப்படும் உணவு, உடை. கைச்செலவு என்பனவற்றுக்கான வாழ்க்கைப்படி என்பதே சிறுதொகையாக கட்சி நிதியில் இருந்து வழங்கப்படும். இதுவே அனைத்து கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியர்களுக்கும் வழங்கப்படும் முறையாகும். தோழர் கார்த்திகேசன் உட்பட அன்றைய முழுநேர கட்சி ஊழியர்களுக்கு மாதம் அறுபது ரூபாவே வழங்கப்பட்டது.

இவ்வேளை என்னோடு சம்பந்தப்பட்ட விடயம் நினைவிற்கு வருகின்றது. 1965ம் ஆண்டின் முற்கூறில் எனது 22வது வயதில் கட்சியின் முழுநேர ஊழியராகுவதற்கான விண்ணப்பத்தை அன்றைய வடபிரதேசக் குழுவிற்கு சமர்ப்பித்திருந்தேன். எனது விண்ணப்பத்தை சமர்ப்பித்தவர் தோழர் கே.ஏ. சுப்பிரமணியம். கட்சியின் பிரதேசக்குழுக் கூட்டத்தின் பின் ஒரு மாலைப் பொழுதில் கட்சிக் காரியாலயத்தில் அன்று கட்சியின் வடபிரதேச செயலாளராக இருந்த தோழர் கார்த்திகேசன் என்னை அழைத்து பின்வருமாறு கூறினார். ''உமது முழுநேர ஊழியருக்கான விண்ணப்பத்தை கட்சியின் பிரதேசக்குழு பரிசீலித்து மிக்க மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டுள்ளது. உம்மைப் போன்ற இளம் தோழர்கள் இவ்வாறு முழுநேர ஊழியர்களாக வேலைசெய்ய முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். கட்சிக்கும் மக்களுக்கும் மனசாட்சிக்கும் நேர்மையாக நடந்து ஒரு கம்யூனிஸ்ட்டுக்கு உரிய பண்புகளோடு கட்சிவேலைகளை முன்னெடுக்க வேண்டும். முதலில் இளைஞர் இயக்கத்தில் வேலைசெய்ய வேண்டும். இதற்கான வாழ்க்கைப்படி



படிப்பகம்

மாதம் அறுபது ரூபா வழங்க கட்சி தீர்மானித்துள்ளது. இது பற்றி மத்திய குழுவிற்கு தெரிவிக்கப்படும்'' என்று கூறியமை இப்பொழுதும் எனது நினைவில் இருக்கின்றது. அன்று தோழர் கார்த்திகேசன் கூறிவைத்த கட்சிக்கும், மக்களுக்கும், மனசாட்சிக்கும் நேர்மையாக நடந்து அரசியல் முழுநேர ஊழியனாகச் சேவை செய்ய வேண்டும் என எடுத்துக் கூறிய மூன்று அம்சங்களையும் இன்றுவரையான எனது அரசியல் வாழ்வில் நேர்மையுடன் கடைப்பிடித்து வந்திருக்கிறேன் என்பதையிட்டு அவரை நினைவுகூரும் இவ்வேளை மனநிறைவு கொள்ள முடிகின்றது.

தோழர் கார்த்திகேசன் 1941ல் பல்கலைக்கழகக் கல்வியை முடித்துக் கொண்டு 1945ல் கட்சிப் பணிக்காக யாழ்ப்பாணம் நிரந்தரமாகச் செல்லும் முடிவு வரையான நான்கு ஆண்டுகளும் பல சோதனைகளையும் எதிர்ப்புகளையும் கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டியிருந்தது. முதலாவது, கார்த்திகேசன் கம்யூனிஸ்டாக மாறியது குடும்பத்தவர் உறவினர்களுக்கு கசப்பானதாகவே இருந்தது. அன்றைய யாழ்ப்பாணத்து பழமைவாத வைதீகச் சூழலில் அதுவும் பல்கலைக்கழகப் பட்டதாரி ஒருவர் கம்யூனிஸ்டாவது மட்டுமன்றி கட்சியின் முழுநேர ஊழியர் ஆகிக்கொள்வதை எந்தக் குடும்பத்தவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால் தோழர் கார்த்திகேசன் அதற்கு முகம் கொடுத்து தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக் கொண்டார். இரண்டாவது, அவர் தான் விரும்பிக் காதலித்த பெண்ணை குடும்பத்தவர் உறவினர்களின் ஒப்புதல் இன்றித் திருமணம் செய்து கொண்டார். மூன்றாவது, இவற்றின் மத்தியில் தனது முழுநேர அரசியல் பணியை கொழும்பில் மேற்கொண்டமையாகும்.

1940-45 காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியானது அதன் தலைமையினர், முழுநேர ஊழியர்கள், உறுப்பினர்கள் ஆகிய முத்தரப்பினரையும் கொண்ட கடுமையான வேலைமுறையினை கொழும்பை மையமாகக் கொண்டு முன்னெடுத்தது. அவர்களது நாளாந்த வாழ்க்கை மிக எளிமையாகக் காணப்பட்டது. எல்லோரும் காக்கியிலான அரைக் கால்சட்டை சேர்ட் அணிவதும் கூட்டாக சமைத்து உண்பதும் இரவு பகலாக வேலை செய்வதும் பழக்க வழக்கங்களில் ஒரு ஒழுங்குமுறையும் பின்பற்றப்பட்டது. இதனை 'கம்யூன்' வாழ்க்கை என்றே அழைத்தனர். இத்தகைய வாழ்வு முறைக்குள் தான் தனது குடும்ப வாழ்வை ஆரம்பித்த

www.padippakam.com

கார்த்திகேசனும் வாழ்ந்தார். அவர் எச்சந்தர்ப்பத்திலும் சலனமோ சலிப்போ அடையவில்லை என்பதை அக்காலத்தில் அவரோடு முழுநேர ஊழியர்களாக கட்சிப் பணி புரிந்த தோழர்கள் கூறி இருக்கிறார்கள். அத்தகைய வாழ்வும் பணியும் கம்யூனிச லட்சியத்திற்கு தம்மை அர்ப்பணித்தவர்களின் ஆரம்ப வாழ்வு முறையாகவே அமைந்திருந்தது.

இக்காலகட்டத்தில் (1940-45) தென்னிலங்கையில் டாக்டர் எஸ்.ஏ. விக்கிரமசிங்கா, பீற்றர் கெனமன், எம்.ஜி. மெண்டிஸ், டபிள்யூ. ஆரியரட்ணா, ஆரியவன்ச குணசேகரா, டி.பி. யசோதிஸ், உ. சரணங்கதேரர் போன்றோர் முன்னோடிகளாக இருந்தனர். இவர்களுடன் கூடவே வடபுலத்திலிருந்து வந்தவர்களான அ. வைத்திலிங்கம், பொன். கந்தையா, மு. கார்த்திகேசன், நா. சண்முகதாசன் ஆகியோர் முன்னோடிகள் வரிசையில் இருந்தனர். முதலிருவரும் புலமைப்பரிசில் பெற்று லண்டன் சென்று பட்டதாரிகளாகி கம்யூனிஸக் கருத்துக்களுடன் நாடு திரும்பியவர்கள். பின்னவர்கள் இருவரும் இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளாகி கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியர்களாகிக் கொண்டவர்கள். இவர்களுடன் கேரளத்திலிருந்து வந்து இங்கு தொழில்கள் செய்தவர்களிடையே கம்யூனிஸ்ட் கட்சிக்கு நிறைய செல்வாக்கிருந்தது. மலையாள மொழியில் வாரப்பத்திரிகையும் வெளியிடப்பட்டது. தோழர். கே. இராமநாதன் முன்னோடிகளில் ஒருவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தோழர் கார்த்திகேசன் தனது ஆங்கில மொழி ஆற்றலைப் பயன்படுத்தி கட்சியின் ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு பொறுப்பாக இருந்து செயற்பட்டார். மாணவர் செய்தி (Student News), ஃபோவேட் (Forward) ஆகியன வார இதழ்களாக வெளிவந்தன. அன்றைய நிலை இன்றுபோன்று வசதி வாய்ப்புக்கள் கொண்ட காலம் அல்ல. பத்திரிகைகளுக்கான விடயதானம் எழுதுவது, அச்சுக்கோர்த்து அச்சடிப்பது, பின் அவற்றை தொழிற்சாலைகள், பொதுஇடங்கள், பாடசாலை-பல்கலைக்கழகங்களில் விற்பனை செய்வது போன்ற அனைத்தையும் கட்சி ஊழியர்களே முன்னின்று செய்து வந்தனர். இந்த வேலைமுறையின் அனுபவங்களை தோழர் கார்த்திகேசன் பின் நாட்களில் நாங்கள் பத்திரிகை விற்பனையில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் சுவைபடக் கூறக்கேட்டிருக்கின்றோம்.



படிப்பகம்

தோழர் கார்த்திகேசன் ஆங்கிலப் பத்திரிகைக்குப் பொறுப்பாக இருந்த அதேவேளை அரசியல் வகுப்புக்கள், அரசியல் கலந்துரையாடல்கள் மற்றும் தொழிலாளர்கள் மத்தியிலான தொழிற்சங்க வேலைகள் போன்றவற்றில் பங்கு கொண்டு தனது பன்முக வேலைமுறையை முன்னெடுத்துக் கொண்டார். இவற்றின் மூலம் கட்சிக்கும் மக்களுக்கும் பொறுப்புள்ள ஒரு கம்யூனிஸ்டாக புதிய வார்ப்பாகி நின்றார். இந்நிலையிலேயே கட்சியின் தலைமையானது கார்த்திகேசனை வடபுலத்திற்கு கட்சிப்பணிகளை முன்னெடுப்பதற்காக அனுப்பத் தீர்மானித்தது. கட்சியின் மத்தியக்குழு மிகுந்த நம்பிக்கையோடு அப்பொறுப்பை தோழர் கார்த்திகேசனிடம் ஒப்படைத்தது. அதனை முழுமனதோடு ஏற்று தோழர் கார்த்திகேசன் தனது துணைவியாருடன் 1945ம் ஆண்டின் முற்கூறிலே வடபுலத்திற்கு வந்து கொண்டார். அங்கு கட்சிப் பணிகளைத் தொடங்கினார்.

## 5 வடபுலத்தில் பொதுவுடமை இயக்கத்தின் தோற்றம்

வடபுலத்தில் பொதுவுடைமை இயக்கத்தின் தோற்றம் பற்றி பார்க்கும் போது நாற்பதுகளில் அங்கு நிலவிய பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டு சூழல் பற்றி சுருக்கமாக அறிந்து கொள்வது அவசியம். வடபுலத்தின் பொருளாதாரத்தை மணிஓடர் பொருளாதாரம் என்றே முன்பு வர்ணிக்கப்பட்டது. இதுபற்றி பின்னர் வாதிப்பிரதிவாதங்கள் நடைபெற்றன என்பது உண்மை. ஆனால் அறுபதுகள் வரை ஏறத்தாழ அதே நிலைதான் வடபுலத்தில் காணப்பட்டமை அன்றைய யதார்த்தமாகும். நீர் நில வளங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்பட்ட வடபுலம், வானம்பார்த்த பூமி என்றே கூறப்படுவது வழக்கம். கிணற்று நீர் மூலமே கடும் உழைப்பு விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. நெல்லும் உபதானியங்களும் பருவகாலப் பயிர்களாகவும் மட்டுப்படுத்தப்பட்ட சுயதேவைக்கான அளவிலுமே உற்பத்தி செய்யப்பட்டன. வன்னிப் பிரதேசத்தில் குளத்து நீர்ப் பயன்பாடு நாற்பதுகளுக்குப்பின்பே திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் விருத்தி கண்டு நெல்லும் உப உணவுப் பயிர்களும் செய்யப்பட்டன. வெங்காயம் மிளகாய் போன்ற உப உணவு உற்பத்தி பணப்பயிராக பிற்காலத்திலே பரந்தளவில் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் முன்பு தென்னிலங்கை சந்தைக்காகவும் வெளிநாடுகள் சிலவற்றுக்கு ஏற்றுமதி செய்யவும்

www.padippakam.com

வடபுலத்தில் பொதுவுடமை இயக்க முதலாவது
விதையை ஊன்றிய
தோழர் மு. கார்த்திகேசன்



ஆரம்பகாலத் தோழர்கள்



தோழர் டாக்டர்
சு. வே. சீனிவாசகம்



தோழர்
எம். சி. சுப்பிரமணியம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

புகையிலையே பணச்செடியாக உற்பத்தி செய்யப்பட்டது. மேலும் தென்னிலங்கையில் வியாபாரம் செய்வதும் வடபுலத்துப் பொருளாதாரத்தின் ஒரு கூறாக விளங்கியது.

இந்நிலையில் கல்வியும் அரசாங்க உத்தியோகமுமே வடபுலத்தில் முதன்மைப் படுத்தப்பட்டது. ''அரசாங்க உத்தியோகம் புருஷலட்சணம்'' என்னும் அளவுக்கு மேன்மையாக மதிக்கப்பட்டது. கொலனித்துவ ஆட்சியின் கீழ் அரசாங்க உத்தியோகம் வருமானத்திற்கும் அந்தஸ்த்துக்கும் பிற்கால ஓய்வூதியத்திற்குமுரிய ஒன்றாக இருந்ததால் அது உயர்வாகக் கொள்ளப்பட்டது. ''கோழி மேய்த்தாலும் கோறணமேந்தில் மேய்க்க வேண்டும்'' என அக்காலத்தில் கூறப்பட்டமை மேற்கூறியவற்றின் காரணமாகவேதான்.

வடபுலத்தில் கொலனித்துவ ஆட்சியாளர்கள் தூர நோக்கில் தமது மிஷனரிக் கல்வியை நிலைநிறுத்தினர். தங்கள் அரச நிர்வாக இயக்கத்திற்கும் ஏனைய பிரதான தொழில் துறைக்கும் ஆங்கிலம் கணிதம் இரண்டையும் பிரதானப்படுத்திய கல்வியைக் கொடுத்து உத்தியோகத்தர்களைப் பெற்றுக் கொண்டனர். இவ்வாறு செய்து கொண்டதன் மூலம் தமிழர்கள் மத்தியிலிருந்து கொலனித்துவ விசுவாசம் மிக்க அரசாங்க ஊழியர்களை உருவாக்கினார்கள். இதுவே பிற்காலத்திய இனமுரண்பாட்டின் ஓர் அம்சமாகி இனப்பிளவு ஏற்படவும் வழிவகுத்தது என்பது கவனத்திற்குரிய விடயமாகும்.

இந்த இடத்திலே மற்றொரு விடயத்தை குறிப்பிட்டாக வேண்டும். வடபுலத்தில் மிஷனரிக் கல்விக்கும் அப்பால் நாவலர் மரபில் வந்த சைவத் தமிழ்ப் பாடசாலைகளும் கொலனித்துவ சார்புக் கல்வியையே வழங்கின. அதேவேளை அக்கல்வி பெறும் வாய்ப்பும் உரிமையும் சமூக அடித்தளத்தில் இருந்த சாதாரண மக்களான சாதியப் படிநிலையில் கீழே இருந்த தாழ்த்தப்பட்டவர்களுக்கு மறுக்கப்பட்டு வந்தது. இதனால் வடபுலத்து தமிழர் சமூகத்திலே நாற்பது வீதமாகக் காணப்பட்ட வேளாளர் என்போரில் ஒரு பிரிவினர் கல்வியையும் அரசாங்க உத்தியோகங்களையும் பெருமளவில் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர். ஏனைய இடை நிலைச் சாதியினரும் ஆகக் கீழே இருந்த தாழ்த்தப்பட்ட மக்களும் இந்நிலையில் இருந்து புறக்கணிக்கப்பட்டு கல்வி உத்தியோக வாய்ப்பு வசதிகளும் மறுக்கப்பட்டவர்களாயினர்.



படிப்பகம்

இந்நிலை அரசாங்கம் பாடசாலைகளை கையேற்று தாய்மொழிக் கல்வியை புகுத்தி இலவசக் கல்விக்கு முழுமையான அர்த்தம் வழங்கப்படும் வரை வடபுலத்திலே நீடித்தது.

எனவே வடபுலத்து பொருளாதாரத் துறையில் நிலவுடமை என்பது அதன் நிலப்பரப்புக்கு ஏற்ற அளவில் குறைந்த ஒன்றாக இருந்த போதிலும் அதன் ஆதிக்கக் கருத்தியல் சிந்தனை நடைமுறையானது கெட்டியானதாகவும் சாதிய அமைப்புடன் பிணைந்து இறுக்கமானதாகவும் காணப்பட்டது. இத்தகைய அமைப்பு முறையின் ஊடாக உருவாகிய மத்தியதரவர்க்கமானது மேல்நோக்கிய சுயநலச் சிந்தனையும் கொலனித்துவ விசுவாசமும் கொண்டதாக நாற்பதுகளிலே காணப்பட்டது.

இத்தகைய பொருளாதார அடிக்கட்டுமானத்திலிருந்தே வடபுலத்து அரசியலும் வளர்வதாயிற்று. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே கொழும்பை மையமாகக் கொண்ட நிலவுடைமை வழிவந்த மேட்டுக்குடி கல்விகற்ற தமிழர்கள் சிலரே வடபுலத்து தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்து வந்தனர். இந்நிலை கடந்த நூற்றாண்டின் முப்பதுகளின் முடிவுவரை பொன்னம்பலம் இராமநாதன் சகோதரர்கள் ஊடாக நீடித்தது. அவர்களது அடியொற்றிநின்ற ஜீ.ஜீ. பொன்னம்பலம் கூட இடதுகாலை யாழ்ப்பாணத்திலும், வலதுகாலை கொழும்பிலும் சொத்து சுகங்களுடன் வைத்தே தமிழர் ஆதிக்க அரசியல் நடாத்தினார் என்பது மற்றொரு விடயம். எஸ்.ஜே.வி. செல்வநாயகம், மு. திருச்செல்வம், போன்றவர்களும் அவ்வாறானவர்களாகவே விளங்கினர் என்பது மறைக்கப்பட முடியாதவைகளாகும்.

ஆனால் கடந்த நூற்றாண்டின் இருபதுகளின் நடுக்கூறில் இருந்து யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் பின்பு வாலிபர் காங்கிரஸ் என்னும் பெயரில் நடாத்திய அரசியல் சமூக பண்பாட்டியக்கம் வடபுலச் சூழலில் ஒரு வித்தியாசமான போக்கைக் கொண்டிருந்தது. அதனிடம் கொலனித்துவ எதிர்ப்பு, தேசியம், சுதந்திரம், தேசிய பொருளாதாரம், சமூக சீர்திருத்தம், பண்பாட்டுக் கூறுகளில் மாற்றம், சாதிய - தீண்டாமை எதிர்ப்பு மற்றும் பெண்கள் உரிமை பற்றிய மாற்றுக் கருத்துக்களும் காணப்பட்டன. சுருங்கக் கூறின் துணிபுமிக்க தூரநோக்குடைய முற்போக்கான அரசியல் கூறுகளை யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் கொண்டிருந்தது. அதன் உச்சமாகவே முன்பு

www.padippakam.com

கூறிய 1931ன் முதலாவது அரசாங்க சபைக்கான தேர்தலை முற்றுமுழுதாகப் பகிஷ்கரித்து தமது புறக்கணிப்பு இயக்கத்தை வெற்றிப்பெறச் செய்தது. வடபுலத்திற்கான நான்கு ஆசனங்களுக்கு வாலிபர் காங்கிரசின் முடிவை ஏற்று எவருமே போட்டியிடவில்லை. அதன் மூலம் முதலாவது அரசாங்க சபையில் நான்கு ஆசனங்கள் வெறுமையாகவே இருந்து வந்தன. இப்பகிஷ்கரிப்பை பின் நாட்களில் ஜீ.ஜீ. பொன்னம்பலம் போன்றவர்கள் ''தூரநோக்கற்ற முட்டாள்தனமான தீர்மானம்'' என நிராகரித்தே தமிழர் மேட்டுக்குடி ஆதிக்க அரசியலை முன்னெடுத்தனர். அதன்மூலம் வாலிபர் காங்கிரஸ் முன்னெடுத்து வந்த முற்போக்கு தேசிய நிலைப்பட்ட அரசியல் கூறுகள் யாவும் மூழ்கடிக்கப்பட்டது. இதனால் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸில் தீவிரத்துடன் செயற்பட்டு வந்தவர்களில் ஒரு சிலர் மேலெழுந்து வந்த மேட்டுக்குடி ஆதிக்க அரசியலில் சங்கமமாகிக் கொண்டனர். வேறுசிலர் செயலற்றுப் போயினர். ஹண்டி பேரின்பநாயகம், ஒறேற்றர். ஸி. சுப்பிரமணியம், பி. நாகலிங்கம், ஏ.எஸ். கனகரட்ணம் போன்றோர் இடதுசாரி அரசியலில் பிரவேசித்துக் கொண்டனர்.

வடபுலத்துச் சமூகச் சூழலில் சாதிய தீண்டாமைக்கு எதிரான கருத்துக்களும் நடைமுறை இயக்கங்களும் வாலிபர் காங்கிரஸின் தேய்வுடன் சற்று தளர்வுற்றுப் போனாலும் அது புதிய தளங்களில் வளர்ச்சி பெறும் ஒன்றாகக் காணப்பட்டது. கல்வி கற்ற கிறிஸ்தவரான யோவல் போல் ஏற்கனவே உருவாக்கிய ஒடுக்கப்பட்ட ஊழியர் சங்கம் என்னும் அமைப்புக்குப் பின் புதிய அமைப்புக்கள் சிலவற்றை உள்ளடக்கி சிறுபான்மைத் தமிழர் மகாசபை 1942ல் தோற்றுவிக்கப்பட்டது. அதன் ஆரம்பம் பொதுவானதொன்றாக இருந்த போதிலும் இடதுசாரிகளின் ஆதரவையும் அரவணைப்பையும் பெற்றுக் கொண்டதாக வளர்ச்சியுற்றது.

நாற்பதுகளின் ஆரம்பத்துடன் சமசமாஜக் கட்சி வடபுலத்தில் தனது வேலைகளை தொழிற்சங்க அடிப்படையில் முன்னெடுத்தது. பஸ் தொழிலாளர்கள், சுருட்டுத் தொழிலாளர்கள் மத்தியிலான தொழிற்சங்க வேலைகள் குறிப்பிட்ட அளவில் முன்னெடுக்கப்பட்டன. அவ்வாறே தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் சாதிய தீண்டாமைக்கு எதிரான கருத்துக்களும் பரப்பப்பட்டன. இதில் முக்கியமானவராக இருந்தவர் ஜெயம் என அழைக்கப்பட்ட எஸ். தர்மகுலசிங்கம்.



படிப்பகம்

www.padippakam.com

அவர் ஒரு வழக்கறிஞர். வடமராட்சி பருத்தித்துறையைச் சேர்ந்த அவரது இடதுசாரி நிலைப்பாடு தொழிலாளர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் ஈர்ப்பைப் பெற்றன. அவரது பெயரில் உடுப்பிட்டியில் ஒரு சனசமூக நிலையம் இன்றும் செயலாற்றி வருகின்றமை அவரை நினைவு படுத்தும். 1944ம் ஆண்டில் யாழ்ப்பாணம் வில்லூன்றி மயானத்தில் முதன் முதலாக ஒரு தாழ்த்தப்பட்டவரின் சடலம் ஒன்றைத் தகனம் செய்தபோது மறைந்திருந்து சாதிவெறியர்களால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. அவ்வேளை முதலி சின்னத்தம்பி என்ற குடும்பஸ்தர் கொல்லப்பட்டார். அவ்வழக்கில் தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக துணிவுடன் நீதிமன்றத்தில் வாதாடியவர் ஜெயம் ஆவார். குறிப்பாக அவரது சமசமாஜக் கட்சி அரசியல் வேலை வடமராட்சியையே மையமாகக் கொண்டிருந்தது. அவருக்குப் பின்பு பி. நாகலிங்கம், அ. விசுவநாதன், ஆர்.ஆர். தர்மரட்ணம், எஸ். துரைராஜசிங்கம் போன்றோர் வடபுலத்து சமசமாஜ இயக்கத்தில் முக்கியமானவர்களாக விளங்கினர். இருந்தபோதிலும் வடபுலத்தில் பொதுவுடமை இயக்கம் பரந்தளவில் வளர்ச்சியடைந்த அளவுக்கு சமசமாஜ இயக்கத்தால் நின்று பிடிக்க முடியவில்லை என்பது நோக்குதற்குரியதாகும்.

## 6 தோழர் கார்த்திகேசனின் வடபுலத்து வருகை

கட்சியின் முடிவினை ஏற்றுக்கொண்டு தோழர் கார்த்திகேசன் 1945ம் ஆண்டின் முற்கூறிலேயே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். யாழ்-நகரத்தில் விக்ரோரியா வீதியில் ஒரு வீட்டை வாடகைக்குப் பெற்று அதில் குடும்பமாக இருந்து கொண்டே கட்சிப் பணிகளை ஆரம்பித்தார். அவ்வேளை வீடும் கட்சிப் பணிமனையும் அதுவாகவே இருந்தது. உயர்ந்த உருவம், உயரத்திற்கேற்ற உடற்கட்டு, நிமிர்ந்த நடை, எதனையும் எதிர்கொள்ளக்கூடிய முகத்தோற்றம், கூர்ந்து அவதானிக்கும் கண்கள், தொளதொளத்து நிற்கும் நீளக் கால்சட்டை, கைநீளச் சேர்ட், புகைக்கும் பழக்கம், எப்பொழுதும் கையில் கட்சிப் பத்திரிகைகள் துண்டுப் பிரசுரங்கள் இருக்கும். புகைப்பதற்கு தீப்பெட்டி தட்டும்போது அவை பக்குவமாக அவரது கமக்கட்டில் இருக்கும். கதைக்கும் போது அடிக்கடி நகைச்சுவைத் துணுக்குகள் தெறித்தபடி இருக்கும். அந்த நகைச்சுவைக்கு மெருகூட்டுவது போன்ற ஒரு வகையான



படிப்பகம்

சிறுகொன்னை வந்து போகும். அவரது பேச்சில் ஆழமான கருத்துக்கள் அலுப்பூட்டாத யாழ்ப்பாண பேச்சுமொழி. நகைச்சுவையோடு சேர்ந்து அவரது சிரிப்பு மட்டுமன்றி நடித்தும் காட்டுவார். ஆங்கில தமிழ் நூல்களில் இருந்து உதாரணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து கொண்டே இருக்கும். கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் என்பதே அவருக்குரிய பரந்துபட்ட அடையாளம். அவரது தோழர்களும் நண்பர்களும் மாஸ்ரர் என்று சுட்டினால் அது தோழர் கார்த்திகேசனையே குறித்து நிற்கும்.

தோழர்களின் நண்பர்களின் கருத்துக்களைப் பொறுமையாகக் கேட்பார். எடுத்த எடுப்பில் சட்டுப்புட்டென மறுமொழி கூறமாட்டார். ஏனைய தோழர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பார். தனது கருத்தில் தவறு இருப்பின் சுட்டிக் காட்டப்படும் சந்தர்ப்பங்களில் அல்லது நடைமுறையில் அனுபவரீதியாக கண்டு கொள்ளப்படும் போது அதனை ஏற்று திருத்திக் கொள்வார். அவர் இலகுவில் கோபப்படமாட்டார். ஆனால் கோபம் வந்தால் அது மிகக் கடுமையாகவே அமைந்திருக்கும். அவ்வேளை எவர் என்றும் பார்க்கமாட்டார். ஒருமுறை இந்துக் கல்லூரியின் அதிபருக்கு கைநீட்டி அடித்துவிட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றது. மற்றொரு தடவை யாழ் மாநகரசபை மண்டபத்தில் (1963ல்) வாலிபர் இயக்க மாநாடு நடைபெற்றபோது கட்சியின் முக்கிய பிரமுகராக இருந்த ஒருவருக்கு வாக்குவாதத்தின் போது கை உயர்த்தி கார்த்திகேசன் அடித்துவிட்டார். இவ்விரண்டு சம்பவங்களிலும் கார்த்திகேசன் பக்கமே நியாயம் இருந்தது என்பது அன்றைய கணிப்பாகும். தனக்கு கன்னத்தில் அறைந்த சம்பவத்தை கார்த்திகேசனின் நினைவஞ்சலி கூட்டத்தில் அஞ்சலி உரை நிகழ்த்தும் போது யாழ் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. சபாரத்தினம் நினைவு கூர்ந்து கொண்டார். ''மறைந்த மதிப்பிற்குரிய பெருமகன் கார்த்திகேசனிடம் அடிவாங்கிய பெருமை எனக்குண்டு'' எனத் திறந்த மனதோடு கூறிக்கொண்டார் திரு. சபாரத்தினம்.

தோழர் கார்த்திகேசன் கம்யூனிஸ்ட் கட்சியை வடபுலத்தில் கட்டியெழுப்பும் முதன்மையானவராக இருந்தார். அதனால் அவரிடம் பொறுமையும் மாக்சிச லெனினிச அரசியலுக்கு முதன்மை இடம் அளித்து நின்றமையும் சொல்லுக்கும் செயலுக்குமான இடைவெளி இன்றி வாழ்ந்தமையும் அவரது கருத்துக்கள் பற்றிப் பரவக்

காரணமாகின. எளிமையான வாழ்வு கடுமையான கட்சிப்பணி என்பதை அவரிடம் நாம் வாரிசுரிமையாகப் பெறுமளவுக்கு அவர் கட்சிப்பணி புரிந்து நின்றார்.

தோழர் கார்த்திகேசனின் வருகைக்கு முன்பு வடபுலத்தில் ஆங்காங்கே பொதுவுடைமைக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டவர்கள் இருந்து வந்தனர். ஆனால் எல்லோரும் இணைந்து அமைப்பு ரீதியாகச் செயற்படும் நிலை தோன்றவில்லை. வடமராட்சியின் கரவெட்டியைச் சேர்ந்தவர் தோழர். பொன். கந்தையா. அவர் புலமைப் பரிசு பெற்று லண்டன் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்றுத் திரும்பியவர். அவர் நாடு திரும்பும் போது கம்யூனிஸ்டாகவே வந்து சேர்ந்தார். அவரது ஆரம்பகாலப் பணி கொழும்பிலேயே இருந்தது. வடமராட்சிக்கு வந்து போகும் போது பொதுவுடமைக் கருத்துக்களை இளைஞர்கள் மூலம் பரப்பிச் செல்வார்.

அவ்வாறே நீர்வேலியைச் சேர்ந்த ஏ.கே. கந்தையாவும் பல்கலைக்கழகக் கல்விக் காலத்தில் கம்யூனிஸ்ட் ஆகியவர். பிற்காலத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் கீழான தொழிற்சங்க சம்மேளனத்தில் பொருளாளராகக் கடமையாற்றிய தோழர் கே. குலவீரசிங்கம் யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கருத்துக்களைக் கொண்டிருந்தார். நல்லூர் சிவன்கோவிலைச் சேர்ந்த அ. ராமசாமிஐயர் என்பவர் கம்யூனிஸ்ட் கருத்துக்களை முழுமையாக ஏற்று நின்றதுடன் நல்லூரில் ஒரு புத்தக நிலையத்தையும் நடாத்தி வந்தார்.

இவ்வாறு தனித்தனியாக இருந்து வந்த பொதுவுடமைக் கருத்தாளர்கள் மத்தியில் எல்லோரையும் இணைத்து அமைப்பு ரீதியாகச் செயல்படுவதற்கான சந்தர்ப்பம் தோழர் கார்த்திகேசனுடைய யாழ்ப்பாண வருகையுடன் புதிய பரிமாணம் எடுத்துக்கொண்டது. அத்துடன் புதியவர்களும் ஆரம்ப உறுப்பினர்களாகிக் கொள்ளவும் செய்தனர்.

## 7 கட்சியின் ஆரம்ப உறுப்பினர்களும் வேலைமுறையும்

தோழர் கார்த்திகேசன் ஆரம்பத்தில் சில அரசியல் தொடர்புகளை ஆங்காங்கே ஏற்படுத்துவதில் ஈடுபட்டார். அதில் ஒன்று ஏற்கனவே அக்கருத்துக்களைக் கொண்டிருந்தவர்களை அடையாளம் கண்டு தொடர்பு கொண்டமை. இரண்டாவது புதியவர்களை உருவாக்கி நின்றமை தனது ஆரம்பகால வேலை முறைபற்றி மிகவும் சுவாரசியமாக கார்த்திகேசன் கூறுவார். ''முதலில் பலரும் வந்து போகக்கூடிய ஒரு இடத்தைக் கண்டுபிடித்தேன். அதுவே யாழ் புகையிரத நிலையம் முன்பாக இருந்த கதிரேசுவின் தேனீர் கடையாகும். அங்கிருந்துதான் பலரைத் தொடர்பு கொண்டு சிலரைத் தோழர்களாக்கிக் கொண்டேன்'' என்று நகைச்சுவையுடன் கூறுவார்.

மாலை வேளைகளில் மேற்படி தேனீர்க்கடை முன்பாக ஒரு கூட்டம் எந்த நாளும் நின்று கொண்டே இருக்கும். அதன் மத்தியில் நாட்டு நிலைமைகள் உலகப் போக்குகள் என்பனவற்றில் அரசியல் விவாதங்களும் கருத்துப் பரிமாறல்களும் இடம்பெறும். அக்கூட்டத்தின் மத்தியில் நடுநாயகன் போல் தோழர் கார்த்திகேசன் நின்று கொண்டிருப்பார். பத்திரிகைகள் பிரசுரங்கள் தமிழ் ஆங்கிலத்தில் இருக்கும். தமிழ் வாரப்பத்திரிகை தேசாபிமானி, ஆங்கிலத்தில் ஃபோவேட் (Forward) போன்றன கதிரேசுவின் தேனீர் கடையிலும் எவ்வேளையிலும் இருக்கும்.

இத் தேனீர்க் கடைச் சந்திப்பிலேதான் பழம்பெரும் பொதுவுடமைவாதியாக (1996ல்) தனது 84வது வயதில் மறைந்த தோழர் டாக்டர் சு.வே. சீனிவாசகம் கார்த்திகேசனுடன் அறிமுகமாகிக் கொண்டார். தோழர் சீனிவாசகம் அரசாங்க உத்தியோகத்தை ஆரம்பத்திலேயே கைவிட்டு ஆயுர்வேத வைத்தியம் கற்று மேற்கல்விக்காக இந்தியா சென்றவர். அங்கிருந்த காலத்தில் காந்தியத்தால் கவரப்பட்டவர். அவரது ஆடை எப்பொழுதும் வெள்ளை கதராடையாகவே இருக்கும். காந்தியக் கருத்துகளுடன் நாடு திரும்பிய சீனிவாசகம் தனது காங்கேசன்துறை - தையிட்டி வீட்டிலிருந்து ஒவ்வொரு நாளும் புகையிரதம் மூலம் யாழ் நகரத்தின் ஆயுர்வேதக் கல்லூரிக்கு வந்து செல்வார். அங்கு அவர் கல்வி கற்பித்ததுடன் ஊரில் வைத்தியத் தொழிலையும் நடாத்தி வந்தார். அவ்வேளைகளிலேயே புகையிரதநிலையத்தின் முன்பான

www.padippakam.com

தேனீர்க்கடையில் தோழர் கார்த்திகேசனுடனான அறிமுகம் சீனிவாசகத்திற்கு ஏற்பட்டது. அதன் பயனாக சீனிவாசகம் காந்தியக் கருத்துக்களில் இருந்து விடுபட்டு கம்யூனிஸ்ட் ஆகிக் கொண்டார்.

இவ்வாறு தோழர் கார்த்திகேசன் தொடர்பால் கம்யூனிஸ்ட் ஆகியவர் மறைந்த சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவராகவும் பின் பாராளுமன்றத்தில் நியமன உறுப்பினராகவும் இருந்த எம்.சி. சுப்பிரமணியம். திராவிட இயக்க சீர்திருத்தக் கருத்துக்களால் கவரப்பட்ட எம்.சி. அவர்கள் சாதிய தீண்டாமைக்கு எதிராக செயல்பட வேண்டும் என்பதில் முழுமையான அக்கறை காட்டி முனைப்புடன் செயலாற்றி வந்தவர். அத்தகையவருக்கு தோழர் கார்த்திகேசனின் தொடர்பு கிடைத்ததன் மூலம் பொதுவுடைமைவாதியாகிக் கொண்டார்.

மேலும் யாழ்ப்பாண புகையிரத நிலையம் முன்பாக இருந்த தேனீர்க்கடை நடாத்திய கதிரேசுவின் மகன் மகாலிங்கம் கார்த்திகேசனால் ஈர்க்கப்பட்ட ஒருவர். மற்றவர் பிற்காலத்தில் பூபாலசிங்கம் புத்தகசாலையின் உரிமையாளராக விளங்கிய ஆர்.ஆர். பூபாலசிங்கம். மற்றும் முஸ்லிம் தோழர் எம்.ஏ. காதர் உட்பட மேலும் சிலரும் பொதுவுடமைக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டனர்.

மேலே குறிப்பிட்டவர்கள் எல்லோருக்கும் தோழர் கார்த்திகேசன் பொதுவுடமைக் கருத்துக்களைக் கற்பித்து கட்சியமைத்தார் என்பது உண்மைக்கு மாறான கூற்றாகும். இவர்கள் அனைவரும் ஏற்கனவே பல்வேறுபட்ட சிந்தனைகள் மூலமாக சமூகம் பற்றிய மாற்றுக் கண்ணோட்டங்களை அணுகி நின்றவர்கள். அக்காலத்தின் காந்தியம், திராவிட இயக்கம், தெற்கின் இடதுசாரிக் கருத்துக்கள், உலகின் பொதுவுடமை இயக்கப் போக்குகள் போன்றவற்றால் புதிய சிந்தனைகளுக்கும் உணர்வுகளுக்கும் உத்வேகத்திற்கும் தத்தமது சூழலின் ஊடாக ஆளாகி நின்றவர்கள். இவர்கள் மத்தியில் தோழர் கார்த்திகேசன் தனது ஆற்றலாலும் தளரா ஊக்கத்தாலும் தெளிவான பொதுவுடமை உலக நோக்கு அரசியலாலும் ஒரு ஈர்ப்பைப் பெற்றார். இவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அமைப்பு வாயிலாகபொதுவுடமைக் கட்சியை வடபுலத்தில் தோற்றுவித்த ஒருவராக தோழர் கார்த்திகேசன் விளங்கினார்.

www.padippakam.com

1945ல் வடபுலத்தின் பொதுவுடமை இயக்க ஆரம்பக்குழு உறுப்பினர்களாக மு. கார்த்திகேசன், டாக்டர் சு.வே. சீனிவாசகம், ஏ.கே. கந்தையா, எம்.ஏ. காதர், அ. ராமசாமிஐயர், எம்.சி. சுப்பிரமணியம், க. மகாலிங்கம், ஆர்.ஆர். பூபாலசிங்கம், கே. குலவீரசிங்கம் ஆகியோர் இணைந்திருந்தனர். இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட வடபுலத்து பொதுவுடமைக் கட்சியானது இரண்டு முக்கியமான போக்குகளுக்கு முகம் கொடுத்து கடுமையான சவால்களுக்கு ஊடாக அரசியல் வேலைகளை முன்னெடுத்தது.

ஒன்று, வடபுலத்தில் நிலவிய சமூக பண்பாட்டுச் சூழல். இரண்டாவது அரசியல் நிலைமைகளின் வளர்ச்சிப் போக்கு. சமூகப் பண்பாட்டுச் சூழலை எடுத்து நோக்கினால் இலங்கையில் வாழ்ந்து வந்த தமிழர்களில் அதிஉயர் பழமைவாதச் சிந்தனைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றும் முனைப்புடைய சமூகப் போக்கே வடபுலத்தில் காணப்பட்டது. இது நிலவுடமை ஆதிக்க வழி வந்த ஒன்றாகவும் சாதிய அமைப்பாகவும் இருந்தது. இச்சாதிய அமைப்பு முறை வடபுலத்தில் ஏனைய பிரதேசங்களை விட கட்டிறுக்கம் பெற்று நிலவியது. இதற்கு சமய பண்பாட்டு வாயிலாக மேலும் இறுக்கத்தையும் துலக்கத்தையும் வழங்கியவர் ஆறுமுகநாவலர். அவரது பங்களிப்போடு சைவ வேளாள ஆதிக்க கருத்தியல் என்பது கொலனித்துவ காலத்தில் புத்தூக்கம் பெற்று பொலிவுடன் விளங்கியது. யாழ்ப்பாண கிடுகுவேலிக் கலாச்சாரம் என்பதின் ஊடாக கந்தபுராண கலாச்சாரம் என்ற பெயரில் சாதிய ஆதிக்க பண்பாட்டுக் கூறுகளே மேலோங்கி நின்றன. வடபுலத்து சமூகச் சூழலில் வர்க்க, சாதிய, பெண்ணிய ஒடுக்குமுறைகள் என்பன பழமைவாத சிந்தனைகளாலும் சமய வைதீக நடைமுறைகளாலும் பேணப்பட்டன. இவற்றை உடைப்பதில் அல்லது அதன் கட்டிறுக்கத்தைத் தளர்த்துவதில் அந்நிய கொலனித்துவவாதிகளும் அவர்களது கிறிஸ்தவ மதமும் முன்நிற்கவில்லை. ஓரிரு முனைகளில் சிற்சில மாற்றங்களுக்கு அவர்கள் முயன்ற அதேவேளை பெருமளவிற்கு நிலவுடமை ஆதிக்க சக்திகளுடனும் அவர்களது கருத்தியலுடனும் அதன் பண்பாட்டு நடைமுறைகளுடனும் சமரசம் செய்து இணங்கிப் போவதையே கொலனித்துவ ஆட்சியாளர்கள் நடைமுறைப்படுத்தினர்.

இரண்டாவது, வடபுலத்து அரசியல் வளர்ச்சிப் போக்கானது பொருளாதார சமூக பண்பாட்டுத் துறைகளினாலான ஆதிக்க



படிப்பகம்

www.padippakam.com

சக்திகளைச் சார்ந்தே முன்னெடுக்கபட்டது. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று முப்பதுகளில் முற்போக்கான தேசிய நோக்குடைய தீண்டாமை எதிர்ப்புடைய யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் அரசியல் சமூக சீர்த்திருத்தப் போக்கு அமுக்கப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டது. இங்கேதான் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் தலைமையிலான சைவவேளாள ஆதிக்க அரசியலை உட்கருவாகக் கொண்ட அரசியல் மேற்கிளம்பி அதுவே 1944ல் அகில இலங்கை தமிழ்க் காங்கிரசாகிக் கொண்டது.

வடபுலத்தில் தொழிலாளர்கள் விவசாயிகள் தாழ்த்தப்பட்ட மக்கள் வர்க்க சாதிய அடிப்படைகளில் சுரண்டி ஒடுக்கப்படும் நிலை காணப்பட்டது. தனியார் பஸ் தொழிலாளர்கள், சுருட்டுத் தொழிலாளர்கள், கள் இறக்கும் தொழிலாளர்கள், மூட்டைகள் ஏற்றி இறக்கும் வண்டில் தொழிலாளர்கள் என்போர் சுரண்டலுக்கும் உரிமை மறுப்பிற்கும் ஆளாகி நின்றனர். அதேவேளை நிலமற்ற கூலி விவசாயிகள், குத்தகை விவசாயிகள் என்போர் நிலவுடமை கொண்டோரின் தயவை நம்பி வாழவேண்டியிருந்தது. சாதிய-தீண்டாமைக்கு உட்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும் திரள் சமத்துவமின்றி ஜனநாயக-மனித உரிமைகள் மறுக்கப்பட்டு இருந்தனர். நாற்பதுகளின் ஆரம்பத்துடன் அம் மக்கள் மத்தியில் உள்ள சிலரிடையே அமைப்புவாயிலாக ஐக்கியப்பட்டு செயற்படும் ஆவல் செயல் வடிவம் பெற ஆரம்பித்தது.

இவ்வாறான வடபுலத்துச் சூழலிலேயே 1945ல் பொதுவுடமைக் கட்சி, அமைப்பு வாயிலாக தமது வேலை முறையினை முன்னெடுக்க ஆரம்பித்தது. பத்திரிகைகள் விற்பனை, துண்டுப்பிரசுர விநியோகம், சுவரொட்டிகள், சுவர் எழுத்துக்கள் மூலம் தனது கொள்கைகளை வெளிப்படுத்தியது. அதன் ஆரம்ப உறுப்பினர்கள் மிகுந்த அர்ப்பணிப்போடும் நம்பிக்கையோடும் அரசியல் வேலைகளை முன்னெடுத்தனர்.

## 8 தோழர் கார்த்திகேசனின் ஆசிரியப் பணி

1945ல் தோழர் கார்த்திகேசன் யாழ்ப்பாணம் குடும்பத்துடன் வந்தபோது கட்சியின் முழுநேர ஊழியர் நிலையில்தான் இருந்தார். கட்சி வழங்கிய மாதாந்த படியுடன் (அலவன்ஸ்) வாழ்க்கை நடாத்துவதும், கட்சிப்பணி புரிவதும் மிகுந்த கஷ்டமாக இருந்தது.



படிப்பகம்

ஆங்கில பாடத்தை மாணவர்களுக்கு வீட்டில் வைத்து கற்பித்தார். ஆனால் எந்த மாணவரிடமும் பணம் என்று கேட்பது கிடையாது. இதனால் மாணவர் தொகை கூடியதே அன்றி வாழ்க்கையை நடாத்த கார்த்திகேசன் கஷ்டங்களைச் சுமந்து நின்றார். அவ்வாறு இருந்த போதிலும் புன்முறுவல் பூத்த முகத்துடன் எதையும் தாங்கும் பரந்த இதயத்துடன் கட்சிப்பணிகளை எவ்வித பின்வாங்கலும் இன்றி முன்னெடுத்து வந்தார்.

1945ன் பிற்கூறிலே கட்சியின் மத்தியகுழு ஆசிரியர் தொழில் ஒன்றைத் தேடிக் கொண்டு கட்சிப் பணிகளை மேற்கொள்ளுமாறு கார்த்திகேசனுக்கு ஆலோசனை வழங்கியது. அதற்கிணங்க யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியர் பதவிக்கு தோழர் கார்த்திகேசன் விண்ணப்பித்துக் கொண்டார். ஆனால் அவரது விண்ணப்பம் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பலத்த வாதப் பிரதிவாதங்களை கல்லூரி நிர்வாக சபையில் ஏற்படுத்தியது. காரணம் கார்த்திகேசன் ஒரு கம்யூனிஸ்ட்டாக இருப்பதே அத் தயக்கத்திற்கு காரணமாகியது. அந் நிர்வாக சபையில் ஒரே ஒருவர்தான் கார்த்திகேசனின் விண்ணப்பத்தை ஆதரித்து நின்றவர். அவர் சேர் வைத்திலிங்கம் துரைசாமி. அரசாங்கசபை காலத்தில் அதன் சபாநாயகராக விளங்கியவர். அவர் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் இயக்கத்தில் பங்கு கொண்டவர். இவ்வாறு கார்த்திகேசனுக்கு ஆசிரியர் பதவி வழங்குவதில் அவரது சாதியும் குடும்பமும் ஆராயப்பட்டது. கம்யூனிஸ்டாக இருந்த போதிலும் அவர் வேளாளர் சாதி என்பதை இந்துக் கல்லூரி நிர்வாகம் தனது நுணுக்கமான ஆராய்வில் கண்டுபிடித்துக் கொண்டது. ஏனெனில் நாவலர் மரபில் தோற்றுவிக்கப்பட்ட யாழ்-இந்துக் கல்லூரி பழமை பேணும் வைதீக நடைமுறைகளால் வழிநடத்தப்பட்ட கல்லூரியாகும். அங்கு தாழ்த்தப்பட்ட ஆசிரியர்களோ மாணவர்களோ முன்பு அனுமதிக்கப்படவில்லை. தனியார் கல்லூரியாகவே அன்று திகழ்ந்தது. எனவே கார்த்திகேசனின் பட்டதாரி தகைமையும் ஆங்கிலப் புலமையும் மட்டுமன்றி வேளாளர் என்ற சாதித் தகுதியும் காணப்பட்டதால் கம்யூனிஸ்டாக இருந்த போதிலும் யாழ்-இந்துக் கல்லூரியில் கார்த்திகேசனுக்கு ஆசிரியர் வேலை கிடைக்கப்பெற்றது. இவ் ஆசிரியர் பதவியைப் பெறுவதில் தோழர் கார்த்திகேசன் குறுக்கு வழிகளையோ பின்கதவு வேலைகளையோ நாடவில்லை என்பதை அவரது கால ஆசிரியர்கள் கூறக் கேட்டிருக்கிறோம். கார்த்திகேசனின் நகைச்சுவையில் ‘‘வந்தால்

வரட்டும், போனால் போகட்டும், இது இல்லாவிட்டால் வேறொன்று'' என்றே கூறிக் கொண்டாரென அறிய முடிகின்றது.

இவ்விடயத்திலே இந்துக் கல்லூரியோடு சம்பந்தப்பட்ட ஒரு சுவாரசியமான கதையைக் கூறுவது தேவையானதாகும். ஐம்பதுகளிலே வடபுலத்தில் பாடசாலைகளை நிர்வகித்து வந்த அமைப்பு (Hindu Board) இந்து பரிபாலன சபையாகும். ஆனால் யாழ் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆகியவற்றுக்கு தனியே இந்துக் கல்லூரிச் சபை (Hindu College Board) என ஒன்று இருந்து வந்தது. இதுவே ஆசிரிய அதிபர் நியமனங்கள், இடமாற்றங்கள் மாணவர் அனுமதி மற்றும் கல்லூரி அபிவிருத்தி என்பனவற்றைத் தீர்மானித்துக் கையாண்டு வந்தது. அக்காலத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்தவர் ஏ. எஸ். கனகரத்தினம். மிகுந்த சமூக அக்கறை கொண்டவர். இடதுசாரி அரசியலில் ஆர்வம் மிக்கவர். சாவகச்சேரித் தொகுதியில் சமசமாஜக்கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிட்டவர். அவர் தமது கல்லூரியின் சிறப்பு மலருக்கு ஒரு சிறுகதை எழுதியிருந்தார். ஆங்கிலத்தில் எழுதிய அதன் பெயர் ''சிவாவின் தீர்ப்பு'' (Judgement of Siva) என்பதாகும். அதன் சாராம்சம் ''புல்லூரில்'' அமைந்த சைவப்பெருங் கோவிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்கள் செல்வதைத் தடுத்து நின்ற தீண்டாமை அவலத்தை விமர்சிப்பதாகவே அமைந்திருந்தது.

மேற்படி சாவகச்சேரி இந்துக் கல்லூரி சிறப்பு மலர் வெளிவந்ததும் இந்துக் கல்லூரி சபை கூடித் தீர்மானித்து அக்கதையை எழுதியதற்காக ஏ.எஸ். கனகரத்தினம் அவர்களை அதிபர் பதவியில் இருந்து இறக்கி யாழ் இந்துக் கல்லூரிக்கு ஆசிரியராக மாற்றம் செய்து கொண்டது. ஏ.எஸ்.கேயும் அதைப்பற்றி கவலைப்படாது ஓய்வு பெறும்வரை யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவே இருந்தார். அவர் இக்கதையை எழுதிய காலகட்டத்திலேயே நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்களை அனுமதிப்பது பற்றிய சர்ச்சையும் ஆலயப் பிரவேச இயக்கமும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தோழர் கார்த்திகேசன் 1945 முதல் 1970 வரையான 25 வருடங்கள் யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினார். 1971 ஜனவரி முதல் மே மாதம் வரையான

www.padippakam.com

ஐந்து மாதங்கள் மட்டுமே யாழ் இந்துக் கல்லூரியில் கார்த்திகேசனால் அதிபராகக் கடமையாற்ற முடிந்தது. அதற்குமேல் அவரை அதிபராக வைத்திருக்க பழமைவாதப் பாரம்பரியம் மிக்க இந்துக் கல்லூரி நிர்வாகமும் அதற்கு துணைநிற்கும் உயர் குழாத்தினரும் அனுமதிக்கவில்லை. தமது உயர்மட்ட அரசியல் செல்வாக்கின் ஊடாக 1971 யூன் மாதத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு கார்த்திகேசன் இடமாற்றம் செய்யப்பட்டார். அங்கு கடமையாற்றியபின் கார்த்திகேசன் 1972 ஜனவரியிலிருந்து பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு மாற்றம் பெற்று அதிபராகி ஓய்வு பெறும்வரை அங்கு சேவை புரிந்தார்.

தோழர் கார்த்திகேசனின் ஆசிரிய பணிக்காலம் முக்கியமான அவதானிப்புகளுக்குரிய காலமாகும். ஏனெனில் அவர் ஆசிரியப் பணி புரிந்த அதே காலப் பகுதியில் தான் அவரது அரசியல் சமூகப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டன. அவரிடம் காணப்பட்ட சிறப்பு என்னவெனில் அரசியல் சமூகப் பணிக்காக ஆசிரியப் பணியை ஏனோதானோ என்ற நிலையில் அலட்சியப்படுத்தி வெறுமனே சம்பளம் பெறும் இடமாகக் கல்லூரி வாழ்வைக் கழிக்கவில்லை. அதேவேளை ஆசிரியப்பணி புனிதமான குருநிலைத்தொழில் எனக் கூறி தனது அரசியல் நிலைப்பாட்டையும் பணியையும் கைவிட்டவரும் அல்லர். இதுவே கார்த்திகேசனுக்குரிய தனித்துவத்தை அரசியல் கல்வி சமூகத் துறைகளில் வழங்கி நின்ற விஷேட அம்சமாகும்.

கல்வித்துறையில் கார்த்திகேசனை நினைவு கூருவோர் அவரது ஆசிரிய வாழ்வின் ஆற்றலையும் ஆளுமையையும் எடுத்துக்கூறுவார்கள். கடமை கண்ணியம் கட்டுப்பாடு என அடுக்கு மொழி பேசும் பலர் நடைமுறை வாழ்வில் அவற்றுக்கு நேர் எதிர்மாறாகவே நடந்து கொள்வார்கள். ஆனால் நேர்மையான பொதுவுடமைவாதிகள் சொல்லாலும் செயலாலும் பணிபுரிவதில் கடமை, வாழ்வில் எளிமை, நடத்தையில் ஒழுக்கம், பழக்கவழக்கங்களில் சுயகட்டுப்பாடு, மக்கள் மத்தியில் அன்பும் மனித நேயமும் கொண்டவர்களாகவே காணப்படுவார்கள். இத்தகைய வாழ்வியல் இலக்கணங்களைத் தமது வாழ்நாளில் கடைப்பிடிப்பதில் தோழர் கார்த்திகேசன் முன்னுதாரணம் காட்டி நின்றார் என்பது அவரது அரசியல் கருத்துக்களுடன் முரண்படுபவர்களும் ஏற்றுக்கொண்ட ஒன்றாகும்.



படிப்பகம்

பொருளாதாரச் சுரண்டலும் சமூக அரசியல் ஒடுக்குமுறைகளும் மலிந்த ஏற்றத்தாழ்வான இன்றைய சமூக அமைப்பை மாற்றியமைப்பதை குறிக்கோளாகக் கொண்டே பொதுவுடைமைவாதிகள் செயலாற்றுகிறார்கள். தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளான அனைத்து மக்களினதும் புரட்சிகரப் போராட்டங்களினால் ஆளும் வர்க்கமும் அரசு யந்திரமும் வீழ்த்தப்படுவதை நோக்கியே அவர்களது வேலைமுறை காணப்படுகின்றது. சகலதுறைகளிலும் சமத்துவத்தை நிலைநிறுத்தி மனிதத் தேவைகளைப் பெறக்கூடியதுமான சோஷலிச அமைப்பை புதிய சமுதாயமாக வென்றெடுத்து நிலைநாட்டவே கட்சி, வெகுஜன அமைப்புக்கள் மூலமாகப் பொதுவுடமைவாதிகள் இலக்கினை வரையறை செய்து வழி நடக்கிறார்கள். அங்கே அவர்களது வழிகாட்டும் தத்துவமாகவும் வாழ்வியல் உலக நோக்காகவும் மாக்சிசமும் அதன் வளர்ச்சியான லெனினிசமும் மாஓசேதுங் சிந்தனையும் அமைந்து காணப்படுகின்றன.

இதற்கு அமைவாகவே தன்வாழ்வை நிலைநிறுத்திக் கொண்ட தோழர் கார்த்திகேசன் தனது கல்விப் பணியை முன்னெடுத்தார். அவர் ஆங்கிலத்தையும் கணிதத்தையும் கற்பித்தார். அவரது கல்வி கற்பிக்கும் திறனும் மாணவர்களை அணுகிநிற்கும் அரவணைப்புப் பாணியும் மாணவர்களிடையே தனி ஈர்ப்பை பெற்று நிற்கும். அதனால் வகுப்பறைக் கல்விக்கு அப்பால் கார்த்திகேசன் மூலம் தேடல் என்னும் நிலைக்கு ஒரு பகுதி மாணவர்கள் சென்றார்கள். மனிதவாழ்வின் மறுபக்கத்தையும் மனித நேயத்தின் அடிப்படைகளையும் அம் மாணவர்கள் பெற கார்த்திகேசன் காரணமாக விளங்கினார். அவர் தனது அரசியலை குரு சிஷ்ய நிலை நின்று திணித்தது கிடையாது. நண்பர்களைப் போன்று பழகியதன் மூலமும் அறிவியல் பூர்வமாக சிந்திக்கும் வழிமுறைகளை எடுத்துக் காட்டியதன் வாயிலாகவும் உலக விவகாரங்களைக் காட்டி நின்ற புதிய வகைப் பார்வை மூலமும் மாணவர்கள் மத்தியில் கவனத்தைப் பெற்றார்.

கார்த்திகேசனின் கல்விப் பணிக் காலத்தில் இரண்டு தலைமுறையைச் சேர்ந்தவர்கள் அவரிடம் கல்வி பயின்றவர்கள். அவர்கள் பல நிலைகளிலும் பல உயர் பதவிகளில் இருந்து வருகின்றார்கள். அவர்கள் அனைவருமே கார்த்திகேசனை மிகுந்த

அக்கறையோடு நினைவு கூர்ந்து தாங்கள் அவரின் மாணவர்கள் என்பதைப் பெருமையாகப் பேசிக் கொள்வதை இப்போதும் கேட்க முடியும். பேராசிரியர் க. கைலாசபதி தமது இந்துக் கல்லூரி மாணவர் காலத்தை நினைவு கூரும் வேளைகளில் கார்த்திகேசனை மிக உயர்வாகவும் மதிப்பாகவும் எடுத்துக் கூறுவார். தனக்கு மாக்சிச உலக நோக்கின் ஊடே விடயங்களை பார்க்கும் அணுகுமுறையினை தெளிவுபடுத்தி திசையறி கருவிபோன்று இருந்தவர் கார்த்திகேசன் என்றும் கூறுவார்.

தோழர் கார்த்திகேசன் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். அங்கு அவருக்கு சொந்த வீடு இருக்கவில்லை. அவர் தனது வாழ்வின் பெரும் பகுதியை யாழ்ப்பாண நகரத்தில் வாடகை வீட்டிலேயே கழித்தார். அவர் தனக்கென ஒரு வீடு கட்டவோ வாங்கவோ நினைக்கவும் இல்லை முயற்சிக்கவும் இல்லை. அவரது ஆசிரிய வருமானம் அவரது குடும்பத்தின் தேவைக்குப் போதுமானதாக இருக்கவில்லை. அவருக்கு ஐந்து பெண்பிள்ளைகளும் ஒரு ஆண் பிள்ளையும் இருந்தனர். ஆண்பிள்ளை ஆரம்பம் முதலே நரம்பு பாதிப்படைந்து நிரந்தர நோயாளியாக வாழ்ந்து முப்பத்தி நான்காவது வயதில் இறந்தார். ''ஐந்து பெண்களைப் பெற்றவன் அரசனானாலும் ஆண்டியாவான்'' என்பது நமது சீதனக் கொடுமை மிகு ஆணாதிக்க சமூக அமைப்பிலே வழங்கி வரும் ஓர் முதுமொழியாகும். பெண்களை இரண்டாம் தரநிலையில் வைத்து வாழ்வு யந்திரத்தின் பிரதான உதிரிப்பாகமாகவே கணிக்கப்படுவது நிலவுடமை வழிவந்த சமூக மரபாகும்.

தோழர் கார்த்திகேசன் இத்தகைய பழமைவாத சிந்தனையைத் தனது பொதுவுடமை கோட்பாட்டால் முறியடித்துக் கொண்டவர். பெண்ணுக்கு அழகு பொன்னும் பட்டும் பூவும் புன்சிரிப்பும் என்ற பெண்ணடிமைக் கருத்தை நிராகரித்து பெண்களும் ஆண்களோடு சரிநிகர் சமமாக வாழ வேண்டும் என்பதை ஏற்று நின்றவர். அதனால் தனது பிள்ளைகளுக்கு கல்விச் செல்வத்தை கஷ்டங்கள் மத்தியிலும் வழங்கிக் கொண்டார். அதுவே தனக்குப் பின்பும் அவர்களுக்கு கைகொடுத்து வாழ்விற்கு ஆதாரமாக நிற்கும் என்பது அவரது நம்பிக்கையாக விளங்கியது. அது நடைமுறைச் சாத்தியமுமாகியது.

www.padippakam.com

தோழர் கார்த்திகேசன் பாடசாலை பணி முடிந்ததும் நேரே கட்சிச் செயலகத்திற்கே வந்து சேர்வார். அங்கிருந்து செய்ய வேண்டியவற்றை செய்து முடித்த பின் இரவுதான் வீடு சென்றடைவார். குடும்பப் பொறுப்புகளில் பெரும் பகுதியை அவரது மனைவி வாலாம்பிகையே பொறுப்பேற்று நடாத்தி வந்தார். தோழர் கார்த்திகேசனின் அரசியல் லட்சியத்தையும் அவரது வாழ்வு முறையையும் புரிந்து கொண்டு அதற்கு இணைவு தரக்கூடிய வகையில் துணைவியார் இருந்தார்.

கார்த்திகேசன் ஆரம்பத்தில் யாழ்- விக்ரோரியா வீதி வீட்டிலும் பின்பு அதிக காலத்தை யாழ்- வண்ணார்பண்ணை வட்டாரத்திலும் கழித்தார். கலட்டி, நாச்சிமார் கோவிலடி, சிவப்பிரகாசம் வீதி வாடகை வீடுகளில் இருந்து கொண்டே செயற்பட்டார். தான் வாழ்ந்து வந்த பகுதிகளில் சாதாரண மக்களோடு உறவுகளை வளர்த்து அரசியல் சமூக சிந்தனைகளை ஊட்டுவதில் அக்கறை செலுத்தி வந்தார். அதனாலேயே ஐம்பதுகளின் பிற்கூறிலே யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினராக மக்களால் தெரிவு செய்யப்படும் நிலை உருவாகியது.

## 9 கட்சியின் அடுத்த கட்ட வளர்ச்சி

தோழர் கார்த்திகேசனின் தலைமையில் அதன் ஆரம்ப உறுப்பினர்கள் கட்சிப் பணிகளில் பரந்தளவில் ஈடுபட்டு வந்தனர். அக்காலத்தில் ஏற்கனவே உருவாகி ட்ரொட்சிச வழியில் சென்று கொண்டதுமான லங்கா சமசமாஜக் கட்சியுடன் கோட்பாட்டு அடிப்படையிலான முரண்பாடு காரணமாக இரு கட்சிகளும் தனித் தனிவேலை முறைகளில் எதிரும் புதிருமாக ஈடுபட்டு வந்தன. இவ்வேலை முறை வடபுலத்திலும் எதிரொலித்து நின்றது. எஸ். தர்மகுலசிங்கம் (ஜெயம்) சமசமாஜக் கட்சியிலும் மு. கார்த்திகேசன் பொதுவுடமைக் கட்சியிலும் நின்று வேலைகளை முன்னெடுத்தனர்.

இவ் ஆரம்பகாலத்தை அடுத்தே லண்டன் கேம்பிரிஜ் பல்கலைக் கழகப் புலமைப்பரிசில் பட்டதாரிகளான அ. வைத்திலிங்கம், பொன் கந்தையா ஆகிய இருவரும் கட்சிப்பணி புரிந்த கொழும்பை விட்டு வடபுலத்திற்கு வந்து சேர்ந்தனர். வைத்திலிங்கம் யாழ் இந்துக் கல்லூரியிலும் கந்தையா மானிப்பாய்



படிப்பகம்

www.padippakam.com

இந்துக் கல்லூரியிலும் ஆசிரியர்களாகிக் கொண்டனர். அவர்களது வருகை பொதுவுடமைக் கட்சியின் வடபுலத்து வளர்ச்சிக்கு மேலும் உரம் இட்டுக் கொடுத்தது. வைத்திலிங்கம் யாழ் இந்துக் கல்லூரியில் கல்வி கற்பித்த போதும் கல்லூரியில் அரசியல் பற்றி எதுவும் பேசுவதில்லை. அதேவேளை பொன். கந்தையா ஒருவகை முற்கோபக்காரர். தனது கொள்கைக்காக நேருக்கு நேராக ஏசிக் கொள்வது அவரது இயல்பு. அதேவேளை மக்கள் சார்பான ஒவ்வொரு பிரச்சினையிலும் மக்கள் பக்கம் நின்று உறுதியாகப் போராடும் சுபாவம் மிக்கவர். வைத்திலிங்கம் அரசியல் தத்துவார்த்த விளக்கமளிப்பதும் தொழிற்சங்க அமைப்பிலும் அதிக அக்கறை செலுத்தி நின்றவர். அரசியலை பாடசாலைக்குள் பேசிக் கொள்ளமாட்டார். அதனால்தானோ என்னவோ அவரை இந்துக்கல்லூரிச் சபை உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அதிபராக்கிக் கொண்டது.

1947ம் ஆண்டில் இடதுசாரித் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நாடு முழுவதும் பொது வேலை நிறுத்தம் ஒன்றினை நடாத்தியது. அரசாங்க தனியார்துறை தொழிலாளர்களும் ஊழியர்களும் இவ்வேலை நிறுத்தத்தை முன்னெடுப்பதில் ஆகக்கூடிய ஐக்கியத்தைக் காட்டி நின்றனர். அரசாங்கம் மிக மோசமான அடக்குமுறைகளைக் கையாண்டது. இவ்வேலை நிறுத்தம் சார்பாக 1947 யூன் 5ம் திகதி கொழும்பு கொலனாவையில் இடம்பெற்ற ஊர்வலத்தை நோக்கி போலீஸாரால் துப்பாக்கிச் சூடு நடாத்தப்பட்டது. இதில் அரசாங்க ஊழியரான வி. கந்தசாமி உயிர் துறந்தார். அத்துடன் பலர் படுகாயங்கள் அடைந்தனர். கந்தசாமி அரசாங்க எழுதுவினைஞர் (G.C.S.U) சங்கத்தைச் சேர்ந்தவர். அவரது சொந்த ஊர் வட்டுக்கோட்டையாகும். அவரது உடல் கொழும்பில் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் ஊழியர்களின் இறுதி மரியாதைக்குப்பின் கோட்டைப் புகையிரத நிலையத்திற்கு மிகப்பெரும் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு புகையிரதம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இவ் ஊர்வலத்தின் தொகையையும் அனுதாபத்தையும் கேள்வியுற்ற, ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஓடோடி வந்து பிரேதப்பெட்டி தூக்கிச் செல்லப்படுகையில் தானும் தோள்கொடுத்துக் கொண்டார் என்பதை அதில் பங்குகொண்ட தலைமைத் தோழர்கள் கூறக் கேட்டிருக்கின்றோம். ஏனெனில் அப்போதுதான் ஜீ.ஜீ. பொன்னம்பலம் தமிழ் காங்கிரஸை உருவாக்கி அடுத்த



படிப்பகம்

www.padippakam.com

தேர்தலுக்கு தயாராகி நின்ற காலகட்டமாகும். மேலும் இவ் ஊர்வலத்தை அடக்கவும் துப்பாக்கிச் சூடு நடத்தவும் உத்தரவிட்ட யூ.என்.பி. ஆட்சியின் உள்நாட்டு அமைச்சராக இருந்தவர் அ. மகாதேவா என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவரையே யாழ்ப்பாணத் தொகுதியில் 1947 பொதுத்தேர்தலில் ''தமிழினத் துரோகி'' என வர்ணித்து ஜீ.ஜீ. பொன்னம்பலம் வெற்றி பெற்றார் என்பதும் சுவையான செய்தியாகும்.

மேற்படி பொது வேலை நிறுத்தம் வடபுலத்திலும் எதிரொலித்து நின்றது. அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் இடதுசாரிகளின் செல்வாக்குமிக்க சங்கமாக வடபுலத்தில் வளர்ச்சி பெறத் தொடங்கியது. அத்துடன் வெவ்வேறு துறைகளிலான தொழிற்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆசிரியர் சங்கம் தோற்றம் பெற்றது. வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் செயற்பாடுகளில் மு. கார்த்திகேசன், அ. வைத்திலிங்கம், ஏ.எஸ். கனகரத்தினம் போன்றவர்கள் மும்முரமாக ஈடுபட்டனர். அன்று தனியார் பாடசாலைகளாக இருந்த சூழலில் ஆசிரியர்கள் சார்பான அடிப்படைக் கோரிக்கைகள் பல முன்வைக்கப்பட்டன. இத்தொழிற்சங்க வேலைமுறை காரணமாக பல இளம் ஆசிரியர்கள் பொதுவுடமைக் கருத்துக்களின்பால் ஈர்க்கப்பட்டனர்.

இத்தகைய சூழலில் 1947ம் ஆண்டின் சோல்பரி ஆணைக்குழுவின் சிபார்சுக்கமைய முதலாவது பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் இலங்கையின் முக்கிய தொகுதிகளில் பொதுவுடமைக் கட்சி போட்டியிட்டது. வடபுலத்தில் பருத்தித்துறைத் தொகுதியில் தோழர் பொன். கந்தையா கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டார். அதேவேளை சமசமாஜக் கட்சியின் சார்பாக எஸ். தர்மகுலசிங்கம் போட்டியிட்டார். பொதுவுடமைக் கட்சிக்கு குறைந்த வாக்குகளே கிடைத்தன. இருப்பினும் அத்தேர்தல் கட்சி வேலைகளை விஸ்தரிப்பதற்கான ஒரு உந்துதலை வழங்கியது.

அதேவேளை சில உள்ளூராட்சி மன்றங்களிலும் கட்சி போட்டியிட்டது. வலி வடக்கு மயிலிட்டி கிராமசபைக்கு நடைபெற்ற தேர்தலில் தோழர் டாக்டர் சு.வே. சீனிவாசகம் கட்சி சார்பாக சிகப்பு நிறப் பெட்டிக்கு போட்டியிட்டு மேட்டுக்குடி ஆதிக்க சக்திகளுக்கு எதிராக வெற்றிபெற்றார்.



படிப்பகம்

www.padippakam.com

1947ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தென்னிலங்கையில் பொதுவுடமைக் கட்சிக்கு ஆறு ஆசனங்கள் கிடைத்தன. சமசமாஜக் கட்சிக்கு பதின்நான்கு ஆசனங்கள் வந்தன. இதன் மூலம் இவ் இடதுசாரிக் கட்சிகளுக்கு பாராளுமன்றம் பற்றிய மாயையும் தேர்தல் மூலமாக அதிகாரத்திற்கு வந்து கொள்ளலாம் என்ற ஆவலும் உள்ளூர வளர ஆரம்பித்துக் கொண்டமை நோக்கத்தக்க ஒன்றாகும்.

வடபுலத்தில் நாற்பதுகளின் பிற்கூறிலே பொதுவுடமைக் கட்சியானது கிராமங்கள் பலவற்றிலே தொடர்புகளை ஏற்படுத்தி அரசியல் வேலைகளை விரிவாக்கி வந்தது. இதற்கு சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் ஊக்கத்துடன் வேலை செய்து வந்த எம்.சி. சுப்பிரமணியம் பொதுவுடமைக் கட்சியில் முக்கியமானவராக இருந்தமையும் காரணமாகும். பின்தங்கிய கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் சகல நிலைகளிலுமே ஒடுக்கப்பட்டு வந்ததுடன் சமத்துவமற்ற நிலையில் ஜனநாயக மனித உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாக இருந்தனர். எனவே அவர்கள் மத்தியில் பொதுவுடமைக் கட்சி வேலைகளை விஸ்தரித்துக் கொண்டது. இக்காலகட்டத்திலேயே மிகவும் துடிப்புடன் காணப்பட்ட கே. டானியல், டொமினிக் ஜீவா, எஸ். இராசையா ஆகியோர் 1947ல் பொதுவுடமைக் கட்சியில் இணைந்து கொண்டனர். இவர்களை பொதுவுடமைவாதிகளாக்கியதில் மு. கார்த்திகேசன், எம்.சி. சுப்பிரமணியம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

## 10 1950களில் கட்சியின் வளர்ச்சி

1950களின் ஆரம்பத்துடன் வடபுலத்தில் பொதுவுடமைக் கட்சி வளர்ச்சிப்படிகளில் மேலும் காலடி எடுத்து வைத்துக் கொள்கின்றது. இக்கட்டத்தில் கட்சியின் முன்னிலை நோக்கி அடுத்த தொகுதியினர் வந்து கொள்கின்றனர். ஆசிரியர் க. பசுபதி, ஆசிரியர் என்.கே. ரகுநாதன், சங்கானை மான் (Man) நா. முத்தையா, சங்கானை பி. பசுபதி, வ. நாகலிங்கம், காங்கேசன்துறை கிருஷ்ணபிள்ளை, சுன்னாகம் தருமலிங்கம், இணுவில் துரைசிங்கம், மட்டுவில் க. தவசிப்பிள்ளை எஸ். சந்தியாபிள்ளை, சுதுமலை வீ.ஏ. கந்தசாமி, கொல்லங்கட்டி கே.ஏ. சுப்பிரமணியம் போன்ற பலர் கட்சியின் இளம் சக்தியாக இணைந்து செயற்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

1952ம் ஆண்டில் முதன் முதலாக வாலிபர் மாநாடு கம்யூனிஸ்ட் கட்சியால் பெரிய அளவில் நடாத்தப்பட்டது. இதனை நடாத்துவதில் வீ.ஏ. கந்தசாமி, கே. டானியல், சங்கானை நா. முத்தையா (மான்) போன்றவர்கள் முன்நின்றனர். தென்னிலங்கையில் இருந்து எஸ்.ஏ. விக்கிரமசிங்கா, பீற்றர் கெனமன், சரணங்கதேரர் போன்ற பொதுவுடமை இயக்கத் தலைவர்கள் பங்கு கொண்டனர். இம் மாநாடு வடபுலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியை பிரபலப்படுத்தியதுடன் இளைஞர்களை பொதுவுடமைக் கருத்துக்களின் மீது திரும்ப வைத்தது.

1952ம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் தோழர் பொன். கந்தையா பருத்தித்துறைத் தொகுதியில் இரண்டாவது தடவையாகப் போட்டியிட்டார். இவ்வேளை மு. சிவசிதம்பரத்தின் மாமனாரான கே.சி. நடராஜாவும் போட்டியிட்டார். இத்தேர்தலில் பொன் கந்தையா நடராஜாவைவிட அதிக வாக்குகள் பெற்று முன்னணிக்கு வந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஐம்பதுகள் இலங்கையில் இடதுசாரிகளின் எழுச்சிக் காலம் என்பதுடன் அதன் பிரதிபலிப்பை வடபுலத்திலும் காண முடிந்தது. 1952 பொதுத்தேர்தலில் டட்லி சேனநாயக்கா தலைமையிலான அரசாங்கம் பதவிக்கு வந்து கொண்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்வர்க்க மேட்டுக்குடிகளின் சார்பான கொள்கைகளையும் ஏகாதிபத்திய ஆதரவு நிலைப்பாட்டையும் முன்னெடுத்தது. இதனால் தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் முரண்பாடும் இடைவெளியும் அதிகரித்து வந்தது. 1953ம் ஆண்டின் நடுக்கூறிலே அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டதுடன் பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்கி வந்த மதிய உணவு பறிக்கப்பட்டது. முத்திரை உட்பட போக்குவரத்துக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன. அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் ஏற்றப்பட்டன. இதனால் தொழிலாளர்கள் விவசாயிகள் மத்தியில் கடும் அதிருப்தியும் எதிர்ப்பும் காணப்பட்டன. இதன் காரணமாக இடதுசாரிக் கட்சிகளான சமசமாஜக்கட்சியும் பொதுவுடமைக்கட்சியும் இணைந்து எதிர்ப்பு ஹர்தாலுக்கு அழைப்பு விடுத்தன. அதனை ஏற்று நாடு நிலைக்குலைந்து அன்றாட இயல்பு நிலை ஆட்டம் காணும் அளவுக்கு 1953 ஆகஸ்ட் 12ம் திகதி நாடு பூராவும் ஹர்த்தால் போராட்டம் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

# அறுபதுகளின் ஆரம்பத்தில் புரட்சிகரப் பொதுவுடமைக் கட்சிப் பணிபுரிந்த தோழர்களில் சிலர்



தோழர் கே. டானியல்



தோழர். வீ. ஏ. கந்தசாமி



தோழர் கே.ஏ. சுப்பிரமணியம்



தோழர் இ. கா. சூடாமணி

www.padippakam.com

படிப்பகம்

வேலைநிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள் எனத் தொடங்கி போக்குவரத்து தடுக்கப்பட்டது. எங்கும் அரசாங்க எதிர்ப்பு நிலை உச்சமாகக் காணப்பட்டது. மந்திரி சபை தரையில் கூடுவதற்கு அஞ்சிக் கடலில் தரித்து நின்ற கப்பலில் தமது கூட்டத்தை நடத்த வேண்டியதாயிற்று. அரசாங்கம், கடும் அடக்குமுறைகளைப் பிரயோகித்து பன்னிரண்டு பேர்வரை பொலிஸ் துப்பாக்கிக்கு இரையாக்கியே ஹர்த்தாலை முடிவுக்கு கொண்டுவர வேண்டியதாயிற்று. ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்த இடதுசாரிக் கட்சிகள் எதிர்பார்க்காத அளவுக்கு அதன் வெகுஜன புரட்சிகர எழுச்சியினது வேகமும் வீச்சும் அமைந்திருந்தது. இக் ஹர்த்தால் எழுச்சியானது இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் மிக்க தொழிலாளர் விவசாய கிராமிய உழைக்கும் மக்களின் புரட்சிகரப் போராட்டமாகத் திகழ்ந்தது.

இவ்ஹர்த்தால் வடபுலத்திலும் முழு அளவில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. தோழர் கார்த்திகேசன் தலைமையிலான வடபுலத்து பொதுவுடமைக் கட்சிக்குழு பரந்தளவில் இவ்ஹர்த்தாலை வழி நடாத்தியது. சமசமாஜக் கட்சியும் இணைந்து நடாத்திய இக்ஹர்த்தாலில் அன்றைய தமிழரசுக்கட்சி முழுமையாகப் பங்கு கொண்டது. அத்தகைய ஒரு முற்போக்கான வெகுஜனப் போராட்டத்தில் இடதுசாரிகளுடன் தமிழரசுக்கட்சி பங்கு கொண்டமை அதுவே முதலும் கடைசியுமாக இருந்தமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இப் போராட்டத்தில் வடபுலத்து பொதுவுடமைக் கட்சி தனது முழுப் பலத்தையும் பிரயோகித்து பரந்த ஐக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. இதில் தோழர்கள் கார்த்திகேசன், அ. வைத்திலிங்கம், பொன் கந்தையா, சு.வே. சீனிவாசகம், கே. டானியல் போன்றவர்களின் பங்களிப்பு முக்கியமானதாக அமைந்திருந்தது. இவ்ஹர்த்தால் இலங்கையின் உழைக்கும் வர்க்க சக்திகளின் வெகுஜனப் பேரெழுச்சி எத்தகையது என்பதை எடுத்துக் காட்டியது. இவ்வெழுச்சியில் உள்ளடங்கியிருந்த அடிப்படையான புரட்சிகர அம்சங்களையும் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய கூறுகளையும் இடதுசாரிக் கட்சிகளான சமசமாஜ - பொதுவுடமைக் கட்சிகள் உரியவாறு அடையாளம் காணத்தவறி விட்டன என்பது இன்றுவரையான விமர்சனமாகவே இருந்து வருகின்றன. பெருமுதலாளித்துவ ஐக்கிய தேசியக் கட்சி அதனின்றும் பாடம் படித்து மீண்டும் ஒருமுறை அவ்வாறான ஒரு எழுச்சி ஏற்படாதவாறு

www.padippakam.com

அரசு யந்திரத்தின் ஊடாக உறுதிபடுத்திக் கொண்டது. அதேவேளை தேசிய முதலாளித்துவத்திற்கு தலைமை தாங்கி நின்ற எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா அக்ஹர்த்தாலில் பங்கு கொள்ளாமலேயே அதன் பலாபலன்களைப் பெற்றுக் கொள்வதில் விரைந்து செயற்பட்டு 1956ன் தேர்தலில் வெற்றிபெற்றுக் கொண்டார்.

ஐம்பதுகளின் நடுக்கூறிலே வடபுலத்தில் பொதுவுடமைக் கட்சியின் வளர்ச்சி பரந்து முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சிப் போக்காகி நின்றது. பாடசாலை ஆசிரியர்கள் மத்தியில் பொதுவுடமைக் கருத்துக்கள் பற்றிப் பரவும் நிலை உருவாகியது. அன்றைய பாடசாலைகள் தனியார் முகாமைத்துவங்களின் கீழே இருந்து வந்தது. யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் முன்னோடிகளாக இருந்த பல முற்போக்கு ஜனநாயகவாதிகள் முக்கிய பாடசாலைகளில் அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் கடமை ஏற்று நின்றனர். ஒறேற்றர் ஸி. சுப்பிரமணியம், ஹன்டி பேரின்பநாயகம், ஓ.ஈ. தம்பர், சிவபாதசுந்தரம், ஏ.எஸ். கனகரத்தினம், அம்பிகைபாகன் போன்றவர்களும் இன்னும் சிலரும் கல்வித்துறையின் ஊடாக சமூக நிலைமைகளில் தாக்கம் விளைவிப்போராகக் காணப்பட்டனர். இவர்களுடன் வடபுலத்தில் ஆசிரியர் குழாம் ஒன்று சமூக அக்கறையுடன் முன்னுக்கு வந்து கொண்டது. அவர்களிடையே பொதுவுடமைவாதிகளான ஆசிரியர்கள் கட்சிப்பணிகளை முன்னெடுப்பதில் ஆர்வம் காட்டினர். மு. கார்த்திகேசன், அ. வைத்திலிங்கம் ஆகியோருடன் ஏ.கே. கந்தையா, எஸ். சிவலிங்கம், ஐ.ஆர். அரியரத்தினம், க. பசுபதி, பேராயிரவர், எஸ். மகேசன், கே. ஜனகன், வ. பொன்னம்பலம், வி. மகாலிங்கம், மாதகல் வ. கந்தசாமி, எம். குமாரசுவாமி, எம். செல்லத்தம்பி, கே. தங்கவடிவேல், வ. சின்னத்தம்பி, எம்.பி. செல்வரத்தினம், எஸ். அற்புதரட்ணம், வரதராஜப்பெருமாள், எஸ். சேவற்கொடியோன், கே. சிவராசா போன்றவர்கள் வடபுலத்தில் பொதுவுடமை இயக்கத்தில் கடினமாகப் பணிபுரிந்த ஆசிரியர்கள் என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டியதாகும். இவர்களது வேலை முறையால் மாணவர்கள் இளைஞர்கள் மத்தியில் பொதுவுடமைக் கருத்துக்களின் வீச்சு சென்றடைந்து கொண்டதுடன் பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வி நிலையங்களில் அக்கருத்துக்கள் தாக்கம் மிக்கவையாக எடுத்துச் செல்லப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com

அதேவேளை தொழிலாளர்கள் விவசாயிகள் மத்தியிலான வேலைகள் நகரங்களிலும் கிராமங்களிலும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் முன்னெடுக்கப்பட்டது. வடபுலத்தில் பெரும் தொழிற்சாலைகள் அன்று இருக்கவில்லை. ஐம்பதுகளிலேயே காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலையும், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையும் தோற்றுவிக்கப்பட்டன. அவை கட்டம் கட்டமாக விஸ்தரிக்கப்பட்டன.

வடபுலத்து பழமைவாத மேட்டுக்குடி அரசியல் ஆதிக்கச் சூழலை உடைத்துக் கொண்டு பொதுவுடமைக் கட்சி முன்சென்று வளர்ச்சி நிலையை எட்டுவது இலகுவானதாக இருக்கவில்லை. அரசியல் தளத்தில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த அ. மகாதேவாவை 1947ன் தேர்தலில் தமிழினத் துரோகி எனக் கூறியே ஜீ.ஜீ. பொன்னம்பலம் யாழ்ப்பாணத் தொகுதியில் வெற்றி பெற்றார். அதே பொன்னம்பலம் ஐக்கியத் தேசியக் கட்சி அரசாங்கத்தில் அமைச்சராகிய விந்தையும் இடம் பெற்றது. இந்த நிலையை மக்களின் விருப்புடன் செய்வதாகக் காட்டுவதற்கு தமிழ் காங்கிரஸ் கட்சி யாழ் முற்றவெளியில் ஒரு கூட்டத்தை நடாத்தியது. அதில் அரசாங்கத்தில் சேரவேண்டும் எனக் கைகளை உயர்த்தி ஆதரவு தெரிவிப்பதற்கு முன்கூட்டியே ஜீ.ஜீ. பொன்னம்பலம் தனது ஆட்களைத் தயாராக்கி வைத்துக் கொண்டார். அவ்வாறே அரசாங்கத்தில் சேரும் தீர்மானம் முற்றவெளியில் ஒரு நாடகமாக நிறைவேற்றப்பட்டது. இதனை எதிர்த்து வடபுலத்து பொதுவுடமைக் கட்சி அக் கூட்டத்தில் துண்டுப்பிரசுரம் விநியோகித்தது. பரந்து நின்று விநியோகித்த அத்தருணத்தில் எம்.சி. சுப்பிரமணியம், அ. ராமசாமி ஐயர் ஆகிய இருவரும் காங்கிரஸ் குண்டர்களால் கடுமையாகத் தாக்கப்பட்ட சம்பவமும் இடம்பெற்றது.

இத்தகைய தமிழ் காங்கிரஸ் 1949ல் உடைந்து தமிழரசுக் கட்சி எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் உருவாகியது. செல்வநாயகம் கிறிஸ்தவரும் யாழ் மேட்டுக்குடியினரைப் பிரதிநிதித்துவப் படுத்திய உயர்வர்க்கத்தைச் சேர்ந்தவராவார். செல்வநாயகத்தின் உயர்வர்க்கப் பண்பை தோழர் கார்த்திகேசன் தனது நகைச்சுவைக்கு உட்படுத்தி பின்வருமாறு கூறுவார். ''செல்வம் அங்கே நாயகம் இங்கே'' என்பதாகும். இதன் அர்த்தம்



படிப்பகம்

www.padippakam.com

செல்வநாயகத்திற்கு மலையகத்தில் தேயிலைத் தோட்டமும் கொழும்பில் சட்டத்தொழிலும் இருந்து வந்தது. மிகுந்த செல்வந்தராகவும் விளங்கினார் என்பதாகும். அதனாலேயே விரைவாகத் தமிழ் காங்கிரசிற்குப் போட்டியாகவும் பதிலீடாகவும் வளர வாய்ப்பு ஏற்பட்டது. தனியே சைவவேளாள ஆதிக்க அரசியல் சக்தியாக இருந்து வந்த தமிழ் காங்கிரசைப் பின் தள்ளி சைவ-கிறிஸ்தவ வேளாள ஆதிக்க அரசியல் கட்சியாக தமிழரசுக் கட்சி சாராம்சத்தில் அமைந்து கொண்டது. அதேவேளை தமிழ் காங்கிரஸை விட தமிழினத்தின் சகல சமூக பிரிவினரையும் அரவணைத்து உள்வாங்கிச் செல்லும் ஒரு தோற்றப்பாட்டை தமிழரசுக் கட்சி ஆரம்பத்தில் வழங்கி நின்றது. உதாரணமாக சாதிய-தீண்டாமைப் பிரச்சினையில் குறிப்பிட்டளவிற்கு கரிசனை காட்டுவது போன்று தமிழரசுக் கட்சியின் சில தலைவர்கள் நடந்து கொண்டனர். அதேவேளை பொதுவுடமைக் கருத்துக்களின் பக்கம் வராத ஓரளவு கல்வி பெற்று வேலை வாய்ப்பை எதிர்நோக்கி நின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்த ஒரு பிரிவினர் தமிழரசுக் கட்சிக்கு ஆதரவாளர்களாகிக் கொண்டனர். இவ்வாறானவர்களின் சிந்தனைப் போக்கு சமூக மாற்றமோ அதற்கான போராட்டங்களோ தேவையற்றது. கல்வி, உத்தியோகம், பொருளாதார முன்னேற்றம் என்பனவற்றின் மூலம் சாதிய தீண்டாமையைக் கடந்து விடலாம் என்பதாகவே இருந்தது. உண்மையில் இத்தகைய நோக்கும் போக்கும் அத்தகையோரை தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் ''சாதிய மேன்நிலையாக்கத்திற்கே'' இட்டுச் சென்றது. உதாரணமாக தமிழர் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினராக 1977ல் உடுப்பிட்டித் தொகுதியில் நிறுத்தி வெல்ல வைக்கப்பட்ட இராஜலிங்கமும் அவரைப் போன்ற தமிழரசு - கூட்டணியைச் சேர்ந்தவர்களும் இம்மேன்நிலையாக்கம் பெற்றவர்களுக்கு ஒருவகை மாதிரியாக அமைந்திருந்தனர். இவர்களது மேன்நிலையாக்கம் சாதிக்குள் சாதிபாராட்டுவதாகவும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஐம்பதுகளின் ஆரம்பத்தில் வடபுலத்தே தமிழரசுக் கட்சி வளர்ச்சி பெறுவதற்கு கடுமையான எதிர்ப்புக்களை தமிழ்க் காங்கிரசிடமிருந்து பெற்றிருந்தது. கூட்டங்கள் நடாத்துவதுகூட பலாத்காரமாகத் தடுக்கப்பட்டன. உதாரணத்திற்கு ஒரு சம்பவத்தை தோழர் கார்த்திகேசன் எமக்கு கூறியதைக் குறிப்பிட வேண்டும். நல்லூர் வீரகாளி அம்மன் ஆலயம் முன்பாக தமிழரசுக் கட்சி ஒரு



படிப்பகம்

www.padippakam.com

பகிரங்க கூட்டத்தை ஒழுங்கு செய்து நடாத்த ஆரம்பித்தது. அவ்வேளை அக்கூட்டத்தைக் குழப்பி கலைத்துவிட தமிழ்க் காங்கிரசின் சண்டியர் கூட்டம் தயாரானது. அப்பொழுது தமிழ்க் காங்கிரசின் தலைமை அலுவலகம் ஆனைப்பந்திச் சந்தியில் தான் அமைந்திருந்தது. மேற்படி காங்கிரஸ்காரர்கள் தமிழரசுக் கட்சி மேடையைக் கைப்பற்றி தாமே கூட்டம் வைக்கும் நிலைக்கு வந்து விட்டனர். அவ்வேளை தோழர் கார்த்திகேசன் மற்றும் முக்கிய தோழர்களின் முடிவுக்கு அமைய பொதுவுடமைக் கட்சியினர் தமிழ்க் காங்கிரஸ் சண்டியர்களைத் தமது பலத்தால் அப்புறப்படுத்தி பாதுகாப்புக் கொடுத்து தமிழரசுக் கட்சியினர் தொடர்ந்தும் அதே இடத்தில் கூட்டம் நடாத்தி முடிக்க ஒத்துழைப்பு வழங்கினர் என்பது அக் காலகட்டத்தின் ஒரு முக்கிய சம்பவமாகும்.

பொதுவுடமைக் கட்சி வடபுலத்தில் ஐம்பதுகளின் நடுக்கூறிலே தமது வேலைமுறையை விஸ்தரித்துக் கொண்டமை கவனத்திற்குரியதாகும். அதற்கு ஒரு பிரதான காரணமாக அமைந்து கொண்ட சூழல் சிறுபான்மைத் தமிழர் மகாசபைக்குள் பொதுவுடமைவாதிகளின் செல்வாக்கு அதிகரித்திருந்தமையாகும். அதன் தலைமைக்குழுவில் பொதுவுடமைக் கட்சியின் முக்கியமானவர்கள் அங்கம் பெற்றிருந்தனர். அதனால் ‘கம்யூனிஸ்ட் மகாசபை'' என்றும் சிலரால் அழைக்கப்பட்டது. எவ்வாறாயினும் பின்தங்கிய கிராமப்புறங்களுக்கு பொதுவுடமைக் கட்சி ஐம்பதுகளில் செல்வதற்கும் கட்சி, இளைஞர் அணிகளை அமைப்பு ரீதியாக உருவாக்கிக் கொள்ளவும் மகாசபை பங்காற்றியமை அன்றைய காலகட்டத்தின் பிரதான அம்சமாகத் திகழ்ந்தது.

இவ்வாறான வடபுலத்து சூழலிலேயே 1956ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தல் இடம் பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி புரிந்த ஒன்பது ஆண்டுகளின் பின் இடம்பெற்ற மூன்றாவது பொதுத்தேர்தலில் அதற்கு எதிரான கடும் எதிர்ப்பு அலை தெற்கே வீசிக் கொண்டிருந்தது. இடதுசாரிகள் முனைப்புடன் அரசியல் தொழிற்சங்க அரங்கிலே செயலாற்றி நின்றனர். இத்தேர்தலில் வெற்றிபெற்று அரசாங்கம் அமைத்துக் கொள்ளலாம் என்னும் ஒருவகைக் கற்பனையும் நப்பாசையும் சமசமாஜக் கட்சி கொண்டிருந்தது. அவர்கள் நிழல் அமைச்சரவையைக்கூட அமைத்து பிரச்சாரம் செய்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் முதலாளித்துவ பாராளுமன்ற அரசியல் அமைப்பு முறையின் கீழ் நிலவுடமை ஆதிக்கத்தின் கருத்தியல்களும் நடைமுறைகளும் முதலாளித்துவத்துடன் சமரசமாகி நின்ற சூழலிலே இலங்கையில் இடதுசாரிகளால் தேர்தலில் குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் செல்ல முடியாது என்பதை 1956ம் ஆண்டு பொதுத்தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டின. ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாற்றாக இடதுசாரிகளால் பாராளுமன்ற அதிகாரத்திற்கு வரமுடியாது என்பதோடு மற்றொரு முதலாளித்துவ நிலவுடமை சக்தியாக வளர்ந்து கொண்டிருந்த தேசிய முதலாளித்துவக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலேயே அதிகாரம் பெறப்பட்டது. சமசமாஜக் கட்சி எதிர்க்கட்சித் தலைமைக்கு மட்டுமே அமர முடிந்தது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு அன்று எட்டு ஆசனங்கள் மட்டும் கிடைத்து படுதோல்வி கண்டிருந்தது. அதனையே ''ஐக்கிய தேசியக் கட்சியின் சவப்பெட்டி மீது கடைசி ஆணி அறையப்பட்டு விட்டது'' என சமசமாஜக் கட்சி அன்று கூறிய கூற்று தூரநோக்கற்ற மாக்சிச ஆய்வற்ற வெறும் உணர்ச்சி மிகு கூற்றாகவே அமைந்து கொண்டது. ஏனெனில் பாராளுமன்றத்தில் முதலாளித்துவ நிலவுடமை வர்க்க சக்திகளைத் தோற்கடிப்பது இயலாத ஒன்று என்பதை அவர்கள் உணர்ந்திருக்கவில்லை. பாராளுமன்றத்தை ஒரு மேடையாகவும் பரந்துபட்ட வெகுஜனப் போராட்டங்களுக்கான ஒரு பிரச்சாரத் தளமாகவும் பயன்படுத்துவதற்கு அப்பால் இலங்கையின் சூழலில் இடதுசாரிகளால் அதிகாரத்திற்கு வரமுடியாது என்பதை வரலாறு மெய்ப்பித்துக் கொண்டது. இவ்விடத்திலே நாம் காணவேண்டியது பாராளுமன்றப் பாதையை முற்றுமுழுதாக நம்பி அதனுள் மூழ்கி நிற்பதற்கும் அதனை உரியவாறு பயன்படுத்திக் கொள்வதற்குமிடையிலான வேறுபாட்டையேயாகும்.

1956ம் ஆண்டின் பொதுத் தேர்தல் வடபுலத்து பொதுவுடமை இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கில் ஒரு முக்கியமான கட்டமாக அமைந்திருந்தது. பொதுவுடமைக் கட்சி நான்கு முக்கிய தொகுதிகளில் போட்டியிட்டது. ஒன்று, ஏற்கனவே இரண்டு தடவைகள் போட்டியிட்ட பருத்தித்துறைத் தொகுதி. இதில் தோழர் பொன் கந்தையா மூன்றாவது முறையாகவும் போட்டியிட்டார். இத்தொகுதியில்தான் இளம் சட்டதரணியாகவும் உடையார் குடும்ப வாரிசுமான மு. சிவசிதம்பரம் ஒருபுறமாகவும் தமிழரசுக்கட்சி மறுபுறமாகவும் நின்று கந்தையாவை எதிர்த்து போட்டியிட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

அவ்வாறே வட்டுக்கோட்டைத் தொகுதியில் அ. வைத்திலிங்கம் பொதுவுடமைக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டார். அங்கே அ. அமிர்தலிங்கம் தமிழரசுக் கட்சியின் வேட்பாளராகவும் தமிழ் காங்கிரசும் போட்டியிட்டனர்.

அடுத்து யாழ்ப்பாணத் தொகுதியில் தோழர் கார்த்திகேசன் போட்டியிட்டார். ஜீ.ஜீ. பொன்னம்பலம் அத்தொகுதியில் மீண்டும் போட்டிக்கு நின்றார். தமிழரசுக் கட்சியும் போட்டியிட்டது. அ. விசுவநாதன் சமசமாஜக் கட்சியில் நின்றார்.

மேலும் காங்கேசன்துறைத் தொகுதியில் தோழர் வ. பொன்னம்பலம் பொதுவுடமைக் கட்சி சார்பாக போட்டியிட்டார். இளம் பட்டதாரியான அவர் இந்தியாவில் இருந்து திரும்பிய பின் பொதுவுடமைக் கட்சியில் இணைந்து தீவிரமாக வேலை செய்தவர். அவர் ஆசிரியராகவும் சிறந்த பேச்சாளராகவும் இருந்தார். வ. பொன்னம்பலம் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தை எதிர்த்துப் போட்டியிட்டார். பி. நாகலிங்கம் சமசமாஜக் கட்சி சார்பாக போட்டியிட்டார்.

இந்நான்கு தொகுதிகளிலும் பொதுவுடமைக் கட்சி வேட்பாளர்கள் தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளுக்கு சவாலாகவும் போட்டியாகவும் விளங்கினர். தேர்தலில் தோழர் பொன் கந்தையா பருத்தித்துறைத் தொகுதியில் அதிக பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றார். சிவசிதம்பரம் தோற்கடிக்கப்பட்டார். அதேவேளை வட்டுக்கோட்டைத் தொகுதியில் அ. அமிர்தலிங்கம் குறைந்த பெரும்பான்மையுடன் வெற்றிபெற்று தோழர் அ. வைத்திலிங்கம் தோல்வியடைந்தார்.

அவ்வாறே மு. கார்த்திகேசன், வ. பொன்னம்பலம், ஆகியோர் யாழ்ப்பாணம், காங்கேசன்துறைத் தொகுதிகளில் தோல்வி கண்டனர். இருந்த போதிலும் கணிசமான வாக்குகளைப் பெற்றுக் கொண்டதுடன் அரசியல் தளத்தில் பொதுவுடமைக் கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு இத்தேர்தல் வழிவகுத்துக் கொடுத்தது. அன்று பருத்தித்துறைத் தொகுதி இன்றைய உடுப்பிட்டித் தொகுதியையும் உள்ளடக்கியதாகவே அமைந்திருந்தது. அதனால் தொழிலாளர்கள் விவசாயிகள் மீனவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் என்போரது வாக்குப்பலம்



படிப்பகம்

www.padippakam.com

பொதுவுடமைக் கட்சியின் பக்கம் ஒன்று சேர்க்கக்கூடியதாக இருந்தது. கணிசமான அளவுக்கு இளம் புத்தி ஜீவிகளும் ஆசிரியர் மாணவர்கள் கந்தையாவின் பக்கம் வேலை செய்தனர். இவை அனைத்தையும் ஒன்று திரட்டி கட்சி முழுமையான பிரச்சாரப் பலத்தைப் பிரயோகித்தது. தோழர்கள் மு. கார்த்திகேசன், நா. சண்முகதாசன், சட்ட அறிஞரான எஸ். நடேசன் உட்பட வடபுலத்தின் தோழர்கள் அன்றைய தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் முக்கிய பேச்சாளர்களாக விளங்கினர். தோழர்கள் டாக்டர் சு.வே. சீனிவாசகம், வ. பொன்னம்பலம், கே. டானியல், அ. வைத்திலிங்கம், எம்.சி. சுப்பிரமணியம், கே.ஏ. சுப்பிரமணியம், மான் எம். முத்தையா, வீ.ஏ. கந்தசாமி, கீரிமலை ராசா, தையிட்டி சண்முகநாதன், எஸ். மயில்வாகனம், தி. குமாரலிங்கம், உசா நடசாரா, ச. இராசையா, எஸ்.ரி.என். நாகரட்ணம் எஸ். ஜெயசிங்கம், வி. மகாலிங்கம், எம். குமாரசுவாமி, என்.கே. ரகுநாதன், க. பசுபதி, எம். செல்லத்தம்பி, ஐ.ஆர். அரியரத்தினம், வி. சின்னத்தம்பி, ஆசிரியர் வ. சின்னத்தம்பி போன்றவர்கள் இத்தேர்தல் காலத்தில் வடபுலத்தில் கடுமையான பணியாற்றியவர்கள்.

பொன் கந்தையாவின் பாராளுமன்ற வெற்றியானது தமிழ் காங்கிரஸ் தமிழரசுக்கட்சி ஆகியவற்றுக்கும் வடபுலத்து பழமைவாதிகளுக்கும் அதிர்ச்சியை மட்டுமன்றி சினத்தையும் ஏற்படுத்தியது. கந்தையாவுக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் பொதுவுடமைக் கருத்துகளுக்கோ அதன் பிரசாரங்களுக்கோ அல்லது கந்தையாவின் பொதுவுடமை சார் நடைமுறைகளுக்கோ கிடைத்தவையல்ல என்றும் அவ்வாதிக்க அரசியல் சக்திகள் பிரச்சாரம் செய்தனர். அத்துடன் மிகக் கீழ்த்தரமான முறையில் தோழர் கந்தையாவின் துணைவியார் பரமேஸ்வரி தாலிப் பிச்சையாகவும் மடிப்பிச்சையாகவும் வாக்குக்கேட்டு வீடுவீடாகச் சென்றதாலேயே கந்தையாவிற்கு அனுதாப வாக்குகள் கிடைத்தன என்றும் இயலாத்தனப் பிரச்சாரம் செய்தனர். அந்தளவுக்கு பொதுவுடமைக் கட்சியினதும் தோழர் கந்தையாவினதும் வெற்றி வடபுலத்து பழமைவாத ஆதிக்க மேட்டுக் குடியினரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

வடபுலத்தில் பொதுவுடமைக் கட்சிக்கு கிடைத்த ஒரு பாராளுமன்ற ஆசனத்தை பொன் கந்தையா மூலம் கட்சி நன்கு பயன்படுத்திக் கொண்டது. நிலமற்ற மக்களுக்கு அரசாங்க



படிப்பகம்

www.padippakam.com

காணிகள் பெற்றுக் கொடுப்பதிலும், கல்வி உரிமை மறுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வி வழங்குவதிலும், தொழிலாளர்களின் உரிமைகளை வற்புறுத்துவதிலும் தோழர் கந்தையா செய்யக்கூடிய அதிகபட்ச பணிகளைச் செய்தார். இப்பணிகளைத் தனது தொகுதிக்கு மட்டும் வரையறுக்காது வடபுலத்தில் சாதாரண உழைக்கும் மக்கள் எதிர்நோக்கி நின்ற பிரச்சினைகளில் தலையிட்டு செய்தும் கொண்டார்.

1956ம் ஆண்டில் பதவிக்கு வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கம் தேசிய சர்வதேசிய ரீதியான முற்போக்கு கொள்கைகளை முன்னெடுத்துக் கொண்டது. அதேவேளை ஏற்கனவே ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் கொள்கையாக இருந்த சிங்கள மொழிச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றி தமிழ் மக்கள் மீதான இனப் பாரபட்சம் புறக்கணிப்பை அமுல்படுத்தினார். இத் தவறான நிலைப்பாட்டை இடதுசாரிக் கட்சிகளான சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் கடுமையாக எதிர்த்துக் கொண்டன. இச்சந்தர்ப்பத்திலேயே ''ஒரு மொழி இரண்டு நாடு, இரண்டு மொழிகள் ஒரு நாடு'' என்ற கூற்று கொல்வின் ஆர்டி. சில்வாவின் பாராளுமன்ற உரையில் சுட்டிக்காட்டப்பட்டது. அதேவேளை தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்திற்கும் பிரதமரான பண்டாரநாயக்காவிற்குமிடையில் ஏற்பட்ட ''பண்டா செல்வா ஒப்பந்தம்'' என்பதன் ஊடாக பிராந்திய சபைகள், விஷேட தமிழ் மொழிப் பிரயோகம், குடியேற்றங்களில் முன்னுரிமை போன்றன ஏற்கப்பட்டிருந்தன. இங்கே தமிழரசுக் கட்சியினால் சிங்களம் அரசகரும மொழி என்பது ஏற்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்கியது.

பண்டாரநாயக்கா அரசாங்க காலத்தில் 1958ம் ஆண்டில் தமிழ் மக்களுக்கு எதிரான இன வன்செயல்கள் இடம் பெற்றன. 1915ல் முஸ்லீம் மக்களுக்கு எதிராக இடம் பெற்ற சிங்கள இன வன்முறைக்குப் பின்பு தமிழ் மக்களைக் குறிவைத்து நடாத்தப்பட்ட முதலாவது இன வன்முறையாக இது அமைந்திருந்தது. தனிச் சிங்களச் சட்டமும் இவ் இன வன்முறைகளும் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்த் தேசிய உணர்வு வலுப்பெறுவதன் ஆரம்பமாகவும் அமைந்திருந்தது. இதனை தமிழரசுக் கட்சியானது பற்றிக்கொண்டு தனது பிற்போக்கான பாதையில் பயணிப்பதில் முனைப்புப் பெற்றுக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டது. 1958ன் இனவன்முறை இடம்பெற்ற சூழலில் நடைபெற்ற பாராளுமன்ற விவாதத்தில் தோழர் பொன். கந்தையா கலந்து கொண்டு இனமுரண்பாடு பற்றியும் தனிச் சிங்களச் சட்டம் பற்றியும் ஒரு முக்கிய உரையை நிகழ்த்தியிருந்தார். அவ் உரையை பொதுவுடமைக் கட்சி அவ்வேளை ''நெருக்கடியிலிருந்து நெருக்கடிக்கு'' என்னும் தலைப்பில் ஒரு பிரசுரமாக வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். தனிச்சிங்களச்சட்டத்தின் மூலம் எதிர்காலத்தில் இனமுரண்பாடு வளர்ச்சி பெற்று மோசமான கட்டத்தை அடையும் என்பதை தூரநோக்குடன் தனது உரையில் தோழர் கந்தையா குறிப்பிட்டிருந்தார்.

இச்சந்தர்ப்பத்தில் முக்கியமான ஒரு விடயம் பற்றி எடுத்துக் கூறுதல் வேண்டும். 1954ம் ஆண்டில் பொதுவுடமைக் கட்சி வடபுலத்தில் நடாத்திய கட்சி மாநாட்டில் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு பிரதேச சுயாட்சிக் கொள்கையை வரையறுத்து முன்நிறுத்தியது. இம்மாநாடு வல்வெட்டித்துறையில் இடம் பெற்றது. அதனால் அப்பிரதேச சுயாட்சித் தீர்மானம் பொதுவுடமைக் கட்சியின் ''வல்வெட்டித்துறைத் தீர்மானம்'' என அழைக்கப்பட்டது. ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழர் பிரதேசங்களில் சுயாட்சிக்கான அம்சங்களையே அத்தீர்மானம் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடவேண்டியதாகும். இத்தீர்மானம் சோசலிச நாடுகளில் தேசிய இனப்பிரச்சினை அணுகப்பட்டு தீர்வு காணப்பட்ட முன்னுதாரண அனுபவங்களையும் நமது நாட்டின் யதார்த்த நிலைமைகளையும் அடிப்படையாக வைத்தே வரையப்பட்டிருந்தது. இருந்த போதிலும் மேற்படி பிரதேச சுயாட்சி பற்றிய பொதுவுடமைக் கட்சியின் தீர்மானத்தை தமிழர் பழமைவாத ஆதிக்க அரசியல் சக்திகள் புறந்தள்ளி தமது பாராளுமன்ற ஆசனங்களுக்கான குறுந்தேசியவாத இனவாத நிலைப்பாட்டையே பிரசாரப்படுத்தி நின்றன. பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் பொதுவுடமைக் கட்சியின் பிரதேச சுயாட்சித் தீர்மானத்தை இருட்டடிப்புச்செய்து கொண்டமை குறிப்பிட வேண்டியதாகும்.

மேலும் பொன். கந்தையாவின் பாராளுமன்றப் பதவிக் காலத்தில் கல்வி மந்திரியாக இருந்தவர் டபிள்யூ. தகநாயக்கா. அவர் ஒரு தாராள ஜனநாயகவாதியாக விளங்கியவர். அவ்வேளை வடபுலத்தின் தனியார் பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இந்நிலையில் சிறுபான்மைத் தமிழர்



படிப்பகம்

மகாசபை தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்ந்து வந்த பின்தங்கிய கிராமங்களில் பாடசாலைகள் ஆரம்பிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டது. இதற்கு பொதுவுடமைக் கட்சி பக்கபலமாக நின்று வந்தது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பதினைந்து பாடசாலைகளை, அரசாங்கப் பாடசாலைகளாக அங்கீகரிக்க வைப்பதில் பொன். கந்தையா முன்னின்று செயற்பட்டார். அவை யாவும் அரசாங்க பாடசாலைகளாகி வளங்களைப் பெற்று தாழ்த்தப்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியது. அவ்வாறே அரசாங்க நியமனங்களில் ஆசிரிய கலாசாலை அனுமதிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு காட்டப்பட்ட பாரபட்சம் புறக்கணிப்புகளுக்கு எதிராக பொதுவுடமைக் கட்சியின் வடபுலத்து தலைமை மகாசபையுடன் இணைந்து கடுமையான செயற்பாடுகளில் ஈடுபட்டும் வந்தது.

ஐம்பதுகளின் நடுக்கூறிலே வடபுலத்து பொதுவுடமை இயக்கம் மேலும் புதிய சக்தியினை உள்வாங்கிக் கொண்டது. இச்சக்திகளை உரியவாறு அரவணைத்து அரசியல் போதமளித்து வழி நடத்துவதில் தோழர் கார்த்திகேசன் முக்கிய பங்கு வகித்து நின்றார். மக்கள் மத்தியில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்படுவதிலும் கட்சி வெகுஜன அமைப்புக்களைக் கட்டுவதிலும் ஆற்றல் கொண்ட தோழர்கள் கே.ஏ. சுப்பிரமணியம், இ.கா. சூடாமணி, எஸ். மகாலிங்கம், எஸ். கணேசவேல் எம். குமாரசுவாமி, உ.சா. நடராசா, க. பசுபதி, என்.கே.ரகுநாதன், மான்.நா. முத்தையா, க. செல்வராஜா, போன்றவர்களும் சிறந்த பேச்சாளர்களாக விளங்கிய வீ.ஏ. கந்தசாமி, வ. பொன்னம்பலம், கே. டானியல், மாதகல் வ. கந்தசாமி ஆகியோரும் கட்சியின் முன்நிலை நோக்கி வளர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஐம்பதுகளின் நடுக்கூறிலே இடம்பெற்ற யாழ் மாநகரசபைத் தேர்தலில் தோழர் கார்த்திகேசன் வண்ணார்ப்பண்ணை வட்டாரத்தில் போட்டியிட்டார். அன்றைய தமிழ்க் காங்கிரஸ் பிரமுகராகவும் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் வலது கரமாகவும் திகழ்ந்த துரைராசாவை எதிர்த்து போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் அத்தேர்தலில் வெற்றி பெற்றார். அவரது பதவிக் காலத்தில் தனது ஆளுமையைப் பயன்படுத்தி ஏனையோரையும் இணங்க வைத்து வரலாற்றில் முதல் தடவையாக ஒரு முஸ்லீம் உறுப்பினரான எம்.எம். சுல்தானை யாழ் நகரத்தின் முதல்வராக ஆக்கிக் கொள்வதில் வெற்றியும் பெற்றார். மாநகரசபை

www.padippakam.com

உறுப்பினராக இருந்து கொண்டு தோழர் கார்த்திகேசன் பல்வேறுபட்ட சமூகப் பணிகளில் ஈடுபட்டு வந்தார். மக்களோடு மக்களாக இணைந்து நின்று அவர் ஆற்றிய பணிகளும் அபிவிருத்தி வேலைகளும் பிற்காலத்தில் மக்களால் நினைவு கூரப்பட்டவைகளாகக் காணப்பட்டன.

இக்காலச் சூழலிலேயே தொழிற்சங்க நடவடிக்கைகளில் கட்சி கவனம் செலுத்த ஆரம்பித்தது. இலங்கையில் பொதுவுடமைக் கட்சியின் தலைமைத்துவத்தின் கீழ் இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் பல்துறை சார்ந்த தொழிலாளர்களையும் இணைத்து நின்ற தொழிற்சங்க மத்திய அமைப்பாக விளங்கியது. நாற்பதுகளின் முற்கூறிலே ஆரம்பித்த இத்தொழிற்சங்க அமைப்பு தொழிலாளி வர்க்க போர்க் குணத்துடன் கட்டி வளர்க்கப்பட்டது. எம்.ஜி. மென்டிஸ், ஜி. பண்டித, அ. வைத்திலிங்கம் போன்ற முன்னோடிகள் அதனை ஆரம்பித்த தோழர்களாகவும் பீற்றர் கெனமன், மு. கார்த்திகேசன், நா. சண்முகதாசன், டபிள்யூ. ஆரியரட்ணா போன்றவர்கள் ஆரம்பகாலப் பணியாற்றுபவர்களாகவும் விளங்கினர். ஐம்பதுகளின் ஆரம்பத்துடன் தோழர். நா. சண்முகதாசன் இத்தொழிற்சங்க இயக்கத்தை முதலாளிகளுக்கும் அரசாங்கத்திற்கும் விட்டுக்கொடுக்காது போராடும் இயக்கமாக முன்னெடுப்பதில் தனது ஆற்றல் முழுவதையும் பயன்படுத்தினார். பல்துறை சார்ந்த தொழிலாளர்களின் கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடாத்தப்பட்ட முதலாளிகளிடம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விட்டுக்கொடுக்காத பணிந்து போகாத உறுதிமிக்க தொழிற்சங்க இயக்கமாக இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் இருந்து வந்தது. இக்கால கட்டத்திலேயே மலையகத்தில் தொண்டமானின் தொழிற்சங்க ஆதிக்கத்தை உடைத்துக்கொண்டு பொதுவுடமைக் கட்சி தொழிற்சங்க இயக்கத்தைக் கட்டியது. இதில் தோழர் சண்ணின் பங்களிப்பு முக்கியமானதாகும். அதேவேளை தொழிற்சங்க இயக்கத்தின் மறுபக்கமான அரசியல் மயப்படுத்துவதில் வெற்றிபெற முடியாது போனமை மற்றொரு அம்சமாகும்.

ஐம்பதுகளின் பிற்கூறிலே வடபுலத்தில் தொழிலாளர்களை தொழிற்சங்க இயக்கத்தில் இணைக்கும் ஆரம்ப முயற்சிகள் இடம் பெற்றன. காங்கேசன்துறை சீமெந்து ஆலையில் தொழிலாளர்கள் மத்தியில் ஆரம்ப முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அங்கு கட்சிப்



படிப்பகம்

பத்திரிகைகள் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. மான் நா. முத்தையா, எஸ். சந்தியாப்பிள்ளை, கே.ஏ. சுப்பிரமணியம் போன்றோர் சீமெந்து தொழிற்சாலையில் தொழிற்சங்கம் ஆரம்பிக்க முயன்றதாகவும் பொதுவுடமைக் கருத்துக்களைப் பரப்பியதற்காகவும் வேறுவேறு குற்றச்சாட்டுக்களின் மூலம் வேலை நீக்கப்பட்டவர்கள். இருப்பினும் அங்கு தொழிற்சங்கம் முளைவிட ஆரம்பித்தது. அதன் வளர்ச்சி வடபுலச் சூழலுக்கு ஏற்ப படிப்படியானதாக அமைந்தது. பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையிலும் தொழிற்சங்கம் அமைக்கும் முயற்சிகள் இடம்பெற்றன.

ஐம்பதுகளின் நடுக்கூறின் பின் இடம்பெற்ற முக்கியமான சமூக நிகழ்வான யாழ் தேனீர்க் கடைகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமத்துவம் கோரி இடம்பெற்ற இயக்கத்தில் பொதுவுடமைக் கட்சி முன்னின்று கொண்டது. அதற்கான பரந்தளவு ஆதரவுநிலை தேடுவதற்கு சிறுபான்மைத் தமிழர் மகாசபைக்கு ஆலோசனை வழிகாட்டி பக்கபலமாகவும் பொதுவுடமைக் கட்சியே விளங்கியது. தமிழரசுக் கட்சி தவிர்க்க முடியாது ஆதரவு வழங்க வேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளாகியது. 1958ம் ஆண்டு டிசம்பர் 13ம் திகதிக்கு முன்பு யாழ்ப்பாண நகரத்திலும் ஏனைய நடுத்தர நகரங்களிலும் உள்ள தேனீர்க்கடைகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமத்துவமாகத் திறந்து விடப்படல் வேண்டும். அல்லாது விடில் டிசம்பர் 13ல் நகர உணவகங்கள் தேனீர்க்கடைகள் முன்பாக சத்தியாக்கிரகம் நடாத்தப்படும் என மகாசபை தீர்மானம் எடுத்திருந்தது. இத் தீர்மானத்திற்கு பொதுவுடமைக் கட்சியே காரணமாகவும் பின்புலமாகவும் நின்றது. இதன் காரணமாக மேற்குறிப்பிட்ட டிசம்பர் 13ம் திகதிக்கு முன்பாக யாழ் நகரத்தின் முக்கிய உணவகங்களான சுபாஸ் கபே, வீ.எஸ்.எஸ்.கே., கோவிந்தபிள்ளை தேனீர்-கடை போன்ற குறிப்பிடத்தக்க உணவகங்கள் சமத்துவமாகத் திறந்துவிடப்பட்டன. இத்தேனீர்க் கடைகள் திறப்பதற்கான இயக்கத்தில் தோழர் கார்த்திகேசன் முன்னின்று செயற்பட்டார். எம்.சி. சுப்பிரமணியம், கே. டானியல், ஆசிரியர் க. பசுபதி, வ. பொன்னம்பலம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இக்காலகட்டத்திலேயே நல்லெண்ணம் கொண்ட உயர்சாதி இந்துமதப் பெரியார்கள் என்போரின் வற்புறுத்தலால் மிகுந்த தயக்கத்துடன் நல்லூர் கந்தசாமி கோவில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்துவிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து வண்ணார்ப்பண்ணைச் சிவன் கோவிலும் திறந்து விடப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

அதேவேளை 1957ல் பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் கீழ் சமூக குறைபாடுகள் ஒழிப்பு சட்டமூலம் தனிநபர் பிரேரணையாக கொண்டுவரப்பட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. பெயரளவில் அச்சட்டம் அமைந்திருந்த போதிலும் அதனால் வடபுலத்தில் சாதிய ஒடுக்குமுறையையும் தீண்டாமையையும் அசைத்துக்கொள்ள இயலவில்லை. அச்சட்டத்திற்கான பிரேரணையை திருகோணமலை தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஆர். இராஜவரோதயம் முன்மொழிந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஏன் வடபுலத்தைச் சேர்ந்த ஒருவர் அதனைப் பிரேரிக்க முன்வரவில்லை என்பது அவ்வேளை ஒரு சர்ச்சைக்குரிய கேள்வியாக எழுந்தது. தமிழரசுக் கட்சித் தலைமை இவ்விடயத்தில் இரட்டைத்தனத்துடன் நடந்து கொண்டது என்பதை அதன் பிற்கால செயற்பாடுகள் உறுதிப்படுத்திக் கொண்டன. வடபுலத்து தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தீண்டாமைக்கு விரோதமான ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தால் சாதிமான்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள் என்பதை தமிழரசுக் கட்சி உணர்ந்தே அவ்வாறு செயற்பட்டது.

ஐம்பதுகளின் நடுக்கூறிலே பொதுவுடமை இயக்க கருத்துக்களின் அடிப்படையில் இலக்கிய எழுத்துக்கள் வெளிவர ஆரம்பித்தன. சாதிய ஒடுக்குமுறைக்கும் ஏனைய சாதாரண மக்களின் வாழ்நிலை பற்றிய அக்கறைகளுடன் சிறுகதைகள், கவிதைகள் படைக்கப்பட்டன. இவற்றை அன்றைய இளம் எழுத்தாளர்களாக அடையாளம் காட்டி நின்ற கே. டானியல், என்.கே. இரகுநாதன், டொமினிக் ஜீவா, கவிஞர் பசுபதி, சுபைர் இளங்கீரன், நீர்வைப் பொன்னையன், இ. முருகையன், பிரேம்ஜி அகஸ்தியர், சில்லையூர் செல்வராசன், செ. கணேசலிங்கன், அ.ந. கந்தசாமி போன்றோர் படைத்து நின்றனர். எஸ். பொன்னுத்துரை ஆரம்பத்தில் இந்த முற்போக்கு அணியில் இருந்தபோதிலும் பின் அதிலிருந்து விலகிச் சென்று எதிர்த்திசையில் பயணித்தார். அவரது எழுத்துக்களில் அவதூறுகளும் வக்கிரங்களும் இடதுசாரி எதிர்ப்பும் முனைப்புக் கொண்டன. வேறுபல எழுத்தாளர்கள் முற்போக்கான சிந்தனையில் இலக்கியம் படைக்கலாயினார். இவ் இலக்கியப் போக்கை பண்டித மரபினர் ஏற்றுக்கொள்ளாது இழிசனர் இலக்கியம் எனப் பெயர் சூட்டி இழிவுபடுத்தவும் நிராகரிக்கவும் முயன்றனர். இதனடியாக எழுந்ததே மரபுப் போராட்டம் என்பதாகும். இவ்வாறு முற்போக்கு இலக்கியத்திற்கும் மரபு இலக்கியம் எனப்பட்ட பண்டித



படிப்பகம்

போக்கிற்கும் இடையில் ஏற்பட்ட பெரும் வாதப்பிரதிவாதங்கள் வடபுலத்திலிருந்து ஆரம்பித்து நாடு முழுவதும் எதிரொலித்துக் கொண்டது. இவ்விவாதத்தில் அவ்வேளை யதார்த்தம், மண் வாசனை, தேசியம், வர்க்கம், சாதியம் ஆகியவற்றை உள்ளடக்கிய முற்போக்கு இலக்கிய அணியின் பக்கம் நின்று மாக்சிய கோட்பாட்டு அடிப்படையில் விடயங்களை முன்வைப்பதில் கலாநிதி க. கைலாசபதி, கலாநிதி. கா. சிவத்தம்பி, ஏ.ஜே. கனகரட்ண போன்றவர்கள் அக்காலகட்டத்தில் பிரதான பங்கேற்று நின்றனர். முற்போக்கு இலக்கியத்தின் சாராம்சத்தை கோடிட்டுக் காட்டியும் தேசிய இலக்கியம் என்பதை விளக்கியும் ஈழத்து இலக்கியத்தின் தனித்துவத்தை நிலைநிறுத்திக் கொள்வதிலும் ஒரு இலக்கிய இயக்கம் வலுவடைந்து கொண்டது. இவற்றுக்கான கருத்தரங்குகள், மாநாடுகள், கலை இலக்கிய நிகழ்வுகள், விவாத அரங்குகள், கவியரங்குகள் பரந்தளவில் முன்னெடுக்கப்பட்டன. இவற்றின் மூலம் மரபு இலக்கியம், சான்றோர் இலக்கியம் என்ற பெயர்களில் பண்டித குழாத்தினர் முன்வைத்த கருத்துக்கள் நேர் நின்று எதிர்க்கப்பட்டது. இத்தகைய இலக்கிய விவாதங்களும் சர்ச்சைகளும் இடம் பெற்றுவந்த சூழலிலேயே யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சாகித்திய மண்டல விழாக்கூட்டம் பொதுவுடமைசார் முற்போக்கு எழுத்தாளர்களால் கூழ்முட்டை வீசி கலைக்கப்பட்டது. அன்றைய சூழலில் அந்நடவடிக்கை சரியானதொன்றாகவே அமைந்திருந்தது. மேலும் தமிழ்மொழியின் நவீனத்துவப் பயன்பாட்டுக்கான வழி திறக்கப்பட்டது. முற்போக்கு இலக்கியத்தை இழிசனர் இலக்கியம் என இழிவுபடுத்தி நின்ற அம்முட்டை வீச்சின் தாக்கம் இன்றுவரை எதிரொலித்துக் கொண்டே இருக்கிறது. வடபுலத்தில் இடம்பெற்ற இவ்விலக்கிய விவாதங்களில் தோழர் கார்த்திகேசனின் ஆங்கில இலக்கியப் புலமையும் நவீன இலக்கியப் பார்வையும் இணைந்து உரிய பங்களிப்பை வழங்கின. இவ் இலக்கிய வீச்சால் ஈர்க்கப்பட்டே செ. யோகநாதன், பெனடிக்ற்பாலன், தெணியான், செ. கதிர்காமநாதன் போன்ற வீறார்ந்த முற்போக்கு எழுத்தாளர்கள் எழுத்துலகில் பிரவேசித்தனர்.

## 11 உள்ளூராட்சி மன்றங்களில் பொதுவுடமைக் கட்சியினர்

வடபுலத்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் பொதுவுடமைக் கட்சி ஆங்காங்கே போட்டியிட்டு வந்தது. சிலர் வெற்றி பெற்று உறுப்பினர்களாகவும் சில சபைகளை வழி நடத்தும் தலைமைப் பதவிகளையும் பெற்றனர். இதன் மூலம் அவ்வப்



படிப்பகம்

www.padippakam.com

பிரதேசங்களின் மக்கள் மத்தியில் ஆதரவையும் பெற்றனர். முதுபெரும் கம்யூனிஸ்ட் என்னும் உறுதியான நிலைப்பாட்டுடன் இறுதிவரை வாழ்ந்து மறைந்த தோழர் டாக்டர் சு.வே. சீனிவாசகம் 1947ல் மயிலிட்டி கிராமசபைக்கு ஒரு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். அக் கிராமத்தின் உடையார் குடும்ப ஆதிக்கத்திற்கு எதிராகப் பொதுவுடமைக் கட்சியும் தோழர் சீனிவாசகமும் முகம் கொடுத்து சாதாரண மக்களின் பக்கம் நின்று வெற்றி பெற்றனர். அதன் மூலம் நீண்டகாலமாக அவ்வூர் தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவித்து வந்த குடிநீர் பிரச்சினைக்கு தோழர் சீனிவாசகம் மயிலிட்டி கிராமசபை மூலம் பலவித எதிர்ப்புகள் மத்தியிலும் பொதுக்கிணறு உருவாக்கி தீர்வு கண்டார். அவருக்குப் பின் மயிலிட்டி கிராமசபையில் தோழர் மு. கணபதிப்பிள்ளை பொதுவுடமைக் கட்சி உறுப்பினராக மக்களால் தெரிவு செய்யப்பட்டார். தனது பதவிக் காலத்தில் தோழர் மு. கணபதிப்பிள்ளை விவசாயிகள் தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக உறுதியுடன் நின்று செயல்பட்டும் வந்தார்.

காங்கேசன்துறைப் பட்டினசபை உருவாக்கத்துடன் தோழர் சீனிவாசகம் அதன் உறுப்பினராகத் தெரிவு பெற்று பின் அதன் தலைவராகப் பணி புரிந்தார். எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தினதும் தமிழரசுக் கட்சியினதும் செல்வாக்கு மிக்க தொகுதியில் காங்கேசன்துறைப் பட்டினசபையை பொதுவுடமை கட்சித் தோழர் தலைமைதாங்கி வழி நடத்தி மக்களுக்கு சேவை புரிந்தார்.

அவ்வாறே சங்கானைப் பட்டினசபையில் Man நா. முத்தையா, பி. நாகலிங்கம், வி. வைரமுத்து, ப. பசுபதி போன்ற பொதுவுடமைவாதிகள் உறுப்பினர்களாகி மக்களுக்கு சேவையாற்றினர். ஒரு கட்டத்தில் மான் நா. முத்தையா தலைவராக தெரிவு பெற்று பட்டினசபையை வழிநடத்தினார். அவருக்குப் பின் வைரமுத்து தலைவராகி சேவை புரிந்தார். இவர்கள் கடுமையான எதிர்ப்புகள் நெருக்கடிகள் மத்தியிலேயே இவ் உள்ளூர் மன்றங்களில் பதவிவகித்து மக்கள் பணியாற்றினர்.

வல்வெட்டித்துறை பட்டினசபையிலும் பொதுவுடமை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். திருப்பதி பட்டினசபைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டு பல்வேறுபட்ட முற்போக்கு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இவரது காலத்தில்தான்



படிப்பகம்

www.padippakam.com

இலங்கையில் தலைமறைவாக சில மாதங்கள் வாழ்ந்த இந்தியக் கம்யூனிஸ்ட் தலைவர் ப. ஜீவானந்தம் வடபுலத்துக் கடல் மார்க்கமாக மீண்டும் தமிழ் நாட்டிற்கு பத்திரமாக அனுப்பி வைக்கப்பட்டார். ஜீவா சிறந்த அரசியல் இலக்கியப் பேச்சாளர். அவர் இலங்கையில் தங்கியிருந்தவேளை வடக்கு கிழக்கில் பல கூட்டங்களில் உரையாற்றி பொதுவுடமைக் கருத்துக்களை பரப்புவதற்கு உதவியவர். ஜீவாவை வடபுலத்தில் பாதுகாத்து வைத்திருந்ததில் தோழர்கள் மு. கார்த்திகேசன், பொன் கந்தையா, டாக்டர் சு.வே. சீனிவாசகம் போன்றோர் முன்னேற்பாடான செயற்பாடுகளைக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கரவெட்டி கட்டைவேலி கிராம சபையில் சட்டத்தரணி எஸ். ஜெயசிங்கம் தலைவராகத் தெரிவுபெற்று பொதுவுடமைக் கட்சி உறுப்பினர்கள் அக் கிராமசபை ஊடாகப் பணியாற்றினார்கள். இவர் பொன். கந்தையாவின் மறைவுக்குப் பின்பு உடுப்பிட்டித் தொகுதியில் பொதுவுடமைக் கட்சியின் வேட்பாளராகவும் போட்டியிட்டவர்.

சுன்னாகம் பட்டினசபை சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் செனட்டர் பி. நாகலிங்கம் தலைமையில் தேர்தலில் வெற்றிபெற்று நிர்வாகம் நடாத்தப்பட்டது. அவ்வாறே உடுப்பிட்டி கிராம சபையின் தலைவராக சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த ஆர்.ஆர். தர்மரட்ணம் இருந்து வந்தார். யாழ் மாநகர சபையில் அக்கட்சியைச் சேர்ந்த அ. விசுவநாதன், ஆர். துரைராசசிங்கம் ஆகியோர் உறுப்பினர்களாகி இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## 12 பெண்கள் மத்தியில் பொதுவுடமைக் கருத்துக்கள்

வடபுலத்து பொதுவுடமை இயக்கப் பரப்பில் பெண்களின் பங்கும் பணியும் குறிப்பிடத் தக்கதாகும். யாழ்ப்பாணத்து பழமைவாத ஆணாதிக்கக் கருத்தியலால் பெண்கள் பொதுவாழ்வுக்கு வருவதென்பது மிக அருந்தலாகவே இருந்து வந்தது. அச்சூழலில் பொதுவுடமைக் கருத்துக்களை ஏற்று செயல்படுவதென்பது கடுமையானதொன்றாகவே இருந்தது. இதில் மிகுந்த துணிவோடு செயலில் இறங்கிய பெண்களில் சிலர் முக்கியமானவர்களாக இருந்தனர். ஒருவர் வேதவல்லி கந்தையா. இவர் வடபுலத்து ஆரம்பகால பொதுவுடமை இயக்க உறுப்பினர்களில் ஒருவராகத்



படிப்பகம்

www.padippakam.com

திகழ்ந்த ஏ.கே. கந்தையாவின் துணைவியார் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் சிறந்த பேச்சாளரும் சமூக சேவகியாகவும் திகழ்ந்தவர். கட்சிப் பிளவின்போது அவர் பாராளுமன்றப் பொதுவுடமைக் கட்சியின் பக்கம் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். அதன் மூலம் அவரது ஆற்றல் ஆளுமை யாவும் மட்டுப்படுத்திக் கொள்ளப்பட்டது. அடுத்தவர் சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஒரு ஆசிரியை ஆவார். அவரும் கட்சிப் பிளவின்போது வேதவல்லி கந்தையா எடுத்த நிலைப்பாட்டையே எடுத்துக்கொண்டார். இருப்பினும் இவர்கள் வடபுலத்து பொதுவுடமைப் பரப்பில் அக்கருத்துக்களை துணிந்து முன்னெடுத்தவர்கள் என்பது நோக்குதற்குரியதாகும்.

இந்நிலையில் 1965ம் ஆண்டில் புதிய பொதுவுடமைக் கட்சி தனது புரட்சிகர வேலை முறைகளின் ஊடே வடபுலத்தில் முற்போக்கு மாதர் முன்னணி என்னும் அமைப்பைத் தோற்றுவித்து பல பிரதேசங்களிலும் பெண்கள் மத்தியிலான வேலைமுறையை முன்னெடுத்தனர்.


இம்மாதர் முன்னணியின் தலைவராக ருத்ரா கந்தசாமியும் இணைச் செயலாளர்களாக டாக்டர் சந்திரகாந்தி சீனிவாசகமும் திருமதி ஞானியாரும் இருந்தனர். செயற்குழுவில் திருமதி மகேஸ்வரி கந்தையா, திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம், திருமதி பூபதி செல்வராசா, செல்வி சீதா, செல்வி. சி. சரஸ்வதி சிதம்பரி, செல்வி சி. தங்கச்சியம்மா போன்றோர் அங்கம் பெற்றிருந்தனர்.

இம் முற்போக்கு மாதர் முன்னணியின் மாநாடு 1965ல் யாழ் நகர மண்டபத்தில் நடைபெற்றது. வடபுலத்தின் பல பாகங்களில் இருந்தும் பெண்கள் வருகை தந்திருந்தனர். பெண்கள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் பற்றிய விவாதங்களும் இடம்பெற்று தீர்மானங்களும் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டன. இம் மாநாட்டில் தென்னிலங்கையில் இருந்து முக்கிய பெண் விடுதலைச் செயற்பாட்டாளரான தேஜா குணவர்த்தனா உட்பட பலர் கலந்து கொண்டனர்.


இம் மாதர் முன்னணியின் ஊடாக வேலை முறையானது பின்னால் எழுந்த வெகுஜனப் போராட்டங்களின்போது பெண்களின்



படிப்பகம்



தோழர் மு.கார்த்திகேசன் வடபுலத்தில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகிறார். தோழர் அ.வைத்திலிங்கம் தலைமை தாங்குகிறார்.



யாழ் மாநகர சபை வரலாற்றில் முதல் தடவையாக முஸ்லீம் உறுப்பினரான எம்.எம்.சுல்தானை மேயராகத் தெரிவு செய்தபின் உறுப்பினர்கள் இணைந்திருந்து எடுத்த படத்தில் கார்த்திகேசன் காணப்படுகிறார்.

www.padippakam.com

படிப்பகம்

பங்குபற்றுதல் பங்களிப்புக்கு முன் தேவையாகவும் அனுபவமாகவும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இன்றைய சூழல் போன்று பெண் விடுதலைச் சிந்தனைகளும் செயற்பாடுகளும் வளர்ச்சி பெற்றிராத அன்றைய நிலையில் பொதுவுடமைக் கருத்துக்கள் சார்ந்து மாதர் முன்னணி தனது செயற்பாட்டை சுயமாகவே முன்னெடுத்துக் கொண்டமை முக்கியத்துவமுடையதாகும்.

## 13 முற்போக்குச் சட்டங்களும் தமிழர் தலைமைகளும்

1956ம் ஆண்டில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா தலைமையில் பதவிக்கு வந்த மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் சில முற்போக்கு செயற்திட்டங்களையும் அதற்கான சட்டவாக்கங்களையும் கொண்டு வந்தது. அவற்றில் நெற்காணி மசோதா பாராளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் நிலமற்ற குத்தகை விவசாயிகள் நன்மை பெறக்கூடியதாக இருந்தது. அவ்வாறே தனியார் முதலாளிமாரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்த பஸ் போக்குவரத்தை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது. மூன்றாவது நடவடிக்கை திருகோணமலையிலும் கட்டுநாயக்காவிலும் இருந்து வந்த பிரித்தானியப் படையணிகளை வெளியேற்றிக் கொண்டமையாகும்.

மேற்படி மூன்று முக்கியமான விடயங்களிலும் தமிழ் மக்கள் மத்தியில் ஆதிக்க அரசியல் செல்வாக்குப் பெற்றிருந்த .தமிழரசுக் கட்சி கடுமையான தனது எதிர்ப்பையே காட்டி நின்றது. அதன் மூலம் தனது உயர்வர்க்கமேட்டுக்குடி சார்பு நிலைப்பாட்டை வெளிப்படுத்திக்கொண்டது.

ஆனால் பொதுவுடமைக் கட்சியும் சமசமாஜக் கட்சியும் தமது இடதுசாரி நிலைப்பாட்டிற்கமைய மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்களையும் ஆதரித்துக் கொண்டன. வடபுலத்தில் பொதுவுடமைக் கட்சி மக்கள் மத்தியில் அம் மூன்று விடயங்களையும் ஆதரித்து பிரசுரங்கள், பிரச்சாரங்கள் நடாத்தி வந்தன. கூட்டங்கள் கருத்தரங்குகள் மூலம் அவற்றின் மக்கள் சார்பு அம்சங்களை எடுத்து விளக்கி ஆதரவை திரட்டி நின்றனர்.

அவ்வாறே திருமதி பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கம் இலங்கை பூராவும் இருந்து வந்த பாடசாலைகளைத்

தேசிய மயமாக்கும் சட்டத்தை கொண்டு வந்து நிறைவேற்றியது. அதனை மதப் பண்பாட்டு சமூகப் பிற்போக்கு சக்திகள் கடுமையாக எதிர்த்து நின்றன. இதில் கத்தோலிக்க மத பீடத்தினரும் இந்து மேட்டுக்குடியினரும் இணைந்து நின்று அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்கக்கூடாது என்ற இயக்கத்தை முன்னெடுத்தனர். அதேவேளை பொதுவுடமைக் கட்சி பாடசாலைகள் தேசியமயமாக்கப்படுவதை ஆதரித்து மக்கள் இயக்கத்தை வடபுலத்தில் முன்னெடுத்தது. வழமை போன்று தமிழரசுக்கட்சி தமது வர்க்கநிலை நின்று கத்தோலிக்க இந்துப் பிற்போக்கு சக்திகளுக்கு உந்துதல் கொடுத்து நின்றது. தமிழரசுக் கட்சி கூறிய ஏமாற்று நியாயம் என்னவெனில் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றால் அதன் ஊடாக சிங்களம் தமிழர்கள் மத்தியில் ஊடுருவிவிடும் என்பதாகும். ஆனால் உயர் வர்க்க மேட்டுக்குடிகளின் வர்க்க ஆதிக்க சக்திகளின் விருப்பத்தையே சாராம்சத்தில் தமிழரசுக் கட்சி பிரதிபலித்து நின்றது என்பதே உண்மையாகும்.

இதனை வடபுலத்து பொதுவுடமைக் கட்சி அம்பலப்படுத்தி இயக்கத்தை நடாத்தியது. யாழ் மாநகர சபை மண்டபத்தில் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதை எதிர்த்து பிற்போக்கு கனவான்கள் ஒன்றிணைந்து ஒரு எதிர்ப்புக் கூட்டத்தை நடாத்தினர். அக் கூட்டத்தை நிராகரித்து விவாதத்தைக் கிளப்பி பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதன் அவசியத்தையும் அதனால் சாதாரண மக்கள் அடையப்போகும் நன்மைகளையும் விளக்கி பிரசுரங்களையும் விநியோகித்தது. மேற்படி சம்பவம் அரசாங்கம் பாடசாலைகளை பொறுப்பேற்கும் நியாயங்களை மக்கள் மத்தியில் முற்றிலும் நியாயப்படுத்தியது.

இப்பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்ட பின்பும் அவ்வாறே தாய்மொழிக் கல்வி பல்கலைக்கழகம் வரை நடைமுறைக்கு வந்து கொண்டமையும் இந்நாட்டின் சாதாரண மக்களின் பிள்ளைகளுக்கு ஒரு புதிய சகாப்தம் தோன்றுவதற்கு வழி பிறந்தது. வடபுலத்தில் குறிப்பாக பாடசாலைக் கதவுகள் திறக்க மறுக்கப்பட்ட பல பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அனுமதி பெற்று கல்வி பெறும் வாய்ப்பைப் பெற்றனர். இவற்றுக்கு வடபுலத்து பொதுவுடமைக் கட்சி உறுதியானதும் பரந்துபட்டதுமான இயக்கத்தை நடாத்தி இருந்தமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

www.padippakam.com

மற்றொரு விடயம் வடக்கு கிழக்கு நீதிமன்றங்களில் தமிழ் மொழியில் செயலாற்றுவதாகும். கோவைகள், அறிவித்தல்கள், குற்றச்சாட்டுகள், விசாரணைகள் போன்றன தமிழில் இருப்பதற்கு சட்டம் கொண்டுவரப்பட்டது. அவ்வேளை தமிழர் தலைமைகள் அதனை எதிர்த்தனர். அவர்களது கவலை யாவும் சிங்களம் வந்துவிடும் என்பதல்ல. தமது விருப்பத்திற்குரிய ஆங்கிலம் அற்றுப்போய் விடுகிறது என்பதேயாகும். ஏனெனில் தமிழர் தலைமை என்பது ஆங்கிலத்தில் சட்டத்தொழில் புரிந்தவர்களாலேயே நிரம்பியிருந்தது. மேட்டுக்குடியினரான இவர்களது நெஞ்சுக்கு நெருக்கமான தமிழாகவன்றி நீதிமன்ற மொழி ஆங்கிலமாகவே இருந்து வந்தது. எனவே தமிழ்மொழி நீதிமன்றங்களில் நடைமுறைக்கு வருவதை எதிர்த்து நின்றனர்.

இவ்வாறு வடபுலத்தின் பொதுவுடமை இயக்கமானது அறுபதுகளின் மூன்றாண்டுகள் வரை அரசியல் சமூக பண்பாட்டுச் சூழலில் ஏற்படுத்தியிருந்த தாக்கம் மிகவும் கனதியானதாகக் காணப்பட்டது. அதேவேளை ஆழ்ந்து நோக்கும்போது பொதுவுடமைக் கட்சியானது வடபுலத்தில் முன்னெடுத்த அரசியல் சமூக பண்பாட்டு இயக்கங்களில் ஒருவகையான சீர்த்திருத்த வேலைமுறையும் பாராளுமன்றக் கண்ணோட்டமும் படிந்திருந்தமையை நிராகரித்துவிட முடியாது. ஒப்பீட்டளவில் அதன் வேலைமுறைகள் வேறுபட்டதாகக் காணப்பட்டபோதிலும் அடிப்படையில் புரட்சிகர போராட்ட மார்க்கம் என்பது பின்பற்றப்படவில்லை. பொதுவுடமை இயக்கத்தின் முழுத்தலைமையும் அவ்வாறே வழிகாட்டி நின்றது என்பது நோக்குதற்குரியதாகும்.

## 14 பொதுவுடமை இயக்கத்தின் பிளவு

அறுபதுகளின் ஆரம்ப ஆண்டுகள் தேசிய ரீதியாகவும் சர்வதேச அளவிலும் பொதுவுடமை இயக்கத்திற்கு முக்கியத்துவம் மிக்க ஆண்டுகளாக விளங்கின. தேசிய ரீதியில் பாராளுமன்ற அரசியலில் சில மாற்றங்கள் இடம் பெற்றன. 1959ல் இடம்பெற்ற பண்டாரநாயக்காவின் அரசியல் படுகொலைக்குப்பின் 1960ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி மீண்டும் வெற்றி பெற்றது. திருமதி பண்டாரநாயக்கா பிரதமராகப் பதவி பெற்றுக் கொண்டார். இடதுசாரிகளை அந்த அரசாங்கத்தில் பங்குகொள்ள வைப்பதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் முயற்சிகள் இடம் பெற்றன. இக்கட்டத்திலேயே அன்றுவரை தனித்துவத்துடன்



படிப்பகம்

தமக்கான அரசியல் தொழிற்சங்க வெகுஜன இயக்கங்களைக் கட்டியெழுப்பி வந்த இடதுசாரிகள் பாராளுமன்ற அரசியலின் ஆளும் தரப்புடன் இணைந்து கொள்ளும் முடிவுக்கு வந்து கொண்டனர். இதன் மூலம் தமது எதிர்கால அரசியல் இழப்பிற்கான முதலாவது அடியினை எடுத்து வைத்துக் கொண்டனர்.

இந்நிலையிலேயே பொதுவுடமை இயக்கத்தின் மத்தியில் கடுமையான விவாதம் எழுந்தது. பாராளுமன்றப் பாதையில் மூழ்கிக் கொள்வதா அன்றி அதனை ஒரு பிரச்சார மேடையாகப் பயன்படுத்திக் கொண்டு புரட்சிகரப் போராட்டப் பாதையில் செல்வதா என்பதே அவ் விவாதத்தின் அடிப்படையாக அமைந்திருந்தது.

மேற்படி விவாதம் சர்வதேசப் பொதுவுடமை இயக்கத்தில் இடம்பெற்று வந்த சோவியத்-சீன கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடையிலான மாபெரும் தத்துவார்த்த விவாதத்துடன் இணைந்த ஒன்றாகவும் காணப்பட்டது. தோழர் ஸ்டாலினுக்குப்பின் பதவிக்கு வந்த நிக்கற்றா குருஷ்சோவ் தலைமையில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியானது வலதுசாரிப் பாதையில் பயணத்தை ஆரம்பித்துக் கொண்டது. உலகின் மாற்றமடைந்துள்ள சூழலில் புரட்சிகரப் போராட்டங்களும் சமூக மாற்றத்திற்கு புரட்சிகளும் அவசியமற்றவை என்னும் கொள்கையை சோவியத் பொதுவுடமைக் கட்சி முன்வைத்தது. அதேவேளை ஏகாதிபத்தியத்துடன் சமாதான சகவாழ்வு நடத்துவதன் மூலம் உலக சமாதானத்தைப் பாதுகாக்க முடியும் எனவும் கூறி நின்றது. மேலும் கொலனித்துவத்திடமிருந்து விடுதலை பெற்ற நாடுகளின் தேசிய முதலாளித்துவ ஆட்சிகளுடன் அந்தந்த நாடுகளின் பொதுவுடமைக் கட்சிகள் ஐக்கியப்பட்டு ஆட்சிப் பங்காளிகள் ஆகவேண்டும் எனக் கூறியது. அதன் மூலம் சோஷலிசத்தை சமாதான வழிகளில் பாராளுமன்றத்தின் மூலம் வென்றெடுக்கலாம் என்றும் சோவியத் கட்சி வழிகாட்டி நின்றது.

சோவியத் தலைமையின் இத்தகைய நிலைப்பாட்டை தோழர் மாஓசேதுங் தலைமையிலான சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, அன்வர் ஹோஜா தலைமையிலான அல்பேனியத் தொழிற் கட்சி உள்ளிட்ட பல கட்சிகள் எதிர்த்து நின்றன. புரட்சிகரப் போராட்டங்களும் புரட்சிகளும்தான் சமூக விடுதலை, சமூக மாற்றத்திற்கான ஒரே பாதை என்பதை வற்புறுத்திக் காட்டின. மனித வரலாற்றில் வர்க்கப் போராட்டம் வகித்து வந்த தொடர்

www.padippakam.com

நிலைப்பாட்டையும் மாக்சிசம் லெனினிசம் அந்த வர்க்கப் போராட்டத்தை செழுமைப்படுத்தி இன்றைய முதலாளித்துவ ஏகாதிபத்திய காலகட்டத்தில் தொழிலாளி வர்க்கப் புரட்சியாக முன்னெடுத்து வந்த அனுபவங்களை சீனப் பொதுவுடமைக் கட்சி எடுத்துக் காட்டியது. ஏகாதிபத்தியத்துடன் சமாதான சக வாழ்வு நடத்துவது என்பது மிகத் தவறான நிலைப்பாடு என்பதையும் சுட்டிக் காட்டியது. மேலும் தேசிய முதலாளி வர்க்க சக்திகளின் முற்போக்கான நடவடிக்கைகளை எல்லைப்படுத்தப்பட்ட நிலையில் ஆதரிப்பது என்பது வேறு, அதனுடன் இணைந்து ஆட்சியில் பங்குகொள்வது வேறு என்பதுடன் பாராளுமன்றத்தின் ஊடாக சோஷலிசத்தை கொண்டு வர முடியாது என்பதும் சுட்டிக் காட்டப்பட்டது.

மேற்கூறிய அடிப்படை அம்சங்களில் இலங்கையின் பொதுவுடமைக் கட்சிக்குள் விவாதங்கள் உச்ச நிலையை அடைந்து 1963ன் இறுதியில் கட்சி இரண்டாகப் பிளவுபட்டுக் கொண்டது. பாராளுமன்றப் பாதையை மேற்கொண்டு சோவியத் கட்சி காட்டிய பாதையில் பீற்றர் கெனமன், எஸ்.ஏ. விக்கிரமசிங்கா போன்றோர் நின்றனர். புரட்சிகரப் பாதையைத் தேர்ந்தெடுத்து சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தெளிவுபடுத்திக் கொண்ட மார்க்கத்தில் தோழர் சண்முகதாசனைத் தலைமையாகக் கொண்டவர்கள் புதிய கட்சியாகத் தம்மை நிலைநிறுத்திக் கொண்டனர்.

இவ்வாறு பொதுவுடமை இயக்கத்தில் ஏற்பட்ட பிளவானது சகல தொழிற்சங்க வெகுஜன அமைப்புக்கள் யாவற்றிலும் ஊடுருவி நின்றது. இப்பிளவின் போதே பத்திரிகைகள் உள்ளிட்ட தொடர்பூடகங்கள் பிளவடைந்து கொண்ட இரண்டு கட்சிகளுக்கும் மாஸ்கோ சார்பு கட்சி, பீக்கிங் சார்பு கட்சி எனப்பெயர் சூட்டி அழைத்துக் கொண்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி பிளவானது இலங்கையின் பொதுவுடமை இயக்கம் தோற்றம் பெற்று இருபத்திமூன்று ஆண்டுகளுக்குப்பின் இடம் பெற்றது. இதன் மூலம் அவ்வியக்கம் ஒரு பலவீனத்தைத் தேடிக் கொண்ட அதேவேளை அது தவிர்க்க முடியாத ஒரு வரலாற்றுத் தேவையாகவும் அமைந்து கொண்டது. அன்றைய பிளவின் போது கட்சி, தொழிற்சங்கம், இளைஞர் அணி, பெண்கள் அணி மற்றும் கலை இலக்கியவாதிகள் என்னும் சகல மட்டங்களிலும் புரட்சிகர



படிப்பகம்

www.padippakam.com

மார்க்கம் என்ற நிலையில் அணிதிரண்ட கட்சியின் பக்கமே அதிக அளவானோர் நிலை எடுத்து நின்றனர் என்பது நோக்குதற் குரியதாகும். அதற்குரிய தேசிய சர்வதேசிய சூழலும் அத்தகைய மார்க்கத்திற்கு உந்துதல் கொடுப்பதாகவே அமைந்திருந்தது.

பொதுவுடமை இயக்கத்தில் ஏற்பட்ட இப்பிளவு வடபுலத்திலும் நடந்தேறியது. கட்சித்தலைமை தொடக்கம் அடிமட்ட நிலைவரை ஊடுருவிச் சென்றது. அக்காலகட்டத்தில் மு. கார்த்திகேசன், அ. வைத்தியலிங்கம் ஆகிய இருவரும் வடபுலத்தில் முக்கிய பொதுவுடமைத் தலைவர்களாகவும் பொதுவுடமைக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்களாகவும் இருந்தனர். அ. வைத்திலிங்கம் பாராளுமன்றப் பாதையில் பயணிப்பதற்கு நின்ற அணியின் தத்துவ விளக்கவாதியாகவும் விளங்கினார். அவ்வேளை பொன் கந்தையா மறைந்து விட்டார்.

இப்பிளவில் தோழர் மு. கார்த்திகேசன் புரட்சிகர மார்க்கத்திற்காக போராடி நின்றவர்களில் ஒருவராக இருந்தார். அவருடன் தோழர்கள் டாக்டர் சு.வே. சீனிவாசகம், வீ.ஏ. கந்தசாமி, கே. டானியல், கே.ஏ. சுப்பிரமணியம், நீர்வைப் பொன்னையன், இ.கா. சூடாமணி, எம். குமாரசுவாமி, கே. ஜனகன், வ.சின்னத்தம்பி, எம். செல்லத்தம்பி, பி. தம்பிமுத்து, கே. தங்கவடிவேல், ஞா. ஸ்ரீமனோகரன், எஸ். சிவலிங்கம், வீ. சின்னத்தம்பி, வி. கதிர்காமர், எஸ். கதிரவேல், எம் கனகரட்ணம், பி. கதிரேசு, எம்.பி. செல்வரத்தினம், மான் நா. முத்தையா, எஸ். மகாலிங்கம், பெனடிக்ற் பாலன், செ. யோகநாதன், இ.கா. கந்தசாமி, மாதகல் வ. கந்தசாமி, சி.கா. செந்திவேல், ஞானியார் க. வெற்றிவேல், சுழிபுரம் நடராசா, சங்கானை பி. பசுபதி, நிச்சாமம் பி. நாகலிங்கம், என்.கே. ரகுநாதன், சுபைர் இளங்கீரன், எஸ். சண்முகநாதன், தி. குமாரலிங்கம், இ. குணரத்தினம், எஸ். நாகேந்திரம், இளைய பத்மநாதன், சி. இராசதுரை, கி. சிவஞானம், கு. சிவராசா, சி. சின்னராசா, க. பசுபதி, மு. கந்தப்பிள்ளை, மு. கணபதிப்பிள்ளை, எஸ்.எவ். போஜியா, இ. கணேசன், கே. சுப்பையா, ப. கிருஷ்ணன், வெ. சின்னையா, சி. இரகுநாதன், அ இராஜலிங்கம், பேராசிரியர் க. கைலாசபதி, எஸ். ஜெயசீலன், வ. சிதம்பரி, ஆ. கந்தையா, எஸ். காங்கேசு, த. தருமலிங்கம், எம். முத்தையா, எஸ். சிவதாசன், கரவைக் கந்தசாமி போன்றவர்கள் புரட்சிகர மார்க்கத்திற்காக முன்னின்று செயற்படும் முன்நிலையாளர்களாக இருந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

அதேவேளை பாராளுமன்றப் பாதையைக் காட்டி நின்ற பீற்றர் கெனமன் -விக்கிரமசிங்கா தலைமை தாங்கிய அணியின் பக்கம் வடபுலத்திலிருந்து பின்வருவோர் நின்றனர். அ. வைத்திலிங்கம், எம்.சி. சுப்பிரமணியம், ஐ.ஆர். அரியரத்தினம், வ. பொன்னம்பலம், ஆர்.ஆர். பூபாலசிங்கம், எஸ். கணேசவேல், டொமினிக் ஜீவா, ச. இராசையா, உ.சா நடராசா, எம். நவரட்ணம், கே. தவசிப்பிள்ளை, எஸ். விஜயானந்தன், எஸ். ஜெயசிங்கம், எஸ். பத்மநாதன், பேராசிரியர் சிவத்தம்பி, பொன் குமாரசுவாமி என்போர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

பொதுவுடமைக் கட்சிக்குள் உருவாகி உச்ச நிலையை அடைந்திருந்த அரசியல் தத்துவார்த்த கருத்து முரண்பாடானது 10-03-1963ல் யாழ்-நகர மண்டபத்தில் இடம்பெற்ற வடபுலத்து வாலிபர் இயக்க மாநாட்டில் உள்ளூர எதிரொலிக்கச் செய்தது. மேற்படி மாநாட்டில் வடபுலத்தின் பல பகுதிகளில் இருந்தும் இளைஞர் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். மண்டபம் நிரம்பியிருந்த அவ் இளைஞர் மாநாட்டு நிகழ்வே ஒரே கட்சியின் கீழ் இடம்பெற்ற கடைசி நிகழ்வாகவும் அமைந்திருந்தது. அதன்பின் 1963ம் ஆண்டின் இறுதியில் கட்சி இரு கூறுகளாகப் பிளவடைந்து கொண்டது. இரு கட்சிகளும் தாங்கள் ஏற்று நின்ற பாராளுமன்றப் பாதை, புரட்சிகரப் போராட்டப் பாதை என்பனவற்றின் ஊடாகத் தொடர்ந்து பயணத்தைத் தொடர்ந்தனர். அதன் சரி பிழைகளையும் சாதகபாதக விளைவுகளையும் வரலாறு பதிவு செய்ய ஆரம்பித்தது.

## 15 புதிய கட்சியும் போராட்டங்களும்

புரட்சிகரப் போராட்ட மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்ட மாக்சிச லெனினிச பொதுவுடமைக் கட்சியானது தென்னிலங்கை வடக்குகிழக்கு மலையகத்தில் தனது வேலைமுறைகளை விஸ்தரித்துக் கொண்டது. தொழிற்சங்க, இளைஞர் அணி, மற்றும் வெகுஜன அமைப்புகளின் ஊடே செயற்பட்டு நின்றது. அதற்கு தகுந்தாற்போல் சர்வதேசப் புரட்சிகர இயக்கங்களும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களும் உற்சாகமும் உந்துதலும் கொடுத்து நின்றன. ''தொழிலாளி'' தமிழ் வாரப்பத்திரிகையும், சிங்களத்தில் ''கம்கறுவா'' வார இதழும் வெளிவந்தன. கம்யூனிஸ்ட் தத்துவார்த்த சஞ்சிகைாக ரெட் ஃபிளாய்க் (செங்கொடி) வெளிவந்தது.



படிப்பகம்

www.padippakam.com

இந்நிலையிலே வடபுலத்தில் புரட்சிகர மார்க்கத்தில் அணிதிரண்ட புரட்சிகர சக்திகள் முக்கியமாக இளைஞர் இயக்கம் வேகமாக வளர ஆரம்பித்தது. 29-08-64 அன்று யாழ்நகர மண்டபத்தில் வடபுலத்து வாலிபர் இயக்க முழுநாள் மாநாடு இடம் பெற்றது. ஒரு வருடத்தின் பின் நடைபெற்ற வாலிபர் இயக்க மாநாட்டின் அறிக்கையை வடபிரதேச செயலாளர் தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் சமர்ப்பித்தார். நிதிஅறிக்கையை பொருளாளரான தோழர். இ.கா. சூடாமணி முன்வைத்தார். இம் மாநாட்டில் உரையாற்ற கொழும்பிலிருந்து தோழர் நா. சண்முகதாசனும், பிரேம்லால் குமாரசிறியும் விஷேடமாக வந்திருந்தனர். இம்மாநாடு வடபுலத்தில் இளைஞர் இயக்கம் முன்னெடுக்க வேண்டிய அடிப்படை வேலைகளை தொகுத்தும் வகுத்தும் முன் வைத்தது. பல்வேறு கிராமங்கள் நகரங்களில் இருந்து வந்த இளைஞர்கள் உரையாற்றினர். அவர்களின் உரைகளில் நடைமுறை வாழ்வில் எதிர்நோக்கும் அடக்குமுறைகள் அநீதிகள் சமூகநீதி மறுப்புக்கள் பற்றி விரிவாகப் பேசப்பட்டது. இம்மாநாட்டில் எனக்கு கருத்துரை வழங்குவதற்கு ஐந்து நிமிடங்கள் தரப்பட்டது. மேற்படி சந்தர்ப்பமே எனது பொதுவுடமைக் கட்சி அரசியல் வாழ்வின் முதலாவது பகிரங்க கருத்துரையாக அமைந்து கொண்டது. சமூக அநீதிகளுக்கு எதிராகப் போராடும் அவசியம் பற்றியும் நாளாந்தம் மக்கள் இளைஞர்கள் எதிர்நோக்கி நிற்கும் சாதிய-தீண்டாமைக்கு எதிராகப் போரிடும் தேவையை இம்மாநாடு முழுமையாகக் கவனத்தில் எடுக்க வேண்டும் என வற்புறுத்தியே எனது கருத்துரை அமைந்திருந்தது. அன்றைய எனது கருத்துரையின் சாராம்சத்தையும் பேச்சுத் திறனையும் பாராட்டி உற்சாகம் தந்த தலைமைத் தோழர்களில் தோழர் கார்த்திகேசனும் ஒருவராவார்.

மேற்படி வாலிபர் மாநாட்டின் ஊடாக வடபுலத்தில் அமைப்பு ரீதியிலும் செயற்பாட்டு நிலையிலும் புதிய உத்வேகம் உருவாகி நின்றது. அதனை வெளிப்படுத்தும் வகையில் 1964ம் ஆண்டு மேதினம் அமைந்திருந்தது. பிளவடைந்த இரண்டு பொதுவுடமைக் கட்சிகளும் தமிழரசுக் கட்சியும் மேதின ஊர்வலம் கூட்டத்தை யாழ்ப்பாண நகரில் நடாத்தின. இவற்றில் புதிய மாக்சிச லெனினிசக் கட்சியாக எழுந்து நின்ற கட்சியின் ஊர்வலம் கூட்டமே மிகப் பெரிதாக அமைந்திருந்தது. அத்துடன் இளைய தலைமுறையினர் புரட்சிகர உணர்வு மிக்க முழக்கங்களுடன் அணி திரண்ட ஊர்வலம் கூட்டமாகவும் அது காணப்பட்டது.




படிப்பகம்

**வடபுலத்து சாதியதீண்டாமை வரலாற்றில் மாபெரும் திருப்பு முனையை ஏற்படுத்திய புரட்சிகரப் பொதுவுடமைக் கட்சியின் 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சி ஊர்வலம்**



தோழர்கள் கே.ஏ. சுப்பிரமணியம். வீ.ஏ. கந்தசாமி. கே.டானியல். டாக்டர் சு.வே.சீனிவாசகம். எம்.முத்தையா. டி.டி.பெரேரா ஆகியோர் பொலீஸ் தாக்குதலுக்கு முன் ஊர்வலத்திற்கு தலைமைதாங்கிச் செல்கின்றனர்.



தாக்குதலுக்குப் பின் ஊர்வலம் யாழ் நகர் நோக்கி அணிவகுத்து முன்னேறிச் செல்கிறது.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

புதிய பொதுவுடமைக் கட்சியின் வடபுலத்து தலைமைக் குழுவில் தோழர்கள் மு. கார்த்திகேசன், டாக்டர் சு.வே. சீனிவாசகம், வீ.ஏ. கந்தசாமி, கே.ஏ. சுப்பிரமணியம், நீர்வைப் பொன்னையன், கே. டானியல், இ.கா. சூடாமணி, வ. சின்னத்தம்பி, எம். செல்லத்தம்பி, எம். குமாரசுவாமி, கே. ஜனகன், நா. முத்தையா என்போர் அங்கம் பெற்றனர். அன்றைய கட்டத்தில் அரசாங்கம் பாடசாலைகளைத் தேசியமயமாக்கி இருந்த சூழலில் ஆசிரியர்கள் நேரடியாக அரசியல் மேடைகளில் தோன்றுவது தவிர்க்கப்பட்டது. அதேவேளை அவர்கள் தமது அரசியல் வேலைகளை வெவ்வேறு நிலைகளில் முன்னெடுத்தனர். தோழர் மு. கார்த்திகேசன் கட்சியின் வடபுலத்து பிரதேசச் செயலாளராக செயலாற்றினார். அவருக்கு மாற்றுப் பெயர் கே. மாணிக்கவாசகர் என இருந்து வந்தது. தோழர்கள் கே.ஏ. சுப்பிரமணியம், நீர்வைப் பொன்னையன், வீ.ஏ. கந்தசாமி ஆகியோர் கட்சியின் முழுநேர அரசியல் ஊழியர்களாக செயற்பட்டனர். கே.ஏ. சுப்பிரமணியம் வாலிபர் இயக்கத்தின் வடபுலத்து செயலாளராகவும் நீர்வைப் பொன்னையன் தொழிற்சங்க வேலைகளுக்குப் பொறுப்பாகவும் இருந்து செயற்பட்டனர். வீ.ஏ. கந்தசாமி ஓர் பிரமச்சாரியாக கட்சிச் செயலகத்தில் தங்கியிருந்து முழுநேர அரசியல் பணிபுரிந்து வந்தார். சாதாரண சுருட்டுத் தொழிலாளியாக இருந்து கட்சியின் மத்திய குழுவரை தனது கடுமையான வேலை முறையால் மேல் மட்டத்திற்கு வந்தவர். சிறந்த பேச்சாளர். எளிமையான வாழ்வு, கடுமையான கட்சி வேல்லக்கும் அர்ப்பணிப்பு தியாகத்திற்கும் அக்காலத்தில் முன்னுதாரணம் காட்டும் அளவுக்கு முன்னிலையில் இருந்தவர். தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் பொதுவுடமைக் கட்சி பிளவு அடைவதற்கு முன்பே கட்சியின் முழுநேர ஊழியராகச் செயற்பட்டு வந்தவர். கட்சி வாலிபர் இயக்கத்தை வெகுஜன நடவடிக்கைகள் மூலம் மக்கள் மத்திக்கு கொண்டு செல்வதில் முன்னின்று செயற்படுபவராக இருந்து வந்தவர். சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளி இல்லாத புரட்சிகர வாழ்வு வாழ்வதில் தனது குடும்ப வாழ்வையும் அமைத்துக் கொண்டவர். நீர்வைப் பொன்னையன் தொழிற்சங்கங்களில் தொழிலாளர்களை அணிதிரட்டும் ஆரம்ப வேலைகளை செய்து வந்தவர். அதேவேளை சிறுகதை எழுத்தாளராகவும் திகழ்ந்த அவரது சிறுகதைகளில் தொழிலாளர்கள் விவசாயிகள் தாழ்த்தப்பட்ட மக்கள் கதாமாந்தர்களாக விளங்கினர். கே. டானியல் இளம் வயது முதல் பொதுவுடமை இயக்கத்தில் இணைந்து குறிப்பிட்ட காலம்வரை முழுநேர ஊழியராகவும்



படிப்பகம்

www.padippakam.com

செயற்பட்டு வந்தவர். சாதிய தீண்டாமைக்கு எதிரான பிரசாரத்திலும் தீவிரமான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்தவர். சிறந்த எழுத்தாளராக மட்டுமின்றி ஜனரஞ்சகப் பேச்சாளராகவும் சாதாரண மக்கள் மத்தியில் திகழ்ந்தவர்.

வடபுலத்து பொதுவுடமை இயக்கத்தில் இளம் தலைமுறையினரின் பங்குபற்றல் என்பது முக்கியமானதாக இருந்து வந்திருக்கிறது. இயல்பாகவே இளைஞர்-யுவதிகள் அநீதி அடக்குமுறை கண்டு பொங்கியெழும் உணர்வு கொண்டவர்கள். இதற்கான வயதெல்லையை 16-35 எனக் கொள்ளலாம். இதனையே தோழர் மாஓ இளைஞர் யுவதிகளை காலை எட்டு ஒன்பது மணிச் சூரியனுக்கு ஒப்பிட்டுக் கூறினார். இன்றைய சமூக அமைப்பு தனது ஏற்றத் தாழ்வான சமூக நடைமுறைகள் சமூக நீதிமறுப்புக்கள் ஊடாக ஏகப் பெரும்பான்மையான மக்களுக்கு அநீதிகள் விளைவித்து அடக்குமுறைகளில் ஈடுபடும்போது இளைஞர் யுவதிகள் எதிர்ப்புணர்வுகளை வெவ்வேறு நிலைகளில் வெளிப்படுத்தவே செய்வார்கள். அவற்றை ஒரு பொதுவுடமை கட்சியானது உரிய முறையில் அடையாளம் கண்டு அவர்களது உணர்வுகளை ஒழுங்குபடுத்தி மாக்சிச உலக நோக்கை வழங்கி அமைப்பு வாயிலாக அரசியல் மயப்படுத்தி புரட்சிகரப் போராட்டங்களில் ஈடுபடவைத்தால் இவ் இளைய தலைமுறை மாபெரும் சக்தியாக முடியும். அத்தகைய இளைஞர் சக்தி தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களோடு இணைந்து நின்று போராடும் போதே ஆழமான அனுபவங்களைப் பெற்று சமூக மாற்றத்திற்கான விரிந்த தளத்தில் செயலாற்றும் பயனுள்ள சக்தியாகவும் திகழ முடியும். அதனைவிடுத்து வெறுமனே இளைஞர் யுவதிகள் மட்டும் போராடுவதோ அன்றி சமூக மாற்றத்திற்கு தலைமை தாங்குவதென்பதோ இயலாத ஒன்று மட்டுமன்றி அநாவசியமான இழப்புகளையும் அழிவுகளையும் ஏற்படுத்தவே செய்யும். அதன்மூலம் புரட்சிகர சக்திகளுக்கு இழப்பும் பலவீனமும் ஏற்படுவதுடன் ஆளும் வர்க்கத்திற்கு வாய்ப்புகளையும் வழங்குவதாக அமைந்து விடும். இதற்கான நடைமுறை அனுபவங்களை 1971ம் ஆண்டின் பின் பல தடவைகள் இலங்கையின் சிங்கள தமிழ் அரசியல் போராட்டக் களங்களிலே காணக்கூடியதாக இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறான போக்குகளிலிருந்து வர்க்கப் போராட்ட அடிப்படையில் இளைஞர் யுவதிகளை அணிதிரட்டி அன்றாட மக்கள் போராட்டங்களில் ஈடுபட வைப்பதன் மூலம் இளைஞர் இயக்கத்தையும் அதனூடாக கட்சி இயக்கத்தையும் வலுப்படுத்த முடியும் என்ற கொள்கையையே புதிய பொதுவுடமைக் கட்சி பின்பற்றியது. அதன் அடிப்படையில் அன்றைய இளைஞர் இயக்கத்தை வழிநடத்துவதில் தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் முக்கியமானவராக இருந்து செயற்பட்டார்.

1963ம் ஆண்டில் நீர்வேலிக் கிராமத்தில் சாதிவெறியர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் கிராமத்தை தாக்கி வீடுகளைத் தீயிட்டு பெரும் அட்டகாசம் புரிந்து நின்றனர். இச்சம்பவத்தை எதிர்த்தும் கண்டித்தும் யாழ் நகரத்தில் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை கட்சியும் வாலிபர் இயக்கமும் நடாத்தியது. அத்துடன் அக்கிராம மக்களுக்கு பல்வேறு உதவிகள் செய்து நம்பிக்கை கொடுத்து நின்றது. அன்றைய இளைஞர் இயக்கம் நடாத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு கே.ஏ. சுப்பிரமணியத்துடன் டாக்டர் சு.வே. சீனிவாசகம் தலைமை தாங்கியமை குறிப்பிடத் தக்கதாகும். தோழர் சீனிவாசகம் ஒரு வைத்தியராக இருந்த அதேவேளை வெகுஜன எதிர்ப்பு நடவடிக்கைகளில் எப்பொழுதும் முன்நிற்கும் ஒருவர்.

1964ல் வடபுலத்தில் இடம்பெற்ற முக்கியமான வேலைநிறுத்தப் போராட்டமாக காங்கேசன்துறை சீமெந்து தொழிலாளர்களின் போராட்டம் அமைந்தது. தொழிற்சாலை உருவாகி பதின்நான்கு ஆண்டுகளுக்கு மேலாகியும் தொழிலாளர்களின் அடிப்படைப் பிரச்சினைகள் எதுவும் தீர்க்கப்படாமலே இருந்து வந்தன. 1955ல் அங்கு பொதுவுடமைக் கட்சியின் தொழிற்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இத் தொழிற்சங்கத்தை உருவாக்குவதில் பல்வேறு இடர்பாடுகளை சந்திக்க நேரிட்டது. சில கட்சி உறுப்பினர்கள் தமது வேலைகளைக் கூடப் பறிகொடுத்து நிற்க வேண்டியதாயிற்று. ஆரம்பத்தில் இத்தொழிற்சங்கத்தின் செயலாளராக சா. சந்தியாப்பிள்ளை செயற்பட்டார். அவர் அவ்வேளை கட்சி உறுப்பினராக இருந்தவர். பின் நிர்வாகத்தின் பொய்க் குற்றச்சாட்டில் வேலை நீக்கப்பட்டவர்.



படிப்பகம்

www.padippakam.com

தடைகள் பிரச்சினைகளுக்கு தீர்மானம் நிறைவேற்றி கல்வி அமைச்சர், அதிகாரிகள் என்போரின் கவனத்திற்கு கொண்டுவர முடிவு செய்தனர்.

இம் மாநாட்டைத் தொடர்ந்து 1965ல் பதவிக்கு வந்த யூ.என்.பி - தமிழரசு அரசாங்கத்தில் கடும் இனவாதியான ஈரியகொல்லை கல்வி அமைச்சராக இருந்தார். அவரது ஒரு திட்டமாகவே 'சியவச' என்ற சீட்டிழுப்பை பாடசாலை மாணவர்கள் மத்தியில் கொண்டு வந்து அதன் மூலம் கல்விக்குப் பணம் சேர்க்க முனைந்தார். மாணவர்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்ட இச் சூதாட்டத்தை பலதரப்பினரும் எதிர்த்தனர். பொதுவுடமைக் கட்சி இதனை பரந்த எதிர்ப்பியக்கமாக்கியது. யாழ் நகரில் ஒரு எதிர்ப்பு ஊர்வலம் நடாத்தப்பட்டதுடன் குறிப்பிட்ட ஒரே நாளில் சகல இடங்களிலும் கல்வி அமைச்சரின் உருவப் பொம்மை கட்டித் தொங்கவிடப்பட்டு அதில் ''உடனே 'சியவச' சீட்டிழுப்பை நிறுத்து'' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. துண்டுப்பிரசுர இயக்கம் பாடசாலைகள் அனைத்திலும் நடாத்தப்பட்டன. ஆனால் அரசில் அங்கம் பெற்றிருந்த தமிழரசுக் கட்சி இச் ''சியவச''வைக் கண்டும் காணாதது போன்று இருந்து கொண்டது.

இவ்விடத்திலே 1965ம் ஆண்டு மேதினம் பற்றி குறிப்பிடவேண்டும். அவ்வேளை யூ.என்.பியின் தலைமையிலான தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்து கொண்டது. அவ் அரசாங்கத்தில் இனவாதிகள் தமிழரசுக் கட்சியினர் தொண்டமான் ஆகியோர் அங்கம் பெற்றிருந்தனர். அவர்கள் அனைவரையும் சகலவற்றுக்கும் மேலான வர்க்க உறவும் நலன்களும் பிணைத்திருந்தன. அதற்காக அவர்கள் எவரும் வெட்கப்படவோ கவலை கொள்ளவோ இல்லை.

இவ் யூ.என்.பி. அரசாங்கம் 1965ம் ஆண்டு மேதினத்தை கொழும்பு தவிர்ந்த ஏனைய நகரங்களில் ஊர்வலம் இன்றி தனியே கூட்டங்களை மட்டும் நடாத்தும்படி உத்தரவிட்டிருந்தது. அரசாங்கத்தின் இம்முடிவை வடபுலத்தில் ஏனைய கட்சிகள் ஏற்றுக்கொண்டன. ஆனால் புதிய புரட்சிகரப் பொதுவுடமைக் கட்சி அதனை ஒரு ஜனநாயக விரோதச் செயல் எனக் கண்டித்ததுடன் அதனை மீறி ஊர்வலம் நடாத்தத் தீர்மானித்தது. யாழ் ஸ்டான்லி வீதி மொம்சாக் கட்டிடத்தில் அமைந்திருந்த கட்சிக்



படிப்பகம்

www.padippakam.com

காரியாலயத்திலிருந்து ஊர்வலம் நடாத்தப்பட்டது. யூ.என்.பி. அரசாங்கத்தின் மக்கள் விரோத ஜனநாயக மறுப்பை எதிர்த்து இவ் ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலம் முடியும்வரை பொலீஸ் வரவில்லை. முடிந்த பின்பே கூட்டம் இடம்பெற்றிருந்த முற்றவெளிக்கு வந்து எப்படி சட்டவிரோத ஊர்வலம் நடாத்த முடியும் எனக் கேள்வி எழுப்பி அதற்குப் பொறுப்பான தோழரிடம் ஒரு வாக்குமூலம் பெற்றுச் சென்றனர். ஊர்வலத்தில் பொலீஸ் தாக்கினால் எவ்வாறு தற்காத்துக் கொள்வது என்றும் கண்ணீர்ப்புகை அடித்தால் அதிலிருந்து பாதுகாக்க தண்ணீர் நனைத்த கைக்குட்டைகளை எடுத்துச் செல்வது பற்றியும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டு அவ்வாறு செய்யப்பட்டது. இச்சட்டவிரோத ஊர்வலம் அதில் கலந்துகொண்டவர்களுக்கு மேலும் உற்சாகத்தையும் உந்துதலையும் கொடுத்தது.

புதிய பொதுவுடமைக் கட்சியானது தனது புரட்சிகர மார்க்கத்தை நெறிப்படுத்திய அதேவேளை 1965ம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் பங்குகொண்டு அதனை ஒரு பிரச்சார மேடையாக்கிக் கொண்டது. கொழும்பில் கட்சியின் பொதுச்செயலாளர் நா. சண்முகதாசன், வவுனியாவில் ஆரியவன்ச குணசேகரா, காங்கேசன்துறையில் டாக்டர் சு.வே. சீனிவாசகம் ஆகியோர் போட்டியிட்டனர். அதில் வெற்றி பெறாவிடினும் கட்சியின் கொள்கைகளை எடுத்துச் சென்று விளக்குவதற்கு அத்தேர்தலைக் கட்சி ஒரு சந்தர்ப்பமாக்கிக் கொண்டது.

அதேவேளை பழைய கட்சியில் வ. பொன்னம்பலம், கே. வைகுந்தவாசன், பொன். குமாரசுவாமி, ஆகியோர் வடபுலத்தில் போட்டியிட்டனர். எவரும் வெற்றிபெறவில்லை. ஏற்கனவே சக்திமிக்க அமைப்பாக விளங்கிய சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் இருந்து ஊக்கமுடன் செயற்பட்டுவந்த பலர் விலகிக் கொண்டனர். எம்.சி. சுப்பிரமணியத்தைத் தலைவராகக் கொண்ட வெறும் ஒரு பெயர்பலகை அமைப்பாகவே அம் மகாசபை மாறிக் கொண்டது. அதற்கு புத்துயிர் கொடுக்க முற்பட்டபோதும் அதன் தலைவர்கள் சார்ந்து நின்ற பழைய கட்சித் தலைமையின் பாராளுமன்றப் பாதை சார்ந்தே முடிவுகள் மேற்கொள்ளப்பட்டதால் மகாசபையால் முன்செல்ல முடியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

இத்தகைய பலவீனம் காரணமாக மகாசபை ஏனைய ஓரிரு அமைப்புகளுடன் இணைந்து சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியை தோற்றுவித்தது. ஆலய தேனீர் கடைகளை தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்து விடப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மேற்படி ஐக்கிய முன்னணி முன்வைத்தது. இக்கோரிக்கையை தமிழ்த் தலைவர்களுக்கும் அரசாங்க அதிபருக்கும் அவ்வமைப்பு முன்வைத்தது. அவ்வாறு திறந்து விடப்படாதுவிடின் தாங்கள் அகிம்சை வழியில் சத்தியாக்கிரகம் இருக்கப் போவதாகவும் அறிவித்தது. இவர்களது கோரிக்கைக்கு மூன்று மாதம், பின் மூன்று மாதம் என்ற அடிப்படையில் தமிழ்த் தலைவர்கள், அரசாங்க அதிபர் அவகாசம் தொடர்ந்து கேட்டார்களே தவிர வேறு எதுவும் நடக்கவில்லை.

ஏற்கனவே முன்னெடுத்த தேனீர்க்கடை ஆலயப் பிரவேச இயக்கத்தால் யாழ்ப்பாண நகரத்தின் மத்தியில் இருந்த குறிப்பிட்ட சில தேனீர்க்கடைகள், உணவகங்கள் மட்டுமே திறக்கப்பட்டன. அவ்வாறு நல்லூர், வண்ணை சிவன் ஆகிய ஆலயங்கள் மட்டுமே திறந்துவிடப்பட்டன. வடபுலத்தின் ஏனைய பகுதிகளின் தேனீர்க்கடைகள் உணவகங்கள் ஆலயங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்துவிடப்படவில்லை.

இந்நிலையிலே 1966ம் ஆண்டின் முற்கூறிலே மேற்படி சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி அச்சுவேலியில் அமைந்துள்ள பாஸ்கரன் தியேட்டரில் சகல கட்சிகளையும் அழைத்து ஒரு மாநாட்டை நடாத்தியது. எம்.சி. சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். இதில் தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் தலைவர்களும், சமசமாஜக் கட்சிப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். மாக்சிச லெனினிசப் பொதுவுடமைக் கட்சி சார்பாக தோழர்கள் வீ.ஏ. கந்தசாமி, கே.ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அம் மாநாட்டிலும் பழைய பல்லவியைத்தான் தமிழ்த் தலைவர்கள் பாடிக் கொண்டனர். இன்னும் மூன்று மாதங்கள் பொறுத்திருங்கள் அதற்குள் தேனீர்க்கடை உரிமையாளர்களோடும் ஆலைய தர்மகர்த்தாக்களோடும் பேசி சமத்துவத்திற்கு வழி சமைப்போம் என்றனர். மாநாட்டுத் தலைமையும் அதனை ஏற்று



படிப்பகம்

www.padippakam.com

வழமைபோன்று தலையாட்டிக் கொண்டனர். இத்தலைமை தமிழர் பழமைவாதத் தலைமைகளை எதிர்பார்த்தனரே தவிர மக்களின் போராட்டத்தின் மீது நம்பிக்கை வைக்கவில்லை.

ஆனால் அம் மாநாட்டில் புதிய பொதுவுடமைக் கட்சி சார்பில் தோழர் வீ.ஏ. கந்தசாமி உரையாற்றினார். சாதி ஒடுக்குமுறையின் மோசமான பக்கத்தையும் தீண்டாமைக் கொடுமையின் கேவலத்தையும் அம்பலமாக்கியதுடன் இவற்றுக்கு எதிராகப் போராட வேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்தி உரையாற்றினார். அத்துடன் அங்கு கூறப்பட்ட அடுத்த மூன்று மாதத் தவணைக்குப் பின்பு உரிய நடவடிக்கை ஏற்படுத்தப்படாதுவிட்டால் எமது கட்சி போராட்டத்தைப் புரட்சிகரப் பாதையில் முன்னெடுக்கும் என்ற அறை கூவலையும் அம் மாநாட்டில் முன்வைத்தார். மாநாட்டுப் பிரதிநிதிகள் மிகுந்த கரகோஷம் செய்து தோழர் வீ.ஏ. யின் உரையை வரவேற்றனர்.

மாநாட்டுக்குப்பின் கொடுக்கப்பட்ட மூன்று மாதத் தவணையும் முடிவடைந்துவிட்ட நிலையில் வாக்குறுதி கொடுத்த தமிழ்த் தலைவர்கள் மௌனித்துக் கொண்டனர். சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணிக்கு இணுவில் கந்தசாமி கோவில் முன்னாலிருந்து வாய்க்கு கறுப்புத்துணி கட்டியவாறு ஒரு மௌன ஊர்வலத்தை காங்கேசன்துறை வீதியால் நடத்த மட்டுமே முடிந்தது. அதற்கு மேல் அவர்களால் எதையும் முன்னெடுக்க முடியவில்லை. அதற்கான போராட்ட வழிமுறை அவர்களிடம் இருக்கவில்லை. எம்.சி. சுப்பிரமணியமும் வேறு நால்வரும் யாழ் செயலகம் முன்பாக ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்து அன்று மாலையே அதனை முடித்துக் கொண்டதற்கு அப்பால் அவர்களால் எதுவும் செய்ய இயலவில்லை.

இதே காலப்பகுதியில் வலி மேற்கில் பொன்னாலை என்னும் கிராமத்தில் புதிய பொதுவுடமைக் கட்சியும் அப்பிரதேச வாலிபர் இயக்கமும் மக்கள் மத்தியில் வேலைகளை முன்னெடுத்துக் கொண்டன. மக்கள் மத்தியில் அரசியல் வேலைகளை முன்னெடுப்பதற்கு வெறுமனே அரசியல் வகுப்புகளையும் கூட்டங்களையும் நடாத்தி பத்திரிகை பிரசுரங்களை விநியோகித்தால் மட்டும் போதுமானது என்றநிலை புதிய கட்சியின் வேலை முறையில்



படிப்பகம்

www.padippakam.com

மாற்றியமைக்கப்பட்டது. பதிலாக அம்மக்கள் மத்தியில் அவர்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றை மக்களுக்கு பயன்தரும் வகையில் தீர்ப்பதற்கான வழிமுறைகளைத் தேடவேண்டும். அப்பிரச்சினைகளை வெகுஜன மயப்படுத்தி மக்கள் போராட்டங்களாக மாற்றுதல் வேண்டும். இதன்மூலமே உழைக்கும் மக்கள் மத்தியில் இன்றைய சமூக அமைப்புப் பற்றியும் அதனை மாற்றுவதற்கான அரசியல் தேவை மார்க்கம் பற்றியும் நம்பிக்கை கொடுத்து அமைப்பு வாயிலாக அணிதிரட்ட முடியும்.

இதனடிப்படையில் பொன்னாலை குடிநீர் பிரச்சினையை கட்சி முன்னெடுத்தது. பொன்னாலைப் பகுதி உவர்நீர்ப் பகுதியாகும். அதனால் குழாய் விநியோகத் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கப்பட்டது. ஆனால் அங்கு சாதி ஏற்றத் தாழ்வு காரணமாக உயர்சாதியினரான 30 குடும்பங்களுக்கு 12 குழாய் நீர் வழங்கும் இடங்களும் 115 தாழ்த்தப்பட்ட குடும்ப மக்களின் பகுதிக்கு ஒரே ஒரு நீர் வழங்கும் இடமும் அமைக்கப்பட்டிருந்தது. அதிலும் உயர்சாதியினரின் இடங்களுக்கு 2 அங்குல விட்டமுள்ள குழாய்களும் ஒரே ஒரு குழாய் உள்ள இடத்திற்கு 1-1/4 அங்குல விட்டமும் உள்ள வகையில் மிகக்குறைந்த தண்ணீர் கொடுக்கப்பட்டது. குடிக்கும் தண்ணீரில் காட்டப்பட்ட இச்சாதிய அநீதிக்கு எதிராக அக்கிராமத்தின் மக்களை அணிதிரட்டிப் பல்வேறு இயக்கங்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. சாதி வெறியர்கள், உயர் அதிகாரிகள், பொலீஸ் அடக்குமுறை என்பவற்றை எதிர்த்து அப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதன்பயனாக அப்பகுதி மக்களின் கோரிக்கைக்கு இணங்க குடிநீர் விநியோகம் பின் பெறப்பட்டது. இப்போராட்டத்தை மிக நிதானமாகவும் அதேவேளை வெகுஜனப் போராட்ட அடிப்படையிலும் முன்னெடுப்பதில் தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் வழிகாட்டி நின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அதன் செழுமையான நடைமுறை அனுபவம் அப்போராட்டத்தைத் தொடர்ந்து வடபகுதியில் முன்னெடுக்கப்பட்ட சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான பரந்த புரட்சிகர வெகுஜனப் போராட்டக் களத்திற்கு வலிமையும் வளமும் சேர்ப்பதாக அமைந்திருந்தது. இதனைக் கட்சி வாலிபர் இயக்கம் முன் அனுபவமாக கவனத்தில் எடுத்துக் கொண்டு செயற்பட்டுக் கொண்டது.



படிப்பகம்

www.padippakam.com

## 16 புதிய பொதுவுடமைக் கட்சியின் போராட்ட முனை

அறுபதுகளின் நடுக்கூறு தேசிய சர்வதேசிய ரீதியில் புரட்சிகரப் போராட்டங்கள் வீறு பெற்று நின்ற ஒரு காலகட்டமாகும். பொதுவுடமைக் கட்சிகளும் தேசிய விடுதலை இயக்கங்களும் ஏகாதிபத்தியத்தையும் உள்நாட்டு பிற்போக்கு சக்திகளையும் நோக்கி கணைகள் தொடுத்துக் கொண்ட காலப்பகுதியுமாகும். வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம் அடிக்குமேல் அடிவாங்கி நின்றது. சீனாவில் தோழர் மாஓசேதுங் தலைமையில் மகத்தான கலாச்சாரப் புரட்சி இடம்பெற்று வந்தது. ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளில் புரட்சிகர வெகுஜனப் போராட்டங்கள் பேரலைகளாக எழுந்து நின்றன. எஞ்சி இருந்த கொலனித்துவத்தை எதிர்த்து ஆபிரிக்க நாடுகள் கடுமையாகப் போராடி வந்தன. மேற்குலகில் தொழிலாளர்கள் மாணவர்கள் கிளர்ந்தெழுந்த வண்ணம் இருந்தனர்.

இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சி, எஸ். தொண்டமான் மற்றும் மோசமான இனவாதிகள் இணைந்து தேசிய அரசாங்கம் என்ற பெயரில் பெரு முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பான ஆட்சி நடாத்தி வந்தனர். அந்த மக்கள் விரோத ஆட்சிக்கு எதிராக தெற்கிலும் மலையகத்திலும் பல வேலைநிறுத்தப் போராட்டங்கள் இடம்பெற்றன. வடபுலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பொருட்கள் கட்டுப்பாட்டுச் சட்டத்தை எதிர்த்து புதிய பொதுவுடமைக் கட்சி பல இயக்கங்களை நடாத்தியது. கடற்கரை ஓரங்களில் இருந்து உள்ளே இரண்டு மைல்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் குறிப்பிட்ட பொருட்கள் வைத்திருப்பதற்கு கட்டுப்பாடுகள் விதித்து வீடுகளில் பொலிசாரும் ஆயுதப்படைகளும் சோதனை நடாத்துவதற்கு ஏதுவாகவே அச்சட்டம் அமைந்திருந்தது. வடபுலத்தைப் பொறுத்தவரை பேரினவாத ஒடுக்குமுறையின் ஆரம்பநிலையை இச்சட்டம் சுட்டிக் காட்டியது. ஆனால் இதனைப் பொதுவுடமைக் கட்சி எதிர்த்து நின்ற அளவுக்கு தமிழ்க் கட்சிகள் எதிர்த்து நிற்கவில்லை.

மேலும் ஒரு சம்பவம் குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். முன்னர் குறிப்பிட்ட 1965 தேசிய அரசாங்கத்தின் பிரதமர் டட்லி சேனநாயக்காவையும் அவரது அமைச்சர்களையும் தமிழரசுக்



படிப்பகம்

கட்சியும் தமிழ்க் காங்கிரசும் போட்டி போட்டு வரவேற்பளித்து கௌரவித்த காட்சி யாழ்ப்பாண நகரில் இடம் பெற்றது. அன்றைய அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சி மு. திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சர். தமிழ்க் காங்கிரஸ் மு. சிவசிதம்பரம் உப சபாநாயகர். ஜீ.ஜீ. பொன்னம்பலம் அமைச்சர் பதவி இல்லாது பொருமிக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று. மேற்படி இரு தமிழ்க் கட்சிகளும் இணைந்து நின்று வழங்கிய வரவேற்பை புதிய பொதுவுடமைக் கட்சி அம்பலமாக்கி அரசாங்கத்தின் மக்கள் விரோதக் கொள்கையை எதிர்த்து துண்டுப்பிரசுர விநியோக இயக்கத்தை நடாத்தியது. இவ்விடத்திலே ஒரு விடயம் அவதானிக்கப்பட வேண்டியதொன்றாகும். தமிழரசு-காங்கிரஸ் தலைவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் இரண்டு பெரும் ஆளும் கட்சிகளையும் இனவாத சிங்களக் கட்சிகள் என்று கூறிப் பிரச்சாரம் செய்வார்கள். ஆனால் ஐக்கியத் தேசியக் கட்சியுடன் உறவு பூண்டு அதன் தலைவர்களுக்கு முகம் மலர வரவேற்பும் வழங்குவார்கள். அதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்பார்கள். இன்றுவரை இத்தகைய போக்கையே அவர்கள் பின்பற்றி வருகிறார்கள். அவ்வரசாங்கத்தில் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த மு. திருச்செல்வம் யாழ்ப்பாண மாநகரசபை நிர்வாகத்தைக் கலைத்து ஆணையாளர் ஆட்சிக்கு உத்தரவிட்டார். இதனை பொதுவுடமைக் கட்சி வன்மையாக எதிர்த்தது. ''கலைப்பு மந்திரி திருச்செல்வமே ராஜினாமா செய்!'' என சுவரொட்டி இயக்கத்தை நடாத்தி மக்கள் மத்தியில் கடும் பிரச்சாரம் செய்தது. இதற்கு எதிராக பொலீஸ் அடக்குமுறை ஏவப்பட்டு தோழர்கள் வீ.ஏ. கந்தசாமி, சி.கா. செந்திவேல் உட்பட ஏழு தோழர்கள் கைது செய்யப்பட்டு பொலீஸில் அடைக்கப்பட்டு தாக்கப்பட்டனர். நீதிமன்றில் வழக்கும் தொடரப்பட்டது.

மேலே கூறப்பட்ட தேசிய சர்வதேசிய சூழலில் மார்க்சிச லெனினிச பொதுவுடமைக் கட்சி வடபுலத்தில் நிலவிவந்த சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்பது பற்றி விவாதித்தது. தோழர் நா. சண்முகதாசனைப் பொதுச் செயலாளராகக் கொண்ட மத்தியகுழு சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்கும் முடிவை மேற்கொண்டு அதனை வழிநடத்தும் பொறுப்பை வடபுலத்து பிரதேச தலைமையிடம் ஒப்படைத்தது. அவ்வேளை தோழர்கள் மு. கார்த்திகேசன்,

www.padippakam.com

வீ.ஏ. கந்தசாமி, கே.ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்களாக இருந்தனர். தோழர் வீ.ஏ. கந்தசாமி வடபிரதேச செயலாளராகவும் தோழர் மு. கார்த்திகேசன் பொருளாளராகவும் இருந்து செயல்பட்டனர்.

மேற்படி தீர்மானம் மத்திய குழுவிலும் வடபுலத்து பிரதேசக் குழுவிலும் விவாதத்திற்கு வந்தவேளை பழைய பாராளுமன்றக் கண்ணோட்டத்தில் கருத்துக்களை முன்வைத்தவர்கள் இருக்கவே செய்தனர். சாதியப் போராட்டத்தை முன்னெடுத்தால் உயர் சாதியினர் எனப்படுவோரிடமிருந்து கட்சி தனிமைப்பட்டு நிற்கவேண்டி ஏற்பட்டுவிடும். அதனால் கட்சி வளரமுடியாது போய்விடும். ஏற்கனவே பொதுவுடமைக் கட்சிக்கு இருந்து வரும் ‘தாழ்த்தப்பட்டோரின் கட்சி’ என்ற பெயர் நிலைத்துவிடும். இவ்வாறான கருத்துக்களை முன்வைத்தவர்கள் கட்சித் தலைமையில் ஒரு சிலராகவே இருந்தனர். அவர்கள் புரட்சிகர மார்க்கம் பற்றிப் பேசினாலும் பழைய பாராளுமன்றக் கண்ணோட்டம் நிறைந்த சிந்தனையிலிருந்து விடுபட்டுச் செல்லவில்லை என்பதையே இது தெளிவாகக் காட்டியது. இருப்பினும் சாதியொடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்பது என்ற முடிவு கட்சியின் பிரதேசக் குழுவில் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி முடிவு மேலெழுந்தவாரியானதோ அன்றி தற்செயலானதொன்றோவல்ல. அன்றைய வடபுலத்து தமிழர் சமூகப் பரப்பில் கூர்மையடைந்து காணப்பட்ட சாதிய முரண்பாட்டையும் அது தோற்றுவித்து நடைமுறையில் இருந்து வந்த சாதிய ஒடுக்குமுறையையும் பொதுவுடமைக் கட்சியானது சரியானபடி அடையாளம் கண்டதன் விளைவானதே அம்முடிவாகும். மேற்படி சாதிய ஒடுக்குமுறையினை வெறுமனே சாதிவாதப் (இன்றைய தூயதலித்திய) பார்வையில் அன்றி வர்க்கப் போராட்டக் கண்ணோட்ட அடிப்படையிலும் மாக்சிச லெனினிச நிலைப்பாட்டிலும் நின்றே முடிவு மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய போராட்ட முடிவானது அன்றைய சூழலின் தவிர்க்கவியலாத வரலாற்றுத் தேவையாகவும் அமைந்திருந்தது.

இலங்கைத் தமிழர்களின் முழுச் சனத்தொகையில் முப்பது வீதத்தினர் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கினர் தாழ்த்தப்பட்ட மக்களாக விளங்கினர். அவர்கள் ஜனநாயக மனித உரிமைகள்



படிப்பகம்

www.padippakam.com

மறுக்கப்பட்டவர்களாக ஆண்டாண்டு காலமாகச் சாதியத்தாலும் தீண்டாமையாலும் ஒதுக்கி ஒடுக்கப்பட்டு வந்த வரலாறே அம்மக்களின் வாழ்வாக இருந்து வந்தது. எனவே இவ் ஒடுக்கப்பட்ட மக்களின் அடிப்படை ஜனநாயக மனித உரிமைகளுக்காக கிளர்ச்சி செய்வது நியாயமானது. போராடுவது தேவையானது. தியாகங்களை ஏற்பது மேலானது. இவை பொதுவுடமை வாதிகளினதும் அவர்களது கட்சியினதும் புரட்சிகரக் கடமை என்பதை கட்சி உறுதியாக்கிக் கொண்டது. தானே போராட்டத்தின் முன்னணிப் படையாக நிற்பது என முடிவு செய்து கொண்டது.

இதன் அடிப்படையில் முதலாவது எழுச்சி ஊர்வலத்திற்கு நாள் குறிக்கப்பட்டது. கட்சியே அதற்கான அறைகூவலை விடுத்தது. 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21ம் திகதி சுன்னாகம் நகரத்திலிருந்து யாழ் முற்றவெளியில் ஒழுங்கு செய்திருந்த பொதுக்கூட்டம் நோக்கியே அவ்வெழுச்சி ஊர்வலம் நடாத்த முடிவுசெய்யப்பட்டது. அன்றைய ஐக்கிய தேசியக்கட்சி- தமிழரசு அரசாங்கத்தின் கீழ் ஊர்வலத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. அதனையும் மீறி ஊர்வலம் புறப்பட்டது. ஆயிரத்திற்கு மேற்பட்ட கட்சி வாலிபர் அணிகளின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் ஊர்வலத்தில் திரண்டிருந்தனர். ஊர்வலம் சுன்னாகம் சந்தை வளாகத்திலிருந்து ஆரம்பித்து சந்தியை வந்தடைந்து யாழ்நகர் நோக்கித் திரும்பி வீறுநடை போட்டது. ''சாதி அமைப்புத் தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்'' என்பதே எழுச்சி ஊர்வலத்தின் முன்னணிச் செம்பதாகையாக உயர்த்தப்பட்டிருந்தது. செங்கொடிகளும் கட்சி வாலிபர் இயக்கப் பதாகைகளும் நிறைந்து சிகப்பு மயமாகக் காணப்பட்டது. ஊர்வல முன்னணியில் தோழர்கள் கே.ஏ. சுப்பிரமணியம், வீ.ஏ. கந்தசாமி, இ.கா. சூடாமணி, கே. டானியல், டாக்டர் சு.வே. சீனிவாசகம், டி.டி. பெரேரா, எஸ்.ரி.என். நாகரட்ணம், எம். முத்தையா ஆகியோர் சென்றனர். அவர்களையடுத்து தோழர்கள் சி.கா. செந்திவேல், எம்.ஏ.சி. இக்பால், கு. சிவராசா, நா. யோகேந்திரநாதன் போன்ற வாலிபர் இயக்க தலைமைக்குழுத் தோழர்கள் சென்றனர். சாதி ஒடுக்குமுறை ஒழிக! தீண்டாமை ஒழிக! சாதி அமைப்பு தகரட்டும்! சமத்துவநீதி ஓங்கட்டும்! பொலீஸ் அடக்குமுறைக்கு அஞ்சமாட்டோம்! போராட்டப் பாதையில் முன்னேறுவோம்! போன்ற புரட்சிகர முழக்கங்கள் வானைப் பிளந்து நிற்க எழுச்சி ஊர்வலம் முன்னேறிச் சென்றது. சுன்னாகம் - யாழ்ப்பாண பிரதான வீதியில் அமைந்திருந்த சுன்னாகம் பொலீஸ்



படிப்பகம்

www.padippakam.com

# யாழ்ப்பாணத்தில் புரட்சிகர பொதுவுடமைக் கட்சி நடாத்திய சாதிய-தீண்டாமை எதிர்ப்பு ஊர்வலம்





சுன்னாகம் சந்தை மைதானத்தில் இடம் பெற்ற மாபெரும் கூட்டம் தோழர் சண் உரையாற்றுகிறார். தோழர் மணியம் தலைமை தாங்குகிறார்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

நிலைய முன்பாக வீதிக்கு குறுக்கே பொலீஸ்படை அணி வகுத்து நின்று ஊர்வலத்தை தடுத்து மறித்தது. உயர் அதிகாரிகள் ஊர்வலம் சட்டவிரோதமானது எனக்கூறி கலைந்து செல்லுமாறு அதட்டினர். தலைமைத் தோழர்கள் மறுத்து ஊர்வலம் செல்வது தமது உரிமையென வாதிட்டனர். வாக்குவாதத்தை அடுத்து குண்டாந்தடிப் பிரயோகத்திற்கு உத்தரவிடப்பட்டது. ஊர்வலம் கடுமையான பொலீஸ் தாக்குதலுக்கு உள்ளாகியது. ரத்தம் வழிந்தோடியது. கற்கள் தடிகள் பொலீசை நோக்கி வீசப்பட்டன. தோழர்கள் கே.ஏ. சுப்பிரமணியம், வீ.ஏ. கந்தசாமி, இ.கா. சூடாமணி ஆகியோர் மேல் சட்டைகள் கிழிக்கப்பட்ட நிலையில் இரத்தக் காயங்களுடன் பொலீஸ் நிலையத்தில் அடைக்கப்பட்டனர். ஏனைய முன்னணித் தோழர்கள் கடும் குண்டாந்தடிப் பிரயோகத்திற்கு ஆளாகினர். இருப்பினும் திரண்டிருந்தவர்கள் கலைந்து செல்ல மறுத்து தொடர்ந்து யாழ்நகர் நோக்கிச் செல்வதையே வற்புறுத்தினர். இறுதியில் வேறு வழியின்றி யாழ்நகரை நோக்கி ஊர்வலம் ஆர்ப்பாட்டமின்றிச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டது.

யாழ்- முற்றவெளியில் தோழர் சு.வே. சீனிவாசகம் தலைமையில் கொட்டும் மழையின் நடுவே பொதுக்கூட்டம் ஆயிரக்கணக்கான மக்களுடன் நடைபெற்றது. கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் நா. சண்முகதாசன் தாழ்த்தப்பட்ட மக்கள் பொதுவுடமைக் கட்சியுடன் இணைந்து சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவதற்கான அறைகூவலை விடுத்தார். தோழர் கே. டானியல் கட்சியின் வடபுலத்து பிரதேசக் குழு சார்பாகவும் தோழர் சி.கா. செந்திவேல் வாலிபர் இயக்கம் சார்பாகவும் உரையாற்றினார். அன்றைய எழுச்சி வடபுலத்தில் இறுகிநின்ற சாதியக் கோட்டையில் வீழ்ந்த மிகப்பெரும் அடியாக அமைந்தது. அதுவே பின்நாட்களில் வெடித்தெழுந்த புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களுக்கு கட்டியம் கூறி நின்றது.

மேற்படி ஒக்ரோபர் 21 எழுச்சியை மேலும் முன்னெடுத்து விரிவுபடுத்திச் செல்லவும் மக்களை போராட்ட இயக்கத்திற்கு அணி திரட்டவும் கட்சி தீர்மானித்தது. பெரும் கூட்டங்கள் ஊர்வலங்கள் அதேவேளை சிறிய கூட்டங்கள் கருத்தரங்குகள் அரசியல் வகுப்புகள் என்பனவற்றை நடாத்த முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள். பத்திரிகை விநியோகம், பத்திரிகைகளுக்கான அறிக்கைகள் போன்றவற்றின் மூலம் பிரச்சார



படிப்பகம்

நடவடிக்கைகள் முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டன. உரிமை மறுக்கப்பட்டு இரண்டாம் தரமாக நடாத்தப்பட்டு சாதிய ஒடுக்குமுறைக்கு உள்ளான மக்களை தட்டியெழுப்பி உணர்வூட்டி அமைப்புகள் வாயிலாக அணிதிரட்டுவது முதன்மையான பணியெனக் கட்சி கருதியது. ‘மக்கள், மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்து சக்தி’ என்று தோழர் மாஓசேதுங் சுட்டிக் காட்டிய மாக்சிச லெனினிச அடிப்படையில் மக்களிடம் சென்று அரசியல் வேலைகளில் ஈடுபடும் புதிய புரட்சிகர வேலைமுறை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. கட்சியின் கொள்கை மார்க்கம் வழிகாட்டல் என்பனவற்றை முன்னெடுத்துச் செல்லும் அமைப்பாக வாலிபர் இயக்கம் செயல்படுத்தப்பட்டது.

ஒக்ரோபர் 21 எழுச்சியைத் தாக்கிய பொலிசின் நடவடிக்கையைக் கண்டித்தும் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்ட அறைகூவலை மேலும் முன்னெடுப்பதற்குமான மாபெரும் கூட்டம் அதே சுன்னாகம் சந்தை மைதானத்தில் ஒரு மாதத்தின் பின்பு நவம்பர் 25ம் திகதி நடாத்தப்பட்டது. தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் தோழர்கள் நா. சண்முகதாசன், எஸ்.டி. பண்டாரநாயக்கா, வீ.ஏ. கந்தசாமி, கே. டானியல், சு.வே. சீனிவாசகம், சுபைர் இளங்கீரன், சி.கா. செந்திவேல் உட்பட பலர் உரையாற்றினர். அக்கூட்டத் தினத்தன்றும் சட்டவிரோத ஊர்வலம் நடாத்த இருப்பதாக அவிழ்த்து விடப்பட்ட வதந்தியை நம்பி குடாநாட்டின் பல பொலீஸ் நிலையங்களில் இருந்தும் பெருந்தொகையான பொலிசார் தாக்குதலுக்குத் தயாராக சுன்னாகம் நகரத்தில் குவிக்கப்பட்டிருந்தனர். இதனால் மக்களது எதிர்ப்புணர்வும் எண்ணிக்கையும் அதிகரித்து மிகப் பெரும் கூட்டமாக்கியது. இக்கூட்டமும் தலைமைத் தோழர்களின் போர்க் குணத்துடன் கூடிய புரட்சிகர உரைகளும் போராட்ட நம்பிக்கையையும் அடுத்த கட்டம் நோக்கிய உற்சாகத்தையும் வழங்கியது.

வடபுலத்தின் பெரும்பாலான கிராமங்களில் சிறிய நகரங்களில் நடுத்தர சிறிய கூட்டங்கள் கருத்தரங்குகள் தொடர்ச்சியான பிரச்சாரமாக நடாத்தப்பட்டன. சங்கானை, சாவகச்சேரி, பருத்தித்துறை, அச்சுவேலி, மட்டுவில், நெல்லியடி போன்ற நகரங்களில் ஊர்வலங்களுடன் கூடிய மிகப்பெரும் கூட்டங்களை கட்சி வாலிபர் இயக்கம் நடாத்தியது. இத்தகைய பிரச்சார இயக்கத்தின் போது பொலிசுடன் சாதிய அகம்பாவம்

www.padippakam.com

கொண்ட அதிகாரிகளுடனும் போராட வேண்டியிருந்தது. குறிப்பாக சகல போலீஸ் நிலையங்களிலும் இருந்த உயர்சாதி எனப்பட்ட பொலிஸ் அதிகாரிகளும் உத்தியோகஸ்தர்களும் இவ்வியக்கத்திற்கு எதிராகவே இருந்து வந்தனர். பல்வேறு தடைகள் முட்டுக்கட்டைகளைத் தகர்த்தே முன்செல்ல வேண்டியிருந்தது. ஆரம்ப பிரச்சார இயக்கம் இத்தனை எதிர்ப்பை சந்தித்ததென்றால் நடைமுறைப் போராட்டங்களின்போது எத்தகைய இடர்களை எதிர்நோக்கவேண்டி ஏற்பட்டது என்பது சிந்தனைக்குரியதாகும்.

இவ்விடத்திலே குறிப்பிடத்தக்க ஓர் விடயம் உண்டு. மாக்சிச-லெனினிசப் பொதுவுடமைக் கட்சி இவ்வாறு சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான இயக்கத்தை போராட்டநிலை நோக்கி முன்னெடுத்த அதேவேளை ஏனைய அரசியல் தொழிற்சங்க ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களையும் போராட்டங்களையும் முன்னெடுத்து வந்தது என்பதையும் பின்வரும் பக்கங்களில் காணமுடியும்.

## 17 1967-68 ஆண்டுகளில்

1964ல் புரட்சிகரப் போராட்டமார்க்கத்தில் தன்னைத் தகவமைத்துக் கொண்ட மாக்சிச லெனினிச பொதுவுடமைக் கட்சியானது 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியுடன் அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கி முன்னேறியது. 1967ம் ஆண்டின் ஆரம்பத்துடன் சாதியொடுக்குமுறைக்கெதிரான பரந்த பிரச்சாரத்தில் இயக்கம் புது உத்வேகத்துடன் முன் சென்றது. இதனை மேலும் அரசியல் மயப்படுத்தி அமைப்பு ரீதியாக முன்னெடுக்கும் வகையில் வாலிபர் இயக்கத்தின் வடபுல மாநாட்டை நடாத்த கட்சியும் வாலிபர் இயக்கமும் தீர்மானித்தது.

1967ம் ஆண்டு மார்ச் 24ம் 25ம் திகதிகளில் காங்கேசன்துறையில் வாலிபர் இயக்கத்தின் 5வது பிரதேச மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் வாலிபர் இயக்கத்தின் வடபிரதேச செயலாளராக இருந்த தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் மாநாட்டு அறிக்கையை முன் வைத்தார். நிதி அறிக்கையை பொருளாளர் இ.கா. சூடாமணி சமர்ப்பித்தார்.



படிப்பகம்

www.padippakam.com

வடபுலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பிரதிநிதிகள் கலந்துகொண்டு விவாதங்களை நடாத்தி தீர்மானங்களை எடுத்தனர். கட்சியின் தலைவர்கள் பங்குபற்றி வாலிபர் இயக்கத்திற்கு வழிகாட்டும் உரைகள் நிகழ்த்தினர். இம் மாநாட்டிற்கு தென்னிலங்கையில் இருந்து பெருந் தொகையான சிங்கள தொழிலாளர்கள், இளைஞர், யுவதிகள், புத்தி ஜீவிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இம் மாநாட்டின் முடிவில் காங்கேசன்துறையில் இருந்து மிகப்பெரும் ஊர்வலம் நடாத்தப்பட்டது. இவ் ஊர்வலத்தை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் அமைந்துள்ள காங்கேசன்துறை வீதியால் நடாத்த பொலீஸ் அனுமதிக்கவில்லை. உள்ளூர் வீதிகளுக்கு ஊடாக தெல்லிப்பளை சந்திக்கு வந்த பின்பே பிரதான வீதியால் ஊர்வலம் யாழ் நகர் நோக்கிச் சென்றது. யாழ் முற்றவெளியில் மிகப்பெரும் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கட்சி, வாலிபர் இயக்க தொழிற்சங்க தலைவர்களும் தோழர்களும் உரையாற்றினர்.

இவ்வாறு தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த புரட்சிகர ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் அவற்றில் முன்வைத்த முழக்கங்கள் உரைகள் என்பன வெறும் மேலெழுந்தவாரியான பிரச்சாரங்களோ அன்றி தேர்தலுக்கான வெற்றுரைகள் போன்றனவோ அல்ல. நிலவுடமை ஆதிக்க வழிவந்த முதலாளித்துவ ஏற்றத்தாழ்வும் சமூகநீதி மறுப்பும் சாதிய ஒடுக்குமுறைகளும் மலிந்து காணப்பட்ட பழைமைவாத சமூக அமைப்பின் மீது ஓங்கி மோதப்பட்ட பாரிய அடிகளாக அமைந்தன. இதன் மூலம் சமூக விழிப்புணர்வும் அநீதிகளை எதிர்த்துப் போராடும் புதிய சிந்தனைப் போக்குகளும் மக்கள் மத்தியில் வளர்க்கப்பட்டன. பழமைவாத ஆதிக்க அரசியலும் பாராளுமன்ற தேர்தல் வெற்றிக்கான வழிமுறைகளும் பின்பற்றப்பட்டு வந்த யாழ்பாணத்து சமூகச் சூழலில் மாக்சிச லெனினிசப் பொதுவுடமைக் கட்சி புரட்சிகரப் போராட்ட வழிகாட்டி நின்றமை வரலாற்று முக்கியத்துவம் கொண்டது. அந்தப் போராட்ட வழிமுறைதான் பிற்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட தமிழ்த் தேசியவாதப் போராட்டத்திற்கும் வழிகாட்டும் அடிப்படையாக அமைந்து கொண்டதென்பதை அரசியல் ஆய்வு செய்யும் நேர்மையாளர்கள் கண்டு கொள்வார்கள்.


1967ம் ஆண்டு மார்ச் மாத, வாலிபர் இயக்க மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட வடபுலத்து பிரதேசக் குழுவில் வடபுலத்தின்



படிப்பகம்

www.padippakam.com

**1967ம் ஆண்டு காங்கேசன்துறையில் இடம்பெற்ற புரட்சிகர வாலிபர் இயக்கத்தின் 5வது வடபிரதேச மாநாட்டை தோழர் சு.வே.சீனிவாசகம் ஆரம்பித்து வைக்கிறார்**






மாநாட்டிற்குப் பின் இடம்பெற்ற பிரமாண்டமான ஊர்வலத்தில் கட்சியின் தலைவர்கள் திறந்த ஜீப் வண்டியில் செல்கின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com

சகல பகுதிகளினதும் தோழர்கள் அங்கம் பெற்றனர். தோழர்கள் சி.கா. செந்திவேல், நா. யோகேந்திரநாதன் ஆகியோர் இணைச் செயலாளர்களாக தெரிவு செய்யப்பட்டனர். தோழர் எம்.ஏ.சி. இக்பால் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். எதிர் வரப்போகும் பரந்த வெகுஜனப் போராட்டங்களின் போது வாலிபர் இயக்கமானது அமைப்பு வாயிலாகவும் செயற்திறன் கொண்டதாகவும் இருப்பதற்கான பொறுப்பை புதிய தலைமை ஏற்று புரட்சிகரமான கடமைக்கு தயாராக்கி நின்றது. கூட்டுத் தலைமை என்பதன் அர்த்தத்தை விளங்கி நடைமுறைப்படுத்த முன் வந்தது. கூட்டான முடிவு எடுத்தலும் அதனை நடைமுறைப்படுத்தும் போது தனிநபர்கள் வகிக்கும் பொறுப்பான பாத்திரம் பற்றியும் விளங்க வைக்கப்பட்டு நடைமுறையாக்கப்பட்டது.

1967ன் முற்கூறிலே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இய்க்கம் தோற்றுவிக்கப்படவில்லை. எனவே கட்சியினது முடிவுகளை தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் பரந்த அமைப்பாக வாலிபர் இயக்கமே இருந்து வந்தது. 1966 ஒக்ரோபர் 21 எழுச்சிக்குப் பின் ஏழு எட்டு மாதங்கள் வரை மிகப் பரந்ததும் குறிப்பானதுமான சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. 1967ம் ஆண்டு மேதினக் கூட்டம் ஊர்வலம் பல ஆயிரக் கணக்கான மக்களைக் கொண்டதாக அமைந்திருந்தது.

1967 மே மாதக் கடைசியில் வாலிபர் இயக்கம் உரும்பிராயில் உள்ள தேனீர்க் கடைகளில் முதலாவது தேனீர்கடைப் பிரவேசத்தை நடாத்தியது. உரும்பிராய் வாலிபர் இயக்கத்தின் தோழர்கள் முன்னணியில் சென்று தேனீர் கடைகளில் தேனீர் வழங்குமாறு கேட்டனர். வெளியே நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் நின்றிருந்தனர். மிகுந்த தயக்கத்தோடு சமத்துவமாக அங்குள்ள கடைகளில் தேனீர் வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் ஓரிரு கடைகளில் ''சுடுநீர் கொதிக்கவில்லை'' என்றும் ''சீனி முடிந்து விட்டது'' எனவும் சாட்டுதல் கூறப்பட்ட போதிலும் திரண்டிருந்த இளைஞர் சக்தியைக் கண்டு போராட்டம் வலுத்து விடும் என்பதை உணர்ந்தும் சமத்துவமாக அங்கு தேனீர் வழங்கப்பட்டது. பிரச்சினைகள் பெரிதாக அங்கு எழவில்லை.

இவ்விடத்திலே பொதுவுடமைக் கட்சியானது வடபுலத்து முஸ்லீம் மக்கள் மத்தியில் தனது அரசியல் வேலை முறையைத்



படிப்பகம்

www.padippakam.com

தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்துள்ளமை பற்றிக் கூறுதல் வேண்டும். தோழர் மு. கார்த்திகேசனுடன் ஆரம்பத்திலேயே தோழர் எம்.ஏ. காதர் இணைந்து ஆரம்ப கட்சி வேலைகளை முன்னெடுத்தார் என்பது ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. அதன் பின் முஸ்லீம் மக்கள் மத்தியில் முக்கியமானவராக ஐம்பதுகளில் கட்சி அணிக்கு வந்தவர் தோழர் சுபைர் இளங்கீரன். சிறந்த எழுத்தாளராகவும் நாவலாசிரியராகவும் திகழ்ந்தவர். அதேவேளை மாக்சிச லெனினிசவாதியாகத் தன்னை மாற்றிக் கொண்டு பொதுவுடமைக் கட்சியில் இணைந்து பல்வேறு நிலைகளிலும் பணி புரிந்தவர். மிகுந்த கஷ்டங்கள் துன்பங்கள் மத்தியிலும் முஸ்லீம் வட்டாரத்தில் கட்சியைக் கட்டியெழுப்ப செயலாற்றியும் போராடியும் வந்தவர். அவருக்கு பல்வேறு வித எதிர்ப்புக்கள் ஏற்பட்ட போதிலும் பின்வாங்காது மாக்சிசம் சோஷலிசம் என்பனவற்றை பொதுவுடமைக் கட்சியின் ஊடாக முன்னெடுத்து பல முஸ்லீம் இளைஞர்களை கட்சி வாலிபர் அணிக்கு கொண்டு வந்தவர். ஆரம்ப காலத்தில் மரகதம் சஞ்சிகையை நடாத்தி முற்போக்கு இலக்கியத்தை அறிமுகப்படுத்தியவர் இளங்கீரன். சிறந்த பேச்சாளராக இருந்தவர். பேராசிரியர் கைலாசபதியுடன் ஆரம்ப நாட்கள் தொடக்கம் அரசியல் இலக்கிய உறவில் நெருக்கமாக இருந்தும் வந்தவர். அவ்வாறே கைலாசபதி இளங்கீரனின் எழுத்துக்களை குறிப்பாக அவரது நாவல் இலக்கியத்தை தனது விமர்சனத்துறையின் ஊடே கோடிட்டுக் காட்டியவர். ஐம்பதுகளில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் வளர்ச்சிக்கு கடும் உழைப்பை நல்கியவர். புதிய புரட்சிகர பொதுவுடமைக் கட்சி உருவாகியதும் அதன் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டு வந்ததுடன் அரசியல் பத்திரிகையான தொழிலாளியின் ஆசிரியராகவும் பணிபுரிந்தவர் இளங்கீரன்.

1964க்குப் பின் முஸ்லீம் வட்டாரத்தில் மாக்சிச லெனினிசக் கட்சி பலம் பெற்று வளர்ந்து நின்றது. தோழர் இளங்கீரனின் வழிகாட்டலின் கீழ் புதிய தலைமுறையினர் வேகத்துடன் அரசியல் வேலைகளை அமைப்பு ரீதியாக முன்னெடுத்தனர். ஆஸாத் வீதியில் கட்சிக்கு செயலகமும் ஒரு வாசிகசாலை- நூல் நிலையம் என்பனவும் இருந்து வந்தன. மதவாதிகள் பிரமிக்கும் அளவுக்கு முஸ்லீம் வட்டாரத்தில் கட்சி அணியும் வெகுஜன ஆதரவும் வளர்ந்திருந்தது. தோழர்கள் எம்.ஏ.சி. இக்பால், காமீத், பெரிய அஸீஸ், ஏ.எம். கமால், சலீம், எஸ்.எச். றசீன், சின்ன அஸீஸ், கன்சூர், சீனி, ரபீக், நிஸார், போன்றவர்கள் குறிப்பிடத்



படிப்பகம்

www.padippakam.com

தக்கவர்களாக இருந்தனர். கட்சியின் பிரச்சாரக் கூட்டங்கள் அரசியல் வகுப்புகள் ஏனைய பகுதிகளில் இடம் பெற்றது போன்றே முஸ்லீம் வட்டாரத்திலும் நடைபெற்று வந்தன. பாலஸ்தீன மக்களது போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வியட்நாம் போரை எதிர்த்து மிகப் பெரும் கூட்டங்களை முஸ்லீம் வட்டாரத்தில் கட்சி வாலிபர் இயக்கம் நடாத்தி வந்துள்ளது. அவ்வாறே முஸ்லீம் தோழர்கள் வடபுலத்தின் சகல இயக்கங்கள் வெகுஜனப் போராட்டங்களில் முஸ்லீம் நிலைப்பாடு என்பதற்கு அப்பால் வர்க்க அரசியல் உணர்வோடு பங்குபற்றி வந்துள்ளமை விஷேடமாகக் குறிப்பிடத்தக்கதாகும். வடபுலத்து கட்சித் தலைமைக் குழுவில் இளங்கீரன், எம்.ஏ.சி. இக்பால் ஆகியோர் இருந்து வந்துள்ளனர்.

1967ம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தின் (ஆடி அமாவாசை தினத்தில்) நடுக்கூறில் சங்கானையில் தேனீர் கடைப் பிரவேசம் இடம் பெற்றது. சில கடைகளில் தேனீர் மறுக்கப்பட்டது. சிலர் தயக்கம் காட்டி பின்பு கொடுத்தனர். ஒரு சிலர் கடையைப் பூட்டிச் சென்றனர். ஒரு கடையில் சிறு கைகலப்பு ஏற்பட்டது. பொலிஸ் தலையிட்டு சமத்துவம் கேட்ட இளைஞர்களைக் கைது செய்தது. இச் சம்பவத்தைத் தொடர்ந்து தேனீர் கடைகளில் சமத்துவம் கேட்டது சரியென்றும் அது வழமையை மீறிய செயல் என்றும் பொதுசன வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்றன. இப்பிரவேச இயக்கத்தில் சங்கானைப் பகுதிகளைச் சேர்ந்த கட்சி வாலிபர் இயக்கத் தோழர்கள் முன்நின்றனர். பொலீஸ் கைது செய்து பொலீஸ் நிலையத்தில் அடைத்து வைத்திருந்த தோழர்களை விடுவிப்பதற்காக தோழர் நா. முத்தையா (Man முத்தையா என மக்களால் அழைக்கப்படுபவர்) பொலீஸ் நிலையம் சென்று விபரத்தைக் கூறி அவ் இளைஞர்களை விடுவிக்கும்படி கோரினார். அங்கு சிறு வாக்குவாதம் ஏற்பட்டது. தோழர் முத்தையா இளமைக் காலத்தில் மலேசியாவில் இருந்தவர். அங்குள்ள பொதுவுடமைக் கட்சியின் போராட்ட நடவடிக்கைகளால் கவரப்பட்டவர். 1947ல் இலங்கைக்கு வந்தபின் பொதுவுடமைக் கட்சியில் இணைந்து துடிப்புடன் செயற்பட்டு வந்தவர். மக்கள் மத்தியில் நன்கு விரும்பப்பட்ட அவர் சங்கானைப் பட்டினசபைக்கு 1958ல் கட்சி சார்பில் தெரிவு செய்யப்பட்டதுடன் அதன் தலைவராகவும் பணியாற்றியவர். அநீதிக்கும் அடக்கு முறைகளுக்கும் அடிபணியாத போர்க்குணம் மிக்கவர். தேனீர் சமத்துவமாகக் கொடுப்பதற்கு மறுத்தவர்களின் உறவினர். இருந்தும் உறவு நிலைக்கு அப்பால்



படிப்பகம்

கட்சி, கொள்கை, நீதி, நியாயம், போராட்டம் என்பதன் பக்கத்தில் ஒரு பொதுவுடமைவாதியாக நின்றதினால் உறவினர்களின் கடும் எதிர்ப்பை அவர் சந்திக்க வேண்டியதாயிற்று.

மேற்படி தேனீர் கடைப் பிரவேசம் பெரும் பிரச்சினையாக உருவெடுத்தது. அதனைப் பொறுக்க மாட்டாத உயர்சாதி வெறியர்கள் அன்றைய இரவில் திடீரென சங்கானை நிச்சாமம் கிராமத்தின் மீது தாக்குதல் தொடுத்தனர். வீடுகள் எரிக்கப்பட்டு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. சின்னர் கார்த்திகேசு என்பவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி கொல்லப்பட்டார். பலர் காயங்கள் அடைந்தனர். மக்கள் இத்தாக்குதலை முற்றிலும் எதிர்பார்த்திருக்கவில்லை. இருப்பினும் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளில் இறங்கி மேலும் உயிர்ச் சேதம் ஏற்படாதவாறு தவிர்க்கப்பட்டது. ஒக்ரோபர் 21 எழுச்சியின் முதலாவது போராட்டத் தியாகியாக சின்னர் கார்த்திகேசு அமைந்தார். அவர் ஒக்ரோபர் 21 எழுச்சி ஊர்வலத்தில் கலந்து கொண்ட ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத் தாக்குதலைத் தொடர்ந்து உரிமையும் சமத்துவமும் வேண்டிநின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு புறமாகவும் அவர்களோடு பொதுவுடமைக் கட்சியும் அணிவகுத்து நின்றது. மறுபுறத்தில் உயர்சாதி வெறியர்களும் ஆதிக்க சக்திகளும் அவர்களோடு பொலீசும் இணைந்து நின்றது. போராட்டம் உக்கிரமாகிக் கொண்டது. தோழர் முத்தையாவின் வீடு தாக்கப்பட்டதுடன் அவர் கைது செய்யப்பட்டு சங்கானைப் பொலீஸ் நிலையத்தில் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டார். இதனை சாதி வெறியும் பிற்போக்குத் தனமும் கொண்ட சார்ஜன்ட் தாமோதரம்பிள்ளை என்ற பொலீஸ் இடைநிலை அதிகாரியே முன்னின்று செய்தார். தோழர் முத்தையாவின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்ட சூழலில் அவர் குடும்பமாக ஊரைவிட்டு வெளியேறி பாதுகாப்பான இடத்தில் இருக்க வேண்டியதாயிற்று. இவருடன் பி. கதிரேசு, வ. நாகலிங்கம் ஆகியோரும் தாக்கப்பட்டு பொலீஸ் நிலையத்தில் அடைக்கப்பட்டு பின் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இப்போராட்டத்தில் நிச்சாமம் கிராமம் மையப்பகுதியாக விளங்கியது. ஏனைய கிராமங்கள் பூரண ஆதரவும் பங்குபற்றலும் வழங்கி நின்றன. மக்கள் போராட்டத்தில் ஐக்கியப்பட்டிருந்தனர்.

''ஆற்றல் மிகு கரங்களிலே ஆயுதங்கள் ஏந்துவதே மாற்றத்திற்கான வழி மாற்றுவழி ஏதுமில்லை'' என்பதற்கிணங்க அடிக்கு அடிகொடுக்கும் போராட்டமாகச் சங்கானைப் போராட்டம் முன் சென்றது. பொதுவுடமைக் கட்சியானது புரட்சிகர மார்க்கத்தில் வழிகாட்டி நின்றது. வடபுலத்தில் சாதிய ஒடுக்குமுறைக்கு ஆளாகி நின்ற ஒவ்வொருவரையும் சங்கானைப் போராட்டம் சிந்திக்கவும் உத்வேகம் கொள்ளவும் வழி காட்டியது. தாக்குதல் எதிர்த்தாக்குதல் என்ற விதமான செய்திகள் நாளிதழ்களில் வெளிவரத் தொடங்கின. சமரசம் பேசியோரும் பொலீஸ் அடக்குமுறையை ஏவிப் பணிய வைக்க முனைந்தோரும் போராட்டத்தின்முன் நின்று பிடிக்க முடியவில்லை. ஒக்ரோபர் 21 எழுச்சி காட்டிய புரட்சிகரப் பாதையில் போராட்டம் தொடரவும் விரிவு பெறவும் செய்தது.

இந்நிலையிலேயே மேற்படி போராட்டத்தை விரிவுபடுத்தி வடபுலம் முழுவதும் முன்னெடுப்பது பற்றிய கொள்கையும் நடைமுறைத் தந்திரோபாயமும் கட்சியால் வகுக்கப்பட்டது. சாதிய ஒடுக்குமுறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டம் உயர் சாதியினர் எனப்படும் அனைவருக்கும் எதிரான போராட்டம் அல்ல. சாதி ஆதிக்கமும் சாதிய வெறிபிடித்தவர்களுக்கும் எதிரான போராட்டமாகும். ஆதலால் நீதியும் நியாயமும் கொண்ட ஜனநாயகப் போராட்டமாக முன்னெடுக்கப்படுவதற்கு ஐக்கியப் படுத்தக்கூடிய சகல சக்திகளையும் வென்றெடுப்பது அவசியம் என்ற நிலையை கட்சி முடிவாக்கியது. சாதியொடுக்குமுறைக்கும், தீண்டாமைக்கும் எதிரான போராட்டத்தில் எதிரி யார்? நண்பர் யார்? என்று தீர்மானிப்பதில் கட்சி தெளிவான ஓர் மார்க்கத்தைக் காட்டியது. அத்துடன் போராட்டத் தந்திரோபாயத்தையும் வகுத்துக் கொண்டது. கடும் பிற்போக்காளர்களும் சாதி ஆதிக்க வெறியர்களும் மட்டுமே எதிரிகள் என்றும் ஏனைய சக்திகள் போராட்டத்தின் பக்கம் வென்றெடுக்கப்பட வேண்டியவர்கள் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கட்சி எடுத்துக் கொண்ட போராட்ட மார்க்கத்திற்கு சகல சக்திகளையும் ஐக்கியப்படுத்தி வென்றெடுப்பதற்கு தகுந்த ஓர் அமைப்பு தேவைப்பட்டது. அவ்வாறான அமைப்பு முன்னைய சாதிய சங்கங்கள் போன்று அன்றி சாதிய தீண்டாமையை எதிர்த்து நிற்கும் ஒவ்வொருவரையும் இணைத்து அணிதிரட்டி போராட்டத்தை முன்னெடுக்கும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதே அதன்

www.padippakam.com

அடிப்படையாக இருந்தது. இக்கொள்கையை வரையறை செய்வதில் தோழர்கள் மு. கார்த்திகேசன், கே.ஏ. சுப்பிரமணியம், வீ.ஏ. கந்தசாமி, டாக்டர் சு.வே. சீனிவாசகம், கே. டானியல், எம். குமாரசுவாமி, இ.கா. சூடாமணி, வ.சின்னதம்பி, எம். செல்லத்தம்பி போன்றோர் முக்கிய பங்கு வகித்தனர்.

## 18 தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்

மாக்சிச லெனினிச பொதுவுடமைக் கட்சியானது தான் வகுத்துக்கொண்ட புரட்சிகரப் போராட்ட மார்க்கத்திற்கு அமைய சாதிய தீண்டாமையை எதிர்த்த போராட்டங்களை முன்னெடுப்பதற்கு பரந்த அமைப்பாக தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தை தோற்றுவிப்பது எனத் தீர்மானித்துக் கொண்டது. ஒக்ரோபர் 21 எழுச்சியின் முதலாவது வருட தினத்தன்று 1967ம் ஆண்டு ஒக்ரோபர் 21ம் திகதி யாழ் நகர மண்டபத்தில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் முதலாவது மாநாடு சங்கானைப் போராட்டத்தின் முதல் தியாகியாகிய சின்னர் கார்த்திகேசு அரங்கில் நடைபெற்றது. இம்மாநாட்டின் தலைமைக் குழுவில் தோழர்கள் எஸ்.ரி.என். நாகரட்ணம், மான். நா. முத்தையா, கே. டானியல், டாக்டர் சு.வே. சீனிவாசகம் ஆகியோர் இருந்தனர். தோழர்கள் கே.ஏ. சுப்பிரமணியம், வீ.ஏ. கந்தசாமி ஆகியோர் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பரந்துபட்ட நோக்கங்கள் பற்றிய கருத்துக்களை எழுத்திலும் பேச்சிலும் முன் வைத்தனர்.

இம் மாநாட்டில் வடபுலத்தின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் பெண்கள் உட்பட பெருந்தொகையான பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். மாநாடு பொதுச்சபை ஒன்றைத் தெரிவு செய்து கொண்டது. தோழர் எஸ்.ரி.என். நாகரட்ணம் தலைவராகவும் தோழர்கள் வெ.சின்னையா, (மட்டுவில்) சி. கணேசன் (அல்வாய்) ஆகியோர் இணைச் செயலாளர்களாகவும் தோழர் கே. டானியல் அமைப்பாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

மேற்படி மாநாட்டைத் தொடர்ந்து தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஆலய தேனீர் கடைப்பிரவேச இயக்கத்தை



படிப்பகம்

www.padippakam.com

வடபுலத்தின் சகல பகுதிகளிலும் முன்னெடுக்கும் வேண்டுகோளை முன்வைத்தது. ‘‘ஆலய-தேனீர் கடைகள் திறக்கட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்’’ என்பது அன்றைய முழக்கமாக அமைந்திருந்தது. இப்போராட்ட முழக்கமானது ஏற்கனவே இடம்பெற்று வந்த சங்கானைப் போராட்டத்தின் புரட்சிகர அமைப்போடு இணைந்து வடபுலத்தின் சகல பகுதிகளிலும் சங்கநாதமாக எதிரொலித்தது. சாதிமான்களும் ஆதிக்க அரசியல் சக்திகளும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும் அவர்களது பொலீஸ்படையும் ஒருபுறமாக அணிவகுத்து நின்றனர். மறுபுறத்தில் ஆண்டாண்டு காலமாக சாதிய தீண்டாமை ஒடுக்குமுறையால் அடக்கப்பட்டு வந்த தாழ்த்தப்பட்ட மக்களும் பொதுவுடமைக் கட்சியும் நல்லெண்ணம் கொண்ட ஜனநாயக சக்திகளும் போராட்ட சக்தியாக அணிதிரண்டு நின்றனர்.

பொதுவுடமைக் கட்சியின் வழிகாட்டலில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வந்த போராட்டங்களைத் திசை திருப்பவும் குழப்பத்திற்கு உள்ளாக்கவும் பல்வேறு சக்திகள் முயன்று வந்தன. இதில் பாராளுமன்றப் பொதுவுடமைக் கட்சியும் அதனோடு நின்ற சிறுபான்மைத் தமிழர் மகாசபையும் முன்னின்று செயல்பட்டு வந்தமை மறைப்பதற்குரியதொன்றல்ல. இவர்கள் போராட்டங்கள் இடம் பெற்ற ஒவ்வொரு பகுதிகளிலும் ஏதாவது வகையில் எதிரிகளுக்கு உதவும் வழிமுறைகளையும் போராட்டங்களைச் சீர்குலைக்கும் செயல்களிலும் ஈடுபட்டு வந்தனர். சில சந்தர்ப்பங்களில் காட்டிக் கொடுப்பு முயற்சிகளிலும் இறங்கி நின்றனர். இருப்பினும் மக்கள் இவற்றையெல்லாம் முறியடித்து தமது போராட்ட மார்க்கத்தில் முன்னேறிச் சென்றனர்.

தோழர் எஸ்.ரி.என். நாகரட்ணம் வெகுஜன இயக்கத்தின் நோக்கிற்கும் போக்கிற்கும் ஏற்றவாறான தலைமைத்துவத்தை வழங்குவதில் மிக வல்லவராக விளங்கினார். அவர் போராட்டக் காலங்களில் மக்களோடு நின்று செயல்படுவதிலும் அதேபோன்று பேச்சுவார்த்தைகள் மாநாடுகளில் மக்களது உரிமைகளை விட்டுக்கொடுக்காது பேணி நிற்பதிலும் உறுதியான நிலைப்பாட்டை வகித்து நின்றார். அவர் கட்சியின் தலைமைத்துவத்துடன் கலந்து பேசி சரியான முடிவுகளை நடைமுறைப்படுத்துவதில் கட்சியின் வழிகாட்டலை உறுதியாகப் பற்றி நின்றார்.



படிப்பகம்

www.padippakam.com

தோழர் எஸ்.ரி.என். நாகரட்ணம் சுன்னாகத்தைச் சேர்ந்தவர். நடுத்தர வர்க்க நிலையில் இருந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது பெற்றோர் வியாபாரத்தின் மூலம் வசதியானவர்களாக விளங்கினர். இருப்பினும் சாதிய தீண்டாமை காரணமாக அடக்கப்பட்டு அடிநிலையில் தாழ்த்தி வைக்கப்பட்ட சமூகத்திலிருந்து வந்தவர்கள். இத்தகைய பின்னணியில் தோழர் எஸ்.ரி.என். கல்விகற்கும் காலத்திலிருந்தே சாதியத்திற்கு எதிரான வன்மத்துடன் வளர்ந்தவர். நடுநிலைக் கல்வியை முடித்துக்கொண்டு வியாபாரத்தில் ஈடுபட்டவர். அவரது வசதி வாய்ப்பிற்கு ஏற்றவாறு தானும் தன் குடும்பம் என்று வாழ்ந்திருக்க முடியும். ஆனால் அவர் அவ்வாறு இன்றி சாதிய தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவதில் முன் நின்றார். அவர் பொதுவுடமைக் கட்சியுடன் மிக நெருக்கமானவராகி நின்றார். வ. பொன்னம்பலம் கே.ஏ. சுப்பிரமணியம் இருவரும் அவரது நெருங்கிய பொதுவுடமைக் கட்சித் தோழர்களாக விளங்கினர். தோழர் எஸ்.ரி.என். நாகரத்தினத்தை சோவியத் யூனியன் சென்ற தூதுக்குழுவில் ஒரு உறுப்பினராக, ஏற்கனவே கட்சி அனுப்பி வைத்தது. கட்சிப் பிளவின்போது சிறிதுகாலம் நடுநிலையானவராக இருந்து வந்தார். இருப்பினும் அவரால் அதிககாலம் அப்படி இருக்க முடியவில்லை. 1966 ஒக்ரோபர் 21 எழுச்சி ஊர்வலத்தில் கலந்துகொண்டு பொலிஸ் குண்டாந்தடி அடிக்கு உள்ளாகி போராட்ட அணியில் முன் நிற்பவராகிக் கொண்டார்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் 1968ம் ஆண்டில் வடபுலத்து புகழ்பெற்ற இரண்டு ஆலயங்களில் ஆலயப் பிரவேசத்திற்கான கோரிக்கையை முன் வைத்தது. ஒன்று மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில். மற்றையது மட்டுவில் பன்றி தலைச்சி அம்மன் கோவில். முன்னையது காங்கேசன்துறைத் தொகுதியிலும் பின்னையது சாவகச்சேரித் தொகுதியிலும் அமைந்திருந்தது. இவ்விரு கோவில்களிலும் ஆலயப் பிரவேசப் போராட்டம் மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தன. மேற்படி இரு தொகுதிகளில் தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகமும், வி.என். நவரத்தினமும் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தும் அப் போராட்டம் பற்றி கண்டும் காணாதவர்களாகவே இருந்தனர். மறந்தும் அப் போராட்டங்களுக்கு ஒரு சொல் தானும் அவர்கள் ஆதரவு தெரிவிக்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த திருவிழா ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்கள் முன்பாகவே காங்கேசன்துறைப் பகுதியில் இருந்து ஆலய நிர்வாகத்திற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் சார்பாக விடுக்கப்பட்டது. பூ. சின்னராசா, வ. சிதம்பரி, ஆ. கந்தையா ஆகியோர் அப்பிரதேச வெகுஜன இயக்கம் சார்பாக மக்களின் ஆலயப் பிரவேச விருப்பத்தைத் தெரிவித்தனர். பத்திரிகைகளில் வெளிப்படுத்தியதுடன் அரசாங்க அதிபர், பொலிஸ் அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் அனுப்பி வைத்தனர். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் இவ் ஆலயப் பிரவேச இயக்கத்தின் தேவைகளையும் உரிமைக் கோரிக்கையின் நியாயங்களையும் விளக்கி துண்டுப்பிரசுரங்களையும் சுவரொட்டிகளையும் வெளியிட்டது. ''மாவைக்கந்தன் ஆலயத்தில் மக்கள் சமத்துவம் கோருகிறார்கள்'' என்பது அன்றைய ஒரு முக்கிய முழக்கமாக அமைந்திருந்தது.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் மேற்படி இரண்டு ஆலயங்களையும் தமது ஆலயப் பிரவேசத்திற்கான மையங்களாக தேர்ந்தெடுத்தமைக்கு கொள்கை போராட்டத் தந்திரோபாயம் என்பவை அடிப்படைக் காரணங்களாக அமைந்திருந்தன. ஒன்று பிரசித்தி பெற்ற பெரும் ஆலயங்களில் ஆலயப் பிரவேச இயக்கம் வெற்றிபெற்றால் ஏனைய ஆலயங்கள் இலகுவாகவே தாழ்த்தப்பட்ட மக்களின் சமத்துவத்திற்குத் திறந்துவிடப்படும். இரண்டாவது சிறிய ஆலயங்களில் போராட்டம் நடாத்தி ஆலயப் பிரவேச இயக்கத்திற்கும் தீண்டாமை எதிர்ப்புக்கும் ஆதரவு தரக்கூடிய நடுநிலை சக்திகளை அந்நியப்படுத்திக் கொள்ளக்கூடாது. மூன்று, நிலவுடமை ஆதிக்க சாதிய சக்திகள் இப் பிரசித்தி பெற்ற ஆலயங்களைச் சுற்றியே அணிதிரண்டு நின்ற காரணத்தால் போராட்டத்தின் குவி மையம் அவ் ஆலயங்களாகவே இருக்க வேண்டும் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வடபுலத்தில் உள்ள வரலாற்றுப் புகழ் கூறப்படும் ஒரு கோவில் மட்டுமன்றி ஒரே ஒரு பிராமணர் ஆதிக்கத்தால் வழிநடத்தப்படும் ஒன்றுமாகும். மாவை ஆதீனத்தின் கோவிலும் நிலபுலச் சொத்துக்களும் துரைசாமிக் குருக்கள் குடும்பத்தினருக்கு உரியதாகவே இருந்து வந்தது. இப் பிராமண குடும்பத்தின் ஆதிக்க செயற்பாடு மாவிட்டபுரத்தை சுற்றியுள்ள கொல்லங்கட்டி, காங்கேசன்துறை, மயிலிட்டி,



படிப்பகம்

www.padippakam.com

வீமன்காமம், தெல்லிப்பழை போன்ற பகுதிகளில் பரவி செல்வாக்கு செலுத்தி நின்றது. இங்கே பிராமண-உயர் வேளாள கூட்டிணைவு நெருக்கமாகக் காணப்பட்டது. அதனை இவ் ஆலயப் பிரவேசத்தின்போது காண இயலுமாயிற்று.

இம்மாவை ஆதீனத்தைச் சேர்ந்தோர் அரசியல் ரீதியில் தமிழரசுக் கட்சியையும் கிறிஸ்தவராக இருந்த போதிலும் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தையும் ஆதரித்து நின்றனர். அதன் காரணமாகவே ''மாவைக் கந்தனின் சேவல் கொடி பறந்துகொண்டிருந்த உயர் கோபுரத்தில் செல்வநாயகத்தின் ஆவல் கொடியான தமிழரசுக் கட்சியின் மூவர்ண கொடி பறந்தது'' எனக் கிண்டலாகக் கூறப்பட்டது. மதம் வேறு அரசியல் வேறு என்போருக்கு இக்கொடி பறப்பானது மறைந்துள்ள உண்மையை உணர்த்தியது.

இத்தகைய மாவை ஆலயத்தில் ஆலயப் பிரவேசத்திற்கான கோரிக்கையை தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் முன்வைத்தபோது மாவை ஆதீனம் மட்டுமன்றி வடபுலத்து பழமைவாத சாதிய ஆதிக்க மேட்டுக்குடியினர் அதிர்ந்து போயினர். மேற்படி கோரிக்கையை ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை வருடாந்த திருவிழாவை பாரம்பரியம் போன்று தாழ்த்தப்பட்டோரை உள்ளே அனுமதிக்காது நடத்தப் போவதாகவும் சூளுரைத்து நின்றனர். வைதீக ஆகமங்கள் அதன்வழிப்பட்ட கிரிகைகள் நடைமுறைகள் மீறப்படக்கூடாது என்று பழமைப் பேசிக் கொண்டனர். மாவை ஆதீனம் திமிர்த்தனமாக எதிர் அறிக்கைகள் விட்டுக்கொண்டது. புனிதம், கோவில் விதிகள், நடைமுறைகள் காப்பாற்றப்பட வேண்டும் என்றும் கண்ட கண்ட சாதிகள் கோவிலுக்குள் செல்வது மகா பாவச் செயல் என்றும் நியாயங்கள் கூறினர்.

இம் மாவை ஆதீனத்திற்கு கை கொடுத்து பிராமண-வேளாளக் கூட்டை உறுதிப்படுத்துவதற்கு இருவர் முன்வந்தனர். ஒருவர் கணித மேதை, கல்வியாளர், அடங்காத்தமிழர், தமிழர்களுக்கு தனிநாடு கேட்டவர் என்றெல்லாம் புகழ்சூட்டப்பட்ட ஸி. சுந்தரலிங்கம். இவர் வவுனியாவின் பாராளுமன்றப் பிரதிநிதியாக இருந்து தமிழன் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் எனச் சலசலப்புக் காட்டி நின்றவர். சொத்துடைமையும் கல்வி வசதியும் பெற்ற நல்ல உடற்கட்டும் உயரமும் கொண்ட இவர் நிறத்தால்



படிப்பகம்

www.padippakam.com

கருமையானவர். அதனால் இவரைப் பற்றி ஒரு சுவாரஸ்யமான சம்பவம் கூறப்படுகின்றது. சுந்தரலிங்கம் ஒரு முறை இந்தியா சென்றிருந்தவேளை தமிழ் நாட்டின் பிரசித்த பெற்ற சைவ ஆலயம் ஒன்றிற்கு வழிபடச் சென்றிருந்தாராம். ஆனால் இவரை அவ் ஆலய நிர்வாகம் கோவிலுக்குள் சென்று வழிபட அனுமதிக்கவில்லை. காரணம் அவர் ஒரு ''ஆதித் திராவிடர்'' என்று அவரது நிறத்தையும் உருவத்தையும் வைத்து கணித்து விட்டமையாகும். அதனால் வெளியில் நின்று தரிசித்துவிட்டே திரும்பினாராம்.

இத்தகைய ஸி. சுந்தரலிங்கம் மாவை ஆதீனத்திற்கு உதவ முன் வந்தார். துரைசாமிக் குருக்களுடன் இணைந்து நின்று ஆலயப் பிரவேசத்தைத் தடுத்து நிறுத்துவேன் என்று சபதமேற்று நின்றார். தோழர் சண் ஒருமுறை கூட்டத்தில் பேசும்போது ''எப்போதும் தோல்வியடையும் பக்கத்தில் நின்று வந்த சுந்தரலிங்கம் இத்தடவையும் தோல்வியில் முடிவடையப் போகும் பக்கத்தில் தான் கச்சையை இழுத்துக் கட்டி நிற்கிறார்'' என்று கூறியிருந்தார். இறுதியில் சுந்தரலிங்கம் மாவைக் கோவிலின் ஆலயப் பிரவேச இயக்கத்தின் முன்னால் தோல்வி கண்டார் என்பது வரலாற்றால் நிரூபிக்கப்பட்டது.

அடுத்த ஒரு நபர்தான் சுன்னாகத்தைச் சேர்ந்த பிரபல குடாநாட்டு வர்த்தக நிறுவனத்தின் சொந்தக்காரனான சிவலிங்கம் என்பார். அவர் சைவ அனுட்டான சபை என்ற அமைப்பின் மூலமாக ஆலயப் பிரவேசத்திற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தி நின்றவர். அடிக்கடி அறிக்கைகளும் துண்டுப் பிரசுரங்களும் வெளியிட்டு ஆலயப் பிரவேசத்தை எதிர்த்து பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வந்தவர். தாழ்த்தப்பட்ட மக்கள் கோவிலுக்குள் சென்று வழிபட சைவ ஆகம விதிகளில் இடமில்லை என்பதைப் பகிரங்கமாகவே பிரசுரங்கள் மூலம் வெளிப்படுத்திக் கொண்டவர்.

இவ் இரு கனவான்களும் சைவவேளாள மேட்டுக்குடி சாதி ஆதிக்கத்தினதும் சாதி வெறியினதும் பிரதிநிதிகளாகவும் வகை மாதிரியாகவும் அன்று விளங்கினர். இவர்கள் மாவை ஆதீனத்தில் பிராமணியத்தின் பாதுகாவலர்களாகவும் நின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

அதேவேளை தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் தாழ்த்தப்பட்ட மக்களை மட்டுமன்றி உயர் சாதியினர் எனப்பட்டவர்களிடையிருந்த ஜனநாயக முற்போக்கு சக்திகளை தம்முடன் ஐக்கியப்படுத்தி நின்றே ஆலயப் பிரவேச இயக்கத்தை முன்னெடுத்தது.

மாவிட்டபுரம் ஆலயத்தில் வருடாந்த திருவிழாவின்போது முன்னெடுக்கப்பட்ட ஆலயப் பிரவேசப் போராட்டத்தினால் கோவில் திருவிழா நடைபெற முடியாது தடைப்பட்டது. நாகரிகமான வழிகளில் ஆலயப் பிரவேசம் செய்யச்சென்ற மக்கள் மீது அடாவடித்தனங்கள் புரியப்பட்டன. தடைகள் போட்டும், முன் மண்டபத்தில் நிற்க விடாது தடுத்தும், தண்ணீர் இறைத்துச் சேறாக்கியும், தீப்பந்தத்தால் சுட்டும் கேவலங்கள் புரிந்தனர். இதற்கென சாதிவெறிக் குண்டர்கள் திரட்டி வைக்கப்பட்டனர். இவற்றுக்கெல்லாம் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சியின் பொலிஸ் படை ஆதரவு கொடுத்து நின்றது. அரசாங்க அதிபர், பொலிஸ் அதிபர் என்போர் அடிக்கடி மாநாடுகள் நடாத்தி போராட்டத்தைக் கைவிடச் செய்ய முயன்றனரே தவிர கதவுகளைத் திறந்து சமத்துவம் நிலவச் செய்ய முடியவில்லை. 1970ம் ஆண்டின் போது போராட்டம் உச்ச நிலையை அடைந்தது. ஆயிரக்கணக்கில் மாவை ஆலயம் முன்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைமையில் அணித்திரண்டு நின்றனர். தோழர் எஸ்.ரி.என். நாகரட்ணம் தலைமையில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைமைக்குழு போராட்டத்தை வழிநடாத்தி நின்றது. பொதுவுடமைக் கட்சியின் தலைமை காங்கேசன்துறையில் முகாமிட்டு உடனுக்குடன் ஆலோசனைகளையும் வழிகாட்டுதல் களையும் வழங்கி வந்தது. இறுதியில் கைகலப்பும் தாக்குதல்களும் இடம் பெற்றன. பொலீஸ் பக்கச்சார்பாக நின்று கொண்டது. எஸ்.ரி.என். மயிரிழையில் உயிர் தப்ப வைக்கப்பட்டார். வெகுஜன இயக்கப் போராளிகள் களத்தில் சாதி வெறியர்களுடன் தீரத்துடன் போராடி தலைமைத் தோழர்களைப் பாதுகாத்தனர். இச் சந்தர்ப்பத்தில் சங்கானைப் பசுபதி, நெல்லியடி மறைந்த தோழர் கு. சிவராசா மற்றும் தோழர்கள் நினைவு கூரத்தக்கவர்கள். இப்போராட்ட உச்ச நிலையிலேயே ஆலயத்தின் தேர் திடீரெனத் தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. அதற்கு தீ மூட்டியவர்கள் யார் என்பது இறுதிவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் தோழர் எஸ்.ரி.என். நாகரத்தினத்தின் மீதும் வேறு ஒரு தோழர் மேலும் வழக்கு



படிப்பகம்

www.padippakam.com

தாக்கலாகி நீண்ட விசாரணைக்குப்பின் அவர்கள் நிரபராதிகள் என விடுவிக்கப்பட்டனர். அதேவேளை கோவிலுக்குள் செல்வதைத் தடுத்ததாகச் சுந்தரலிங்கத்தின் மீது தொடுக்கப்பட்ட வழக்கில் தடுத்தது தவறு எனக்கூறி மல்லாகம் நீதிமன்றம் குற்றவாளியாகக் கண்டது. இதனை எதிர்த்து லண்டன் பிரிவு கவுன்சில் நீதிமன்றம் வரை சுந்தரலிங்கம் சென்றார். ஆனால் அங்கும் அவர் மீதான குற்றவாளித் தீர்ப்பு சரியானது என்றே உறுதிப்படுத்தப்பட்டது.

இறுதியில் மாவிட்டபுரம் பிரசித்திபெற்ற கந்தசாமி கோவில் கதவுகள் சமத்துவமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்துவிடப்பட்டது. பொதுவுடமைக் கட்சியின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்ட தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் போராட்டம் பல்வேறு நிலைகளிலும் கடுமையான கட்டங்களைத் தாண்டி இறுதி வெற்றியை அடைந்து கொண்டது. தாழ்த்தப்பட்ட மக்கள் தமது ஒடுக்குமுறைக்கு உள்ளான வரலாற்றில் சமத்துவத்திற்கான புதிய வெற்றி ஒன்றினை வென்றெடுத்துக் கொண்டனர். இந்த வெற்றி பாராளுமன்றச் சட்டத்தாலோ அல்லது தாழ்த்தப்பட்ட ஒருவரது பாராளுமன்ற நியமனத்தாலோ இடம்பெற்ற ஒன்றல்ல என்பது நோக்கப்பட வேண்டியதாகும்.

அவ்வாறே மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவிலிலும் இரண்டு வருட உற்சவத்தின் போது போராட்டங்கள் இடம் பெற்றன. வெகுஜனப் போராட்டமாக ஆண்கள் பெண்கள் அணிதிரண்ட அப்போராட்டம் இறுதியில் கைக்குண்டுத் தாக்குதல்களில் முடிவடைந்தது. இப் போராட்டத்தில் முன்னணி வகித்த தோழர்கள் வெ. சின்னையா, கே. சுப்பையா, ஆகியோர் வழக்குகளை எதிர்நோக்கினர். கைக்குண்டு வீசியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு செல்லக்கிளி என்ற வெகுஜன இயக்கப் பெண் போராளி பொலிசாரால் தேடப்பட்டு இறுதியில் நீதிமன்றில் வெளிப்பட்டு வழக்கை எதிர் நோக்கினார். இறுதியாக அக்கோவிலும் சமத்துவமாகத் திறந்துவிடப்பட்டது. இப்போராட்டத்தில் மட்டுவில் மானாவளை கிராம மக்கள் கட்சியின் தலைமையில் ஐக்கியப்பட்டு நின்றனர். பல தோழர்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இப் போராட்டங்களின் எதிரொலிகள் வடபுலம் எங்கும் எதிரொலித்தன. தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயம், வடமாராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயம் என்பனவும் திறந்து



படிப்பகம்

www.padippakam.com

விடப்பட்டன. இதன் மூலம் வடபுலத்தின் வேறு முக்கிய கோவில்கள் அவ்வப்பகுதி தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்துவிடப்பட்டன.

இதே காலப்பகுதியில் சங்கானைத் தேனீர்க்கடைப் பிரவேசப் போராட்டத்தைத் தொடர்ந்து சாவகச்சேரி, கொடிகாமம், நெல்லியடி, அச்சுவேலி, மருதனாமடம், உடும்பிராய், கோப்பாய், பருத்தித்துறை போன்ற சிறு நகரங்களில் தேனீர்க் கடைப் பிரவேசப் போராட்டங்கள் இடம் பெற்றன. இவற்றில் எல்லாம் பொதுவுடமைக் கட்சியின் உறுப்பினர்கள், வாலிபர் இயக்கத்தவர்கள், ஆதரவாளர்கள் மிகவும் வீரதீரத்துடன் சாதிவெறியர்களையும் பிற்போக்கு சக்திகளையும் எதிர்த்து நின்று போராடினர். அரசு யந்திரமான பொலிசுடன் அடிக்கடி மோதலில் ஈடுபட வேண்டியதாயிற்று. ஆனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அடிபணிந்து செல்லவோ, சமரசம் செய்துகொண்டு போராட்டத்தை விட்டுக்கொடுக்கவோ இல்லை என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய அம்சமாகும்.

சங்கானை, மந்துவில், அச்சுவேலி, கரவெட்டி-கன்பொல்லை போன்ற பகுதிகளில் இடம்பெற்ற போராட்டங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆயுதம் ஏந்தி நின்றனர். சாதிய வெறியர்களுக்கு எதிரான போராட்டத்தில் சின்னர் கார்த்திகேசு (சங்கானை), இரத்தினம் (மந்துவில்), வைத்தி (சண்டிலிப்பாய்), வன்னியன் குமரேசு (சங்கானை), கி. வேலும் மயிலும் (கன்பொல்லை-கரவெட்டி), மா. சீவரட்ணம் (கன்பொல்லை), க. செல்வராசா (கன்பொல்லை), மு. கந்தவனம் (கரவெட்டி கிழக்கு), ச. அரியரட்ணம் (அச்சுவேலி), க. நல்லப்பு (சங்கானை), வெ. அண்ணாச்சாமி (புன்னாலைக் கட்டுவன்), த. இராஜசேகரம் (புன்னாலைக் கட்டுவன்) ஆகிய வெகுஜன இயக்கப் போராளிகள் தமது உயிர்களைத் தியாகம் செய்து கொண்டனர். பலர் படுகாயங்கள் அடைந்து நின்றனர். சிறைச் சித்திரவதைகள் இடம் பெற்றன. இவற்றுக்கெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள் பக்கத்தில் நின்ற ஒரே ஒரு கட்சி மாக்சிச லெனினிசப் பொதுவுடமைக் கட்சி மட்டுமேயாகும்.

இச்சந்தர்ப்பத்திலே வடமராட்சியில் முன்னெடுக்கப்பட்ட நெல்லியடி தேனீர் கடைப்பிரவேசப் போராட்டம் பற்றி குறிப்பிடுவது அவசியம். அதில் முன்நின்ற கிராமம் கரவெட்டி-கன்பொல்லைக் கிராமமாகும். விட்டுக்கொடுக்காது போராடி நின்ற அக்கிராமத்தில் ஒரே நேரத்தில் மூன்று போராளிகள் தியாகிகளாகிக் கொள்ளும்



படிப்பகம்

www.padippakam.com

அளவுக்கு போராட்டம் உக்கிரமானதாகக் காணப்பட்டது. அப் போராட்டம் புரட்சிகரமானதாகத் திகழ்ந்த அதேவேளை அதற்கு உறுதியும் பலமும் சேர்க்கும் வகையில் நெல்லியடிப் பிரதேசத்தின் மக்களும் இளைஞர்களும் போராட்டத்தின் பக்கம் உறுதியாக நின்று வந்தனர். அவர்கள் உயர் சாதியினர் என்று கூறப்பட்ட போதிலும் அங்கு கட்சியும் வாலிபர் இயக்கமும் பலமான அமைப்புக்களாக விளங்கின. அத்துடன் வடமராட்சியின் ஏனைய பகுதிகளான கரவெட்டி கிழக்கு-மேற்கு, பருத்தித்துறை, அல்வாய், பொலிகண்டி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, கம்பர்மலை, தொண்டமானாறு கிராமங்களில் காணப்பட்ட கட்சிப் பலமும் வர்க்க உணர்வும் கன்பொல்லை போராட்டத்தை முன்னோக்கிச் செல்ல வைத்தது. இவ்வேளை அப்போராட்டத்தில் முன்னின்ற மறைந்த தோழர்களான நா. சிவராசா, கு. சிவராசா, கி. சிவஞானம், எஸ். சண்முகநாதன் போன்றவர்களை நினைவு கூர்ந்து கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறே கன்பொல்லையில் கி. வேலும்மயிலும், மா. சீவரட்ணம், க. செல்வராசா ஆகியோர் தியாகிகளாகினர். மு. கந்தவனம் கரவெட்டி கிழக்கில் தியாகியானார். வடமராட்சியின் உறுதிமிக்க கட்சி அணி இப்போராட்டத்தின் அச்சாணியாக விளங்கியது.

வடபுலத்து தேனீர்க்கடைகள், உணவகங்கள், ஆலயங்களில் அன்றுவரை காணப்பட்டு வந்த இரட்டைத் தமிழர்கள் என்ற நிலை இப்புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களால்தான் அற்றுப்போனதே தவிர தமிழரசுக் கட்சியின் அகிம்சைப் போராட்டங்களாலோ அன்றி பாராளுமன்றப் பாதையாலோ அல்லவென்பது நோக்குதற்குரியதாகும்.

இவ்வாறான ஆலய தேனீர்க்கடைப் பிரவேசப் போராட்டங்கள் உச்ச நிலையை அடைந்திருந்த 1969ம் ஆண்டில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் இரண்டாவது மாநாடு யாழ் நகர மண்டபத்தில் தியாகி இரத்தினம் அரங்கில் நடைபெற்றது. ஆயிரத்திற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்ட இம்மாநாட்டில் பல்வேறு நிலைகளில் இருந்து வந்த சக்திகள் கலந்து கொண்டு தமது ஆதரவைத் தெரிவித்தனர். இம் மாநாடு மேலும் தமது போராட்ட நிலைப்பாட்டில் உறுதியான தீர்மானங்களை எடுக்கவும் பரந்துபட்ட சக்திகளை ஐக்கியப்படுத்தவும் தாழ்த்தப்பட்ட மக்களை போராட்டக் களங்களில் வலிமைப்படுத்தி நிற்கவும் வழி காட்டியது. கிழக்கு மாகாணம், மலையகம், தென்னிலங்கைப் பிரதேசங்களில் இருந்து பலர் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர். மாநாட்டை



படிப்பகம்

ஒட்டிய ஓவியக் கண்காட்சி, கலை நிகழ்ச்சிகள், கவியரங்கு நாடகங்கள் இடம் பெற்றன. மாநாட்டு சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

மாநாட்டைத் தொடர்ந்து கொழும்பிலும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க கொழும்புக் கிளை கூட்டத்தையும் ஓவியக் கண்காட்சியையும் ஒழுங்கு செய்து நடாத்தியது. இதன்மூலம் தென்னிலங்கையில் தாழ்த்தப்பட்ட மக்களது போராட்டத்தின் நியாயங்கள் பரவச் செய்யப்பட்டன. தென்னிலங்கையின் புத்திஜீவிகளும், மக்களும் வெகுஜன இயக்கப் போராட்டங்களுக்கு தமது ஆதரவைத் தெரிவித்துக் கொண்டனர். இத்தகைய நிலை தமிழர்கள் மத்தியில் நிலவி வந்த சாதிய ஒடுக்குமுறை எத்தகையது என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டியது. இதனால் சாதிய, அரசியல் ஆதிக்கம் கொண்ட சக்திகள் வெட்கித் தலைகுனிய வேண்டியதாயிற்று.

இவ் வெகுஜன இயக்கப் போராட்டங்களின் மத்தியிலே மக்கள் கலை இலக்கியம் என்பது செழுமை கண்டு கொண்டது. போராட்டங்களுக்கு வலிமை சேர்த்து நின்றது. கவிதைகள், சிறுகதைகள் மற்றும் இலக்கிய ஆக்கங்கள் வீறுபெற்று வெளிவந்தன. போராட்டத்தில் பிறந்து மீண்டும் போராட்டங்களுக்கு சேவை செய்து மக்களின் போராட்ட நியாயங்களைப் பேசும் ஆற்றல் மிக்க நூற்றுக்கு மேற்பட்ட கவியரங்குகள் மக்கள் மத்தியில் இடம் பெற்றன. இவற்றில் சில்லையூர் செல்வராசன், இ. முருகையன், புதுவை இரத்தினதுரை, நந்தினி சேவியர், முருகு கந்தராசா, க. தணிகாசலம், பூமகன், எஸ்.ஜி. கணேசவேல், முருகு ரத்தினம், இ. சிவானந்தன் போன்ற கவிஞர்கள் கவிதை படைத்து நின்றனர். நெல்லியடி அம்பலத்தாடிகள் நடித்த காத்தான் கூத்து மெட்டிலான கந்தன் கருணை நாடகம் ஐம்பதுக்கு மேற்பட்ட வடபுலத்து மேடைகளில் அரங்கேறிக் கொண்டது. இந்நாடகம் என்.கே. ரகுநாதனால் ஓரங்க நாடகமாக முதலில் எழுதப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். ‘குடிநிலம்’, ‘போடு புள்ளடி’ போன்ற நாடகங்கள் வடபுலத்தின் மக்கள் மத்தியில் வரவேற்பைப்பெற்ற நாடகங்களாகத் திகழ்ந்தன.

இக்காலகட்டத்தின் கலை இலக்கிய வளர்ச்சியானது மக்கள் போராட்டங்களின் ஊடாக முகிழ்த்தெழுந்த ஒன்றாகியது. ஏற்கனவே

www.padippakam.com

உருவாகிய முற்போக்கு கலை இலக்கிய இயக்கம் என்பது பாராளுமன்ற சமரசப் போக்கால் சீரழிக்கப்பட்டது. பிரேம்ஜி, பேராசிரியர் கா. சிவத்தம்பி, டொமினிக் ஜீவா போன்ற இலக்கியவாதிகள் சமரச இலக்கியவாதிகளாகி போராட்டங்களுக்கு புறமுதுகு காட்டுபவர்களாகத் தம்மை ஆக்கிக் கொண்டனர். போராட்ட இலக்கியம் என்று கூறுவதற்கு அஞ்சியதுடன் அவ்வகை இலக்கியங்களைப் பற்றி எழுதவோ பேசவோ மறுத்து நின்றனர். அதற்கு அடிப்படையாக அவர்கள் வரித்து நின்ற அரசியல் நிலைப்பாடு காரணமாகியது.

ஆனால் இச்சந்தர்ப்பத்தில் மக்கள் இலக்கியம் என்பது தவிர்க்க முடியாத வளர்ச்சியாகியது. அதனைப் பிரதிபலிக்கும் வகையில் அறுபதுகளின் நடுக்கூறிலே வசந்தம் கலை இலக்கிய சஞ்சிகை வெளிவந்தது. ஒரு வருடத்திற்கு மேல் அதனால் நீடிக்க முடியாது போய்விட்டாலும் மக்கள் இலக்கிய வளர்ச்சிக்கான திசையை அது தெளிவாகக் காட்டி நின்றது. அதன் ஆசிரியர் குழுவில் செ. யோகநாதன், நீர்வைப் பொன்னையன், பெனடிக்ற் பாலன், இ.செ.கந்தசாமி, எஸ். முத்துலிங்கம், செல்வபத்மநாதன், கனகரட்ணம் ஆகியோர் முன்நின்று செயற்பட்டனர்.

புதிய புரட்சிகரப் பொதுவுடமைக் கட்சி எடுத்த போராட்ட மார்க்கத்தின் ஊடே மக்கள் போராட்டங்களின் மத்தியில் கலை இலக்கிய வடிவங்கள் ஆக்கம் பெற்றன. சிறுகதைகள், கவிதைகள், நாவல்கள், நாடகங்கள் என்பன அக்காலத்தின் தேவையை நிறைவு செய்தன. இவற்றை மக்கள் இலக்கியமாக அடையாளப்படுத்திக் கொள்வதில் பேராசிரியர் க. கைலாசபதி முன் முயற்சியுடன் செயற்பட்டார். தனது மாக்சிச லெனினிச கண்ணோட்டத்தின் ஊடே அக்கால இலக்கிய ஆக்கங்களுக்கு ஆக்கபூர்வமான விமர்சனங்களை வழங்கி மக்கள் இலக்கிய வளர்ச்சிக்கு வளம் சேர்த்து நின்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு மாக்சிச லெனினிசப் பொதுவுடமைக் கட்சியின் தலைமையின் கீழ் முன்னெடுக்கப்பட்ட சகல போராட்டங்களும் வெகுஜனப் போராட்ட ஐக்கிய முன்னணித் தந்திரோபாயங்களின் மூலம் வென்றெடுத்து நிலைநாட்டப்பட்டன. இவை 1966-72 காலப்பகுதியை உள்ளடக்கிய ஒரு வரலாற்றுத் திருப்புமுனை கொண்ட கால கட்டம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழர் சமூகத்தின் மூன்றில் ஒரு பிரிவினரான தாழ்த்தப்பட்ட மக்கள்



படிப்பகம்

www.padippakam.com

சாதிய தீண்டாமையை எதிர்த்துப் போராடத் தமது சமத்துவத்தையும் சமூக நீதியையும் மட்டுமன்றி இரண்டாம் தரமற்ற சமூக அந்தஸ்த்தையும் வென்றெடுத்தனர். அதேவேளை ஒரு மாக்சிச லெனினிசக் கட்சியானது சமூகப்பரப்பில் கூர்மையடைந்து காணப்பட்ட சாதிய முரண்பாடு-ஒடுக்குமுறையினைச் சரியானபடி அடையாளம் கண்டு அதற்கெதிரான போராட்டத்திற்கு வரக்க கண்ணோட்ட அடிப்படையில் சரியான புரட்சிகரத் தலைமையை வழங்கி நின்றமை வரலாற்றில் தெளிவான பதிவையும் ஏற்படுத்திக்கொண்டது. இப் போராட்டங்களின் மூலம் அரசியல் தத்துவார்த்த வளர்ச்சியும் புரட்சிகர நிலைப்பாடுகளும் அர்ப்பணிப்பு, தியாகம், உறுதி, அஞ்சாமை போன்றனவும் அக்காலகட்டத்தின் அம்சங்களாகத் திகழ்ந்தமையும் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

பொதுவுடமைக் கட்சி எடுத்து நின்ற மேற்படி நிலைப்பாடானது அரசியல் தத்துவார்த்தத் தளத்தில் நடைமுறை அனுபவங்கள் மூலமான தெளிவிற்கு வழிகாட்டிக் கொண்டது. குறிப்பாக சாதிய முரண்பாட்டையும் அதன் விளைவான சாதிய ஒடுக்குமுறையையும் எதிர்த்து பொதுவுடமைக் கட்சி போராட்ட இயக்கத்தை முன்னெடுத்தால் அது உயர்சாதியினர் எனப்படும் மக்களிடையே இருந்து கட்சியை அந்நியப்படுத்திவிடும் என்னும் தவறான தர்க்கம் நடைமுறையில் தகர்த்தெறியப்பட்டது. சாதியத்தையும் தீண்டாமையையும் எதிர்த்து பொதுவுடமைவாதிகள் முதல் நல்லெண்ணம் கொண்ட ஜனநாயக சக்திகள் வரை தத்தமது சாதி அடையாளங்களுக்கு அப்பால் வர்க்க நிலைப்பாட்டில் அணிதிரண்டு வெகுஜனப் போராட்டத்தில் தத்தமது பங்களிப்பை பல்வேறு தளங்களில் நின்று வழங்கி போராட்டங்களுக்குப் பலம் சேர்த்தனர் என்பது முக்கியமான அம்சமாகும். இதில் இருபாலைப் பகுதி இளைஞர்களும் மக்களும் முன்னுதாரணமாகச் செயல்பட்டனர். இறுதிவரை தமது கட்சி நிலைப்பாட்டை சாதிவெறியவர்களுக்கு விட்டுக்கொடுக்காது முன்னெடுத்து நின்றனர். அதனால் சிறைவாசம் உட்பட பல துன்பங்களை ஏற்று நின்றனர்.

அதேவேளை தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் இதே காலகட்டத்தில் பொதுவுடமைக் கட்சியின் தலைமையில் அணி வகுத்து தமது உரிமைகள் கோரிக்கைகளுக்காகப் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து



படிப்பகம்

www.padippakam.com

வந்தனர் என்பது குறிப்பான அம்சமாகும். இதன் மூலம் மேலே குறிப்பிட்ட ‘‘கட்சி தனிமைப்பட்டு அந்நியமாகிக் கொள்ளும்’’ என்ற பாராளுமன்றக் கண்ணோட்டம் செல்லபடியற்றதாகிக் கொண்டது. அத்துடன் சாதிவாதக் கண்ணோட்டமானது பின் தள்ளப்பட்டு வர்க்க போராட்ட மார்க்கத்தில் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்ட நிலைப்பாடு உறுதிப்படுத்தப்பட்டு முன்னேறிச் சென்றமையையும் காண முடிந்தது. அவற்றுக்கான நடைமுறை அனுபவங்களும் அக்கால கட்டத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டன. அவை வடபுலத்து பொதுவுடமைக் இயக்க வளர்ச்சியிலும் வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகிக் கொண்டன.

## 19 தொழிற்சங்க இயக்கமும் போராட்டங்களும்

வடபுலத்தில் பெரும் தொழிற்சாலைகள் இருக்கவில்லை. ஐம்பதுகளின் ஆரம்பத்துடன் காங்கேசன்துறை சீமேந்து ஆலையும், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையும் செயற்பட ஆரம்பித்தன. அறுபதுகளின் ஆரம்பத்துடன் நடுத்தர அளவிலான தொழிற்சாலைகளும் சிறு தொழிலகங்களும் கணிசமான அளவுக்கு விருத்தி பெற்றன. ஆனால் ஏற்கனவே தொழிற்சங்க இயக்கமானது பஸ் தொழிலாளர்கள் மத்தியில் பலமுடையதாக இருந்து வந்தது. இவ்விரு துறைகளிலும் சமசமாஜக்கட்சித் தொழிற்சங்கங்களே செல்வாக்குப் பெற்றிருந்தன. கள் இறக்கும் தொழிலாளர்கள் மத்தியிலும் மற்றும் சில துறைகளிலும் பொதுவுடமைக் கட்சி தொழிற்சங்கம் அமைத்து அத்தொழிலாளர்கள் உரிமைகளுக்காக கோரிக்கைகள் முன்வைத்து தொழிற்சங்க இயக்கம் நடாத்தி வந்தது.

அறுபதுகளின் ஆரம்பத்தின் பின் வடபுலத்து தொழிற்சங்க இயக்கத்தில் பொதுவுடமைக் கட்சி பரந்து விரிந்த வேலைமுறையினை கொண்டிருந்தது. 1964ன் புதிய மாக்சிச லெனினிசக் கட்சியின் தோற்றத்துடன் தொழிற்சங்க வேலைமுறை வேகமடைந்து கொண்டது. அதற்கு உந்துதல் அளிக்கும் வகையில் 1964ல் காங்கேசன் சீமேந்து ஆலையின் ஒரு மாதகால வேலைநிறுத்தப் போராட்டத்தால் கோரிக்கைகள் வென்றெடுக்கப்பட்டன. பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையிலும் தமது கோரிக்கைகளை வென்றெடுக்க தொழிலாளர்களுக்கு வேலை நிறுத்தமே வழிவகுத்துக் கொடுத்தது.



படிப்பகம்

இவற்றைத் தொடர்ந்து சாதியத் தீண்டாமைக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட வெகுஜனப் போராட்டங்களின் நடுவே அவற்றின் புரட்சிகரப் போராட்ட உற்சாகத்தின் காரணமாக மாக்சிச லெனினிசப் பொதுவுடமைக் கட்சியின் கீழான தொழிற்சங்க இயக்கம் வடபுலத்தில் விரிவடைய ஆரம்பித்தது. அன்றைய கட்சியின் பொதுச் செயலாளராக விளங்கிய தோழர் நா. சண்முகதாசன் தொழிலாளர்கள் சார்பாக விட்டுக்கொடுக்காது வாதாடியும் போராடியும் கோரிக்கைகளை வென்றெடுக்கும் தொழிற்சங்கத் தலைவராகவும் தொழிற்சங்கவாதியாகவும் விளங்கியமை மிக முக்கியமான ஒரு அம்சமாக இருந்து வந்தது. அக்காலகட்டத்தில் அவர் அடிக்கடி வடபுலத்திற்கு வந்து செல்வதும் மிக முக்கிய தொழில் நீதிமன்ற வழக்குகளில் தொழிலாளர்கள் சார்பாக வாதாடி வெற்றிபெற்றமையும் தொழிற்சங்க வேலைமுறைகள் முன்செல்லக் காரணமாகின. அவ்வாறே தோழர்கள் சமல் த சில்வா, சிறில், வாட்சன் பெர்னாண்டோ போன்றவர்களும் தொழிற்சங்கவாதிகளாக வடபுலத்திற்கு வந்து தொழிலாளர்களுக்காக வாதாடி உரிமைகள் பெற்றுக் கொடுப்பவர்களாக விளங்கினர். வடபுலத்து பிரதிநிதியாக தோழர் நீர்வைப் பொன்னையன் செயலாற்றினார்.

புதிய பொதுவுடமைக் கட்சியின் தலைமையின் கீழ் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் வடபிரதேசக் கிளைத் தோழர்கள் வீ.ஏ. கந்தசாமி, மு. கார்த்திகேசன் தலைமையில் தொழிற்சங்க இயக்க வேலை முறையினை வேகமாக விஸ்தரித்து வந்தது. இ.போ.ச. தொழிலாளர்கள் மத்தியில் அதிக எண்ணிக்கையைக் கொண்ட உறுப்பினர்களை இலங்கை மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம் கொண்டதாக அமைந்தது. பருத்தித்துறை கோண்டாவில், காரைநகர், கிளிநொச்சி, முல்லைத்தீவு இ.போ.ச. சாலைகளில் தொழிலாளர்கள் பொதுவுடமைக் கட்சியின் தொழிற்சங்கத்தில் அணி திரண்டனர். 1968ல் கோண்டாவில், பருத்தித்துறை, காரைநகர் இ.போ.ச பஸ் தொழிலாளர்களை ஒன்றிணைத்து ஐந்து முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தப் போராட்டம் இடம் பெற்றது. அவ்வேளை தோழர் எஸ். தர்மராஜா பொதுவுடமைத் தொழிற் சங்கத்தின் தலைவராக செயற்பட்டார். அவர் அரசியலில் மாக்சிச லெனினிச நிலைப்பாட்டை எடுத்து ஏற்கனவே வடமாராட்சிப் பகுதியில் இளைஞர்களை அணி திரட்டியவர்களில் ஒருவராகவும் இருந்தார். ஐந்து நாட்கள் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் சகல தொழிற்சங்கங்களும் சகல தொழிலாளர்களும் மிகுந்த

**1969ம் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் இரண்டாவது மாநாடு மந்துவில் தியாகி இரத்தினம் அரங்கில் நடைபெறுகிறது.**



தோழர்கள் எஸ்.ரி.என்.நாகரட்ணம். நா.முத்தையா (Man). ஆகியோர் தலைமைக் குழுவில் இருக்கிறார்கள் தோழர் நா. சண்முகதாசன் உரையாற்றுகிறார்.



யாழ் நகர மண்டபம் நிறைந்த மாநாட்டுப் பிரதிநிதிகள்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

வர்க்க உணர்வோடும் ஒற்றுமையோடும் போராட்டத்தை முன்னெடுத்தனர். ஆரம்பத்தில் கோரிக்கைகளை உதாசீனம் செய்து நின்ற நிர்வாகமும் பொது முகாமையாளரும் போராட்டத்தின் வேகத்தினாலும் இடம் பெற்ற சில புரட்சிகரச் சம்பவங்களாலும் கீழிறங்கி வந்து தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு இணங்கிக் கொண்டனர். இ.போ.ச தொழிலாளர்கள் மத்தியில் சாதி ரீதியில் பல்வேறு சாதிகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் காணப்பட்ட போதிலும் சாதிய தீண்டாமைக்கு எதிரான போராட்டம் நடந்த சூழலில் வர்க்க ரீதியில் ஐக்கியப்பட்டிருந்தமை குறிப்பிடக்கூடியதாகும்.

அக்கால கட்டத்தில் முக்கியத்துவம் பெற்ற தொழிற்சங்கப் போராட்டமாக விளங்கியது மில்க்வைற் சவர்க்காரத் தொழிலாளர்களின் போராட்டமாகும். ஒரு தமிழ் முதலாளி எவ்வாறு தமிழ்த் தொழிலாளர்களை வர்க்க ரீதியில் சுரண்டிக் கொள்கிறார் என்பதையும் வர்க்க சுரண்டலுக்கு இன மத மொழிப் பற்றோ பாசமோ இல்லை என்பதை அப்போராட்டம் எடுத்துக் காட்டியது. அங்கே தொழிற்சங்கம் வைத்திருக்கும் அனுமதியைக் கூட தொழிலாளர்களுக்கு அத்தமிழ் முதலாளி மறுத்து வந்தார். குறைந்த சம்பளம், அதிகநேர வேலை, விடுமுறை மறுப்பு போன்ற தொழிலாளர்கள் பெறவேண்டிய சட்டப்படியான உரிமைகளை வழங்குவதற்கு அம் முதலாளி மறுத்து தொழிலாளர்களை தான் நினைத்தவாறு வேலை வாங்கி வந்தார். தொழிலாளர்கள் அடிபணிய மறுத்து தொழிற்சங்கத்தை முன்னெடுத்த காரணத்தால் பல தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இதனை எதிர்த்து இடம்பெற்ற வேலை நிறுத்தத்தை பொலிஸ் வன்முறை மூலம் முறியடிக்க முன்னின்றார் இத்தமிழ் முதலாளி. தொழிலாளர்கள் தாக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் அடைக்கப்பட்டனர். இவ் அநீதியை எதிர்த்து தொழிலாளர்கள் சார்பாக புதிய பொதுவுடமைக் கட்சியே போராடி நின்றது. மிகவும் பிரபல்யம் பெற்ற மில்க்வைற் சவற்காரத் தொழிலாளர் சார்பாக தொழில் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் தோழர் நா. சண்முகதாசன் தொழிலாளர்களுக்காக இம்மியளவும் விட்டுக்கொடுக்காது வாதாடினார். ஆனால் முதலாளியின் சார்பாக தமிழரசுக் கட்சிப் பிரமுகர் எம். ஆலாலசுந்தரம் வாதாடினார். இது தமிழரசுக் கட்சியின் வர்க்க நலன் காக்கும் அரசியலை அம்பலப்படுத்தியது. அவ்வழக்கில் தொழிலாளர்கள் சார்பாகவே தீர்ப்பு வழங்கப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

போதிலும் அத் தமிழ் முதலாளி அதனை ஏற்க மறுத்து நின்றார். புகழ்மாலைகளும் பொன்னாடைகளும் போர்த்தப்பட்டன. இவற்றுக்கும் அப்பால் யாழ் பல்கலைக்கழகம் அத்தகையவருக்கு கௌரவக் கலாநிதிப் பட்டமும் வழங்கிக் கௌரவித்துக் கொண்டது. இது வடபுலத்தின் மேட்டுக்குடி ஆதிக்கம் எவ்வாறு இருக்கின்றது என்பதைப் புலப்படுத்தியது

தொழிலாளர்கள் அணி திரண்டு தமது உரிமைகளுக்காக கோரிக்கை வைத்துப் போராடிய மற்றொரு தொழிற்சாலை வல்வை நெசவாலையாகும். இதுவும் தனித் தமிழ் முதலாளிக்கு சொந்தமானதாகும். அறுபதுகளுக்குப் பின் வடபுலத்தில் வளர்ச்சி கண்ட உற்பத்திகளில் ஒன்று மின்தறி மூலமான நெசவுத் தொழிலாகும். கைத்தறி நெசவானது குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளப்பட்ட அதேவேளை வல்வை, சங்கானை, பண்டத்தரிப்பு போன்ற பகுதிகளில் மின்தறி நெசவாலைகள் தரமான துணிவகைகளை உற்பத்தி செய்தன. அன்றைய இறக்குமதிக் கொள்கையின் இறுக்கத்தால் இந் நெசவாலைகள் மிகுந்த லாபத்தைப் பெற்று வந்தன. ஆனால் தொழிலாளர்களின் சம்பளங்கள் ஏனைய உரிமைகள் என்பன மறுக்கப்பட்டன.

வல்வை நெசவாலையில் தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைத்து கோரிக்கை வைத்தமையை அதன் சொந்தக்காரரான தமிழ் முதலாளியால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இறுதியில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். அவ்வேலை நிறுத்தத்தை பொதுவுடமைக் கட்சியின் தொழிற்சங்கம் தலைமையேற்று முன்னெடுத்தது. அவ்வேளை தோழர் கரவைக் கந்தசாமி தொழிற்சங்கப் பிரதிநிதியாக இருந்து பணிபுரிந்தார். அவ்வேலை நிறுத்தத்தை அவ்வூர்ப் பொது மக்கள் ஆதரித்து பல்வேறு வழிகளிலும் உதவினர். உடுப்பிட்டியில் பெரும் ஆதரவுக் கூட்டமும் நடைப்பெற்றது. தோழர்கள் வீ.ஏ. கந்தசாமி, வாட்சன் பெர்ணாண்டோ, கே.ஏ. சுப்பிரமணியம், சி.கா. செந்திவேல், கரவைக் கந்தசாமி, எம். குமாரசுவாமி மற்றும் தொழிலாளர்கள் மத்தியிலான தொழிற்சங்கத் தலைவர்கள் உரையாற்றினர். பலநிலைகளிலும் பலம் பெற்றிருந்த இவ்வேலை நிறுத்தத்தை முறியடிக்க முதலாளியும் நிர்வாகமும் கடும் முயற்சி செய்தும் பலனளிக்கவில்லை. இறுதியில் முதலாளித்துவத்தின் பாதுகாவலர்களான பொலிசை ஏவி விட்டனர். இத் தமிழ் முதலாளி தனது பண பலத்தையும் செல்வாக்கையும்



படிப்பகம்

www.padippakam.com

பயன்படுத்தி அப்பகுதிக்கும் அப்பால் இருந்து பொலிசாரைக் கொண்டுவந்து வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் மீது தாக்குதல் தொடுக்கச் செய்தார். ஒவ்வொரு நாளும் கட்சி-வாலிபர் இயக்கத் தோழர்கள் வேலை நிறுத்தம் செய்து வந்த தொழிலாளர்கள் மத்தியில் உரையாற்றி அவர்களுடன் இணைந்து இருப்பது வேலை நிறுத்தகால நடைமுறை. அன்றைய தினம் தோழர் சி.கா. செந்திவேல் உட்பட தோழர்கள் தொழிலாளர்கள் மத்தியில் உரையாற்றிய பின் தொழிலாளர்கள் ஆதரவாளர்கள் மிக உற்சாகமாக இருந்த சூழலில் திடீரெனப் பொலிஸ் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் மத்தியில் பாய்ந்து கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடாத்தியது. துப்பாக்கிகளின் அடிப்பாகம் கொண்டும் குண்டாந்தடிகளாலும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. தோழர் செந்திவேல் உட்பட தொழிலாளர் தலைவர்கள் பெண் தொழிலாளர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். இந்த மிருகத்தனமான தாக்குதலைப் பொறுக்கமாட்டாது வயல்களில் வேலை செய்துகொண்டிருந்த விவசாயிகள் திரண்டு வந்து பொலிசாருடன் மோதலில் ஈடுபட்டனர். அவர்களில் சிலர் பொலிஸ் வைத்திருந்த துப்பாக்கியை பிடுங்கிப் பறித்தெடுத்துச் சென்று விட்டார்கள். துப்பாக்கியைப் பறிகொடுத்த பொலிஸ் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஒரு சிங்கள சார்ஜன்ட் ஆவார். இந் நிகழ்வால் ஏக்கமடைந்த அவர் மறுநாள் தற்கொலை செய்து கொண்டார். இப் பொலிஸ் துப்பாக்கி பறிப்பு அவ்வேளை பிரபல்யம் பெற்றதுடன் சிலர் அதனோடு சம்மந்தப்படுத்தப்பட்டு வழக்கிலும் மாட்டிவைக்கப்பட்டனர். இருந்தும் தொழிலாளர்களின் போராட்டம் ஓய்ந்து விடவில்லை. தொழிலாளர்கள் வேலை நீக்கப்பட்டு தொழில் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு மீண்டும் தொழிலாளர்களை வேலைக்கு சேர்த்துக்கொள்ள வேண்டும் எனத் தீர்ப்பு கிடைத்த போதிலும் இத்தமிழ் முதலாளி தமிழ்த் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க மறுத்து வந்தார். அதேவேளை வர்க்க வன்மத்துடன் தொழிலாளர்கள் மீது பொய் வழக்குகளைப் போட்டுப் பழிவாங்குவதிலும், வேலையிலிருந்து துரத்துவதிலும் இத்தமிழ் முதலாளி பின் நிற்கவில்லை. இங்கேயும் தொழிலாளர்கள் பக்கத்தில் பொதுவுடமைக் கட்சி நின்றது. தமிழ்க் கட்சிகள் முதலாளியின் நலன்பேணி நின்றன.



படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறே வடபுலத்திலுள்ள சினிமாப்பட அரங்குகளில் வேலைசெய்து வந்த தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தில் அணிதிரண்டு தமது கோரிக்கைகளை முன்வைத்தனர். அவர்களும் பொதுவுடமைக் கட்சியின் தொழிற்சங்கத்திலேயே அணிதிரண்டனர். அன்றுவரை மறுக்கப்பட்டு வந்த உரிமைகளை அத் தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ள வழிபிறந்தது. ஏற்கனவே கொழும்பிலும் ஏனைய பிரதேசங்களிலும் சினிமாத் தொழிலாளர்கள் போராட்டங்கள் மூலமாக ஏற்பட்ட கூட்டு ஒப்பந்தங்களால் பெற்ற உரிமைகள் சலுகைகள் என்பனவற்றை வடபுலத்து தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தின் மூலம் கோரிக்கைகளாக முன்வைத்தபோது சினிமா அரங்கு முதலாளிகள் கோபமடைந்தனர். சிலர் அக்கோரிக்கைகளுக்கு இணங்கினர். சிலர் தொழிற்சங்கம் அமைத்தமைக்காக தொழிலாளர்களைப் பழிவாங்கிக் கொண்டனர். இதில் தமிழர் கூட்டணியின் பிரமுகரான ராஜா தியேட்டர் முதலாளி முன் நின்று எட்டுத் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்து கொண்டார். பேசுவது இன மொழி பிரதேச உரிமைகள் ஒற்றுமை பற்றியது. ஆனால் செய்வது தமிழ்த் தொழிலாளர்களிடம் சுரண்டிச் சொத்துச் சேர்ப்பது. இவ் எட்டுத் தொழிலாளர்களுக்கு மீண்டும் சம்பளத்துடன் வேலை கொடுக்கப்பட வேண்டும் என தொழில் நீதிமன்றத்தில் கடுமையாக வாதாடி தொழிலாளர்களுக்கு சார்பாக தீர்ப்பு பெற்றுக் கொடுத்தவர் தோழர் நா. சண்முகதாசன். ஆனால் அத் தமிழ்த் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கக் கூடாது என தமிழ் முதலாளிகளுக்காக வாதாடி நின்றவர் மேற்குறிப்பிட்ட தமிழரசு-கூட்டணிப் பிரமுகரான ஆலாலசுந்தரம் என்பது வியப்புக்குரிய ஒன்றல்ல.

வடபுலத்தில் தொழிலாளர்களுக்குரிய சட்டப்படியான உரிமைகள், சலுகைகள், வழங்கல்கள் என்பனவற்றை மறைப்பது மறுப்பது சர்வ சாதாரணமாகவே இருந்து வந்தது. இதனால் தொழிலாளர் உரிமைக்காகக் கடுமையாகப் போராட வேண்டியே இருந்தது. அத்தகைய இடங்களில் ஒன்றாக யாழ் மாநகரசபை காணப்பட்டது. அங்கு வீதிகள் அமைக்கும் பகுதி, சுகாதாரப்பகுதி, மின்சாரப்பகுதி, தண்ணீர் விநியோகப் பகுதி மற்றும் நூலகம், பூங்காக்கள் என்பனவற்றில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஊழியர்கள் வேலைசெய்து வந்தனர். ஆனால் தொடர்ந்து வந்த மாநகரசபை நிர்வாகம் தொழிலாளர்களுக்குரிய அடிப்படை உரிமைகளான நிரந்தரம், சம்பள உயர்வு, பதவி உயர்வு, மேலதிக



படிப்பகம்

www.padippakam.com

கொடுப்பனவுகள், விடுமுறை, ஓய்வூதியம் போன்றவற்றில் சட்டப்படியும் சுற்று நிருபங்களின் அடிப்படையிலும் வழங்க வேண்டிய அல்லது நடைமுறைப்படுத்த வேண்டிய எவற்றையும் தொழிலாளர்களுக்கு வழங்கவில்லை. தொழிலாளர்கள் ஏமாற்றப்பட்டே வந்தனர். இதனைத் தட்டிக் கேட்கவோ தொழிலாளர்கள் சார்பாகப் போராடவோ எந்தத் தமிழ்க் கட்சியும் முன்வந்ததில்லை.

இந்நிலையிலேயே 1972ம் ஆண்டில் யாழ் மாநகரசபைத் தொழிலாளர்கள் மாக்சிச லெனினிசப் பொதுவுடமைக் கட்சியின் தலைமையிலான இலங்கை பொதுக் கைத்தொழிலாளர் சங்கத்தில் இணைந்து தமது கோரிக்கைகளை முன்வைத்தனர். தொழிலாளர்களின் அணி திரள்வானது அன்றைய யாழ் மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பாவிற்கும் அவரின் கீழான நிர்வாகத்திற்கும் பெரும் அதிர்ச்சியாக அமைந்தது. தொழிற்சங்கத்தை அனுமதிக்க மாட்டேன் என வீறாப்புப் பேசிய அவர் தொழிலாளர்களைக் கொத்தடிமைகளைப் போன்று தொடர்ந்தும் வைத்திருக்கவே விரும்பினார். ஆனால் தொழிலாளர்கள் தொடர்ந்தும் தமது தொழிற்சங்க வேலை முறையினை விஸ்தரித்து தொழிற்சங்க நடவடிக்கைகளை சகல தொழிலாளர்களினதும் ஐக்கியத்துடன் முன்னெடுத்தனர். அம் மாநகரசபைத் தொழிற் சங்கத்தின் செயலாளராக கா. பஞ்சலிங்கமும் தலைவராக க. செல்வராசாவும் இருந்தனர். பல வருடங்களாகத் தற்காலிகத் தொழிலாளர்கள் என்ற நிலையில் நூற்றுக்கணக்கில் பணிபுரிந்து வந்தவர்களுக்கு நிரந்தரம், சம்பள உயர்வு, பதவி உயர்வு, தரம் உறுதிப்படுத்தல், ஓய்வூதியம், விடுமுறை போன்ற முக்கிய கோரிக்கைகள் மாநகரசபை நிர்வாகத்திற்கு முன்வைக்கப்பட்டு அதற்கான கால அவகாசமும் வழங்கப்பட்டது. ஆனால் ஆணையாளரும் நிர்வாகமும் தொழிலாளர்களின் கோரிக்கையை உதாசீனம் செய்து கொண்டதினால் வேலை நிறுத்தத்தில் இறங்குவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. யாழ்-மாநகர சபையின் கீழான சகல பிரிவுகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் ஐக்கியப்பட்டு அவ்வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர். ஒருவாரகால வேலை நிறுத்தம் இடம் பெற்றது. அதனை முறியடிக்க பல்வேறு முயற்சிகள், சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. அவ்வேளை சி.வி.கே. சிவஞானம் ஆணையாளராக இருந்தார். அவர் தொழிலாளர்களின் கோரிக்கைகளைத் தட்டிக்



படிப்பகம்

www.padippakam.com

கழித்து வேலை நிறுத்தத்தைக் கைவிடச் செய்வதற்கு பல வழிகளிலும் முயன்று பார்த்தார். ஒவ்வொரு நாள் செல்லும் போதும் தொழிலாளர் ஐக்கியமும் போராட்ட உறுதியும் கூடிச் சென்றது. இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தை வழி நடத்துவதில் தோழர்கள் கே.ஏ. சுப்பிரமணியம், சி.கா. செந்திவேல், எம்.ஏ.சி. இக்பால், கா. ப்ஞ்சலிங்கம், எஸ். தியாகராசா, சோ. தேவராஜா, ஆர். செல்வநாயகம் ஆகியோர் முன்னின்று செயற்பட்டனர். மாநகரசபை முன்றலில் முகாமிட்டு தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர்களின் ஐக்கியமும் விட்டுக் கொடுக்காத தலைமைத்துவமும் மாநகரசபை நிர்வாகத்தைப் படியிறங்கி வந்து முக்கியமான கோரிக்கைகளுக்கு இணங்கிக்கொள்ளவும் ஏனையவற்றை குறித்த கால எல்லைக்குள் வழங்குவதற்கும் பேச்சுவார்த்தையில் முடிவு செய்யப்பட்டது. ஆணையாளர் மாநகரசபை நிர்வாகம் சார்பாக கையெழுத்திட்டு இணங்கியதன் மூலம் வேலை நிறுத்தம் வெற்றிகரமாக முடிவுக்கு வந்து கொண்டது. யாழ் மாநகரசபைத் தொழிலாளர்கள், ஊழியர்கள் 1977ம், 1978ம், 1983ம் ஆண்டுகளில் தமது வேலை நிறுத்தப் போராட்டங்களை முன்னெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் தொழிலாளத் தோழர்களாக கா. பஞ்சலிங்கம், பொ. தருமகுலராஜா, ஆ. செல்வராசா, க. நடேசபிள்ளை, வீ. புஸ்பரட்ணம், எஸ். நல்லையா முதலியோர் முன்னிலையில் நின்று உறுதியுடன் செயற்பட்டனர். இப்போராட்டத்தின் விளைவாக ஒரே நாளில் 200 தொழிலாளர்கள் மாதச் சம்பளப் பட்டியலில் இடம் பெற்றமை மாநகரசபைத் தொழிலாளர்களின் வரலாற்றில் முக்கியமானதாகும்.

யாழ் மாநகரசபை நிர்வாகத்தில் தமிழ் காங்கிரஸ், தமிழரசு, தமிழர் கூட்டணி, அல்பிரட் துரையப்பா தலைமையிலான குழுவினர் அவ்வப்போது நிர்வாகம் நடாத்தி தத்தமக்குச் சேர்ந்தோருக்கும், தங்களுக்கும் ஆதாயங்கள் நன்மைகள் சலுகைகள் தேடிக்கொண்டனர். ஆனால் அங்கு பல பத்து ஆண்டுகளாகப் பணியாற்றி வந்த சாதாரண தொழிலாளர்கள் ஊழியர்களுக்கு சட்டப்படி வழங்க வேண்டிய எந்தவொரு உரிமைகளையோ, சலுகைகளையோ வழங்க முன்வரவில்லை. அத்துடன் சிலர் அவை பற்றிக் கேட்ட போதெல்லாம் அதிகாரம் ஆதிக்கம் அரசியல் செல்வாக்குக் காட்டி மறுத்து வந்திருக்கிறார்கள். இத்தகைய சூழலிலேதான் தோழர் நா. சண்முகதாசன் தலைமையிலான



படிப்பகம்

www.padippakam.com

பொதுவுடமைக் கட்சியும் தொழிற்சங்க இயக்கமும் யாழ்-மாநகரசபைத் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளைப் போராட்டத்தின் மூலம் வென்றெடுத்து நிலைநாட்டியது என்பது கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.

முக்கியமாக இடம்பெற்ற மேற்கூறிய தொழிற்சங்கப் போராட்டங்களுடன் ஆனையிறவு உப்பளத் தொழிலாளர்கள், தெங்கு பனம்பொருள் உற்பத்திச் சங்க ஊழியர்கள், பீடி சுற்றும் தொழிலாளர்கள், அலுமீனியத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள், சுருட்டுத் தொழிலாளர்கள், நெசவுத் தொழிலாளர்கள் என்போரிடையே தொழிற்சங்க இயக்கம் பலமுடையதாகக் கட்டி வளர்க்கப்பட்டது. தொழிலாளர்கள் சார்பான கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டு தொழிலாளர்களின் ஐக்கியப்பட்ட நடவடிக்கைகளின் அழுத்தம் காரணமாகப் பேச்சு வார்த்தைகளில் இணக்கம் காணப்பட்டு பல்வேறு உரிமைகளைத் தொழிலாளர்கள் பெற்றுக் கொண்டனர். இத் தொழிற்சங்க இயக்கத்திலும் போராட்டங்களிலும் தோழர்கள் வீ.ஏ. கந்தசாமி, கே.ஏ. சுப்பிரமணியம், நீர்வைப் பொன்னையன், கரவைக் கந்தசாமி, சி.கா. செந்திவேல், எஸ். சிவதாசன், எம்.ஏ.சி. இக்பால், எஸ். தியாகராசா ஆகியோர் தொழிலாளர்கள் மத்தியில் கட்சி-தொழிற்சங்க இயக்கம் சார்பாக முழுநேர ஊழியர்களாக இருந்து கடுமையாக வேலை செய்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வடபுலத்தின் தொழிலாளர்கள் தமக்குக் கிடைக்க வேண்டிய சட்டப்படியான உரிமைகளைக் கூட கடுமையான தொழிற்சங்கப் போராட்டங்கள், தொழில் நீதிமன்றத் தீர்ப்புகள் மூலம் போராடியும் வாதாடியும் பெற்றுக்கொண்டனர். இன்றுவரை அவர்கள் அனுபவிக்கும் உரிமைகள் சலுகைகள் தமிழ்த் தலைமைகளால் பெற்றுக்கொடுக்கபட்டவை அல்ல. தமிழ்த் தலைமைகள் எவ்வாறு சாதிய-தீண்டாமைக் கொடுமைகளுக்கு தமது புறமுதுகைக் காட்டி நின்றனரோ அவ்வாறே தொழிலாளர்களின் உரிமைகளிலும் தமிழ் முதலாளிகளோடும் நிர்வாகங்களோடும் கைகோர்த்து நின்று தமது உயர்வர்க்க நிலையைக் காட்டிக் கொண்டனர். அதேவேளை பொதுவுடமைக் கட்சி, சமசமாஜக் கட்சி என்பனவே தொழிலாளர்களின் உரிமைகளைப் போராடியும் வாதாடியும் வென்றெடுத்து கொடுத்தன என்பது வரலாற்று நிகழ்வாக அமைந்து கொண்டது.



படிப்பகம்

www.padippakam.com

# 20 விவசாயிகளும் பொதுவுடமைக் கட்சியும்

வடபுலத்தின் விவசாயத்தை இரு பிரிவாகக் கொள்ளலாம். ஒன்று யாழ் குடாநாட்டிற்குள் உள்ள விவசாயம். இரண்டாவது குடாநாட்டிற்கு அப்பால் உள்ள வன்னிப்பிரதேச விவசாயம். பொதுவாகவே வடபுலத்தை வானம் பார்த்த பூமி என்றே கூறுவர். இருப்பினும் நெற்செய்கை மாரிகாலத்திலும் ஏனைய உப உணவு உற்பத்தி கிணற்று நீர் மூலமும் செய்யப்படுகின்றன. வன்னிப் பிரதேசத்தில் குளத்து நீரின் அளவுக்கு ஏற்ப சிறுபோக நெல், உப உணவு உற்பத்தியும் இடம் பெறுகின்றன.

வடபுலத்தின் யாழ் குடாநாட்டின் வளமான நிலங்கள் யாவும் சில நிலவுடமையாளர்களின் கைகளிலேயே இருந்து வந்தது. இதனால் இவர்கள் அதிக்கம் உடையோராகவும் உயர்சாதிய மேட்டுக்குடியினராகவும் காணப்பட்டனர். இந்தியப் பெரு நிலவுடமை போன்ற அளவு இல்லாதுவிடினும் குறிப்பிட்ட அளவுக்கு நிலவுடமை காணப்பட்டது. இதனால் குத்தகை விவசாயிகள், கூலி விவசாயிகள், நிலமற்றவர்கள் என்ற நிலைகளில் விவசாயிகள் இருந்து வந்துள்ளனர். அதேவேளை சிறு நிலச் சொந்தக்காரர்களான விவசாயிகளும் கணிசமான அளவில் இருந்து வருகின்றனர்.

குடாநாட்டின் விவசாயிகள் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கு எதிராக அவ்வப்போது பொதுவுடமைக் கட்சி பல்வேறு இயக்கங்களை நடாத்தி வந்திருக்கின்றது. உள்ளூராட்சி மன்றங்களிலும் பாராளுமன்றத்திலும் வடபுலத்து விவசாயிகளின் பிரச்சினைகளுக்காக பொதுவுடமைக் கட்சி உறுப்பினர்கள் குரல்கொடுத்து நின்ற அதேவேளை விவசாயிகள் மத்தியில் எதிர்ப்பு இயக்கங்களையும் நடாத்தி வந்திருக்கின்றனர். 1956ல் பதவிக்கு வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் அரசாங்கம் சாதாரண விவசாயிகள் சார்பாக நெற்காணி மசோதாவைப் பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றியது. மக்கள் சார்பான முற்போக்கு சட்டங்கள் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படும் போதெல்லாம் தமிழர் தலைமைகள் அவற்றுக்கு தமது கடும் எதிர்ப்பைத் தெரிவிப்பது வழமையாகும். அவ்வாறே மேற்படி நெற்காணிச் சட்டத்தையும் எதிர்த்து நின்றனர். இச்சட்டத்தின் மூலம் குத்தகை விவசாயிகள் பாதுகாப்பைப் பெறக்கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாக அமைந்திருந்தது. இச் சந்தர்ப்பத்தில்



படிப்பகம்

பொதுவுடமைக் கட்சி மேற்படி நெற்காணிச் சட்டத்தை ஆதரித்து விவசாயிகள் பக்கம் நின்று கொண்டது.

அவ்வாறே நிலமற்ற கூலி விவசாயிகளுக்கு நிலங்கள் வழங்கப்படுவதைப் பொதுவுடமைக் கட்சி எப்பொழுதும் வற்புறுத்தி வந்துள்ளது. ஆனால் நிலங்கள் விவசாயத்திற்காக வழங்கப்படுவதற்கு குடாநாட்டிற்குள் வளமானதும் போதியளவானதுமான நிலம் இருக்கவில்லை. ஆதலினால் நிலமற்ற விவசாயிகள் குத்தகை விவசாயிகள், வன்னிப் பிரதேசத்தில் ஐம்பதுகளுக்குப் பின் குறிப்பிட்டளவு நிலம் பெற்று குடியேற்றத் திட்ட விவசாயிகளாயினர்.

நிலமற்ற கூலி விவசாயிகளில் சிலருக்கு குடாநாட்டில் ஆங்காங்கே குடியிருப்புகளுக்கான திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுவதை பொதுவுடமைக் கட்சி முன்வைத்து இயக்கம் நடாத்தி வந்துள்ளது. இவ்விடத்திலே குடாநாட்டிற்குள் இடம்பெற்று வந்த வளமான நிலங்களின் அபகரிப்பு பற்றி சுட்டிக்காட்டுவது அவசியம். ஏற்கனவே நிலவுடமை மேட்டுக்குடியினரான உடையார், மணியகாரர், சக்கடத்தார், முதலியார், பதிவுகாரர், விதானையார் என்போர் வளமான நிலங்கள் அனைத்தையும் தோம்புகள், உறுதிகள் மூலமாகத் தமதாக்கிக் கொண்டமை வரலாற்று நிகழ்வாகியது. அவர்களது கவனத்தில் படாது இருந்து வந்த நிலங்கள் கொலனிய காலத்தில் முடிக்குரிய நிலங்கள் என்றும் அவை பின்பு அரசாங்க நிலங்களாகவும் இருந்து வந்தன. ஆனால் அந்நிலங்களைக்கூட பின் வந்த உயர் அரசாங்க அதிகாரிகள், வசதிபடைத்தோர், விதானைமார் பின்பு அம்முறை மாற்றப்பட்ட பின் கிராம சேவை அலுவலர்கள் எனப்பட்டவர்களில் சிலர் தத்தமது பெயர்களில் உறுதி எழுதி வைத்துக்கொண்டனர். குறிப்பாக வடபுலத்து செம்மண் பிரதேசங்களில் திட்டமிட்ட வகையில் இந்நில அபகரிப்புகள் இடம்பெற்றதைக் காணலாம். இத்தகைய நிலங்களில் ஆண்டாண்டு தலைமுறைகளாக வாழ்ந்து வந்த நிலமற்ற ஏழை மக்களை விரட்டிக் கொள்வதிலும் இந்நில அபகரிப்பாளர்கள் முயன்று வந்துள்ளனர். இவற்றுக்கு எதிராகப் பொதுவுடமைக் கட்சியானது எப்பொழுதும் நிலமற்ற கூலி விவசாயிகளின் பக்கத்தில் நின்று அவர்களது நிலவுரிமைக்காகப் போராடி வந்துள்ளது. அவ்வாறே குத்தகை விவசாயிகளுக்காக கட்சி போராடி வந்துள்ளது. இதனால் சங்கானையில் ஒரு போராட்டம் இடம்பெற வேண்டியதாயிற்று.

www.padippakam.com

வன்னிப் பிரதேசங்களில் குடியேற்ற விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்தனர். வளமானதும் குளங்களுக்கு அண்மித்து பெரிய அளவிலும் சில வசதி படைத்தவர்கள் அரசாங்க உயர் அதிகாரிகளின் உதவியுடன் நிலம் பெற்றுக் கொண்டமை குறிப்பிடக்கூடியதாகும். ஐம்பதுகளில் வன்னிப் பிரதேசங்களில் விவசாயத்திற்கும் குடியிருப்புக்கும் நிலங்கள் வழங்கப்பட்ட போது அங்கு சாதியம் ஒரு அளவுகோலாகவும் அலகாகவும் பின்பற்றப்பட்டது. ஆனால் அறுபதுகளில் படித்த வாலிபர் குடியேற்றத் திட்டத்தின் கீழ் நிலம் வழங்கப்பட்டபோது அந்நிலை பெருமளவிற்கு மாற்றமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

1964க்குப் பின் புதிய பொதுவுடமைக் கட்சி வன்னியின் விவசாயப் பிரதேசங்களில் தனது வேலைகளை விஸ்தரித்துக் கொண்டது. கட்சி வாலிபர் அமைப்புகளும் விவசாய சங்கங்களும் விவசாயிகள் மத்தியில் உருவாகின. குடியேற்றத்திட்ட விவசாயிகள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் தனித்துவமாக விளங்கின. அரசாங்கத்திற்கும் விவசாயிகளுக்குமிடையில் முரண்பாடுகள் தொடர்ந்து வந்தன. அவ்வாறே அதிகளவுக்கு நிலம் பெற்றிருந்தவர்களுக்கும் சிறு நிலச் சொந்தக்காரர்களான விவசாயிகளுக்குமிடையில் முரண்பாடுகள் நிலவின. இவற்றில் மிக முக்கியமானதாக விளங்கிய பிரச்சினை தேக்கி வைக்கப்படும் குளத்து நீரை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கும் விடயமாகவே இருந்து வந்தது. ஏனெனில் நீரின் அளவு மட்டுப்படுத்தப் பட்டிருப்பதாகவும் மழை வீழ்ச்சியுடன் சம்மந்தப்பட்டதாகவும் இருந்தது. நீர் பகிர்வதில் பாகுபாடு, செல்வாக்கு பயன்படுத்துதல் இருந்து வந்ததால் சாதாரண விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியதாக இருந்தது. அதேவேளை கூலி விவசாயிகள் சம்பளம், வேலை நேரம் போன்றவற்றில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தனர்.

விவசாயிகள் எதிர்நோக்கிய இப்பிரச்சினைகளுக்கு புதிய பொதுவுடமைக் கட்சியும் விவசாய சங்கமும் விவசாயிகளை அணிதிரட்டி பல்வேறுபட்ட வெகுஜன இயக்கங்களை முன்னெடுத்தது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் பரந்துபட்ட வேலைமுறைகளை கட்சி மேற்கொண்டிருந்தது. தோழர்கள் நா. யோகேந்திரநாதன்,



படிப்பகம்

ச. சுப்பிரமணியம், வே. துரைரட்ணம், எஸ். மாணிக்கம், அ. கௌரிகாந்தன் 1965-70 கால கட்டத்தில் கட்சியின் முழுநேர ஊழியர்களாக வன்னிப் பிரதேசத்தில் அரசியல் விவசாய சங்கப் பணியாற்றினர். மேலும் ஒவ்வொரு பிரதேசங்களிலும் பல தோழர்கள் அரசியல் அர்ப்பணிப்போடு கடுமையாக அரசியல் வேலைகளில் ஈடுபட்டனர். குறிப்பாக விஸ்வமடு, முத்தையன்கட்டு படித்த வாலிபர் திட்டங்களிலிருந்து கட்சி வாலிபர் இயக்க அணிகளுக்கு அதிகளவில் தோழர்கள் வந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

1969ம் ஆண்டளவில் கிளிநொச்சியில் மிகப்பெரிய விவசாய சங்க மாநாடு இடம் பெற்றது. அம்மாநாட்டில் வன்னிப் பிரதேசத்தின் சகல பகுதிகளில் இருந்தும் விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அம் மாநாடு குடியேற்றத் திட்டங்களில் விவசாயிகள் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கான கோரிக்கைகளை முன்வைத்தது. மாநாட்டின் பின் கிளிநொச்சியில் ஆர்ப்பாட்ட ஊர்வலத்துடன் கூடிய பொதுக்கூட்டத்தை நடாத்தியது. கலை நிகழ்ச்சிகளுடன் இடம்பெற்ற மேற்படி விவசாய மாநாடு ஊர்வலம் பொதுக்கூட்டம் வன்னிப்பிரதேச விவசாயிகள் மத்தியில் அரசியல் உணர்வையும் போராட்ட உந்துதலையும் ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 21 சட்டரீதியானதும் சட்டமறுப்பானதுமான போராட்டங்கள்

மாக்சிச லெனினிசப் பொதுவுடமைக் கட்சி 1964-72 காலப்பகுதியில் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வந்தமை பற்றி முன் அத்தியாயங்களிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஆனால் அவற்றிடையே உட்கிடையாக அமைந்திருந்த சில அடிப்படையான அம்சங்களை இங்கு எடுத்துக் காட்டுவது அவசியமானதாகும். அவையே அக்காலகட்டத்தின் பொதுவுடமைக் கட்சியின் புரட்சிகர மார்க்கத்தையும் நிலைப்பாட்டையும் பிரதிபலித்தவைகளாகும்.

1. மக்கள் மத்தியில் ஒடுக்குமுறைகள் பற்றிய விழிப்பை ஏற்படுத்தி அரசியல் உணர்வை ஊட்டி போராட்ட முனைகளைத் திறப்பதற்கும் முன்னெடுப்பதற்கும் கட்சி வழிகாட்டி தலைமை தாங்குவது.

2. அப்போராட்டங்கள் பல்வகைப்பட்டவைகளாக முன்னெடுக்கப்பட்டு இறுதி நிலையாக மக்கள் ஆயுதம் தாங்கிப் போராடும் நிலையைத் தோற்றுவித்துக் கொண்டமை.


3. சாதிய- தீண்டாமைக்கு எதிரான புரட்சிகர வெகுஜனப் போராட்டங்கள் இடம்பெற்ற அதே சமகாலப் பகுதியில் தொழிற்சங்க, விவசாய இயக்க, ஏகாதிபத்திய எதிர்ப்பு உள்ளிட்ட பல்வேறுபட்ட போராட்டங்கள் முன்னெடுக்கப் பட்டமையாகும்.

4. இப் போராட்டங்கள் அனைத்தும் சட்டபூர்வமானதும் சட்ட மறுப்பானதும் என்ற நிலைகளில் முன்னெடுக்கப்பட்டவையாகும். இவ்விரண்டு நிலைகளையும் இடம், காலம், சூழல், தேவை அடிப்படையில் தீர்மானித்தே கட்சி முன்னெடுத்துக் கொண்டது.

தமது உணர்வுகளை வெளிப்படுத்தவும் அநீதிகளை அம்பலப்படுத்தி எதிர்க்கவும் மக்களுக்கு உள்ள உரிமையினைச் சட்டத்தின் பெயரால் மறுக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அச்சட்டங்களை மீறிச் செயல்படுவதற்கு கட்சி மக்களுக்குத் தலைமை தாங்கியது. இதற்கு 1964-72 காலகட்டத்தில் இடம்பெற்ற சில நடவடிக்கைகளை உதாரணத்திற்குக் கூற முடியும்.

1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சி ஒரு சட்டமறுப்பு ஊர்வலமாகவே அமைந்து கொண்டமை பற்றி ஏற்கனவே விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அக்காலகட்டத்தில் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் வடபுலத்தில் இடம்பெற்று வந்தன. வியட்நாமில் அமெரிக்க ஏகாதிபத்தியம் அப்பட்டமான ஆக்கிரமிப்பில் இறங்கி நின்றதன் காரணமாக வியட்நாம் மக்களின் வீரம் செறிந்த போராட்டத்திற்கு எமது ஒருமைப்பாட்டையும் ஆதரவையும் தெரிவித்து சுவரொட்டிகள், சுவர் எழுத்துக்கள், துண்டுப்பிரசுரங்கள், கூட்டங்கள், ஊர்வலங்கள் இடம்பெற்று வந்தன. அக்காலத்தில் யாழ்ப்பாண நகரத்தில் அமெரிக்க தகவல் நிலையம் ஒன்று இயங்கி வந்தது. அந்நிலையத்தில் ஒரு நூல் நிலையமும் இருந்தது. அன்றைய அமெரிக்க எதிர்ப்பைத் தெரிவிக்க கட்சி வாலிபர் இயக்கம் அடிக்கடி இத்தகவல் நிலையத்தை நோக்கியே ஊர்வலம் சென்று எதிர்ப்பைத் தெரிவித்து வந்தது. சாதாரணமாக அத்தகைய திடீர் ஊர்வலத்திற்கு முன்நூறு முதல் ஐந்நூறு வரையானோரை குறுகிய அறிவித்தலில் திரட்டக்கூடியதாக

## 1969ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் புரட்சிகர பொதுவுடமைக் கட்சி நடாத்திய சட்ட விரோத மேதின ஊர்வலம்



ஊர்வலத்தின் முன்னணியில் தோழர்கள் கே.ஏ.சுப்பிரமணியம். சி.கா.செந்திவேல், எம்.ஏ.சி.இக்பால். கு.சிவராசா ஆகியோர் புரட்சிகர முழக்கங்களுடன் சென்றுகொண்டிருக்கின்றனர்.



ஊர்வலத்தின் மீது பொலீஸ் தாக்குதல் நடாத்துகிறது.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அந்தளவுக்கு அன்றைய சர்வதேசிய நிலை ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொண்டதாகவும் அதன் தாக்கம் இலங்கையில் வடபுலத்தில் பிரதிபலிப்பதாகவும் அமைந்திருந்தது.

இந்நிலையிலே 1967ம் ஆண்டின் நடுக்கூறிலே புத்தாகக் கட்டப்பட்டு இயங்கி வந்த யாழ்-பொது நூலகத்தின் ஒரு பகுதியில் அமெரிக்க நூலகத்தை திறப்பதற்கென யாழ் மாநகரசபை ஒப்புக்கொண்டது. மேற்படி அமெரிக்க நூலகத்தைத் திறப்பதற்கு அன்றைய அமெரிக்கத் தூதுவர் அன்றூ வி. கொரி யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார். வியட்நாமில் ஆக்கிரமிப்பு யுத்தம் நடாத்தி வியட்நாம் மக்களை வகை தொகையின்றி கொன்று குவித்து வரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதி யாழ் மண்ணில் வந்து நூலகத்தைத் திறப்பதை எதிர்ப்பது என்ற முடிவில் கட்சியும் வாலிபர் இயக்கமும் செயறப்பட்டன. முன்கூட்டியே வெளிப்படுத்தாது முன்னூறுக்கு மேற்பட்டவர்கள் திறப்புவிழா நடைபெறவிருந்த யாழ் பொது நூலகத்திற்கு முன்பாக அடையாளம் காட்டாது நின்று கொண்டனர். ஏற்கனவே பழுதாக்கப்பட்ட கூழ் முட்டைகள் அனேகரிடம் மறைவாக இருந்தன. தூதுவரின் கார் நூலக வாசலை வந்தடைந்ததும் ‘அமெரிக்கத் தூதுவரே திரும்பிப்போ’ ‘அமெரிக்க நூல் நிலையம் எமக்கு வேண்டாம்’ ‘அமெரிக்க கொலை வெறியர்களே வியட்நாமை விட்டு வெளியேறுங்கள்’ போன்ற முழக்கங்கள் அதிரடி போன்று முழங்கின. தூதுவரை நோக்கி முட்டைகள் வீசப்பட்டன. தூதுவரின் கன்னத்தில் ஒரு முட்டை வீழ்ந்தது. காரில் இருந்து இறங்காமலே அவ்விடத்தைவிட்டு வேகமாகக் கார் முன்னால் சென்று விட்டது. பொலிஸ் தமது வழமைபோன்று ஆர்ப்பாட்டம் செய்த வாலிபர்கள் மீது தாக்குதல் நடாத்தியது. தோழர் கரவைக் கந்தசாமி கைது செய்யப்பட்டார். திரண்டிருந்த வாலிபர்கள் நகரின் வீதிகளில் அமெரிக்க எதிர்ப்பு முழக்கங்களுடன் கட்சிக் காரியாலயத்தை வந்தடைந்தனர். ஏறத்தாழ ஒரு மணி நேரம் தாமதித்து பலத்த பாதுகாப்புடன் அவசர அவசரமாக மேற்படி நூலகத் திறப்பு நிகழ்ச்சி முடித்து வைக்கப்பட்டது.

1969ம் ஆண்டின் மேதினம் இரத்தம் சிந்திய மற்றொரு சட்டத்தை மீறிய போராட்டமாகவே அமைந்து கொண்டது. அவ் ஆண்டு மேதினமும் வெசாக் தினமும் ஒரே நாளில் வந்த



படிப்பகம்

www.padippakam.com

காரணத்தால் அன்றைய யூ.என்.பி. அரசாங்கம் மேதின ஊர்வலம் கூட்டங்களுக்குத் தடைவிதித்தது. மாக்சிச லெனினிசப் பொதுவுடமைக்கட்சி அத்தடையை மீறி கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் ஊர்வலம் கூட்டம் நடாத்துவதெனத் தீர்மானித்தது. யாழ்ப்பாணத்தில் சகல கட்சிகளும் அரசாங்கத்தின் மேதினத் தடையை ஏற்றுக்கொண்டிருந்தன. அதனை மீறித் தொழிலாளர்களின் சர்வதேச தினத்தின் உரிமையை நிலைநாட்ட கட்சி மேதின ஊர்வலம் கூட்டத்தை நடாத்த முன்வந்தது. பொலிஸ் முன்கூட்டியே அவ்வாறான ஊர்வலம் கூட்டம் இடம்பெறாது தடுப்பதில் முழுமூச்சாக ஈடுபட்டிருந்தது. ஆனால் திட்டமிட்டபடி யாழ்நகரில் எதிரெதிரே அமைந்திருந்த சினிமா அரங்கினுள் சினிமா பார்ப்பவர்களுடன் இருந்துவிட்டு பி.ப.5 மணியளவில் அவ் அரங்குகளில் படம் முடிவுற்றதும் ஊர்வலம் வின்சர் சந்தியில் இருந்து ஆர்ப்பாட்ட முழக்கங்களுடன் யாழ் நகர வீதிகளில் முன்னேறிச் சென்றது. தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் தலைமையில் தோழர்கள் சி.கா. செந்திவேல், எம்.ஏ.சி. இக்பால், கு. சிவராசா, இ.கா. சூடாமணி ஆகியோர் முன்னணியில் செல்ல செங்கொடிகள் செம்பதாகைகளுடன் ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் வாலிபர்கள் மாணவர்கள் புரட்சிகர முழக்கங்களுடன் மேதினத்தின் புரட்சிகர உணர்வை வெளிப்படுத்திச் சென்றனர். முன் கூட்டியே ஊர்வலம் நடக்கலாம் எனச் சந்தேகித்திருந்த போதிலும் பொலீஸ் இப்படியான ஒரு புரட்சிகர ஊர்வலத்தை எதிர்பார்த்திருக்கவில்லை. இருப்பினும் பொலிஸ் நிலையத்தில் அவசர மணி ஒலிக்கப்பட்டு உடன் திரட்டப்பட்ட பொலிஸ் அணி ஒன்று முற்றவெளிக்கு அண்மையில் வீதிக்கு குறுக்கே துப்பாக்கிகள் குண்டாந்தடிகளுடன் நின்று ஊர்வலத்தை வழிமறித்து கலைந்து செல்லுமாறு கட்டளையிட்டது. தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் சர்வதேசத் தொழிலாளர் தினத்தில் ஊர்வலம் செல்லும் நமது உரிமையை வலியுறுத்தி கலைந்து செல்ல முடியாதென மறுத்துரைத்தார். வாக்குவாதம் முற்றிச்செல்லவும் புரட்சிகர முழக்கங்கள் உச்சத்தை அடைந்து நின்றது. பொலிஸ் ஊர்வலத்தின் மீது தனது காட்டு மிராண்டித்தனமான தாக்குதலை நடாத்தியது. கொடித்தடிகள், கற்கள், செருப்புகள் கொண்டு ஊர்வலத்தினர் பொலீஸ் தாக்குதலை எதிர்கொள்ள நேர்ந்தது. தோழர் கே.ஏ. சுப்பிரமணியமும் முன்னணியில் சென்ற தோழர்களும் கடுமையான பொலிஸ் தாக்குதல்களுக்கு உள்ளாகினர். வீதியில் செங்குருதி



படிப்பகம்

www.padippakam.com

வழிந்தோடியது. அணிந்திருந்த உடைகள் இரத்தத்தால் நனைந்து கொண்டன. யாழ்-மருத்துவமனையில் பொலிஸ் காவலுடன் காயமடைந்த தோழர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

இத்தாக்குதலுக்குப் பின் யாழ் அம்மன் வீதியில் அமைந்திருந்த தனியார் காணியில் பி.ப.6.30 மணிக்கு மேதினக்கூட்டம் இடம் பெற்றது. இரண்டாயிரத்திற்கு அதிகமான மக்கள் கூடியிருந்த அக்கூட்டத்தைக் கலைத்து மீண்டும் ஒரு மோசமான நிலையை ஏற்படுத்துவதை பொலிஸ் தவிர்க்கும் நோக்குடன் கூட்டம் முடியும்வரை காத்திருந்து சில தோழர்களைக் கைது செய்யவே முற்பட்டது. கூட்டம் தோழர் எம். முத்தையா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சி.கா. செந்திவேல், கே. டானியல், எஸ். ராசா ஆகியோர் உரையாற்றினர். கூட்டம் முடிவுற்றதும் மேற்படி தோழர்களைக் கைதுசெய்ய பொலிஸ் முயன்றபோதிலும் அப்பெரும் கூட்டத்தின் நடுவே அது சாத்தியமாகவில்லை. தோழர்கள் தலைமறைவாகிக் கொண்டனர். அன்றையதினம் காலையில் கட்சியின் யாழ்ப்பாணக் காரியாலயத்தில் வைத்து தோழர்கள் வீ.ஏ. கந்தசாமி, நீர்வைப் பொன்னையன் எஸ். வடிவநாதன் ஆகியோர் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு மறுநாளே விடுவிக்கப்பட்டனர். மேலும் ஊர்வலத்தில் கலந்துகொண்ட சில முக்கிய தோழர்களைத் தேடி பொலிஸ் தேடுதலிலும் இறங்கியது. இறுதியில் மொத்தம் பதினாறு தோழர்கள் மீது சட்டவிரோத ஊர்வலம் கூட்டம் நடாத்தியதாகக் குற்றஞ்சாட்டி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.


இவ்வாறு வடபுலத்தில் பொதுவுடமைக் கட்சியும் அதன் வாலிபர் இயக்கம், வெகுஜன இயக்கம் என்பனவும் அவ்வப்போது சட்ட மறுப்பான இயக்கங்கள் போராட்டங்களை சட்டபூர்வமான இயக்கங்களுடன் இணைத்து இடம், காலம், சூழலுக்கு ஏற்ப முன்னெடுத்து வந்துள்ளன. குடாநாட்டிற்குள்ளும் வன்னி விவசாயப் பிரதேசங்களிலும் இடம்பெற்ற இப் போராட்டங்களின்போது கட்சி வாலிபர் இயக்க வெகுஜன இயக்க உறுப்பினர்கள் ஊழியர்கள் ஆதரவாளர்கள் என்போர் கடுமையான பொலிஸ் அடக்கு முறையினை எதிர்நோக்க வேண்டியதாயிற்று. சங்கானை, சாவகச்சேரி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், சுன்னாகம், காங்கேசன்துறை, கிளிநொச்சி போன்ற பொலிஸ் நிலையங்களில் பொதுவுடமைக் கட்சித் தோழர்கள் அடைத்து வைக்கப்பட்டு



படிப்பகம்

தாக்குதல்களுக்கும் சித்திரவதைகளுக்கும் ஆளாக்கப்பட்டனர். அவமானப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டனர். இப்பொலிஸ் நிலையங்களில் இருந்த தமிழ்ப் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிசார் கடுமையான பொதுவுடமைக் கட்சி எதிர்ப்புடனும் சாதிவெறியுடனும் நடந்து கொண்டனர். ஒருமுறை நெல்லியடியில் அமைந்திருந்த காரியாலத்தில் அரசியல் கலந்துரையாடலுக்காக தோழர்கள் கூடியிருந்தனர். அவ்வேளை திட்டமிட்டே கொடுக்கப்பட்ட தகவல் மூலம் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் அக்காரியாலயம் சுற்றி வளைக்கப்பட்டு தோழர்கள் கைது செய்யப்பட்டனர். சி.கா. செந்திவேல், கு. சிவராசா, இளைய பத்மநாதன், சோதி உட்பட பத்துக்கு மேற்பட்ட தோழர்கள் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது தமிழ் இரகசியப் பொலீஸ் ஒருவர் இவ்வாறு கேட்டார். ''நீங்கள் நல்ல சாதியினராகக் காணப்படுகிறீர்கள். அப்படி இருந்தும் ஏன் இந்த கம்யூனிஸ்ட் கட்சியில் போய்ச் சேர்ந்தீர்கள்''. இக் கேள்வி ஊடே வடபுலத்து சாதிய மேட்டுக்குடி ஆதிக்கக் கண்ணோட்டம் வெளிப்பட்டதை அவதானிக்க முடியும். கடுமையான தாக்குதல்களுக்கும் விசாரணைகளுக்கும் பின்பே இத் தோழர்கள் விடுவிக்கப்பட்டனர். அக்காலகட்டத்தில் மாக்சிச லெனினிசப் பொதுவுடமைக் கட்சியினர் என்றால் பொலிஸ் படையினருக்கு பயங்கரவாதிகளாகவே கண்களில் பட்டனர். இதன் காரணம் 1971ம் ஆண்டு ஏப்பிரலில் ஜே.வி.பி.யினர் தமது தூர நோக்கற்றதும் தவறானதுமான இளைஞர் கிளர்ச்சியை நடாத்தியவேளை அதனைச் சாட்டாக வைத்து பொதுவுடமைக் கட்சியினர் கைதுசெய்து சிறையில் அடைக்கப்பட்டனர். கொழும்பில் தோழர் நா. சண்முகதாசன் உட்பட தலைமைத் தோழர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டனர். ஆனால் வடபுலத்தில் கைது செய்வதற்காகத் தேடப்பட்ட பொதுவுடமைக் கட்சியின் தலைமைத் தோழர்கள் அனைவரும் தலைமறைவாகிக் கொண்டனர். ஒரு வருடத்திற்குமேல் அவர்கள் தலைமறைவு வாழ்க்கையே வாழவேண்டியதாயிற்று. தோழர் கே.டானியல் இடைக்காலத்தில் கைது செய்யப்பட்டு குறிப்பிட்டளவு காலம் யாழ்ப்பாணச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

வடபுலம் கண்ட இப்புரட்சிகர காலகட்டம் மனிதகுல விடுதலைக்கான கொள்கை இலட்சியத்தை மாக்சிச லெனினிச மாஓசேதுங் சிந்தனை அடிப்படையில் முன்னெடுத்து நின்ற ஒரு



இலங்கை பொதுவுடமைக் கட்சியின் தூதுக்குழு 1960ல் சோவியத் யூனியன் சென்றிருந்த போது தோழர்கள் மு.கார்த்திகேசன். ஐ.ஆர்.அரியரத்தினம். ரி.துரைசிங்கம் ஆகியோர் இடமிருந்து வலமாக அமர்ந்திருக்கின்றனர்.



பாராளுமன்றப் பொதுவுடமைக் கட்சியின் வடபுலத்து காரியாலயத்தில் தோழர்கள். ஐ.ஆர்.அரியரத்தினம் இடப் புறமாகவும் எஸ்.விஜயானந்தன் வலப்புறமாகவும் அமர்ந்திருக்கின்றனர். தோழர் அ.வைத்திலிங்கம் உரையாற்றுகிறார்.

www.padippakam.com

படிப்பகம்

காலப்பகுதியாக விளங்கியது. புரட்சிகர ஆற்றல், உணர்வு, அனுபவம், தியாகம், அர்ப்பணிப்பு யாவற்றையும் நடைமுறையில் காணமுடிந்த காலமுமாகும். ''எங்கு அடக்குமுறை உண்டோ அங்கே போராட்டம் இருக்கவே செய்யும். எங்கு போராட்டம் உண்டோ அங்கே தியாகங்களும் நிகழவே செய்யும். ஆனால் அநாவசியமான தியாகங்களைத் தவிர்க்க வேண்டும்'' என்பது தோழர் மாஓவின் அனுபவக் கூற்றாகும். அத்துடன் அப்போராட்ட காலகட்டத்தில் ''உறுதியாக இருந்து தியாகத்திற்கு அஞ்சாமல் வெற்றியை வென்றெடுக்க சகல கஷ்டங்களையும் கடந்து நில்லுங்கள்'' என்ற மாஓவின் வழிகாட்டலை கட்சித் தோழர்களும் வெகுஜனப் போராட்ட போராளிகளும் பின்பற்றி நின்றனர்.

## 22 பாராளுமன்றப் பொதுவுடமைக் கட்சியும் அதன் செயற்பாடுகளும்

வடபுலத்தில் 1964ம் ஆண்டுக்குப் பின்னான காலப்பகுதியில் மாக்சிச லெனினிசப் பொதுவுடமைக் கட்சி புரட்சிகரப் போராட்டங்களின் ஊடாக வளர்ச்சி கண்ட அதேவேளை பாராளுமன்றத்தை முற்றுமுழுதாக ஏற்றுக்கொண்டு சீர்த்திருத்தப்பாதையில் வழிநடந்த பழைய பொதுவுடமைக் கட்சியால் வளர்ச்சி பெற முடியவில்லை. அதன் வடபுலத்து தலைவர்களாக அ. வைத்திலிங்கம், ஐ.ஆர். அரியரத்தினம், வி. பொன்னம்பலம், எஸ். விஜயானந்தன் போன்றோர் விளங்கினர்.

அக்கட்சியானது பாராளுமன்றத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து அரசாங்கத்தில் பங்கு கொள்வதையே பிரதான இலக்காகக்கொண்டு செயற்பட்டு வந்தது. போராட்டம் என்றாலே அவர்களுக்கு கசப்பானதாகக் காணப்பட்டது. பலாத்காரம் பற்றிய மாக்சிச லெனினிச நிலைப்பாட்டை மறுத்துரைத்து புரட்சிகரப் போராட்டங்களை அழிவுத்தனம் நிறைந்தவை எனக்கூறிக் கொண்டதுடன் பாராளுமன்றத்தின் ஊடாகச் சோசலிசம் வந்துவிடும் என்று கூறி மாக்சிச லெனினிசத்தையே திரித்துரைத்துக் கொண்டனர். இதனால் இவர்களை மாக்சிச லெனினிசவாதிகள் திரிபுவாதிகள் என்றே அழைத்து வந்தனர். இவர்கள் மாக்சிச லெனினிச புரட்சிகரக்கட்சி முன்னெடுத்த சகல போராட்டங்களையும் எதிர்த்தும் நிராகரித்தும் கொச்சைப்படுத்தியும் சில சந்தர்ப்பங்களில்

www.padippakam.com

காட்டிக்கொடுத்தும் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

கட்சியைப் பெயரளவில் மட்டும் வைத்திருந்த அதேவேளை தொழிற்சங்க வேலைகளை முன்னெடுத்து தம்மைத் தக்கவைத்து வந்தனர். வடபிரதேச தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி என்பதை சகல தொழிற்சங்கங்களையும் இணைத்து செயற்பட்ட ஒரே ஒரு வேலையை மட்டும் ஓரளவுக்கு செய்து கொண்டனர். தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் தலைமையின் முடிவுகளை ஏற்று நின்றனரே தவிர வடபுலத்து யதார்த்த சூழலை கணக்கில் கொள்ளவில்லை. இவர்களது கட்டுப்பாட்டில் இருந்த ஜாதிககுருசங்கம் என்னும் ஆசிரியர் சங்கம் அரசாங்க செல்வாக்குடன் செயல்புரியும் ஒரு சங்கமாகவே 1970களில் காணப்பட்டது. ஆனால் இதற்கும் அப்பால் எச்.என். பெர்ணாண்டோ தலைமையிலான இலங்கை ஆசிரியர் சங்கம் வடபுலத்தில் அதிக செல்வாக்குள்ள ஆசிரிய சங்கமாக வளர்ச்சி கண்டது. அதன் தேசிய மாநாடு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் வெகுசிறப்பாக இடம் பெற்றது. அச் சங்கத்திலேயே புதிய புரட்சிகர பொதுவுடமைக் கட்சியின் ஆசிரியர்கள் பலர் அங்கம் பெற்றனர். பின்நாட்களில் இச்சங்கம் வடபுலத்தில் குறிப்பிடத்தக்க ஆசிரியர் சங்கமாகியது. இதில் க. சிவராசா, எம். தியாகராசா முதலியோரது பணி குறிப்பிடத்தக்கதாக விளங்கியது.

இக்கட்சி பாராளுமன்ற பாதையின் மீது கொண்ட மோகத்திற்கு ஒரு உதாரணம் உண்டு. சாதிய தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களில் பங்கு கொள்ளாது இருந்து வந்த அக்கட்சியும் அதனோடு இணைந்து நின்ற சிறுபான்மைத் தமிழர் மகாசபையும் 1970ல் இடம்பெற்ற தேர்தலில் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும் அதன் மூலம் எம்.சி. சுப்பிரமணியம் நியமன உறுப்பினராகிக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதி எனப் பறைசாற்றி நின்றமையாகும். அதுமட்டுமன்றி அப் பாராளுமன்றப் பதவியாலேயே மாவிட்டபுரம் உள்ளிட்ட ஆலயக் கதவுகளைத் திறக்க முடிந்தது என்றும் கூறி வெகுஜனப் போராட்டங்களை மறைக்க முற்பட்டனர்.

இக் கட்சியைச் சார்ந்து நின்ற இலக்கியவாதிகளும் வர்க்க சமரச இலக்கிய ஆக்கங்களையே படைத்தனர். வர்க்கப் பார்வையற்ற வெறும் மனிதாபிமான எழுத்துக்களை முற்போக்கு இலக்கியம் எனக் கொண்டாடினர்.



படிப்பகம்

டொமினிக் ஜீவா தனது மல்லிகையில் சாதியம் பற்றி எழுதுவார். திட்டிக்கொட்டிக் கொள்வார். ஆக்கிரோசமாகப் பேசியும் கொள்வார். ஆனால் சாதியத்தை எதிர்த்து எவ்வாறு போராடுவது என்பது பற்றி வாயே திறக்கமாட்டார். ஏனெனில் அவரது அரசியல் வர்க்க சமரசப் பாராளுமன்றப் பாதையாகும். அதனாலேயே அவரால் கம்பன் கழகப் பழமைவாதிகளோடும் பெரும் முதலாளிகளோடும் இணங்கிச்சென்று இலக்கியம் செய்ய முடிகின்றது. மாக்சிசம் லெனினிசம் காட்டும் மக்கள் இலக்கியக் கோட்பாட்டிற்கு அப்பால் நின்று சந்தர்ப்பவாத, சமரச, பிழைப்புவாத இலக்கியம் செய்வது என்பது சாராம்சத்தில் மக்கள் விரோத இலக்கியமேயாகும்.

பாராளுமன்றப் பொதுவுடமைக் கட்சி சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் ஆட்சியில் பங்காளியாகிக் கொண்டதன் மூலம் அவ் ஆட்சி நடைமுறைப்படுத்திய பேரினவாத ஒடுக்குமுறையினைக் கண்டும் காணாததுபோன்று நடந்து கொண்டது. இதனால் தமிழ் மக்கள் மத்தியில் இக் கட்சியும் சமசமாஜக் கட்சியும் தமிழர் விரோத நிலைப்பாடுடைய கட்சிகள் என்ற முத்திரை குத்தலுக்கு ஆளாகிக் கொண்டன. இதனை தமிழர்களிடையே உள்ள பொதுவுடமை-இடதுசாரி எதிர்ப்புப்புடையோர் தமக்குரிய எதிர்ப்பிரசார ஆயுதமாகப் பயன்படுத்தவும் தவறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## 23 1972ம்-78ம் ஆண்டுகளில் பொதுவுடமை இயக்கம்

வடபுலத்து பொதுவுடமை இயக்க வரலாற்றில் 1964-72 காலப்பகுதி மிக முக்கியத்துவம் வாய்ந்த போராட்டங்கள் இடம்பெற்றதும் அவற்றிற்கு புரட்சிகர பொதுவுடமைக் கட்சி தலைமை தாங்கி நின்றமை பற்றியும் முன் அத்தியாயங்களில் காண முடிந்தது. அத்தகைய கட்சியானது சரியான மாக்சிச லெனினிச நிலை நின்று அப் போராட்டங்களின் சாதக பாதக அம்சங்கள் குறித்த ஆழமான மதிப்பீட்டை செய்திருக்க வேண்டும். அதன் மூலம் அடுத்த கட்டத்திற்கான வேலைத்திட்டத்தையும் வேலை முறையினையும் முன்னெடுத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு

www.padippakam.com

செயற்பட்டிருந்திருக்க வேண்டிய தலைமைத்துவம் அதிலிருந்து தவறிக் கொண்டது. இதற்கான பொறுப்பினை தனி ஒருவர் மீது சுமத்த முடியாது. அதேவேளை தனி நபர்களது தவறுகளும் குறைபாடுகளும் வகித்த பங்களிப்பையும் நிராகரிக்கவும் முடியாது.

1971ல் இடம்பெற்ற ஜே.வி.பி. இளைஞர் கிளர்ச்சியின் தாக்கம் அதனைத் தொடர்ந்து கட்டவிழ்த்து விடப்பட்ட அரசு யந்திரத்தின் அடக்குமுறை, ஆட்சியில் இருந்து வந்த ஐக்கிய முன்னணி பற்றிய கணிப்பீடு, பாராளுமன்றத்தை பகிஷ்கரித்து எடுக்கப்பட்ட முடிவு பற்றிய விவாதம், தலைமைத்துவ தனிநபர்கள் மீதான விமர்சனங்கள் போன்றவற்றை முன்வைத்து தலைமைக் குழுவின் ஒரு பிரிவினர் தோழர் சண்முகதாசனைப் பொதுச் செயலாளராகக் கொண்ட புரட்சிகரக் கட்சியிலிருந்து வெளியேறிச் சென்றனர். 1972ல் இடம்பெற்ற இப் பிளவானது வடபுலத்திலும் இடம் பெற்றது. தோழர்கள் மு. கார்த்திகேசன், வீ.ஏ. கந்தசாமி, எம். குமாரசுவாமி, ச. சுப்பிரமணியம் போன்றோர் இதில் முன் நின்றனர். இவர்களை உள்ளடக்கி இலங்கைப் பொதுவுடமைக் கட்சி (மா.லெ) உருவாக்கப்பட்டதாக அறிவித்தனர்.

இவர்கள் பிளவுபடுத்திய வேகத்தில் ஆங்காங்கே சில செயற்பாடுகளைக் கொண்டிருந்த போதிலும் இவர்களால் அதிக காலம் ஒரு கட்சியாக நீடிக்க முடியவில்லை. இவர்கள் வடபுலத்தில் ‘போராளி’ என்னும் அரசியல் செய்திப் பத்திரிகையையும் ‘களனி’ என்ற கலை இலக்கிய சஞ்சிகையையும் வெளிக்கொணர்ந்த போதிலும் அதிக காலம் அவை நின்று பிடிக்கவில்லை. அவ்வாறே இவர்கள் வெளிப்படுத்திய இலங்கை பொதுவுடமைக்கட்சி (மா.லெ) என்பது உள் முரண்பாடுகளாலும் உறுதியற்ற நிலைமை என்பவற்றாலும் இயங்கா நிலைக்கு உள்ளாகியது. தோழர் மு. கார்த்திகேசனின் மறைவோடு அது முற்றாகவே அரசியல் அரங்கிலிருந்து மறைந்து கொண்டது. ஏற்கனவே இருந்த கட்சியில் இருந்து விமர்சனம் மேற்கொண்டு வெளியேறிக் கொண்டமை இவர்களுக்கு இலகுவாக இருந்த அளவுக்கு ஒரு புரட்சிகர பொதுவுடமைக் கட்சியை உறுதியான அடித்தளத்தில் கட்டியெழுப்பி தூரநோக்கோடு முன்னெடுப்பது இலகுவானதொன்றாக இருக்கவில்லை என்பதை நடைமுறையின் மூலம் தெரிந்து கொள்ளலாயினர். இக் கட்சியின் பக்கம் நின்ற இளைஞர்கள் சிலர் தமிழ்த் தேசியவாதப் போக்கிற்குள் அமிழ்ந்து வர்க்கப்



படிப்பகம்

www.padippakam.com

போராட்டப் பாதையில் தமிழீழத்தை வென்றெடுப்பது எனச் சென்று அழிவுகளுக்கு ஆளாகினர் என்பதும் வருத்தத்துடன் சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். வேறும் சிலர் ‘‘போதுமப்பா சாமி’’ எனக்கூறி அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொண்டனர். இன்னும் ஓரிருவர் வெறும் வாய் உச்சாடனம் செய்தபடியே அரசு சார்பற்ற நிறுவனங்களின் நிர்வாகிகளாகித் தப்பிப்பிழைத்துக் கொண்டனர். வீ.ஏ. கந்தசாமி தமிழ்த் தேசியவாத இளைஞர் இயக்கங்களில் ‘‘முற்போக்கானதும்’’, பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டிற்கு ‘‘வென்றெடுக்கக்கூடியதும்’’ எனக்கூறி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் (ஈ.பி.ஆர்.எல்.எவ்) சேர்ந்து கொண்டார். அவருடன் கூடவே முன்னாள் மாக்சிச லெனினிச வாதிகள் என்போர் சிலரும் சென்று தம்மைச் சீரழித்துக் கொண்டனர். தமிழ்த் தேசியவாதத்தை செங்கொடிகளுடன் நின்று பேசுவதை புரட்சிகரமானது என நம்பியதன் விளைவே மேற்குறித்த சீரழிவாகும். தத்துவார்த்த அடிப்படையும், வர்க்க நிலைப்பாடும், கட்சி அமைப்புமுறையும் இல்லாது எத்தகைய ஒரு அமைப்பையும் திருத்தலாம் வென்றெடுக்கலாம் என நம்பிச் சென்று ஏமாந்துகொண்ட நிலையையே இவர்கள் தேடிக்கொண்டனர். இவர்கள் மட்டுமன்றி ஏனைய தமிழ்த் தேசியவாத இளைஞர் இயக்கங்களில் சென்று சீரழிந்த முன்னாள் மாக்சிச லெனினிசவாதிகள் என்போர் சிலரும் துயரமானதும் சோகமானதுமான முடிவுகளையே பெற்றுக் கொண்டனர்.

அதேவேளை 1972ம் ஆண்டின் பிளவின்போது வடபுலத்தில் புரட்சிகரப் பொதுவுடமைக் கட்சியைத் தொடர்ந்தும் விமர்சனம் சுய விமர்சன அடிப்படையில் முன்னெடுப்பதில் தோழர்கள் உறுதியாக இருந்தனர். தோழர்கள் கே.ஏ. சுப்பிரமணியம், சி.கா. செந்திவேல், எம்.ஏ.சி. இக்பால், இ.கா. சூடாமணி, க. தணிகாசலம், சி. நவரத்தினம், கி. சிவஞானம், வை.வன்னியசிங்கம், கு. சிவராசா, த. தருமலிங்கம், எஸ். குணேந்திரராசா, மான். நா. முத்தையா, கே. டானியல் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்கினர். தொழிலாளி பத்திரிகை கொழும்பிலிருந்து வெளியிடப்பட்டது. பொதுவுடமை ஜனநாயக மனிதநேய எழுத்தாளர்கள் கலைஞர்களின் இணைவில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் உருவாக்கத்தோடு ‘‘தாயகம்’’ கலை இலக்கிய சஞ்சிகையும் 1974ல் இருந்து வெளிவரத் தொடங்கியது. தோழர் க. தணிகாசலம் அதன் ஆரம்ப பொறுப்பாசிரியராகப் பொறுப்பேற்றார். இன்றுவரை அவ்வாறே தாயகம் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

1972ல் இருந்து 1978 வரையான காலப்பகுதியில் இப்புரட்சிகர பொதுவுடமைக் கட்சியானது கட்சி அமைப்பு வாலிபர் இயக்கம், தொழிற்சங்க இயக்கம், கலை இலக்கியத் தளம் என்பனவற்றில் பரந்துபட்ட வேலை முறையினை முன்னெடுத்து வந்தது. அரசியல் கருத்தரங்குகள் பொதுக்கூட்டங்கள் தத்துவார்த்த அரசியல் வகுப்புகள் எனபன தொடர்ச்சியான வேலை முறைகளாக முன்னெடுக்கப்பட்டன. தொழிற்சங்க இயக்கத்தில் யாழ்- மாநகரசபைத் தொழிலாளர்கள், சினிமா அரங்குகளின் தொழிலாளர்கள், சுருட்டுத் தொழிலாளர்கள், தெங்கு பனம் உற்பத்தி கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர்கள் என்போர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்கள் மூலம் வென்றெடுத்தனர்.

இக்காலகட்டத்திலேயே தமிழ்த்தேசியவாதம் என்பது பேரினவாத ஒடுக்குமுறையின் அடுத்தகட்ட வளர்ச்சியின் ஆரம்பத்தைக் கொண்டிருந்தது. 1972ம் ஆண்டின் அரசியலமைப்பு, அதனைத் தொடர்ந்த தரப்படுத்தல், தமிழ் இளைஞர்கள் 42பேர் சிறையில் அடைக்கப்பட்டமை போன்றவற்றால் தமிழ் இளைஞர்கள் மத்தியில் கொந்தளிப்பு நிலை வளர ஆரம்பித்தது. மாணவர்கள் மத்தியில் எழுச்சி நிலை காணப்பட்டது. மிகப்பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் மாணவர்களால் நடாத்தப்பட்டது. கொக்குவிலில் இருந்து ஆரம்பித்த அவ் ஊர்வலம் யாழ் முற்றவெளியை வந்தடைந்தது. பொலிஸ்- மாணவர் முறுகல் நிலையில் நடைபெற்ற அவ் ஊர்வலத்தில் புரட்சிகர பொதுவுடமைக் கட்சியின் மாணவர் அமைப்பின் சார்பில் பெரும் தொகையான மாணவர்கள் கலந்து கொண்டனர். பொதுவான கோரிக்கைகளின் அடிப்படையில் ஐக்கியப்பட்ட ஊர்வலமாக இருக்க வேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டது. இருப்பினும் அவ்வூர்வலத்தில் அன்றைய கல்வி அமைச்சரான பதியுதீன் முகமதுவைக் கிண்டல் கேலி செய்வதாக அரம்பித்து முஸ்லிம்களையே கேலிக்குள்ளாக்கிய முழக்கங்கள் தமிழ்த் தேசியவாத சக்திகளால் எழுப்பப்பட்டன. இதனை புரட்சிகர பொதுவுடமைக் கட்சி சார்பான மாணவர்கள் எதிர்த்தனர். அதேவேளை மாணவர்களது பிரச்சினைகள் பற்றியும் அவற்றை வென்றெடுக்கும் மார்க்கம் பற்றியும் துண்டுப் பிரசுரம் விநியோகித்தனர். இதனால் ஊர்வல முடிவில் கைகலப்பும் இடம்பெற வேண்டியதாயிற்று. அக்காலகட்டத்தில் மாணவர் பத்திரிகையாக 'தீ' என்ற பெயரில் ஒரு பத்திரிகையும் வெளியிடப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

ஈழத்து இலக்கியத்தின் தனித்துவத்தை நிலைநிறுத்தி
மக்கள் இலக்கியத்திற்கு திசை காட்டிய
பேராசிரியர் க. கைலாசபதி





சுபைர் இளங்கீரன்



கவிஞர் க. பசுபதி



சில்லையூர் செல்வராசன்



பெனடிக்ற் பாலன்

படிப்பகம்

www.padippakam.com

இத்தகைய தமிழ் இளைஞர்கள் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட தமிழ்த் தேசியவாதத்தை தமிழரசுக் கட்சியானது தனது பாராளுமன்ற ஆசனங்களுக்கான அரசியலுக்கு பயன்படுத்த முனைந்து செயற்பட்டது. தமது பாராளுமன்ற எதிர் சக்திகளை இல்லாதொழிப்பதற்கு திசையும் வழிமுறையும் காட்டப்பட்டது. இதில் கவனத்திற்குரிய ஒரு விடயம் உண்டு. ஏற்கனவே வடபுலத்தில் சாதிய தீண்டாமைக்கும் ஏனைய பிரச்சினைகளுக்கும் எதிராகப் புரட்சிகர பொதுவுடமைக்கட்சி நடாத்திய வெகுஜனப் போராட்டங்கள் தமிழரசு, காங்கிரஸ் கட்சிகளை நன்றாகப் பாதித்திருந்தன. அதன் வெளிப்பாட்டை 1970ம் ஆண்டு பொதுத்தேர்தல் பிரதிபலித்தது. முக்கிய போராட்டங்கள் இடம்பெற்ற சங்கானை, கன்பொல்லை-கரவெட்டியை உள்ளடக்கிய தொகுதிகளாக வட்டுக்கோட்டையும் உடுப்பிட்டியும் அமைந்திருந்தன. அத்தேர்தலில் அ. அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டையிலும் உடுப்பிட்டியில் மு. சிவசிதம்பரமும் படுதோல்வி கண்டனர். அத்தோல்விக்குப் பின்பே முன்னவர் காங்கேசன்துறைத் தொகுதிக்கும் பின்னவர் நல்லூர் தொகுதிக்கும் மாறிச்சென்று போட்டியிட்டனர். உடுப்பிட்டித் தொகுதியில் இராஜலிங்கம் என்பவரை போட்டிக்கு நிறுத்தி தாம் தாழ்த்தப்பட்ட ஒருவரை பாராளுமன்ற உறுப்பினராக்கிக் கொண்டதாக தமிழர் கூட்டணி பிரச்சாரம் செய்துகொண்டது. இது ஒரு பாராளுமன்ற அரசியல் பம்மாத்து என்பதைப் புரட்சிகர பொதுவுடமைக் கட்சி அம்பலப்படுத்தியது.

இத்தகைய தோல்வியின் பின்னணியிலும் தமது பாராளுமன்ற மார்க்கத்தை வலுப்படுத்தும் நோக்குடனும் தனித் தமிழீழம் என்னும் பிரிவினைக் கோரிக்கையானது வட்டுக்கோட்டைத் தீர்மானமானமாக 1976ல் நிறைவேற்றப்பட்டது. இதனை தமிழரசு, தமிழ் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இணைந்த தமிழர் விடுதலைக் கூட்டணி பிரகடனம் செய்து கொண்டது. ஆனால் விரைவாகவே தொண்டமானும் தமிழ் காங்கிரசும் அக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை எனக் கூறி நிராகரித்தனர். ஆனாலும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மு. சிவசிதம்பரம், வீ. ஆனந்தசங்கரி ஆகியோர் தமிழர் விடுதலைக் கூட்டணியில் தொடர்ந்தும் இருந்து கொண்டனர். இதன் மூலம் அவர்கள் தமது பாராளுமன்றப் பதவியைத் தக்க வைத்தனர். குமார் பொன்னம்பலம் 1977ம் ஆண்டு தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக நின்று தோல்வி கண்டார்.



படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறு தனித் தமிழீழக் கோரிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்து பிரச்சாரம் செய்து வந்த சூழலில் புரட்சிகரப் பொதுவுடமைக் கட்சி அதன் சாதக பாதக அம்சங்கள் குறித்தும் பொருளாதார வர்க்க அடிப்படைகள் பற்றியும் ஆழமான கருத்துக்களை மக்கள் முன்வைத்து பிரச்சாரம் செய்து வந்தது. தமிழ் மக்களின் உரிமைகள் வென்றெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அதேவேளை தனித் தமிழீழப் பிரிவினை சாத்தியமற்றது என்றும் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளுக்கு உதவக் கூடியது என்றும் எடுத்துக் கூறியது.

இதன் அடிப்படையில் தனித்தமிழீழம் சாத்தியமானதா? என்னும் தலைப்பில் ஆனைக்கோட்டையில் சி.கா. செந்திவேல்-ஈழவேந்தன் பகிரங்க விவாதம் இடம்பெற்றது. அவ்வாறே சுன்னாகத்தில் நா. சண்முகதாசன்- வி. தர்மலிங்கம் விவாதம் நடைபெற்றது. இவ்விவாதத்திற்கு இடதுசாரியும் முன்னாள் ஸ்கந்த வரோதயக் கல்லூரியின் அதிபருமான ஸி. சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். மேலும் நெல்லியடி, இணுவில், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இவ்விவாதம் இடம் பெற்றது. இவ்விவாதங்களில் பெருந் தொகையான மக்கள் கலந்து கொண்டு முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் சாராம்சங்களைக் கவனத்தில் கொண்டனர். ஆனால் தமிழர் கூட்டணித் தலைமை மேற்படி விவாதங்களுக்கு சென்று விவாதிக்க வேண்டாம் எனத் தம்மவர்களுக்கு கட்டளை பிறப்பித்து தமது ஜனநாயக விரோதத்தை வெளிப்படுத்தியது. அவர்கள் அவ்வாறு அஞ்சியமைக்குக் காரணம் தமது முடிந்த முடிவு எனக் கூறப்பட்ட தமிழீழக் கோரிக்கைக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு குறைந்து விடுமோ என்பதாகும். தமது ஆதிக்க அரசியல் போக்கு திசைதிரும்பி விடுமோ என்ற அச்சமே ஆகும். 1977ல் தனித் தமிழீழக் கோரிக்கைக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் 55 வீதத்திற்கு குறைவாகவே அமைந்திருந்தது. வடக்கு கிழக்கின் சகல ஆசனங்களையும் தமிழர் கூட்டணி வென்று பாராளுமன்றம் புகுந்தனர். அக்கட்டத்தில் புரட்சிகரப் பொதுவுடமைக் கட்சி ''தேர்தலில் வெற்றி பெற தெருவில் முழக்கம், வாக்குகள் பெறுவதற்கு வட்டு மாநாடு, பிரச்சினை தீரப் புரட்சியே மார்க்கம்'' எனத் தலைப்பிட்ட பிரசுரத்தை வெளியிட்டதுடன் சுவர் எழுத்துக்களையும் வடபுலத்தில் பொறித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

புரட்சிகரப் பொதுவுடமைக் கட்சி 1970ம், 1977ம் ஆண்டுகளின் பொதுத் தேர்தல்களைப் பகிஷ்கரித்துக் கொண்டது.



படிப்பகம்

1965ம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தலிலேயே தோழர் சு.வே. சீனிவாசகம் காங்கேசன்துறைத் தொகுதியில் தமிழரசுக் கட்சித் தலைவரான எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தை எதிர்த்துப் போட்டியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வேளை வடபுலத்தில் பாராளுமன்றப் பொதுவுடமைக் கட்சியின் தேர்தல் ருசிகரம் பற்றிக் குறிப்பிடுவது அவசியமாகும். 1970ம் ஆண்டு தேர்தலில் வடபுலத்து பிரபல பொதுவுடமைவாதி எனப் பெயர் பெற்றிருந்த வ. பொன்னம்பலம் பழைய பொதுவுடமைக் கட்சி வேட்பாளராக உடுவில் தொகுதியில் போட்டியிட்டு தோல்வி கண்டார். 1972க்குப்பின் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தனது பாராளுமன்றப் பதவியை சிறிமாவோ பண்டாரநாயக்கா நிறைவேற்றிய அரசியலமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ராஜிநாமாச் செய்து கொண்டார். மீண்டும் அதே தொகுதிக்கு இடைத்தேர்தல் நடாத்தப்பட்ட போது செல்வநாயகம் மீண்டும் வெற்றி பெற்றார். ஒரு அரசியல் நாடகப் பாணியிலே அவ் ராஜிநாமாவும் பின்பு வெற்றியும் அமைந்து கொண்டது. அத்தேர்தலில் பாராளுமன்றப் பொதுவுடமைக் கட்சி வடபுலத்தில் இடம்பெற்ற இத் தேர்தலை முன்னைய தேர்தல்களைப் போன்று பகிஷ்கரித்துக் கொண்டது. வ. பொன்னம்பலம் ஒன்பதினாயிரம் வாக்குகளைப் பெற்று தோல்வி கண்டார். தமிழரசுக் கட்சியின் பிற்போக்குத் தனத்திற்கு எதிரான வாக்குகளே வ. பொன்னம்பலத்திற்கு கிடைத்தன என்பது கவனத்திற்குரியதாகும். பாராளுமன்றப் பாதையில் ஏற்பட்ட மோகம் ஒருவரை எங்கே கொண்டு சென்று நிறுத்தும் என்பதற்கு வ. பொன்னம்பலம் நல்ல உதாரணமானார். 1972க்குப் பின் அவர் படிப்படியாக தமிழர் கூட்டணிப் பக்கம் நகர ஆரம்பித்தார். தான் அங்கம் பெற்று வந்த பொதுவுடமைக் கட்சியில் இருந்து விலகி செந்தமிழர் இயக்கம் என்னும் இயக்கத்தை ஆரம்பித்தார். 1977ம் ஆண்டு மேதினத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி மேடையில் தோன்றி வ. பொன்னம்பலம் உரையாற்றினார். தனது உரையில் தான் செல்வநாயகத்துடன் போட்டியிட்ட 1972 இடைத்தேர்தலில் தனது மனச்சாட்சியின்படி தந்தை செல்வாவிற்கே தனது வாக்கை அளித்ததாகக் கூறி தமிழர் கூட்டணித் தலைவர்களை மனம் குளிரச் செய்தார். அவ்வாறு கூறியதன் மூலம் தனக்கு வாக்களித்த ஒன்பதினாயிரம் பேரையும் வ. பொன்னம்பலம் முட்டாள்களாக்கிக் கொண்டார். அப்படி இருந்தும் வ. பொன்னம்பலத்திற்கு ஒரு தொகுதியைத் தானும் கூட்டணி ஒதுக்கிக் கொடுக்கவில்லை. வ.

பொன்னம்பலம் தனது பொதுவுடமைவாதி என்ற நிலையில் இருந்து மாறிக்கொண்ட போதிலும் கூட்டணித் தலைமை தனது வர்க்க நிலையில் இருந்து மாறவில்லை. வ. பொன்னம்பலத்தின் இந்த நிலைமாற்றத்தை வைத்து முழுப் பொதுவுடமைவாதிகளையும் ஏளனப்படுத்துவதற்கு பிற்போக்கு சக்திகளுக்கு வ. பொன்னம்பலம் ஒரு உதாரணமாகிக் கொண்டமை குறிப்பிடக்கூடியதொன்றாகும். வ. பொன்னம்பலம் பாராளுமன்றப் பொதுவுடமைக் கட்சியையும் விட்டு பின்பு நாட்டையும் விட்டுச்சென்று கனடாவில் தனது இறுதிக் காலத்தைக் கழித்துக் கொண்டார். அவரது இடத்தை அவரால் வளர்க்கப்பட்ட எஸ். விஜயானந்தன் எடுத்துக் கொண்டார்.

வடபுலத்து சமூக சூழல் பற்றி ஆரம்ப அத்தியாயங்களிலே கூறப்பட்டவற்றைக் கவனத்தில் கொண்டால் அங்கு பொதுவுடமை இயக்கத்தைக் கட்டியெழுப்புவது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை விளங்கிக்கொள்ள முடியும். தொழிலாளர்கள், விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அரசாங்க ஊழியர்கள் மற்றும் புத்தி ஜீவிகள் மத்தியில் பொதுவுடமை இயக்கம் குறிப்பிடத்தக்க வகையில் காலூன்றி நின்றது. அவ் இயக்கம் காலத்திற்குக் காலம் பிளவுகள் கண்டபோதிலும் மாக்சிசம் பற்றிய விருப்பு ஆர்வமும் பொதுவுடமைக் கட்சி சார்பும் தொடர்ந்திருக்கவே செய்தது.

இத்தகைய பொதுவுடமை இயக்க கட்சிகளில் தோழர் நா. சண்முகதாசன் தலைமையிலான புரட்சிகர கட்சி வடபுலத்தில் செல்வாக்கும் வளர்ச்சியும் பெற்றிருந்தது. அதற்கு காரணமாக அதன் வடபுலத்து தலைமையானது புரட்சிகர அரசியல் மார்க்கம், சமூக முரண்பாடுகளின் அடிப்படைகளை விளங்கி அவற்றுக்கான போராட்டங்களை முன்னெடுத்தமை அர்ப்பணிப்புடனான வேலைமுறை, தியாக உணர்வு, கட்சிக்கும் மக்களுக்கும் சேவை செய்யும் உன்னத உணர்வு, மனித குல விடுதலை என்ற சர்வதேச உணர்வுடன் கூடிய சிந்தனையும் செயற்பாடும் காரணங்களாக அமைந்தன.

இவ்வாறிருந்த ஒரு சூழலில் 1978ல் கட்சிக்குள் மீண்டும் ஒரு பிளவு தவிர்க்க முடியாததாகிக் கொண்டது. தோழர் சண்முகதாசனின் தலைமைத்துவத்தின் கீழ் தேசிய இனப் பிரச்சினை, கட்சிக்குள் ஜனநாயக மத்தியத்துவம், மூன்றுலகக் கோட்பாடு,

www.padippakam.com

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைவர்

தோழர் எஸ்.ரி.என்.நாகரட்ணம்





தோழர் கி. சிவஞானம்



தோழர் வீ. சின்னத்தம்பி

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

ஐக்கிய முன்னணித் தந்திரோபாயம் போன்றவற்றில் முரண்பாடுகளும் விவாதங்களும் இடம் பெற்றன. மத்திய குழுவில் தோழர்கள் கே.ஏ. சுப்பிரமணியம், சி.கா. செந்திவேல் ஆகியோர் மேற்படி விடயங்களை உள்ளடக்கி அறிக்கையை முன்வைத்தனர். தோழர் சண்முகதாசன் மற்றொரு அறிக்கையை முன்வைத்தார். இதற்கென கூட்டப்பட்ட விஷேச மாநாட்டில் அவை விவாதிக்கப்பட்டன. தோழர் சண் முன்வைத்த அறிக்கைக்கு அதிக ஆதரவு தெரிவிக்கப்பட்டது. ஆனால் அம்முடிவு வெளியே தெரிவிக்கப்படக்கூடாது என்றும் மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு இது பற்றிய மீளாய்வை மேற்கொள்வது என்றும் முன்வைக்கப்பட்ட இணக்கப்பாடு ஒரு சில நாட்களில் மீறப்பட்டு பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டன. சர்வதேச ரீதியான பகுப்பாய்வாகச் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்த மூன்றுலகக் கோட்பாட்டை முன்வைத்து இலங்கையில் புரட்சிகரப் பொதுவுடமைக் கட்சி பிளவுக்கு உள்ளாகுவது தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் தேசிய இனப் பிரச்சினையின் வளர்ச்சிப் போக்கை சரியானபடி கணிப்பீடு செய்திருக்க வேண்டும். அதேவேளை கட்சியமைப்பில் ஜனநாயக மத்தியத்துவ கோட்பாட்டு அடிப்படையில் விமர்சனம், சுய விமர்சனம் செய்து கட்சியை மறுசீரமைப்பிற்கு உள்ளாக்கியிருக்க வேண்டும். மேலும் ஐக்கிய முன்னணித் தந்திரோபாயம் பின்பற்றப்படுவதற்கான வழிவகைகளை இலங்கையின் யதார்த்த சூழலுக்கு ஏற்ப கண்டிருக்க வேண்டும்.

அவ்வாறின்றி வெறும் புத்தகவாத நிலை நின்றும், தனிநபர் தரிசனத்தை முன் நிறுத்தியும் தூரநோக்கில் கட்சி அமைப்பை பாதுகாத்து நிலைப்படுத்துவதைக் கவனத்திற் கொள்ளாமலும் செயற்பட்டதன் விளைவாக தோழர் சண்முகதாசனின் தலைமைத்துவத்தை விட்டு ஒரு பகுதி மாக்சிச லெனினிச சக்திகள் வெளியேறிச் செல்ல நிர்பந்திக்கப்பட்டனர். அத்தகையோருக்கு தனியான கட்சி ஒன்றினைத் தோற்றுவிப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

அதுவே இலங்கைப் பொதுவுடமைக் கட்சி (இடது) என்பதாகத் தோற்றம் பெற்றது. 1978ம் ஆண்டு யூலை 3ம் திகதி அதன் ஆரம்ப உறுப்பினர்கள் ஒன்று கூடி இலங்கையில் தொடர்ந்தும் மாக்சிச லெனினிசக் கட்சியாக இயங்கும் திடசங்கற்பத்தை எடுத்துக் கொண்டனர். இதற்கான அறிக்கையினை தோழர் கே.ஏ.



படிப்பகம்

www.padippakam.com

சுப்பிரமணியமும் தோழர் சமல் த சில்வாவும் ஒப்பமிட்டு வெளியிட்டனர். தேசிய மாநாட்டை நடத்துவதற்கான ஒரு குழுவும் தெரிவு செய்யப்பட்டது. மேற்படி குழு தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தை ஆரம்பச் செயலாளராகத் தெரிந்து கொண்டது. 1984ம், 1991ம், 1997ம், 2002ம் ஆண்டுகளில் முறையே முதலாம் இரண்டாம் மூன்றாம் நான்காம் தேசிய மாநாடுகளை வெற்றிகரமாக நடாத்திக் கொண்டது. முதலாவது மாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட மத்திய குழு தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்தை பொதுச்செயலாளராகத் தெரிவு செய்து கொண்டது. தோழர் சோ. தேவராஜா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டார். இரண்டாவது தேசிய மாநாட்டில் தோழர் சி.கா. செந்திவேல் பொதுச்செயலாளராகவும் தோழர் இ. தம்பையா தேசிய அமைப்பாளராகவும் தோழர் சோ. தேவராஜா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். அம்மாநாட்டில் இலங்கைப் பொதுவுடமைக் கட்சி (இடது) என்ற பெயர் புதிய-ஜனநாயகக் கட்சி என மாற்றம் செய்யப்பட்டது. தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் 1989ல் மரணமானார். அவரது இழப்பு கட்சிக்கு பெரும் இழப்பாகியது. இருப்பினும் அவர் உறுதியுடன் முன்னெடுத்து நின்ற மாக்சிச லெனினிச மாஓசேதுங் சிந்தனைப் பதாகையை கட்சி அமைப்பின் ஊடே உயர்த்தி வழிநடப்பதில் கட்சியின் மத்தியக்குழுத் தோழர்களும் முழுக்கட்சி அங்கத்தவர்களும் அர்ப்பணிப்புடன் செயலாற்றி நின்றனர். தோழர் கே.ஏ. சுப்பிரமணியத்திடம் இருந்த விஷேச விருப்பம் என்னவெனில் தனது மறைவுக்குப் பின்பும் மாக்சிச லெனினிசக் கட்சி என்பது தொடர்ந்தும் புரட்சிகரப் பாதையில் பயணித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்பதாகும். கட்சியின் பெயர் மாற்றத்தைப் பிரேரித்து அதற்கான காரணங்களை விளக்கிய தோழர் மணியம் கட்சி எச்சந்தர்ப்பத்திலும் மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனைப் பாதையிலிருந்து விலக்கிச் செல்லாத உறுதியானதும் தூர நோக்குடையதுமான மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டும் என வற்புறுத்திக் கொண்டமை இவ்வேளை நினைவு கூரத்தக்கதாகும்.

புதிய-ஜனநாயகக் கட்சி இலங்கையின் பொதுவுடமை இயக்க வரலாற்றில் கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் உறுதி மிக்க மாக்சிச லெனினிச கட்சியாக நிலைத்து நின்று வளர்ச்சி பெற்று வந்துள்ளமை கவனத்திற்கொள்ள வேண்டியதொன்றாகும். அதன் வளர்ச்சியின் தலைமைத்துவத்திலும் முன்னிலையிலும் பல தோழர்கள் பல்வேறுபட்ட நெருக்கடிகள், அச்சுறுத்தல்கள்,



படிப்பகம்

www.padippakam.com

துன்பங்கள், பிரச்சினைகள் போறவற்றுக்கு முகம் கொடுத்து கட்சியைப் பாதுகாத்து வந்துள்ளனர். பொதுவுடமைவாதிகளுக்குரிய அர்ப்பணிப்பு, தியாகம், இலட்சியம், உறுதி என்பனவற்றுக்கு ஊடாக மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனைப் பதாகையை உயர்த்தி வழிநடந்து வந்துள்ளனர்.

புதிய-ஜனநாயகக் கட்சி ஆரம்பத்தில் 'பாட்டாளி' என்னும் பெயரில் தனது அரசியல் பத்திரிகையை வெளியிட்டது. பின்பு அதன் பெயரை 'செம்பதாகை' என மாற்றிக் கொண்டது. அதுவே 'புதிய பூமி' வெகுஜன அரசியல் பத்திரிகையாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. ஆங்கிலத்தில் நியூ டெமோக்கிறசி (New Democracy) காலாண்டு தத்துவார்த்த சஞ்சிகையாக வெளிவருகிறது.

புதிய-ஜனநாயகக் கட்சி தனது நான்காவது தேசிய மாநாட்டை 2002 நவம்பரில் நடாத்தி கட்சி அமைப்பை வலுப்படுத்தியதுடன் தனது புரட்சிகர மார்க்கத்திற்கான கொள்கையையும் தெளிவுபடுத்தி வகுத்துக் கொண்டது. இன்று இலங்கையின் பொதுவுடமை இயக்கத்தின் பரப்பிலே இரண்டே இரண்டு கட்சிகளே காணப்படுகின்றன. ஒன்று இலங்கையின் பொதுவுடமைக் கட்சியாகிய பழைய பாராளுமன்றக் கட்சியாகும். அதன் பெயர் பொதுவுடமைக் கட்சியாக இருந்தபோதிலும் இன்று ஒரு சமூக ஜனநாயகக் கட்சியின் நிலையை விடக் கீழே தாழ்ந்துபோய்க் காணப்படுகின்றது. இரண்டாவது மாக்சிச லெனினிச மாஓசேதுங் சிந்தனையைக் கொண்ட கட்சியாக புதிய-ஜனநாயகக் கட்சியே இருந்து வருகின்றது. ஏனையவை யாவும் பெயரளவில் கூடத் தம்மை வெளிப்படுத்தப்பட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டன.

## 24 எண்பதுகளில் பொதுவுடமை இயக்கம்

கடந்த கால் நூற்றாண்டு காலத்தை எடுத்து நோக்கின் நாட்டின் வடக்கு கிழக்கு பேரினவாத ஒடுக்குமுறை யுத்தத்தால் சிதைந்து சின்னாபின்னப்படுத்தப்பட்டு வந்த நிலைமைகளை கண்டுகொள்ள முடியும். அதேவேளை அப் பேரினவாத ஒடுக்குமுறையினை எதிர்த்த ஆயுதம் தாங்கிய போராட்டங்களும் அதே பிரதேசங்களில் வளர்ச்சி கண்டு வலிமையடைந்தும்



படிப்பகம்

கொண்டது. யுத்தம்- போராட்டம் ஆகிய இரண்டு அம்சங்களின் முக்கிய மையமாக வடபுலமே இருந்து வந்துள்ளது.

இத்தகைய வடபுலத்திலே புதிய-ஜனநாயகக் கட்சி 1978ம் ஆண்டிலிருந்து தனது அரசியல் வேலைகளையும், கட்சி அமைப்பினையும், எனைய வெகுஜன வேலைகளையும் முன்னெடுத்து வந்துள்ளது. ஜே.ஆர். தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி 1977ல் பதவிக்கு வந்தநாள் முதல் தமிழ் மக்களையும் வடக்கு கிழக்கையும் குறிவைத்துத் தாக்குவதிலும் பொருளாதார அரசியல் சமூக கல்வித் துறைகள் அனைத்தையும் அழித்து சின்னாபின்னப்படுத்துவதிலும் கவனத்தை செலுத்தி வந்தது. அதேவேளை நாட்டை தாராள பொருளாதாரம், தனியார் மயம் என்பனவற்றுக்குள் இழுத்துச் சென்று அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய தேர்ச்சில்லுடன் பிணைக்கும் நடவடிக்கையையும் ஆரம்பித்து வழிநடத்திக்கொண்டது. இவ்வாறு பேரினவாத யுத்தமானது ஜே.ஆரின் இரட்டை நோக்கங்களை நிறைவேற்ற பிரதான கருவியாகிக் கொண்டது.

இப் பேரினவாத பெருமுதலாளித்துவ ஒடுக்குமுறை ஆட்சியை எதிர்த்து புதிய-ஜனநாயகக் கட்சி (இலங்கைப் பொதுவுடமைக் கட்சி (இடது)) பல நிலைகளிலும் தனது வேலைமுறையினை முன்னெடுத்து வந்தது. தமிழ்த் தேசியவாத இளைஞர் இயக்கங்கள் ஆயுதக் குழுக்களாகப் பரவி வந்தன. 'தடியெடுத்தவன் எல்லாம் தண்டக்காரன்' என்பது போன்று ஆயுதங்களை வைத்து கொலை கொள்ளை செய்து மக்கள் மீது அச்சுறுத்தல் விடுத்தால் அதுவே ஒரு விடுதலை இயக்கமாகி விடும் என்ற நிலை அன்று காணப்பட்டது. இதனால் தமிழ் மக்களது அரசியல் பங்களிப்பு நிராகரிக்கப்பட்டு வாய்பேசா மக்களாக்கப்பட்ட அச்ச சூழல் ஆயுத கலாச்சாரத்தால் ஏற்படுத்தப்பட்டது. இத்தகைய தமிழ் இயக்கங்களை இந்தியாவும் ஏனைய சக்திகளும் தத்தமது நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டன.

தமிழீழக் கோரிக்கையை உச்சரிக்காத எவரும் தமிழ்த் துரோகியாகக் காட்டப்பட்டு எச்சரிக்கை அச்சுறுத்தல் விடப்பட்ட நிலை காணப்பட்டது. இடதுசாரி அரசியலின் மீது ஒருவகை வக்கிரப் பார்வையே அநேக இயக்கங்களால் காட்டப்பட்டது. இடதுசாரி அரசியலையே தாங்களும் கொண்டிருப்பதாகக் கூறிக்கொண்ட

www.padippakam.com

## வடபுலத்தில் தொழிற்சங்கங்கள் இணைந்து நடாத்திய பொதுக் கூட்டத்தில்




தோழர் சி.கா. செந்திவேல் உரையாற்றுகிறார். தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் தலைமை தாங்குகிறார்.



புத்தூர் வேம்பிராய் கிராமத்தில் மக்கள் போராட்டத்தின் மூலம் போடப்பட்ட பொதுப் பாதையை தோழர்கள் கே.ஏ.சுப்பிரமணியம். சி.கா.செந்திவேல் ஆகியோர் குத்துவிளக்கேற்றி திறந்து வைக்கின்றனர். அருகில் தோழர்கள் கா.கதிர்காமநாதன். ந.செல்வராசா மு.மாணிக்கம் ஆகியோரைக் காணலாம்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

சில தமிழ் இளைஞர் இயக்கங்கள் சாராம்சத்தில் பழமைவாதத்தை அடிப்படையாகக் கொண்ட தேசியவாதத்தையே முன்னெடுத்தன. இயல்பாகவே உலக நாடுகளில் எந்தவொரு நேர்மையான தேசியவாதப் போராட்டமும் மாக்சிசவாதிகளை பொதுவுடமைக் கட்சிகளைத் தமது போராட்டங்களின் நம்பத்தகுந்த நண்பர்களாக்கியே வந்துள்ளன. உதாரணத்திற்கு தென்னாபிரிக்காவின் நெல்சன் மண்டேலா தலைமை தாங்கிய ஆபிரிக்க தேசிய காங்கிரசும் தென்னாபிரிக்க பொதுவுடமைக் கட்சியும் எவ்வாறு ஐக்கியப்பட்டு அந்நாட்டின் சிறுபான்மை இனவெறி ஆட்சிக்கு முடிவு கட்டினார்கள் என்பது சமகால முன்னுதாரணமாகும். ஆனால் தமிழ்த் தேசிய விடுதலைக்குப் போராடி வருவதாகக் கூறி நின்ற இயக்கங்கள் பொதுவுடமை வாதிகளை இடதுசாரிகளை விரோதிகளாகவே பார்த்து நின்றன.

வடபுலத்தில் பாராளுமன்ற பொதுவுடமைக் கட்சியைச் சேர்ந்த எஸ். விஜயானந்தன், நவசமாஜக் கட்சியைச் சேர்ந்த வி. அண்ணாமலை ஆகிய இருவரும் எண்பதுகளின் பிற்கூறிலே சுட்டுக் கொல்லப்பட்டனர். எமது கட்சியின் அன்றைய பொதுச்செயலாளர் தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் கொலை முயற்சியில் இருந்து மயிரிழையில் தப்பிக் கொண்டார். மற்றும் தலைமைத் தோழர்கள் முன்னேற்பாடுகளால் கொலை முயற்சிகளில் இருந்து தவறிக் கொண்டனர். எமது கட்சியின் முன்நிலைத் தோழரான சி. துரைசிங்கம் சங்கானையில் கொல்லப்பட்டார். இத்தகைய சூழலில் இடதுசாரிகள் பலர் வடபுலத்தை விட்டு வெளியேறி தென்பகுதியில் வாழ்ந்தனர். எஞ்சி இருந்தவர்களும் மௌனமாகிக் கொள்ள வேண்டியதாயிற்று.

இந்நிலையிலும் கூட புதிய-ஜனநாயகக் கட்சியும் அதன் தோழர்களும் நிலை தடுமாறிக் கொள்ளவில்லை. ஆயுதம் தாங்கிய தமிழ் இளைஞர் இயக்கங்களின் தூரநோக்கற்ற குறுகிய தேசியவாத நோக்கையும் அவர்களது வர்க்க அடிப்படைகளையும் அவர்களுக்குப் பின்னால் இருக்கும் அயல்-அந்நிய சக்திகளையும் சரியானபடி அடையாளம் கண்டு வகைப்படுத்துவதில் கட்சி தெளிவாக இருந்தது. தனிநபர் வக்கிர நோக்கில் அன்றி அரசியல் தத்துவார்த்த கொள்கை வழி நின்றே தமிழ்த் தேசியவாத இளைஞர் இயக்கங்களைக் கணிப்பிட்டுக் கொண்டது.



படிப்பகம்

இன முரண்பாடு முதன்மை இடத்திற்கு வந்திருப்பதையும் பேரினவாத ஒடுக்குமுறையும் அதற்கு ஆதரவு கொடுக்கும் ஏகாதிபத்திய சக்திகளுமே பிரதான எதிரிகள் என்பதை கட்சி தெளிவுபடுத்திக் கொண்டது. எனவே தமிழ் தேசிய இனம் தனது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை விட்டுக்கொடுக்காது முன்னெடுப்பதை கட்சி ஆதரித்தது. அதேவேளை சகல தமிழ் இளைஞர் இயக்கங்களும் பொது வேலைத்திட்ட அடிப்படையில் ஐக்கியப்பட்டு முன் செல்லவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியது. மேற்படி கொள்கை நிலைப்பாட்டினை கட்சி அமைப்பு வாயிலாகவும் வெகுஜன நிலைப்பாட்டுடனும் கட்சி வடபுலத்தில் முன்னெடுத்து வந்தது. பேரினவாத ஒடுக்குமுறையின் கீழ் அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு ஜனநாயக விரோத செயற்பாடுகளும் கட்டுப்பாடுகளும் பொருளாதாரத் தடைகளும் ஜே.ஆர். அரசாங்கத்தால் விதிக்கப்பட்டன. அவ்வேளை மனித உரிமைக்ளுக்கான வெகுஜன இயக்கம் என்னும் அமைப்பு 1984ல் உருவாக்கப்பட்டது. சமூக அக்கறையாளர்கள் பலரை முன்நிலையாளர்களாகக் கொண்டு மக்கள் இயக்கங்கள் முன்னெடுக்கப்பட்டன. எரிபொருட்களுக்கான கட்டுப்பாடு, கடல்வலயச்சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம், அரசியலமைப்புக்கான ஆறாவது திருத்தம், கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்கள், காரணம் காட்டப்படாது இளைஞர்கள் கைது செய்யப்படுதல் போன்ற அரச அடக்குமுறைகளை இம்மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் தட்டிக் கேட்கும் ஒரு வலிமை மிக்க மக்கள் இயக்கமாக வளர ஆரம்பித்தது. தீவிரவாத இயக்கங்களை அங்கீகரித்து அவற்றுடன் அரசு பேச்சுவார்த்தை நடாத்தி அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்ற கோரிக்கையை முதன்முதலாக விடுத்தது. அதன் தலைவராக முன்னாள் விக்ரோரியா கல்லூரி ஆசிரியர் ரி. இராஜசுந்தரம், பொதுச்செயலாளராக சட்டத்தரணி சோ. தேவராஜா மற்றும் செயற்குழுவில் சட்டத்தரணி இ. சீவரட்ணம், சட்டத்தரணி எஸ். சிவநேசன், டாக்டர் செபஸ்தியாம்பிள்ளை, ப.சி. செல்வநாயகம், சட்டத்தரணி ந. தம்பிமுத்து, எஸ். சின்னதுரை, ஆசிரியர் பொன்னம்பலம், எஸ். ஜெயகுமார், க. சுந்தரமூர்த்தி, சட்டத்தரணி சிறிதரன், வி. திவ்வியராஜா, குழந்தை ம. சண்முகலிங்கம், குமாரவேல், வீ.எம். குகராசா, மகாதேவன் உட்பட பல சமூக அக்கறையாளர்கள் முன்னின்று செயற்பட்டனர். ஆனால் இவ் வெகுஜன இயக்க வளர்ச்சியை தமிழ் இளைஞர் இயக்கங்கள்

www.padippakam.com

சில அறவே விரும்பவில்லை. தலைவர் ரி. இராஜசுந்தரம் ஒரு இயக்கத்தால் கடத்திக் கொல்லப்பட்டார். அதன் பின் சட்டத்தரணி இ. சீவரத்தினம் தலைவரானார். தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயக அடிப்படையில் மக்களே கலந்து கொண்டு அரசியல் சரி பிழைகளை விவாதித்து அணி திரள்வதை எந்தவொரு தமிழ் இளைஞர் இயக்கமும் விரும்பவில்லை என்பதையே மேற்படி சம்பவங்கள் எடுத்துக்காட்டின. இது பழமைவாத தமிழ்த் தேசியவாதத்தின் தொடர்ச்சியாகவும் சிறுமுதலாளித்துவ வர்க்க சிந்தனை நிலைப்பாடாகவும் காணப்பட்டது. மேற்கூறிய வடபுலச் சூழலிலும் மாக்சிய லெனினிசக் கட்சி பின்வாங்கி ஓடி ஒழிந்து கொள்ளவில்லை. நிலைமைகளை சரியானபடி கணிப்பீடு செய்து கொண்டு கட்சிவேலைகளை முன்னெடுத்து வந்தது. பேரினவாத ராணுவ ஒடுக்குமுறையை சகல நிலைகளிலும் வன்மையாக எதிர்த்து வந்தது. அதேவேளை சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை வற்புறுத்தி நின்றது. மக்கள் அன்றாடம் அனுபவிக்கும் பிரச்சினைகள் பற்றியும் மறுக்கப்பட்டு வரும் ஜனநாயக மனித உரிமைகள் சம்மந்தமாகவும் கட்சி குரல் கொடுத்து வந்தது. அத்துடன் கூட்டங்கள் ஊர்வலங்கள் மேதினக் கூட்டம்-ஊர்வலங்களை நடாத்தி மக்களது உணர்வுகளைப் பிரதிபலிக்கச் செய்தது. பத்திரிகை அறிக்கைகள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் மூலம் கட்சியின் நிலைபாடு தெளிவுபடுத்தப்பட்டு வந்தன.

இவ்விடத்திலே இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியா தலையிட்டுக் கொண்டமை பற்றிக் குறிப்பிடுதல் அவசியமாகும். 1977ம் ஆண்டில் ஜே.ஆர். பதவிக்கு வந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தன்னைத்தானே அரசியலமைப்பு மாற்றத்தின் மூலம் நியமித்துக் கொண்டார். வெளியுறவுக் கொள்கையில் இந்தியாவின் அதிருப்தியையும் எதிர்ப்பையும் தேடிக் கொண்டார். ஏற்கனவே ஜே.ஆர். ''அமெரிக்க தாசன்'' எனப் பெயர் பெற்றவர். அத்தகைய ஜே.ஆருக்கு ஒரு பாடம் படிப்பிப்பதற்கு இந்திய ஆளும் வட்டாரம் காத்திருந்தது. மிகவும் அபகீர்த்தி பெற்ற 1983ம் ஆண்டு தமிழர் விரோத இன வன்முறையை ஜே.ஆர். தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி வழிநடத்தியது. தமிழ் மக்கள் மிக மோசமாகவும் கேவலமாகவும் கொல்லப்படவும் அவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டு உடமைகள் எரிக்கப்பட்ட சம்பவங்கள் பரவலாக இடம் பெற்றன.



படிப்பகம்

www.padippakam.com

பௌத்த சிங்கள மக்கள் உலக சமூகத்தின் முன்பாக தலை குனிந்து நிற்கும்படியாக வெலிக்கடைச் சிறைச்சாலையில் ஐம்பத்தியிரண்டு தமிழ்ச் சிறைக்கைதிகள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். அந்நாட்களிலேயே இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி தனது விஷேட தூதுவராக வெளியுறவு அமைச்சர் பி. நரசிம்மராவை இலங்கைக்கு அனுப்பி தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதை ஜே.ஆரிடம் மிகக் கடுமையான தொனியில் வற்புறுத்தியதுடன் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டியிருந்தார்.

அப்பொழுதிலிருந்து இந்தியா இலங்கையின் இனப்பிரச்சினை ஊடாகத் தனது பிராந்திய நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு காலடி எடுத்து வைத்தது. இந்தியாவின் இந் நடவடிக்கை தமிழர்கள் மத்தியில் ஒருவித நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியதுடன் தமிழ் இளைஞர் இயக்கங்கள் பல உருவாகவும் அவற்றுக்கு இந்தியா புகலிடமும் பயிற்சிகளும் ஆயுதங்களும் வழங்கிக் கொண்ட நிலைமைகளும் வளர்ச்சி பெற்றன.

அதேவேளை ஜே.ஆர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துடன் தமிழர் தரப்புக்கள் பேச்சுவார்த்தை நடாத்த இந்தியா மத்தியஸ்தராகவும் நடந்து கொண்டது. வட்டமேசை, சர்வகட்சி மாநாடுகள் எதுவும் பலன் தராத நிலையில் பூட்டான் தலைநகர் திம்புவில் இடம்பெற்ற பேச்சுவார்தையிலும் ஜே.ஆரின் பேரினவாத நிலைப்பாட்டை மாற்றமுடியவில்லை. பதிலுக்கு யுத்தம் வேகமடைய வைக்கப்பட்டது. இந்தியா தனது ராஜதந்திர ராணுவ உபாயங்கள் அனைத்தையும் பயன்படுத்தி இலங்கையை இனப்பிரச்சினையின் ஊடாகத் தனது கைப்பிடிக்குள் வைத்திருக்கவே விரும்பியது.

1987ன் நடுக்கூறிலே இந்திய விமானங்கள் வடபுலத்தில் உணவுப் பொதிகளைப் போட்டுச் சென்றன. கடல் மார்க்கமாக கொண்டுவரப்பட்ட ஒரு தொகுதி உணவுப் பொதிகளை இலங்கைக் கடற்படை தடுத்து திருப்பி அனுப்பிய பின்பே இலங்கையின் வடபகுதி வான்பரப்பிலே அத்துமீறிப் பிரவேசித்த விமானங்கள் மூலம் உணவுப் பொதிகள் போடப்பட்டன. இச்செயலை அன்று மாக்சிச லெனினிசக் கட்சி மிக வன்மையாகக் கண்டித்தது. இது ராணுவத் தலையீட்டுக்கான முதல் நடவடிக்கை எனத் தெரிவித்து



படிப்பகம்

www.padippakam.com

இலங்கையின் இறைமை சுதந்திரம் சுயாதிபத்தியத்தை கேள்விக்குட்படுத்திய செயல் எனக் கூறியது. ஆனால் தமிழ் இளைஞர் இயக்கங்கள் இப்பொதிபோட்ட நடவடிக்கையை இந்தியாவின் மனிதாபிமான நடவடிக்கை என வரவேற்றன. இது சம்மந்தமான கட்டுரைகளிலான வாதப்பிரதிவாதம் புதியபூமி-ஈழமுரசு பத்திரிகைகளில் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்திய ராணுவம் இங்கு வரவேண்டும் என வரவேற்று தோரணம் கட்டி மாலை போட்ட தமிழர் தரப்பினர் மிக விரைவாகவே அதன் எதிர்விளைவைக் கண்டு கொண்டனர். 1987ம் ஆண்டு யூலை 29ம் திகதி கொழும்பில் ஜே.ஆர்.-ரஜீவ்காந்தி ஆகியோருக்கிடையிலான இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட சில நிமிடங்களில் வடபுலத்தில் இந்திய ராணுவம் கால்பதித்துக் கொண்டது. இந்திய அமைதி காக்கும் படை என்ற பெயரில் வந்த இந்திய ராணுவம் ஒரு சில நாட்களில் முழு வடக்கு கிழக்கிலும் பரவி நிலை கொண்டது. ஒக்ரோபர் மாதம் 10ம் திகதி இந்திய ராணுவம் புலிகள் இயக்கத்திற்கு எதிரான ராணுவ நடவடிக்கை எனக்கூறி தமிழ் மக்கள் மீதான தாக்குதலைத் தொடுத்தது. பதிலுக்கு புலிகள் இயக்கம் எதிர்த்தாக்குதல்களிலும் ஈடுபட்டது. இந்திய ராணுவம் எத்தகையது என்பதையும் எந்நோக்கத்தில் செயற்படுகிறது என்பதையும் ஒவ்வொரு தமிழரும் நேரில் காணவும் அனுபவிக்கவும் முதலாவது சந்தர்ப்பமாக அது அமைந்தது.

இத்தகைய சூழலில் மாக்சிச லெனினிச பொதுவுடமைக் கட்சி இந்திய படை இலங்கையை விட்டு வெளியேறிச் செல்ல வேண்டும் என்பதை வலியுறுத்தி துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், கருத்தரங்குகள், கூட்டங்கள் மூலம் வலியுறுத்தி நின்றது. ஜே.ஆர்-பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி ஒரு இருண்ட ஆட்சியை நடாத்தி வந்தது. அதேவேளை இந்திய ராணுவம் வடக்கு கிழக்கில் நிலைகொண்டதுடன் மாகாணசபை ஆட்சியை ஈ.பி.ஆர்.எல்.எவ் மூலம் நடாத்துவதிலும் இந்தியா பின்னணியில் இருந்து செயற்பட்டது.

எனவே ஒரு மாற்று ஆட்சி ஏற்படுவதையும் இந்திய ராணுவம் வெளியேறிச் செல்வதையும் வற்புறுத்திய மாக்சிச லெனினிசக் கட்சி எதிர்த்தரப்பில் இருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு எல்லைக்குட்பட்ட ஆதரவினை வழங்கி நின்றது.



படிப்பகம்

www.padippakam.com

1989ம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஆதரித்த மாக்சிச லெனினிசக் கட்சி அவரை வடபுலத்திற்கு அழைத்து தமிழ் மக்களது பிரமாண்டமான பொதுக்கூட்டத்தை நடாத்தி ஆதரவு தெரிவித்தது. தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் தலைமையில் பண்டத்தரிப்பில் நடைபெற்ற மேற்படி பொதுக்கூட்டத்தில் இந்திய ராணுவத்தின் முன்னிலையிலேயே இந்திய ராணுவம் நாட்டைவிட்டு வெளியேறிச் செல்ல வேண்டும் என்பது மக்களின் பலத்த கரகோஷங்களின் மத்தியில் வற்புறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியாவோ இந்திய மக்களோ இலங்கையின் எதிரிகள் அல்லர். ஆனால் இந்திய ஆளும் வர்க்க கொள்கை வகுப்பாளர்கள் இலங்கை மீதான பிராந்திய மேலாதிக்கத்தை திணிக்கும் போக்கில் இருந்து வருவதையே நாம் எதிர்க்கின்றோம் என்பதே மாக்சிச லெனினிசவாதிகளின் நிலைப்பாடாகும். இம்மேலாதிக்க சிந்தனையும் நடைமுறையும் தமிழர்களுக்கு ஊடாகவோ அன்றி சிங்களவர்களுக்கு ஊடாகவோ எவ்வகையில் வந்தாலும் எதிர்க்கப்பட வேண்டியதேயாகும். அந்த வகையில் இந்தியப்படையினரை வெளியேற்றுவதற்காக புலிகள் இயக்கம் முன்னெடுத்த போராட்டத்தை மாக்சிச லெனினிசவாதிகள் ஆதரித்து நின்றனர். அதேவேளை அமைதிப்படை என்ற பெயரில் இந்திய ராணுவம் தமிழ் மக்களுக்கு இழைத்த கொடுமைகள் அநீதிகளை எதிர்ப்பதிலும் மாக்சிச லெனினிசக் கட்சி முன்னின்றது. இந்திய ராணுவத்தின் பிரசன்னத்தின் கீழ் இடம்பெற்ற பாராளுமன்ற, மாகாணசபைத் தேர்தல்களில் கட்சி எவ்வகையிலும் பங்குகொள்ளாது புறக்கணித்துக் கொண்டது. மேற்கூறிய நிலைப்பாட்டின் மூலமாக புதிய ஜனநாயகக் கட்சி தனது மாக்சிச லெனினிச புரட்சிகர நிலைப்பாட்டிற்கு அமைய செயற்பட்டு வடபுலத்து மக்கள் மத்தியில் தனது தனித்துவத்தை நிலைநிறுத்திக் கொண்டது.

இதே காலப்பகுதியில் வடபுலத்தின் பாராளுமன்றப் பொதுவுடமைக் கட்சியானது தமது பாராளுமன்றக் கண்ணோட்டத்திற்கு அமைய இந்திய ஆளும் வர்க்கச் சார்பையே கொண்டிருந்தது. தலைமைத்துவத்தின் முடிவுகளை வடபுலத்தின் யதார்த்த நிலைமைகளைக் கவனத்தில் கொள்ளாது இவர்கள் நடைமுறைப்படுத்தினர். மாகாணசபையில் ஈ.பி.ஆர்.எல்.எவ்.



படிப்பகம்

இயக்கத்துடன் இணைந்து இப்பாராளுமன்றப் பொதுவுடமைக் கட்சி மாகாணசபை அமைச்சர் பதவியையும் பெற்றுக்கொண்டது. பாராளுமன்றத் தேர்தலிலும் பங்கு கொண்டு தமிழர் கூட்டணி சார்பில் உதயசூரியன் சின்னத்தில் ஒரு பாராளுமன்ற உறுப்புரிமையையும் அடைந்து நின்றது. இந்துக் கல்லூரியின் முன்னாள் ஊழியரான எம். நவரத்தினம் அப்பாராளுமன்றப் பதவியைப் பெற்றார். வடபுலத்து மக்களின் விருப்பு வெறுப்புகளும் அபிலாஷைகளும் வேறாக இருக்க இந்திய ராணுவப் பிரசன்னத்தின் கீழ் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பாராளுமன்ற ஆசனத்தைப் பெற்றுக்கொள்வதையே அப் பொதுவுடமைக் கட்சி குறியாகக் கொண்டிருந்தது. இது அக்கட்சியின் பாராளுமன்ற சந்தர்ப்பவாதச் சீரழிவையே எடுத்துக் காட்டி நின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 25 பொதுவுடமைக் கருத்துக்களும் புத்தூர் கிராமமும்

கடந்த நூற்றாண்டின் நடுக்கூறில் இருந்து வடபுலத்தில் பொதுவுடமைக் கருத்துக்கள் அவை சென்றடைய வேண்டிய மக்கள் பகுதியினரிடம் கணிசமான அளவுக்கு சென்று நிலைத்து வந்திருக்கிறது. சமூகத்தின் அடிநிலை வாழ்வு வாழ்ந்த மக்களிடமும் உழைப்பாளி மக்களிடமும் மட்டுமன்றி கல்வியாளர்கள் புத்திஜீவிகளிடமும் அக்கருத்துக்கள் பரவி வந்துள்ளன. ஆனால் இந்த உண்மைகளை தேசியவாதத்தில் நின்று பார்க்கும் சில ஆய்வாளர்கள் மறைத்துக் கொள்கின்றனர். வேறு சிலர் வடபுலத்தில் பொதுவுடமைக் கருத்துக்கள் புத்திஜீவிகள் மட்டத்தில் தான் இருந்து வந்ததாகக் காட்ட முற்படுகின்றனர். இவர்கள் பொதுவுடமைக் கருத்துக்களின் கடந்தகால வீச்சையும் மூச்சையும் மறைத்துக் காட்ட முற்படுவதன் மூலம் தங்களைப் பற்றி நிற்கும் தேசியவாதத்திற்கு வலுச்சேர்க்க முயலுகிறார்கள்.

இவர்கள் கைப்பிடித்து நிற்கும் தமிழ்த் தேசியவாதம் ஆயுதம் தாங்கிய போராட்டமாகி வளர்ச்சி கண்டு வந்த நிலையில் மட்டுமன்றி பல இயக்கங்கள் மக்களையும் அழித்து தங்களையும் அழிவுகளுக்கு உள்ளாக்கி வந்த சூழலிலும் பொதுவுடமைக் கருத்துக்களை உறுதியுடன் பற்றி நின்ற மக்களும் கிராமங்களும் வடபுலத்தில் இருந்து வந்துள்ளனர்.

www.padippakam.com

அத்தகைய கிராமங்களில் ஒன்றாகப் புத்தூர் வேம்பிராய் கிராமத்தை முன்னுதாரணமாகக் கொள்ள முடியும். புத்தூர் மழவராயர் குடும்ப நிலவுடமை ஆதிக்கத்தின் ஒடுக்குமுறைக் கரங்களால் அடக்கி ஒடுக்கப்பட்டு அடிநிலை வாழ்வுக்குள் வாழ நிர்பந்திக்கப்பட்ட மக்கள் தான் வேம்பிராய் கிராம மக்கள். நிலமற்ற கூலி விவசாயிகளான இம் மக்கள் சாதிய தீண்டாமைக் கொடுமையால் ஒடுக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டனர்.

அவர்களது பொருளாதார, அரசியல், கல்வி, பண்பாட்டு வளர்ச்சிகள் எனப்பட்ட யாவும் மறுக்கப்பட்டன. வெறுமனே உழைப்பதற்கும் உண்பதற்குமான மனித மந்தைக் கூட்டம் போன்றே நடாத்தப்பட்டு வந்தனர். அதேவேளை அவர்களது உழைப்பு உறிஞ்சப்பட்டது. தோட்டங்களிலும் வயல்களிலும் வீடுகளிலும் மரங்களிலும் மாடாய் உழைத்த அவர்களின் வாழ்வு வறுமையிலும் துன்பத்திலும் ஓலைக் குடிசைகளிலும் தலைமுறை தலைமுறையாகக் கழிந்து வந்தது. தமிழர்களில் ஒரு பிரிவினர் என்றோ மனிதர்களில் ஒரு பகுதியினர் என்றோ கணக்கில் கொள்ளப்படாத தாழ்த்தப்பட்ட அடிநிலை மக்களாகவே அக்கிராம மக்கள் வாழ்ந்து வந்தனர்.

இத்தகைய ஒடுக்குமுறைச் சூழலுக்கு எதிராக ஒரு சிலர் சிந்தித்தபோதிலும் அவை தாக்கம் மிக்கதாக வளர முடியவில்லை. ஒரு சனசமூக நிலையத்தை உருவாக்குவதில் அவ் ஆரம்ப சமூக அக்கறை கொண்டவர்கள் செயலாற்றி நின்றனர். இந்நிலையிலேயே 1979ம் ஆண்டில் அக் கிராமத்திற்குள் புதிய ஜனநாயகக் கட்சி காலடி எடுத்து வைத்துக் கொண்டது. மாக்சிச லெனினிச பொதுவுடமைக் கருத்துக்களை மையமாகக் கொண்ட ஒரு வேலை முறையை ஆரம்பித்தது.

ஏறத்தாழ நானூறு குடும்பங்களை உள்ளடக்கிய அக்கிராமம் பல கூறுகளாகிக் காணப்பட்டன. மக்கள் வெளி உலகத்தையோ சமூக நிகழ்வுகளையோ தெரிந்து கொள்ளாத அளவுக்கு பின்தங்கிய நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். மழவராயரின் பெயர் பெற்ற ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி இக்கிராமத்திற்கு அருகில் இருந்தும் அதன் வாசற்படி அறியாத மக்களாகப் புறக்கணிக்கப்பட்டிருந்தனர். வறுமை, கல்வியின்மை, சுகாதாரக் கேடுகள், தீமை தரும் பழக்கவழக்கங்கள், மூடநம்பிக்கைகள், நிலவுடமையாளர்களுக்கு



படிப்பகம்

www.padippakam.com

அஞ்சிப் பணிந்து நிற்கும் அடிமைத்தனம் போன்ற யாவும் அக்கிராமத்தில் மேலோங்கி நின்றன. குடியிருக்கும் நிலங்களே சொந்தமில்லாத நிலையில் கிராமத்தின் ஊடாக ஒரு பொதுப்பாதை கூட இல்லாத நிலையே அங்கு காணப்பட்டது. பண்பாட்டு வளர்ச்சி என்பது மிகப் பின்தங்கிய நிலையில் இருந்து வந்தது.

அடிநிலை மக்களைக் கொண்ட இக்கிராமத்தில் அரசியல் வேலையினை எங்கிருந்து ஆரம்பிப்பது என்பதே முதன்மையான பிரச்சினையாக எழுந்தது. வெறுமனே அரசியல் முழக்கங்களையும் கட்சியின் கொள்கைகளையும் எடுத்து விளக்கிப் பேசுவதால் பயன் ஏற்படமாட்டாது என்பதை கட்சித் தலைமை கிராமத்தின் யதார்த்த நிலைகளுக்கு ஊடாகப் புரிந்து கொண்டது.

ஆதலால் மக்கள் எதிர்நோக்கி நிற்கும் அன்றாடப் பிரச்சினைகளுக்கு எவ்வாறான தீர்வுகளை முன்வைக்கலாம் என்றும் அவற்றுக்குரிய வழிவகைகள் பற்றியும் கட்சி வகைப்படுத்திக் கொண்டது. முதலில் மக்கள் மீது நம்பிக்கை வைப்பதும் மக்களை அறிவுறுத்தி விழிப்படையச் செய்வதும் அங்கு முன் தேவையாக இருந்தது. இக்கிராமமும் மக்களும் இத்தகைய தாழ்வு நிலையில் இருந்து வருவதற்கான அடிப்படைக் காரணங்களை கட்சி முன்வைத்து விளக்கியது. மக்கள் மத்தியில் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிச்சமிட்டுக் காட்டியது. மக்கள் ஐக்கியப்பட்டு நின்றால் சாதிக்கக்கூடிய சாதனைகளின் தன்மையை முன் அனுபவங்கள் உதாரணங்கள் மூலம் சுட்டிக்காட்டியது.

இவற்றை முன்னெடுப்பதற்கு முன்னணிப்படை போன்று கட்சி அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. ஆரம்பத்தில் பத்துக்கு உட்பட்ட சமூக அக்கறையும் அரசியல் விழிப்புணர்வு பெற வேண்டும் என்ற அவாவும் கொண்ட இளைஞர்களே கட்சி அமைப்புக்கு முன்வந்தனர். உறுதியும் உத்வேகமும் கொண்ட அவ் இளைஞர்கள் விரைவாகவே அரசியல் உணர்வு பெற்றவர்களாகிக் கொண்டனர். கிராமத்திலும் மக்கள் மத்தியிலும் கருத்துக்கள் ரீதியாகவும் நடைமுறை வழிகளாலும் மாற்றங்களை கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கை வளர ஆரம்பித்தது. புதிய கருத்துக்கள் புரட்சிகரமான பேச்சுக்கள் இளைஞர்கள் மத்தியில் பற்றிப் பரவி வந்தன. நமக்குரியவற்றை நாமே போராடிப்



படிப்பகம்

பெறவேண்டும் என்ற தன் நம்பிக்கை வளரலாயிற்று. தோழர் மாஓசேதுங் ஒருமுறை கூறியது போன்று ''மக்கள் கிறுக்குப்படாத வெள்ளைத் தாள்கள் போன்றவர்கள். அவர்களிடம் சரியான அரசியல் கருத்துக்களை எடுத்துச் சென்றால் அங்கே அழகான சித்திரங்களைத் தீட்டிக்கொள்ள முடியும்'' இந்த நடைமுறை உண்மையினை புத்தூர் கிராமத்தில் முன்னெடுக்கப்பட்ட அரசியல் வேலைமுறையில் காணமுடிந்தது.

நிலவுடமையாளர்களான உயர் சாதிய மேட்டுக்குடியினரின் முன்னே கூனிக்குறுகி நின்ற மக்கள் எழுந்து நின்று நியாயம் கேட்க ஆரம்பித்தனர். நாங்களும் இந்த சமூகத்தில் மனிதர்கள்தான். ஆற்றல் மிக்க உழைப்பாளர்களாகிய எங்களது உழைப்பில் தான் உங்களது சொத்துக்களும் சுகங்களும் தேடப்பட்டன என்பதை உறுதிப்பட எடுத்துக்கூறும் நிலைக்கு இளைஞர்கள் வளர்ச்சி பெற்றனர். மக்களது ஐக்கியமும் போராட்டமும் எவற்றையெல்லாம் சாதிக்க வல்லன என்பதை மக்கள் நடைமுறையில் கண்டனர். அன்றுவரை அக்கிராமத்திற்கு பொதுப்பாதை ஒன்றில்லாத நிலை இருந்து வந்தது. முழு மக்களும் ஒன்று திரண்டு நிலவுடமையாளர்களின் அனுமதி இன்றியே தமது கிராமத்திற்குரிய பொதுப்பாதையினை உருவாக்கி நிலைநாட்டினர். நிலவுடமையாளர்கள் பொலிஸ் மூலம் எடுத்த எதிர் நடவடிக்கை மக்களை ஆத்திரமடையச் செய்து மேலும் ஐக்கியத்தை உருவாக்கியது. பொலிஸ் கெடுபிடிகளுக்கு முன்னணியில் நின்ற தோழர்கள் ஆளாகினர். ஆனால் பொலிசாரோ அன்றி சாதியவெறியர்களோ முன்னைய காலங்கள் போன்று மக்கள் மீது அடாவடித்தனங்களோ அட்டூழியங்களோ செய்யத் துணிய முடியாத அளவுக்கு மக்கள் போராட்ட ஐக்கியத்தில் முன் நின்றனர்.

நான்கு பிரிவுகளாக இருந்து வந்த மக்கள் ஒரே சனசமூக நிலையத்தின் கீழ் ஒன்றுபட்டு ஜனநாயக வழிமுறைகள் மூலம் கிராமத்தில் எழும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டன. மக்கள் விசாரணை மன்றம் ஒன்றை ஏற்படுத்தி மக்கள் மத்தியிலான சச்சரவுகள் முரண்பாடுகள் தீர்க்கப்படவும் அதற்கான முடிவுகளை மக்கள் ஏற்று செயல்படவும் செய்தனர். இதனால் அக்கிராம மக்கள் பொலிஸ் நிலையங்களுக்கோ நீதிமன்றங்களுக்கோ செல்லாது விடும் நிலை உருவாகியது.

அக்கிராமத்தின் கல்வி நிலை மிகமிகப் பின்தங்கியதாக இருந்து வந்தது. எனவே பாலர் வகுப்பில் இருந்து பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்புவதற்கு கடுமையான பிரசாரங்கள் பெற்றோர் மத்தியில் முன்னெடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் மூலம் கல்விப் பொதுத்தராதர சாதாரண/உயர்தர வகுப்புக்கள் வரை கல்வித்தரம் உயர்வடையச் செய்யப்பட்டது. ஆரம்பத்திலிருந்து இக்கிராம மக்களுக்கு மறுக்கப்பட்ட கல்வி உரிமை புத்தூர் சிறிசோமாஸ்கந்த கல்லூரியில் கடுமையான போராட்ட முயற்சிகளுக்குப் பின்பே வென்றெடுக்கப்பட்டது. இப்போதும் பாகுபாடு புறக்கணிப்பு போன்றவற்றின் ஊடாகவே இம் மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். மேலும் வயது வந்தவர்களுக்கான கல்வியை சனசமுக நிலையத்தின் ஊடாக கொடுத்ததன் மூலம் பலர் எழுதவாசிக்க கற்றுக் கொண்டனர். சிறுவர் முன் பள்ளித்திட்டத்தை விரிவுபடுத்தி ஒருங்கமைப்பதில் முழுக் கவனம் செலுத்தப்பட்டது. கல்வி பண்பாட்டு வளர்ச்சிக்கான தேவைக்கென நூறு அடிகள் நீளமான இருபத்திரண்டு அடிகள் அகலமான பொதுமண்டபம் ஒன்றை மக்களது முழுமையான பங்களிப்புடன் கட்டி முடித்து பயன்படுத்தப்பட்டு வருகின்றது. சிறுவர் முதல் வயது வந்தவர்கள்வரை கலந்து கொள்ளும் நாடக முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. நவயுக நாடக மன்றம் உருவாக்கப்பட்டு நான்கு நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன.

இக்கிராமம் பின்தங்கிய சூழலில் இருந்து வந்தமையால் கசிப்புப் பாவனை மீது கடுமையான கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன. எண்பதுகளின் பிற்பகுதியில் கசிப்பு உற்பத்தி, விற்பனை, விநியோகம் யாவும் தடுக்கப்பட்டன. வேறு ஊர்களைச் சேர்ந்தோர் கூட இக் கிராமத்தின் ஊடாக கசிப்பு எடுத்து வரப்படுவது தடுத்து நிறுத்தப்பட்டது. மக்கள் மத்தியில் செய்யப்பட்ட விழிப்புணர்வுப் பிரசாரங்கள் தகுந்த பலனைத் தந்தன.

மேலும் நிலவுடமையாளர்கள் முன்பு போல் நினைத்த வேளைகளில் தமது அடாவடித்தனங்களைச் செய்யவோ சாதிய தீண்டாமை ஒடுக்குமுறை நடைமுறைகளைப் பிரயோகிக்கவோ முடியாத அளவுக்கு மக்கள் அரசியல் விழிப்புணர்வும் ஐக்கியப்பட்ட போராட்ட நிலையிலும் மாற்றமடைந்து நின்றனர். இதனால் தத்தமது நிலங்களை அந் நிலங்களில் குடியிருந்துவந்த மக்களுக்கு விற்பனை செய்யும் நிர்பந்தத்திற்கு நிலவுடமையாளர்கள்

www.padippakam.com

உள்ளாகினர். மக்களுக்கு குறைந்த விலையில் நிலத்தைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் கலைமதி சனசமூக நிலைய நிர்வாகம் மிகுந்த முன் முயற்சியுடன் தொடர்ச்சியாகச் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

கலைமதி சனசமூக நிலையம் விளையாட்டுத்துறையை விருத்திசெய்து கிராம இல்ல விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி சிறுவர் இளைஞர் யுவதிகளின் உடல் உள வளர்ச்சியில் அக்கறை செலுத்தி வந்தது. உழைக்கும் இளைஞர்களின் ஆற்றலானது கரப்பந்தாட்டத்தில் மிகவும் பெயர் பெற்ற அணிகள் உருவாகக் காரணமாகியது.

சனசமூக நிலையத்தின் ஊடாக பல்வேறு ஆக்க முயற்சிகளும் பரீட்சார்த்த செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. சனசமூக நிலையம் நூல்களைச் சேகரித்து பேராசிரியர் க. கைலாசபதி நினைவாக 'கைலாசபதி நூலகம்' ஒன்றினைத் திறந்து செயற்படுத்தியது. மக்களால் உருவாக்கப்பட்டு மக்களால் நடாத்தப்பட்டு மக்களுக்கே சேவை செய்து வந்த கலைமதி சனசமூக கட்டிடமும் கைலாசபதி நூலகமும் 1995ன் பேரினவாத ராணுவ நடவடிக்கையால் தரைமட்டம் ஆக்கப்பட்ட துயரம் நடந்தேறியது. ஆனால் மக்கள் அவற்றை மீண்டும் கட்டியெழுப்பி வருகின்றமை அவர்களது ஐக்கியப்பட்ட உணர்வை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இளைஞர்கள் மத்தியில் மாக்சிச லெனினிச பொதுவுடமைக் கருத்துக்களும் அவை சார்ந்த அரசியல் உணர்வும் வளர்ச்சி கண்டு வந்துள்ளன. கட்சியும் இளைஞர் அணியும் அக்கிராம மக்களின் அன்றாட வாழ்விலும் கிராமத்தின் முன்னேற்றங்களிலும் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டுவரும் நிலை தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது.

நிலவுடமையின் சாதிய தீண்டாமை ஒடுக்குமுறையால் கொடுமைகளுக்கு உள்ளாகி அடிநிலை வாழ்வு வாழ்ந்து வந்த மக்களிடையே ஒரு புதிய திசையைக் காட்டி நின்றது புரட்சிகர பொதுவுடமை அரசியலேயாகும். புதிய ஜனநாயகக் கட்சியின் தலைமை சரியானதும் நிதானமானதுமான தலைமைத்துவ வழிகாட்டலை கட்சி இளைஞர் அமைப்புக்கள் ஊடாக வழங்கி



படிப்பகம்

www.padippakam.com

நின்றமை அடிப்படையானதாகும். சமூக விடுதலைக்கும் சமூக மாற்றத்திற்குமான மாக்சிச லெனினிச மாஓசேதுங் சிந்தனையிலான கருத்துக்கள் சரியான அடிப்படையில் மக்கள் மத்திக்கு சென்றடைந்தால் மக்கள் அவற்றைப் பற்றிக்கொள்ளவே செய்வார்கள். அதன் மூலம் ஆற்றல் மிக்கவர்களாகவும் அந்தஸ்து கொண்டவர்களாகவும் தலை நிமிர்ந்து சொந்தக் கால்களில் எழுந்து நிற்கவே செய்வார்கள். அத்தகைய மக்களை எத்தகைய பிற்போக்கு சக்திகளாலும் வெற்றி கொள்ள முடியாது. இது உலக வரலாற்றில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் நிகழ்த்திக் காட்டிய புரட்சிகரச் சாதனைகளாகும். அதன் சிறு துளிகளையாவது புத்தூர் வேம்பிராய் கிராமத்திலே புதிய ஜனநாயகக் கட்சி முன்னெடுத்த வேலைமுறைகளால் காண முடிந்தது.

இங்கே முக்கியமானது யாதெனில் தமிழ்த்தேசியவாதம் ஆயுதம் தாங்கிய நிலையில் பல்வேறு இயக்கங்களாக நின்று கண்மூடித்தனமாக செயற்பட்டு வந்த சூழலிலும் இக்கிராம மக்களும் இளைஞர் யுவதிகளும் அவற்றுக்குள் சென்று அமிழ்ந்து விடாது மாக்சிசம் லெனினிசம் காட்டி நின்ற பாட்டாளி வர்க்க அரசியல் மார்க்கத்தில் நின்று வந்தமையேயாகும்.

கடந்த இருபத்திமூன்று வருடங்களில் இக் கிராமத்தின் மாற்றத்திற்கான அரசியல் தலைமைத்துவத்தை ஏற்று தொடர்ச்சியாகச் செயற்பட்டு வந்த தோழர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் தியாக மனப்பான்மையுடன் வழிநடந்து வந்திருக்கிறார்கள். கட்சிக்கும் மக்களுக்கும் விசுவாசமாகவும் நேர்மையாகவும் இருந்து சேவையாற்றி வந்துள்ளனர். நெருக்கடிகள் பிரச்சினைகள் அச்சுறுத்தல்கள் ஏற்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமது உறுதியையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்தி பாட்டாளி வர்க்க அரசியலை முதன்மைப்படுத்தி நின்றிருக்கிறார்கள். இத்தகைய செழுமையான அனுபவத்தின் ஊடே எதிர்காலத்தில் மேலும் உறுதியுடன் முன்செல்லும் திடசங்கற்பத்துடன் கட்சித் தோழர்களும் மக்களும் இருந்து வருகின்றார்கள். இத்தகைய நிலை வடபுலத்து பொதுவுடமை இயக்கத்தின் வரலாற்று வளர்ச்சியில் ஒரு சிறந்த முன்னுதாரணம் என்று துணிந்து கூறலாம்.

இந்திய ராணுவம் இங்கு நிலைகொண்டிருந்த காலத்தில் இக் கிராமத்திற்கு வெளியே இடம்பெற்ற தாக்குதல் சம்பவம்



படிப்பகம்

www.padippakam.com

காரணமாக மூன்று பேர் இந்திய ராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகினார்கள். அம்மூவரும் கிராமம், சனசமூக நிலையம் என்பனவற்றில் சமூக அக்கறையுடன் செயற்பட்டு வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்திய ராணுவம் வடக்கு கிழக்கில் காலடி எடுத்து வைத்து நிலைகொண்டபின் இக்கிராமத்தில் கட்சி ஒரு பொதுக்கூட்டத்தை நடாத்தி இந்திய ராணுவ வருகையால் ஏற்படக்கூடிய அபாயத்தை கூறி வைத்தமை இங்கு நினைவு கூரத்தக்கவையாகும்.

## 26 தேர்தல்களும் பொதுவுடமை இயக்கமும்

இலங்கையில் பாராளுமன்ற ஜனநாயகத் தேர்தல் நடைமுறைக்கு வருவதற்கு முன்பிருந்த இடதுசாரிகள் கொலனித்துவ ஆட்சியின் கீழான தேர்தல்களில் பங்குகொண்டு வந்திருக்கிறார்கள். 1931ம் ஆண்டின் டொனமூர் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய இடம்பெற்ற முதலாவது சட்டசபைத் தேர்தலில் தெற்கில் இருந்து இடதுசாரியும் பின்பு பொதுவுடமை இயக்கத்தின் தலைவராகவும் திகழ்ந்த டாக்டர் எஸ்.ஏ. விக்கிரமசிங்கா தெரிவு செய்யப்பட்டார். அன்றைய காலனித்துவ அரசாங்க சபையில் அவரது பிரதிநிதித்துவம் பயன் உள்ளதாகவும் மக்கள் சார்பான பல்வேறு விடயங்களை எடுத்துக் கூறவும் முடிந்த சந்தர்ப்பமாகியது ஓர் அம்சமாகும்.

ஆனால் 1931ல் இத்தேர்தலின் போது இடம்பெற்ற ஒரு சம்பவம் பற்றி குறிப்பிட்டே ஆக வேண்டும். இத்தேர்தலைப் புறக்கணிப்பதற்கு வடபுலத்தில் அன்றைய யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் முன் வந்தது. அத்தீர்மானம் பற்றி தென் இலங்கையின் அரசியல் சக்திகளோடு வாலிபர் காங்கிரசினர் பேச்சுவார்த்தை நடாத்தினர். குறிப்பாக இடதுசாரி ஜனநாயக நோக்கங்களோடு இயங்கி வந்த தெற்கின் வாலிபர் அமைப்புகளின் தலைமைகளோடு பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன. இத்தேர்தலை புறக்கணிப்பதற்கு யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் முன்வைத்த முக்கிய கோரிக்கை பிரித்தானியா இலங்கைக்கு பூரண சுதந்திரம் வழங்கவில்லை என்பதும் டொனமூர் ஆணைக்குழு சுதந்திரத்திற்கும் இலங்கை மக்களின் சுய ஆட்சிக்கும் உரிய பரிந்துரைகளை வழங்கவில்லை



படிப்பகம்

www.padippakam.com

என்பதுமாகும். இக் கோரிக்கையை ஆரம்பத்தில் தெற்கின் முற்போக்கான தேசிய சக்திகள் ஆதரித்து தேர்தல் புறக்கணிப்பை நடாத்த முன்வந்தன. ஆனால் இறுதி நேரத்தில் அவை புறக்கணிப்பு முடிவைக் கைவிட்டு அத்தேர்தலில் பங்குகொண்டன. ஆனால் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் அத் தேர்தலை வெற்றிகரமாகப் புறக்கணித்து மக்களது ஆதரவோடு கொலனிய நிர்வாகத்தின் முகத்தில் ஓங்கி அறைந்து கொண்டது. முதலாவது அரசாங்க சபையில் வடபுலத்திற்கு ஒதுக்கப்பட்ட நான்கு ஆசனங்களுக்கு எவருமே போட்டியிடாத ஒரு புரட்சிகரமான நிலை தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் இதில் உள்ள மற்றொரு அம்சம் என்னவெனில் இப்புறக்கணிப்பைப் பற்றி வடக்கின் ஆதிக்க அரசியல் சக்திகள் ''தூர நோக்கற்ற முட்டாள்தன முடிவு'' எனக் கூறிக் கொண்ட அதேவேளை தெற்கின் இடதுசாரி சக்திகள் இது ஒரு ''இனவாத நோக்கம் கொண்ட தேர்தல் புறக்கணிப்பு'' எனக்கூறிக் கொண்டமை சோகமானதாகும். ஆனால் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசைப் பொறுத்தவரை துளியளவும் இனவாதமற்ற மிகவும் முற்போக்கான தேசியக் கோரிக்கைகளையே கொண்டிருந்தது என்பது திரிபுகளுக்கு அப்பாற்பட்ட வரலாற்று உண்மையாகும்.

இத்தகைய வடபுலச் சூழலில் 1947ம் ஆண்டிலிருந்து பொதுவுடமைக் கட்சி தேர்தல்களில் பங்குகொண்டு வந்துள்ளது. இதுபற்றி ஓரளவுக்கு விரிவாக முன்னைய பக்கங்களில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு உள்ளூராட்சி, பாராளுமன்றத் தேர்தல்களில் பொதுவுடமை இயக்கம் பங்கு பற்றியதன் மூலம் சாதகமான அம்சங்கள் சில கிடைக்கப்பட்டிருந்தன என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதேயாகும். அதேவேளை படிப்படியாக ஒரு பொதுவுடமைக் கட்சியின் புரட்சிகர வேலைத் திட்டம் முன்னெடுப்பதற்குப் பதிலாக முற்று முழுதான பாராளுமன்றக் கண்ணோட்டத்தில் அமைந்த வேலை முறைக்கே இட்டுச் சென்றது.

ஆனால் 1964ல் பழைய கட்சியிலிருந்து தோற்றம் பெற்ற புதிய பொதுவுடமைக் கட்சியானது 1965ம் ஆண்டு பொதுத்தேர்தலில் பங்குகொண்ட தனது அடையாளத்தை நிலை நிறுத்தியது. ஆனால் அதன் பின் வந்த காலத்தில் கட்சியின் 9வது காங்கிரஸ் முடிவுக்கு அமைய புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களின் மத்தியில் 1970ம், 1977ம் ஆண்டுகளின் பொதுத் தேர்தல்களை முற்றாக பகிஷ்கரித்துக் கொண்டது. இப் பகிஷ்கரிப்பும் பங்கு



படிப்பகம்

www.padippakam.com

கொள்ளாமையும் 2000ம் ஆண்டுப் பொதுத் தேர்தல் வரை நீடித்தது. 1977ம் ஆண்டு பொதுத் தேர்தல் பகிஷ்கரிப்பு பரவலான கூட்டங்கள் கருத்தரங்குகள் மூலம் முன்னெடுக்கப்பட்டது. பண்டத்தரிப்பு காலையடியில் இடம்பெற்ற கூட்டம் கைத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் முடிவுற்றது. இதில் தோழர்கள் கே.ஏ. சுப்பிரமணியம், சோ. தேவராஜா, ந. இரவீந்திரன், க. தயாளன் உட்பட தோழர்கள் கைதுக்கும் வழக்கிற்கும் உள்ளாகினர்.

1978ம் ஆண்டுக்குப் பின் புதிய ஜனநாயக கட்சி (இலங்கை பொதுவுடமைக் கட்சி (இடது)) இத் தேர்தல் பகிஷ்கரிப்பு பற்றியும் நமது அரசியல் சமூக நிலைகள் பற்றியும் ஆழமாகப் பரிசீலித்து மறுமதிப்பீட்டிற்கு வந்துகொண்டது. அதன் அடிப்படையில் கட்சிக்கும் மக்களுக்கும் சாதகமான சூழ்நிலைகள் நிலவுமிடத்து தேர்தல்களில் பங்கு கொள்வதென கட்சியின் 1984ன் முதலாவது தேசிய காங்கிரஸ் தீர்மானித்துக் கொண்டது. அதன்பின் இடம்பெற்ற 1988ம், 1994ம் ஆண்டுகளின் பொதுத்தேர்தல்கள் குறைந்த பட்ச பாராளுமன்ற ஜனநாயகத்தின் கீழ் இடம் பெறவில்லை. அவை பெயரளவில் மட்டுமே தேர்தல்களாக இருந்தன. இந்திய, இலங்கை ராணுவக் கெடுபிடிகளின் மத்தியிலேயே அத் தேர்தல்கள் இடம்பெற்றன. ஆதலால் இவ்விரு தேர்தல்களையும் கட்சி நிராகரித்துக் கொண்டது. அதன் அடிப்படையில் ஜே.ஆர். ஆட்சியின் கீழ் இடம்பெற்ற சர்வசன வாக்கெடுப்பில் கட்சி யூ.என்.பி. எதிர்ப்புச் சின்னமான பானைக்கு வாக்களிக்குமாறு வடபுலத்தில் பலத்த பிரச்சாரம் செய்தது. மக்கள் மிகப்பெரும் ஆதரவை பானைக்கு வாக்கிட்டு வழங்கினர். அவ்வாறே ஜனாதிபதித் தேர்தலிலும் யூ.என்.பியை எதிர்த்த வேட்பாளர் சிறிமாவிற்கு கட்சி ஆதரவாக வேலை செய்து கொண்டது.

ஆனால் 2000ம், 2001ம் ஆண்டுகளிலான தேர்தல்கள் முன்னைய தேர்தல்கள் போலன்றி குறிப்பிடத்தக்க ஜனநாயகச் சூழலில் இடம் பெற்றன. ஆயினும் சில முனை அச்சுறுத்தல்கள் உள்ளூர இருக்கவே செய்தன. இருப்பினும் இத்தேர்தல்களில் யாழ் மாவட்டத்தில் கட்சி ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தேர்தல் சின்னமான மணிக்கூடு சின்னத்தில் போட்டியிட்டது. தோழர், சி.கா. செந்திவேல் முதன்மை வேட்பாளராகவும் தோழர் சோ. தேவராஜா பிரதான வேட்பாளராகவும் மற்றும் தோழர்கள் கா. கதிர்காமநாதன், இ.கா. சூடாமணி, கா. பஞ்சலிங்கம்,



படிப்பகம்

www.padippakam.com

தி.ஶராம்குமார், சந்திரா நவரட்ணம் ஆகியோர் இத்தேர்தல் பட்டியலில் இடம்பெற்றனர். 2000ம் ஆண்டு தேர்தலில் ஒருவரைத் தவிர ஏனைய கட்சியின் உறுப்பினர்கள் இருந்தனர். 2001ம் ஆண்டுத் தேர்தலில் இடதுசாரி ஜனநாயக சக்திகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் வேட்பாளர்கள் கட்சியின் பட்டியலில் இணைந்து கொண்டனர். மு. தியாகராசா, க. ஆனந்தகுமாரசுவாமி, க. வேலும் மயிலும், வீ. இரகுநாதன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்விரண்டு தேர்தல்களிலும் வடபுலத்தில் எமது கட்சியின் அடையாளம் மட்டுமன்றி ஒரேயொரு இடதுசாரி பொதுவுடமைக் கட்சியாக நின்று போட்டியிட்டு தனது தனித்துவத்தை வெளிப்படுத்த முடிந்தமை குறிப்பிடத்தக்கதாகும். சாராம்சத்தில் பாராளுமன்றத் தேர்தல் ஆயினும் வடபுலத்துச் சூழலில் கட்சி பங்கு கொண்டமை மிகவும் துணிவானதும் புரட்சிகரமானதும் மக்கள் மத்தியில் நம்பிக்கையை அளிப்பதுமாக இருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அதேவேளை தமிழர் தேசியக் கூட்டமைப்பினரையும், ஈ.பி.டி.பி.யையும் எதிர்த்து எமது கொள்கைகளை மக்கள் மத்தியில் எடுத்துக் கூறவும் மேற்கூறிய சக்திகளின் ஆதிக்க அரசியலின் தவறுகள் துரோகத்தனங்களையும் அம்பலப்படுத்துவதற்கும் இத் தேர்தல் தகுந்த சந்தர்ப்பமாகவும் அமைந்து கொண்டது. அதனை மாக்சிச லெனினிசக் கட்சியான புதிய ஜனநாயகக் கட்சி உரியவாறு பயன்படுத்திக் கொண்டது. அதேவேளை பாராளுமன்றக் கண்ணோட்டம் அதற்கான வேலை முறை என்பனவற்றைப் பற்றியும் அதன் பாதிப்புக்கள் கட்சிக்குள் எழாதவாறும் தடுத்தும் கொண்டது. எனவே பாராளுமன்றத் தேர்தல் அதன் ஜனநாயகம் பற்றிய கண்ணோட்டத்தில் ஒருமுனைவாத விறைப்பான கொள்கையை கொண்டிருப்பதற்குப் பதிலாக இடம், காலம், சூழல் என்பனவற்றைக் கருத்தில் கொண்டு கட்சிக்கும் மக்களுக்கும் பயன் அளிக்கும் வகையிலான கொள்கையே முன்னெடுக்கப்பட்டது. நடைமுறையில் அது பயனளித்தது என்பதையும் காண முடிந்தது.

## 27 தேசிய இனப்பிரச்சினையும் பொதுவுடமை இயக்கமும்

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை என்பது இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் பகை நிலை நோக்கி வளர்க்கப்பட்டதன் விளைவானதாகும். கடந்த நூற்றாண்டு முழுவதும்



படிப்பகம்

www.padippakam.com

இலங்கையின் நிலவுடமை முதலாளித்துவ சுரண்டும் வர்க்க சக்திகள் தங்களது வர்க்க நோக்கங்களை ஈடேற்றி நிலைநிறுத்திக் கொள்வதற்காக இன முரண்பாட்டினை இன ஒடுக்குமுறையாக்கிக் கொண்டன. இதனை எதிர்த்து எழுந்த தமிழர் போராட்டங்கள் அகிம்சை நிலையில் இருந்து ஆயுதம் தங்கிய போராட்டமாக வளர்ச்சி கண்டது. அதனை ஒடுக்குவதற்காக கடந்த கால்நூற்றாண்டு காலத்தில் பேரினவாத ராணுவ ஒடுக்குமுறை தமிழர் மீது ஏவப்பட்டு வந்தது. அதுவே இலங்கை இதுவரை கண்டிராத கொடிய யுத்தமாகிக் கொண்டது.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையானது தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் தேசிய இனங்களை உள்ளடக்கிய தொன்றாகும். வடக்கு கிழக்கிலும், மலையகத்திலும் மற்றும் பிரதேசங்களிலும் வாழ்ந்து வரும் இம் மக்களுக்கு எதிரான பாகுபாடு, புறக்கணிப்பு, உரிமை மறுப்புக்கள், திட்டமிட்ட நில நீர் மறுப்புகள்-திணிப்புகள், வன்முறைகள், இரண்டாம் தர நடைமுறைகள் போன்றன வெவ்வேறு வடிவங்களிலும் அளவுகளிலும் இனவாத வன்மத்துடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளன. இத்தகைய இன ஒடுக்குமுறை வளர்ச்சிப் போக்கில் தமிழ் மக்களுக்கும் பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்குமிடையிலான முரண்பாடும் போராட்டமும் முதன்மை நிலைக்கு வந்து கொண்டன.

இலங்கையின் இன்றைய பிரதான முரண்பாடாகவும் போராட்டமாகவும் காணப்படும் தேசிய இனப் பிரச்சினையை பொதுவுடமை இயக்கம் எவ்வாறு எதிர்கொண்டு வந்தது என்பது கவனத்திற்குரிய ஒன்றாகும். இலங்கையில் பொதுவுடமை இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட நாற்பதுகளின் முற் கூறில் தேசிய இனப்பிரச்சினை வெளிப்படையான கூர்மை நிலையினை அடைந்து கொள்ளவில்லை. ஆனால் சுதந்திரம் எனக்கூறப்பட்டு ஆட்சி அதிகாரம் நிலவுடமை முதலாளித்துவ மேட்டுக்குடி வர்க்கத்திடம் கையளிக்கப்பட்டதுடன் இன ஒடுக்குமுறைகள் ஒன்றன்பின் ஒன்றாக வெளிவர ஆரம்பித்தன. முதலிலே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்திட்டம் அடுத்து மலையகத் தமிழர்களுக்கு எதிரான பிரஜாவுரிமை-வாக்குரிமைப் பறிப்பு இடம் பெற்றன. இதனைத் தொடர்ந்து தனிச் சிங்கள மொழிச்சட்டம் கொண்டுவரப்பட்டது. அதனைத் தொடர்ந்து இன வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

மேற்கூறியவற்றில் படிந்திருந்த இன வாதத்தையும் இன



படிப்பகம்

www.padippakam.com

ஒடுக்குமுறை அம்சங்களையும் அன்றைய பொதுவுடமைக் கட்சி வன்மையாக எதிர்த்து நின்றது. பாராளுமன்றத்தில் இடம் பெற்ற பிரதான பிரச்சினைகளுக்கான விவாதங்களிலும் அதற்கு வெளியில் இடம் பெற்ற செயற்பாடுகளிலும் தமது இனவாதத்துக்கு விரோதமான நிலைப்பாட்டை வற்புறுத்தி வந்தது. ஜே.ஆர். ஐக்கிய தேசியக் கட்சியின் களனி மாநாட்டில் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டுவருவது பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றியபோது அதன் எதிர் விளைவைப் பொதுவுடமைக் கட்சி எடுத்துக் கூறி கண்டித்தது. அதனை பின்பு எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா சட்டமாகக் கொண்டுவந்து நிறைவேற்றியபோது பொதுவுடமைக் கட்சி பாராளுமன்றத்தில் எதிர்த்து நின்றது. பின்பு அச்சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட தமிழ் மொழிப் பிரயோக திருத்த சட்டமூலத்தையும் ஆதரித்து நின்றது. இத்தனிச் சிங்களச் சட்டமூலம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பாகவே பொதுவுடமைக் கட்சி இனப்பிரச்சினையின் எதிர்கால வளர்ச்சி பகை நிலைக்குச் செல்வதைச் சுட்டிக்காட்டி அதனைத் தடுப்பதற்கு பிரதேச சுயாட்சி வழங்கப்படுவதன் அவசியத்தை வற்புறுத்தி நின்றது. அதனை முன்பு குறிப்பிட்டவாறு வடபுலத்தில் ''வல்வெட்டித்துறைத் தீர்மானமாகவும்'' நிறைவேற்றிக் கொண்டது.

இவ்வாறு பொதுவுடமைக் கட்சி அறுபதுகளின் முற்கூறுவரை இனப்பிரச்சினையில் சாதகமான தீர்மானங்களையும் நடைமுறைகளையும் பின்பற்றி வந்தபோதிலும் தமிழ்ப் பாராளுமன்றத் தலைமைகள் தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி பின் தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன பொதுவுடமைக் கட்சியை வளர்ந்து கொண்டிருந்த தேசிய இனப்பிரச்சினையில் ஒரு நட்பு சக்தியாகப் பார்த்ததோ அரவணைத்ததோ கிடையாது. இதற்கு அத்தலைமைகள் இரண்டு அடிப்படையிலான காரணங்களைக் கொண்டிருந்தன. ஒன்று, அவர்களின் சைவ-கிறிஸ்தவ வேளாள மேட்டுக்குடி சார்ந்த உயர் வர்க்க நிலைப்பாடு. இரண்டாவது பாராளுமன்ற ஆசனங்களை கைப்பற்றும் நோக்கும் போக்குமாகும். அதேவேளை பொதுவுடமை இயக்கம் தனது மாக்சிச உலக நோக்கிற்கு ஏற்றவாறான வர்க்க நிலைப்பாட்டைக் கொண்டிருந்தமையால் தமிழர்கள் மத்தியில் தொழிலாளர்கள் விவசாயிகள் தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் உழைக்கும் மக்களினது அடிப்படை நலன்களுக்கு ஊடாகவே தமது கொள்கைகளையும் தீர்மானங்களையும் வடபுலத்தில் முன்னெடுத்து வந்தமையாகும்.



படிப்பகம்

இவ்வாறு தேசிய இனப்பிரச்சினையில் அறுபதுகளின் முற்கூறுவரை பொதுவுடமைக் கட்சியோ மற்றொரு இடதுசாரிக் கட்சியான சமசமாஜக் கட்சியோ கடைப்பிடித்த சாதகமான அம்சங்கள் பற்றி எந்தவொரு தமிழ்க்கட்சியும் வாய்திறந்து நேர்மையாக உண்மை பேசியது கிடையாது. ஆனால் அவ் இடதுசாரிக் கட்சிகள் முற்றுமுழுதாகப் பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்திற்குள் சென்று சீரழிந்த பின் எடுத்துக்கொண்ட சில தவறான அணுகுமுறைகளை மாத்திரமே பெரிதாக ஓலமிட்டுக் காட்டி இடதுசாரிகள் தமிழர் விரோதமானவர்கள் என்ற தோற்றத்தைத் தமிழ் மக்கள் நடுவே பரப்பினர். இருப்பினும் இந்த பாராளுமன்ற இடதுசாரிகள் விட்ட தவறுகள் எனப்படுவனவற்றைத் தொகுத்து தமிழ்த் தலைமைகள் தமது வர்க்க நலன்களுக்காக செய்து கொண்ட தவறுகள் துரோகத்தனங்களுக்கு அருகே வைத்துப் பார்த்தால் இடதுசாரிகள் செய்துகொண்டவற்றை விடப் பலமடங்கு பாரியனவான கனதி மிக்க தவறுகளைத் தமிழர் தலைமைகள் செய்து வந்தமையைக் கண்டுகொள்ள முடியும். ஆனால் அவர்கள் தமது பழமைவாத சாதிய மேட்டுக்குடி ஆதிக்க அரசியல் நிலைப்பாட்டால் அத்தவறுகள் துரோகத்தனங்கள் அழிவுகளை மூடிக்கட்டிக் கொண்டனர். இவைபற்றி விரிவாக எழுதும் மற்றொரு சந்தர்ப்பத்தில் பல விடயங்களை வெளிச்சத்திற்கு கொண்டுவர முடியும்.

பாராளுமன்ற பொதுவுடமைக் கட்சியானது 1960களின் ஆரம்பத்துடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் உறவு பூண்டு முற்றுமுழுதான பாராளுமன்றப் பாதையில் பயணித்து பங்காளிகளாகி அரசாங்கத்தில் பங்கு கொண்டபின் அவர்கள் இழைத்த தவறுகளை நியாயப்படுத்தவோ மூடி மறைக்கவோ முடியாது. ஆனால் அவர்கள் பேரினவாதத்தை முன் நின்று நடைமுறைப்படுத்தாவிடினும் ஐக்கிய முன்னணி ஆட்சி நடைமுறைப்படுத்திய தமிழர் விரோத நடவடிக்கைகளை எதிர்க்காது மௌனம் காத்து துணை போனமையை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அதேவேளை வடபுலத்தில் 1964க்குப் பின்பு மாக்சிச லெனினிசப் பொதுவுடமைக் கட்சி பரந்தளவில் தொழிலாளர்கள் விவசாயிகள் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் புரட்சிகரப் போராட்ட நிலைப்பாட்டில் இருந்து சமூக நீதிக்கான பல போராட்டங்களை

www.padippakam.com

முன்னெடுத்து வந்துள்ளது. அத்தகைய போராட்டங்களில் அலை அலையாக பங்கேற்றவர்களும் போராட்டங்களில் ஈடுபட்டவர்களும் அவற்றுக்குத் தலைமை தாங்கி நின்றவர்களும் வடபுலத்து தமிழர்கள்தான். அவர்கள் வெளியில் இருந்து வந்தவர்களோ வேற்று இனத்தவர்களோ மதத்தவர்களோ அல்லர். அப்படி இருந்தும் மாக்சிச லெனினிசப் பொதுவுடமைக் கட்சி நடாத்திய வெகுஜனப் புரட்சிகரப் போராட்டங்களையோ அன்றி தொழிலாளர்கள் விவசாயிகளின் கோரிக்கைகளையோ எந்தவொரு தமிழ்த் தலைமையும் எச்சந்தர்ப்பத்திலும் ஆதரித்து நின்றதில்லை. ஏன் என்பதுதான் பிரதான கேள்வியாகிறது.

இங்கேதான் ஒரு உண்மை தெளிவாகின்றது. எந்தவொரு கட்சியும் எவ்வளவிற்கு இனம், மொழி, மதம், பிரதேசம், பற்றிப் பேசினாலும் அடிப்படையில் ஏதாவது ஒரு வர்க்கத்தின் நலனையே அது கொண்டிருக்கும். இதனை தோழர் மாஓசேதுங் மிகத் தெளிவாகவும் கட்டிறுக்கத்துடனும் ''ஒவ்வொரு வகைச் சிந்தனையிலும் விதிவிலக்கின்றி ஒரு வர்க்கத்தின் அடையாள முத்திரை பதிந்திருக்கவே செய்யும்'' எனக் கூறியிருந்தமை கவனத்திற்குரியதாகும்.

மாக்சிச லெனினிசப் பொதுவுடமைக் கட்சி தனது மாக்சிச வர்க்கப்போராட்ட உலக நோக்கிற்கு அமைய வடபுலத்து தமிழர் சமூகத்தில் அன்றைய சூழலில் கூர்மையடைந்து காணப்பட்ட சாதிய முரண்பாட்டையும் ஒடுக்குமுறையையும் எதிர்த்து தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக வர்க்கப்போராட்ட நிலை நின்று போராடியது. இதன்மூலம் அன்றுவரை இரட்டைத் தமிழர்களாக இருந்து வந்த சமூகச் சூழலில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்த முடிந்தது. பின் எழுந்த ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் தமிழ்த் தேசிய இனம் என்ற ஒரு நிலையை தமிழ்த் தேசியவாத சக்திகள் மார்தட்டிக் கூறக்கூடிய ஒரு சூழ்நிலை மேற்கூறிய வெகுஜனப் புரட்சிகரப் போராட்டங்களாலேயே சாத்தியமானது. இதனை ஏற்றுக்கொள்ள தமிழ்த் தேசியவாதப் பரப்பில் பலர் தயங்குகிறார்கள், சிலர் மறுக்கிறார்கள் என்றால் அம் மறுப்புக்கும் தயக்கத்திற்கும் பின்னால் வர்க்க நலன் இருப்பதுதான் காரணமாகும். இவ்வாறுதான் வடபுலத்து தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் வென்றெடுக்கப்பட்டு நிலை நாட்டப்பட்டமையை நோக்கும் கண்ணோட்டமுமாகும். இதற்கும்



படிப்பகம்

மேலாக சாதிய வர்க்கப் பிரச்சினைகள் தமிழ் இளைஞர் போராட்டத்தால்தான் கடந்த இருபது வருட காலத்தில் அற்றுப்போய் விட்டதாகக் கற்பனைக் கதை கூறுவோரும் உள்ளனர்.

இவ்விதத்திலேதான் தமிழ்த் தேசியவாதப் போக்கை உள்வாங்க முடியாத சில நடுநிலை ஜனநாயக சக்திகள், குற்றம் சுமத்தும் ஒரு கூற்று ஆராயப்பட வேண்டியதாகும். அதாவது 1964-72 காலகட்ட வெகுஜனப் புரட்சிகரப் போராட்டங்களைத் தலைமை தாங்கி வழிநடாத்திய மாக்சிச லெனினிசப் பொதுவுடமைக் கட்சி 1972க்குப் பின் வேகமாகக் கூர்மையடைந்து வளர்ச்சி கண்ட தேசிய இனப்பிரச்சினைக்கு சரியான கொள்கை வைத்து போராட்டத் தலைமையைக் கையேற்கத் தவறியது ஏன் என்பதே அக்குற்றச்சாட்டாகும்.

1972-78 வரையான காலகட்டத்தில் மாக்சிச லெனினிசப் பொதுவுடமைக் கட்சி தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்டு வந்த இன ஒடுக்குமுறைகளை வன்மையாக எதிர்த்து நின்றது. அதற்கான தீர்வு பாராளுமன்றப் பாதை அல்லவென்றும் புரட்சிகரப் போராட்டம் தான் ஒரே வழி என்றும் கூறியது. அப்போராட்டத்தில் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் அணிதிரள வேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்தியது. இதற்கு முன்னுதாரணமாக சாதிய தீண்டாமைக்கு எதிரான போராட்ட முன் அனுபவங்களையும் எடுத்துக் காட்டியது.

அவ்வாறு இருந்தபோதிலும் தமிழர் ஒரு தேசிய இனம் என்ற விடயத்திலும், சுய நிர்ணய உரிமையை உரியவாறு நோக்குவதிலும், தமிழீழக் கோரிக்கை என்பதனுள் அடங்கியிருந்த தமிழ் மக்களின் அபிலாஷைகளை கவனத்தில் கொள்வதிலும் கட்சி சரியான ஒரு மாக்சிச அணுகுமுறையினையும் உரிய கொள்கை தந்திரோபாய நிலைப்பாட்டினையும் எடுத்துக்கொள்ள முடியாது தடுமாறிக் கொண்டது. இதனை மறைக்கவோ அன்றி மழுப்பவோ வேண்டியதில்லை. மேட்டுக்குடி உயர் வர்க்கத் தலைமைகளுக்கும் சாதாரண தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்குமான வேறுபாட்டைச் சரியானபடி அடையாளம் கண்டுகொள்ள முடியாது போனமை கட்சி சந்தித்த துர்ரதிஷ்டமாகும். தமிழ்ப் பாராளுமன்றத் தலைமையை கர்ணகடூரமாக எதிர்த்த அளவுக்கு தமிழர்கள் எதிர்நோக்கிய இன

www.padippakam.com

ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடும் கொள்கை வேலைத் திட்டங்களை முழுமையாக முன்வைக்கவில்லை என்பதில் ஓரளவிற்கு நியாயம் இருக்கவே செய்தது.

அதேவேளை தமிழர் பாராளுமன்றத் தலைமையும் அவர்களுக்குப் பின்னால் இருந்த சைவ-கிறிஸ்தவ மேட்டுக்குடி வர்க்க சக்திகளும் தேசிய இனப் பிரச்சினையை வெகுஜனப் புரட்சிகரப் போராட்டம் நடாத்திய மாக்சிச லெனினிச பொதுவுடமைக் கட்சி கையேற்று விடுமோ என அஞ்சிக் கொண்டன. உதாரணமாக எழுபதுகளின் முற்கூறிலே தமிழ் இளைஞர்கள் தமிழ்த் தலைமையுடன் அதிருப்திப்பட்டு தீவிரமாகச் செயற்பட வேண்டும் எனக் கோரியபோது ''நீங்கள் சீனசார்புப் பொதுவுடமைக் கட்சியால் திசை திருப்பப்படுகிறீர்கள்'' என்றும் ''நமது இளைஞர்கள் மத்தியில் பீக்கிங் சார்பு கட்சியினர் ஊடுருவி விட்டார்கள்'' என்றும் கூட்டணியின் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம் அடிக்கடி பேசி வந்ததை இங்கு குறிப்பிட வேண்டும்.

இதன் காரணத்தாலேயே அத்தலைமை இந்தியாவின் உதவியுடனும் இஸ்ரேலின் முன்னுதாரணத்துடனும் தமிழீழக் கோரிக்கையை வென்றெடுப்பது பற்றி வெளியில் தெரியாத பல நடவடிக்கைகளில் இறங்கி நின்றது. தேசிய இன விடுதலைப் போராட்டம் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தில் இடதுசாரிகளின் பக்கம் சென்று விடக்கூடாது என்பதில் தமிழர் தலைமைத்துவங்கள் மிக விழிப்பாக இருந்து செயலாற்றின. அதன் வழியில் இந்திய மேலாதிக்க சக்திகளினது தயவையும் வரவையும் வேண்டி நின்றதுடன் அமெரிக்க-இஸ்ரேலிய சக்திகளையும் அரவணைத்து நிற்பதிலும் முன்னின்றன. இதன் எதிர் விளைவுகளும் பட்டறிவுகளும் தமிழ் மக்களால் இன்று படித்துக் கொள்ள வேண்டியவைகளாகும்.

தேசிய இனப்பிரச்சினையில் முன்பு சரியான நிலைப்பாட்டை எடுக்க முடியாது தயக்கமும் பின்னடிப்பும் காட்டி நின்ற மாக்சிச லெனினிச பொதுவுடமைக் கட்சி 1978ல் அந்நிலையில் இருந்து தன்னை மீட்டுக்கொண்டது. தமிழர்கள் ஒரு திட்டவட்டமான தேசிய இனம் என்பதையும் தோழர் லெனின் வகுத்தளித்த சுயநிர்ணய உரிமைக்கோட்பாடு முற்றிலும் தமிழர்களுக்கு ஏற்புடையதென்றும் வடக்கு கிழக்கு இணைந்த தமிழர்களின் பாரம்பரிய பிரதேசத்தில் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சியை ஏற்படுத்துவதே



படிப்பகம்

www.padippakam.com

தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கு சரியான வழிமுறை என்றும் தனது கொள்கையில் தெளிவுடன் வற்புறுத்தி நின்றது. இவ் அடிப்படைகளை மாக்சிச லெனினிச பொதுவுடமைக் கட்சியான (இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது)) புதிய ஜனநாயகக் கட்சி தனது முதலாவது தேசிய மாநாட்டில் வரையறுத்த போதிலும் இரண்டாம் மூன்றாம் நான்காம் மாநாடுகளில் மேலும் விரிவு படுத்தி தெளிவும் திடமும் கொண்ட கொள்கை நிலைப்பாட்டினை வகுத்து நடைமுறைப்படுத்தி வந்துள்ளது.

அதன் காரணமாக ஆயுதம் ஏந்திய இளைஞர் இயக்கங்களின் நோக்கையும் போக்கையும் வர்க்கப் போராட்டநிலை நின்று கணிப்பீடு செய்து கொண்டது. தேசிய இன முரண்பாட்டில் இன ஒடுக்குமுறையை ராணுவ ரீதியில் முன்னெடுத்த பௌத்த சிங்களப் பேரினவாத பெரு முதலாளித்துவ ஏகாதிபத்திய சார்பு சக்திகளே தமிழ் மக்களின் பிரதான எதிரி என்பதே கட்சியின் நிலைப்பாடாக இருந்து வந்தது. அதற்கு எதிரான ஆயுதம் தாங்கிய போராட்டம் தவறுகளைக் கொண்டிருந்த போதிலும் நிராகரிக்கப்பட முடியாதவை என்பதையும், ஆயுதப் போராட்ட இயக்கங்கள் தமது கொள்கை தந்திரோபாயங்களில் உரிய மாற்றங்களைக் கொண்டு வந்து போராட்டத்தை சரியான திசையில் முன்னெடுத்துச் செல்வதையும் சுட்டிக்காட்டி வலியுறுத்தி வந்துள்ளது.

இச்சந்தர்ப்பத்திலே மற்றொரு விடயம் விவாதிக்கப்பட வேண்டியதாகும். அதாவது சரியான கொள்கை, தந்திரோபாயம் என்பனவற்றை வகுத்து மாக்சிச லெனினிசக் கட்சி தலைமை கொடுத்திருந்தால் தேசிய இனப்பிரச்சினைக்கான போராட்டம் சிறு முதலாளித்துவ தேசியவாத சக்திகளின் கைகளுக்குச் சென்றிருக்க மாட்டாது என்னும் தர்க்கமாகும். இதனைச் சற்று ஆழமாக நோக்குதல் வேண்டும்.

தமிழர் பாராளுமன்ற ஆதிக்க உயர்வர்க்க சக்திகளால் முன்வைக்கப்பட்ட தமிழீழக் கோரிக்கையை ஆயுதம் ஏந்திய தமிழ் இளைஞர் இயக்கங்கள் தமது கரங்களுக்கு எடுத்துக் கொண்டபோது அதில் எவ்வித மாற்றத்தையும் செய்யவில்லை. முன்னையவர்களால் பின்பற்றப்பட்ட பழமைவாத தமிழ்த் தேசியவாதத்தை சாராம்சமாகக் கொண்டே ஆயுதப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. சில தமிழ் இளைஞர் இயக்கங்களில் இடதுசாரிச் சிந்தனைகள் இருப்பதாகக்



படிப்பகம்

காட்டினாலும் சில இடதுசாரிகள் உதிரிகளாக அவ் இயக்கங்களில் இணைந்திருந்த போதிலும் அவ் இயக்கத் தலைமைத்துவங்கள் தமிழர் ஆதிக்க அரசியல் வழிவந்த பாராளுமன்றக் கண்ணோட்டத்தில் அமைந்த முடிவுகளையே கொண்டிருந்தன. இவை தனி நபர்களின் வீரதீரம் மற்றும் குணாதிசங்களோடு சம்மந்தப்பட்ட ஒன்றல்ல. அடிப்படையில் வர்க்க நிலைப்பாட்டுடன் கூடிய முடிவுகளிலேயே தங்கி இருந்ததாகும்.

அடுத்து தேசியவாதம் என்பது இன, மொழி, மத, பண்பாடு, பிரதேசக் கூறுகளை உணர்ச்சி பூர்வமாக முன்வைப்பது. குறிப்பாகத் தமிழர்களை உணர்ச்சிவசப்படுத்த வேண்டுமாயின் இன, மொழி பண்பாட்டு அம்சங்களின் நீண்ட வரலாற்றைப் பழமைப் புகழ்பாடி முன்வைத்தால் போதுமானதாகும். இதனால் தான் ''தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா'' என்று தனிப் பெருந்தலைவர் என வர்ணித்த ஜீ.ஜீ. பொன்னம்பலம் முன்வைத்த போதும், ''தமிழன் தன்மானமுள்ளவன் என்பதைக் காட்ட எமக்கு வாக்களியுங்கள்'' என்று தளபதி என வர்ணிக்கப்பட்ட அ. அமிர்தலிங்கம் கோரியபோதும், ''ஆண்டபரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள் நினைப்பத்தில் என்னகுறை'' எனக் காசி ஆனந்தன் தனது உணர்ச்சிக் கவிதை பாடியபோதும் தனது வீட்டுப் பானையில் சோறு இன்றிக் காணப்பட்ட தமிழனும் சமிபாடடைய கஷ்டப்பட்ட வசதி மிக்க தமிழனும் ஒரே விதமாக ஆர்ப்பரித்து நின்றமை வெறும் உணர்ச்சி வசம் காரணமாகவே அன்றி அறிவு பூர்வமாக அல்ல. இந்த தேசியவாத உணர்ச்சிப்பூர்வத்தை தமிழர் தலைமைகள் அன்றிலிருந்து இன்றுவரை தமது வர்க்க நலன்களையும் தேவைகளையும் பாதுகாத்துக்கொள்வதற்காகப் பயன்படுத்தியே வந்துள்ளன. அதேவேளை பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்குப் பின்னால் இருந்த நிலவுடமை முதலாளித்துவ சக்திகளை வர்க்க ரீதியில் அம்பலப்படுத்தவோ எதிர்த்து நிற்கவோ தயாரில்லாத நிலையையும் இத் தமிழ் தலைமைகள் கொண்டிருந்ததன.

ஆனால் இதே தேசியவாத நிலைப்பாட்டை பாட்டாளிவர்க்க கண்ணோட்டத்தில் இருந்து எந்தவொரு மாக்சிச லெனினிசவாதியும் முன்னெடுக்க முடியாது. இன்றைய சமூக அமைப்பில் வர்க்க வேறுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் சமூக நீதி மறுப்புகளும் தாராளமாக இருந்து வருகின்றன. தமிழர்களின் சமூக வாழ்வில் இவையனைத்தும் இருந்துவருகின்றன. தமிழ் இனம், தமிழ் மொழி,

www.padippakam.com

தமிழர் பண்பாடு என்பன இவ் ஏற்றத்தாழ்வுகளைக் கடந்து நிற்கவில்லை. கடந்த கால் நூற்றாண்டு காலப் போராட்டங்களின் மத்தியிலும் தமிழர்கள் மத்தியில் சுரண்டலும் சூறையாடல்களும் சாதிய சமூக ஏற்றத்தாழ்வுகளும் சமூக நீதி மறுப்புகளும் இருந்து வரவே செய்கின்றன. இவற்றைச் சுட்டிக்காட்டினால் தமிழரின் ஒற்றமைக்கும் போராட்டத்தின் உறுதிப்பாட்டிற்கும் பங்கம் விளைவிக்கப்படுகின்றது என்றே குற்றம் கூறப்பட்டு வந்துள்ளது.

இத்தகைய பழமைவாத ஆதிக்க அரசியல் சிந்தனையும் அவற்றுக்குப் பின்னால் நின்று வலிமை சேர்க்கும் இன மத மேட்டுக்குடியினரும் அவர்களது பிற்போக்கு கருத்தியல்களும் தமிழ் மக்கள் மத்தியில் செல்லுபடியாகும் காலம் வரை தமிழ்த் தேசியவாதம் அத்தகைய சக்திகளின் பரப்பு எல்லைகளுக்குள்ளேயே இருந்து வரும். ஏனெனில் சைவ கிறிஸ்தவ மேட்டுக்குடி ஆதிக்க வர்க்க சக்திகள் பாராளுமன்றத் தலைமைகளுக்கு பின்னால் இருந்து வந்தது போன்று ஆயுதப்போராட்டம் வலிமை பெற்று வந்த சூழலில் படிப்படியாக போராட்ட இயக்கங்களுக்குப் பின்னாலும் வந்தமர்ந்து செயலாற்றும் போக்கினை அண்மைக் காலங்களில் அவதானிக்க முடிகிறது.

தேசியவாதப் போராட்டம் என்பது வர்க்கங்கள் கடந்த ஒரு தூய்மையான போராட்டமாக இருக்க முடியாது. அதேபோன்று வளர்ச்சிப்போக்கில் பண்பு ரீதியான மாற்றம் ஏற்பட்டு எத்திசையில் தேசியவாதப் போராட்டம் பயணிக்கப் போகின்றது என்ற முச்சந்தியை வந்தடையவே செய்யும். அது எடுக்கப்போகும் திசை மார்க்கந்தான் அதன் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகின்றது. இதில் உள்நாட்டு உயர்வர்க்க சக்திகளுடன் அந்நிய மேலாதிக்க ஏகாதிபத்திய சக்திகளும் இணைந்து திசைகாட்டும் நிலை உருவாகி வருகிறதையும் காணமுடிகிறது. இன்றைய ஏகாதிபத்திய உலகமயமாதல் என்பது சகலவகையான தேசியத் தடைகளையும் அகற்றி பல்தேசியக் கம்பனிகளின் முடிவற்ற சுரண்டலுக்கும், தங்குதடையற்ற தாராள வர்த்தகத்திற்கும், வளங்களைக் கொள்ளையிடுவதற்கும் உரிய அடிப்படைகளிலேயே ஒவ்வொரு நாட்டினது தேசியப்போராட்டங்களையும் அணுகி ஆலோசனை வழங்கி வழிகாட்டி வருகிறது. இந்நிலைக்கு தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் என்பதும் விதிவிலக்காக இருக்க முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

மேற்கூறிய விடயங்கள் அனைத்தையும் கவனத்திற் கொண்டே கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் மாக்சிச லெனினிசக் கட்சியான புதிய ஜனநாயகக் கட்சி வடபுலத்தில் கோட்பாடு கொள்கை தந்திரோபாயநிலை நின்று தனது வேலை முறையினை முன்னெடுத்து வந்துள்ளது. இந்த வேலை முறையானது வடபுலத்தில் தோழர் கார்த்திகேசன் தொடக்கி வைத்த பொதுவுடமை இயக்கத்தின் தொடர்ச்சியாகவும் தோழர் சண்முகதாசன் தலைமையிலான புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களின் ஊடாகவும் அடுத்தக்கட்ட வளர்ச்சியாகவே முன்னெடுக்கப்பட்டு வந்தது. இதனைத் தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் தலைமை தாங்கி நின்றார். அத்தகைய கட்சியை அமைப்பு வாயிலாகவும் நடைமுறைப் போராட்டங்கள் மூலமும் வடபுலத்தில் குறிப்பிடத்தக்க தோழர்கள் முன்னெடுத்து வந்திருக்கிறார்கள். கடுமையான நெருக்கடிகள், சோதனைகள், அச்சுறுத்தல்கள், உயிர் ஆபத்துக்கள் மட்டுமன்றி அன்றாட வாழ்க்கை நெருக்கடிகள் என்பன மத்தியிலும் உறுதி குலையாது அர்ப்பணிப்பு தியாக சிந்தையுடன் பொதுவுடமை பாரம்பரியத்தினூடே கட்சியைப் பாதுகாத்து நிலை நிறுத்தி வந்திருக்கிறார்கள். சி.கா. செந்திவேல், சோ. தேவராஜா, க. தணிகாசலம், சி. நவரத்தினம், கா. பஞ்சலிங்கம், ந. இரவீந்திரன், இ.கா. சூடாமணி, வை. வன்னியசிங்கம், ஆர் செல்வநாயகம், கா. கதிர்காமநாதன், ஞா. ஸ்ரீமனோகரன், ந. செல்வராசா, த. தருமலிங்கம், வ. மகாதேவன், ஆ. தங்கராசா, கா. மகாதேவன், எஸ். இராஜேந்திரம், பொ. முருகேசு, எஸ். கந்தசாமி, தி. ராம்குமார், பாஸ்கரன், டொன் பொஸ்கோ, ந. ஆனந்தன், க. இராசையா, பி. பசுபதி, கு. மோகன், கே. கனகலிங்கம் உட்பட மேலும் பல புதிய தோழர்கள் முன்னிலையாளர்களாக நின்று கட்சியையும் அதன் புரட்சிகரக் கொள்கைகளையும் மக்கள் மத்தியில் முன்னெடுத்து வந்துள்ளனர். இவர்களோடு இணைந்து வெகுஜன கலை இலக்கியத் தளங்களில் மேலும் பல தோழர்கள் நண்பர்கள் உறுதியுடன் இருந்து செயலாற்றி வந்துள்ளனர். இவர்கள் அனைவரும் மாக்சிச உலக நோக்கின் ஊடே மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை அடிப்படையில் மக்கள் மத்தியில் சேவை செய்பவர்களாகவும் சமூக மாற்றத்தை நோக்கி அரசியல் வேலைகளை முன்னெடுப்பவர்களாகவும் இருந்து வந்துள்ளனர். ஒரு புறம் மாக்சிசம் கல்லறைக்கு அனுப்பப்பட்டு விட்டது. சோஷலிசம் தோல்வி கண்டுவிட்டது. பொதுவுடமை இயக்கம் முடிவுற்றுவிட்டது என்ற பிரசாரங்கள் வேகமாக முன் தள்ளப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com

மறுபுறம் ஆயுதம் ஏந்திய தமிழ்த் தேசியவாதப் போராட்டமானது உச்சத்தை அடைந்து சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டுவிடப் போகின்றது என்ற அதீத நம்பிக்கை வளர்க்கப்பட்டு இளம் தலைமுறை அதனால் கவரப்பட்டு நின்றது. இவற்றுடன் வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்து சென்று பொருளாதார அகதி வாழ்வின் மூலம் பெறப்பட்ட பணப்புழக்கத்தின் ஊடே சமூக உயர்நிலை எய்தி விடலாம் என்னும் போலித்தனமான நம்பிக்கைகள் வளர்க்கப்பட்டன. மேலும் கொடிய யுத்தத்தின் தீக் கரங்களும் நாக்குகளும் வடபுலத்தின் சகல மக்களையும் அவர் தம் வீடுவாசல்கள் நிலபுலங்கள். தொழில் முயற்சிகள் யாவற்றையும் சுட்டெரித்து நின்றன.

இத்தனைக்கும் மத்தியிலே தான் வடபுலத்தில் பொதுவுடமை இயக்கத்தின் தொடர்ச்சியை மாக்சிச லெனினிச மாஓசேதுங் சிந்தனை வழிநின்று பாதுகாத்து வளர்த்தெடுத்து வர முடிந்தது என்பது இலகுவானதொன்றாக இருக்கவில்லை.

இருப்பினும் பொதுவுடமைவாதிகளின் முன்னால் உள்ள தேசிய சர்வதேசியக் கடமைகளை நேர்மையுடன் பொறுப்பேற்று வடபுலத்தின் விசேட சூழ்நிலைகளின் மத்தியிலும் முன்னெடுத்து வந்துள்ளமை நோக்குதற்குரியதாகும்.

இன்று உலகமயமாதல் என்பது ஏகாதிபத்தியத்தால் மிக வேகமாக முடுக்கி விடப்பட்டு வருகின்றது. பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டுத் தளங்கள் அனைத்திலும் உலகமயமாதல் சிந்தனையானது ஊடறுத்துச் செல்ல வைக்கப்பட்டுள்ளது. பல்தேசியக் கம்பனிகளின் மூலமான மனித உழைப்புச் சுரண்டலும் நாட்டு வளங்களைக் கொள்ளையிடலும் தாராளமாக இடம்பெறுகின்றன. இவற்றுக்கு வசதியாகவே தனியார்மயம் திணிக்கப்படுகிறது. சகலதிலும் நுகர்வுப் பண்பாடு என்பது திட்டமிட்டே வளர்க்கப்படுகின்றது. ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்த நமது நாட்டின் தனித்துவத்திற்குரியனவாக இருந்த பொருளாதார அரசியல் சமூக கல்வி பண்பாட்டுக் கூறுகள் யாவும் உலகமயமாதல் தாராளமயமாதல் தனியார்மயமாதல் என்பனவற்றால் அடித்துச் செல்லப்படுகின்றன.



படிப்பகம்

நாட்டின் பெரும் பகுதியை ஆக்கிரமித்து நிற்கும் மேற்கூறியவை இப்போது வடபுலத்திற்கும் கிழக்கிற்கும் கொண்டு செல்லப்படுகின்றன. யுத்தத்தின் ஊடாக செய்ய முடியாத உலகமயமாதலின் பல்வேறு அம்சங்கள் சமாதானச் சூழலில் வேகமாக வடபுலத்திற்குள் புகுந்து கொண்டிருக்கின்றன. இவற்றின் அழிவுகரமான எதிர் விளைவுகளையும் பாரிய பிரச்சினைகளையும் வடபுலத்தின் மக்கள் மத்தியில் எதிர்த்து நிற்பது மாக்சிச லெனினிசவாதிகளின் கடமையாகின்றது.

அதேவேளை தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டி தேசிய இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படுவதை வடபுலத்து மாக்சிச லெனினிசப் பொதுவுடமை இயக்கம் வற்புறுத்தி நிற்கின்றது. பௌத்த சிங்களப் பேரினவாதத்தை முன்னெடுக்கும் அனைத்து சக்திகளையும் தொடர்ந்து எதிர்த்து நிற்பதில் தென்னிலங்கையின் இடதுசாரி ஜனநாயக சக்திகளுக்கு வடபுலத்து பொதுவுடமையாளர்கள் உறுதியான பங்களிப்பை வழங்கி நிற்பார்கள் என்பது உறுதியானதாகும்.

வடபுலத்து சமூக நிலையிலும் மக்களது வாழ் நிலையிலும் தொழிலாளர்கள், விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் ஆசிரியர்கள், ஊழியர்கள் என்போர் எண்பது வீதமானவர்களாக உள்ளனர். நிலவுடமையாளர்களும் பெரும் முதலாளிகளும் மிகக் குறைந்த வீதத்தினர். நடுத்தர நிலையில் உள்ளவர்களும் கணிசமாகவே உள்ளனர். எனவே ஏகப்பெரும்பான்மையான மக்கள் வர்க்கரீதியில் சாதியப்படிநிலையில் சமூக நிலைமைகளில் மாற்றம் வேண்டி நிற்கும் மக்களாகவே இருந்து வருகின்றனர். இன ஒடுக்குமுறையை அடையாளம் கண்டு அதனை மாக்சிச லெனினிசக் கண்ணோட்டத்தின் ஊடே முன்னெடுக்கும் பொதுவுடமை இயக்கமானது வர்க்க, சாதிய, பெண் ஒடுக்குமுறைகளையும் அடையாளம் கண்டு உரிய வழிமுறைகளின் ஊடே முன்னெடுத்துச் செல்லல் வேண்டும். அதற்கான முன் அனுபவங்களும் தகுதியும் மாக்சிச லெனினிசப் பொதுவுடமை இயக்கத்திடம் மட்டுமே இருக்க முடியும். இதனை புதிய ஜனநாயக கட்சியின் நான்காவது தேசிய மாநாடு (2002 நவம்பர் 8,9) தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளது கவனத்திற்குரியதாகும்.

www.padippakam.com

# 28 தமிழ் மொழியும் பண்பாடும் பொதுவுடமை இயக்கமும்

தமிழ் மொழி தமிழர் பண்பாடு என்பனவற்றில் ஆதிக்க தமிழ் அரசியல் தலைமைகளுக்கும் பொதுவுடமை வாதிகளுக்கும் அடிப்படையில் வேறுபட்ட கண்ணோட்டங்களும் நடைமுறைகளுமே இருந்து வந்தன. தமிழ் மொழியின் தொன்மையும் அதன் அகன்று விரிந்த இலக்கியச் செழுமையும் போற்றக்கூடியதாக இருந்த சூழலைப் பயன்படுத்தி மொழி உணர்வை ஒருவகை வெறி உணர்வாக மாற்றுவதில் தமிழர் தலைமைகள் முன்னின்றன. தமிழ் மொழி மீது பாகுபாடு புறக்கணிப்பு வந்தபோது அதனை எதிர்த்து நிற்பது முற்றிலும் நியாயமானது. அவ்வாறு ஒடுக்குமுறையை நடாத்தும் மேட்டுக்குடி ஆளும் வர்க்க சக்திகளை எதிர்ப்பதைவிட சிங்கள மொழியை இழிவுபடுத்தி எதிர்த்து தமிழ் மொழி வெறியினைத் தலைக்கேற்றிய செயலையே இவ் அரசியல் தலைமைகள் செய்து கொண்டன. அதேவேளை தமது வீட்டுக்கும் தொழிலுக்கும் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதை இதே தலைமைகள் பெருமையாகவும் கொண்டிருந்தன. உண்மையில் மொழி இன உணர்வுகளை வெறியாக்கிக் கொண்டதன் மூலம் அரசியல் லாபங்களை அவர்களால் அடைய முடிந்தது.

மேலும் தமிழ் மக்கள் மத்தியில் விளங்கிக்கொள்ள முடியாத பண்டிதத் தமிழே உயர்தமிழ் மொழி எனவும் சான்றோர் எனப்பட்ட மேட்டுக்குடி தமிழர்களாலேயே தமிழ் வளர்க்கப்பட வேண்டும் என்ற மரபுமே பேணப்பட்டு வந்தது. சாதாரண தமிழ் மக்களது பேச்சுமொழியும் எழுத்து நடையும் தமிழ் ஆக முடியாது என்றும் வாதிடப்பட்டு வந்தது.

இவ்வாறே தமிழர் பண்பாடு பற்றியும் கூறப்பட்டது. நிலவுடமை மேட்டுக்குடி வழிவந்த நடைமுறைகளும் மதக் கிரிகைகள் சார்ந்தும் பின்பற்றப்பட்ட பண்பாட்டு அம்சங்களே உயர்வானதாகக் கொள்ளப்பட்டன. சாதாரண மக்களது வாழ்வு சார்ந்த பண்பாட்டுக் கூறுகளோ வழிபாட்டு முறைமை சார்ந்த அம்சங்களோ தமிழர் பண்பாடாகக் கொள்ளப்படவில்லை.




படிப்பகம்

www.padippakam.com




தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் இறப்பதற்கு சில மாதங்கள் முன்பாக யாழ் நகரில் 1989ம் ஆண்டு இடம் பெற்ற மேதினக் கூட்டத்தில் தலைமை தாங்கி உரையாற்றுகிறார். அருகில் தோழர் தணிகாசலம் அமர்ந்திருக்கிறார்.



தோழர் மணியத்தின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் முதுபெரும் தோழர் டாக்டர் சு.வே.சீனிவாசகம் உரையாற்றுகிறார். தோழர்கள் சி.கா.செந்திவேல். எஸ்.தவராஜா ஆகியோர் காணப்படுகின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

இவ்வாறான சூழலில் தமிழ் மொழிப் பயன்பாட்டிலும் அதன் வளர்ச்சிப் பாதையிலும் பண்பாட்டு அம்சங்களின் மறுபககங்களை வெளிக்கொணர்வதிலும் பொதுவுடமை இயக்கம் மிகக் கனதியான வரலாற்றுப் பாத்திரத்தை வகித்து வந்திருக்கிறது. தமிழர்கள் மத்தியில் புறந்தள்ளப்பட்டு மறைக்கப்பட்டு தமிழர்களாக மதிக்கப்படாது விடப்பட்டிருந்த உழைக்கும் மக்களை அடிநிலை மக்களை சமூக வெளிச்சத்திற்கு கொண்டுவந்து நிறுத்தியது பொதுவுடமை இயக்கமேயாகும். அவர்களது மொழியை நடை, உடை, பாவனை உள்ளடங்கிய பண்பாட்டம்சங்களை வெளியுலகிற்கு கொண்டு வரவும் பேசப்படவும் செய்து கொண்டதும் பொதுவுடமை இயக்கமேயாகும். இதனை நிலவுடமைப் பழமைவாதம் இறுகி நின்ற சூழலில் அதன் மீது மோதி அதிர்வையும் உடைவையும் ஏற்படுத்தியது பொதுவுடமை இயக்கம் அன்றி வேறெதுவுமாக இருக்க முடியாது. இதில் வடபுலத்து பொதுவுடமைவாதிகளும் அவர்களைச் சார்ந்த கல்வியியலாளர்கள், அறிஞர்கள் தமது வீறார்ந்த பங்களிப்பை தமிழ் மொழிக்கும் தமிழர் பண்பாட்டிற்கும் வழங்கிச் சென்றனர்.

இலங்கைத் தமிழர்களின் மொழி, இலக்கியம், பண்பாடு என்பனவற்றின் தனித்துவத்தை தென் இந்திய ஆளுமையில் இருந்து வேறுபடுத்திக்காட்டி நிலை நிறுத்தியதிலும் வளர்ப்பதிலும் பொதுவுடமை இயக்கம் முன்னின்று செயல் பல புரிந்து வந்திருக்கிறது. இந்தியா தாய்நாடு என்றும் அங்கிருந்து வரும் தமிழ் இலக்கியம், பண்பாடு நமக்குப் போதும் என்றும் இருந்து வந்த குருட்டுத்தன வழிபாட்டு இலக்கியப் போக்கை உடைத்து சுயமானதும் நமது வாழ்வியல் சூழலுக்கு ஏற்றவாறான யதார்த்த இலக்கிய வளர்ச்சிக்கு வழி காட்டியது பொதுவுடமை இயக்கம்.

அத்துடன் பண்டித மரபினரின் சான்றோர் இலக்கியப் போக்கிற்கு எதிராக இழிசனர் இலக்கியம் என அவர்களால் ஏளனம் செய்யப்பட்ட மண்வாசனை மிகுந்த யதார்த்த இலக்கிய போக்கை வித்திட்டு வளர்ச்சிபெற வைப்பதிலும்பொதுவுடமை இயக்கத்தின் கலை இலக்கிய விமர்சன அணியினர் பாரிய சாதனைகளைப் புரிந்து கொண்டனர். இன்று தமிழ் நாட்டினர் ஈழத்து இலக்கியத்தை கண்கொண்டு பார்க்கவும் காது கொண்டு கேட்கவுமான நிலைக்கு வளர்த்தெடுத்ததில் பொதுவுடமைவாதிகளின் பங்கையும் பணியையும் மறுத்துரைப்பது இலகுவானதொன்றல்ல.

www.padippakam.com

அதன் மூலம் தமிழ் மொழியினது வளர்ச்சிக்கு பல தளங்களிலும் திசை காட்டப்பட்டது. இலங்கையில் முற்போக்கு இலக்கிய வளர்ச்சி என்பது வெறுமனே பொதுவுடமைக் கருத்துக்களின் இலக்கியத் தொகுப்பாகவோ கட்சி அரசியல் சார்ந்த முயற்சியாகவோ பார்க்க முடியாது. அவற்றின் ஊடே தமிழ் மொழியினது நவீனத்துவ வளர்ச்சியானது இழையோடி வந்துள்ளதை நேர்மையான ஆய்வாளர்கள் அடையாளம் காண்பர்.

அத்துடன் பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் வெளியீட்டில் பொதுவுடமை சார்பான வெளியீடுகள் எப்போதும் முன்னிலை வகித்து வந்திருக்கிறது. சுதந்திரன் பத்திரிகையின் ஆரம்பம் பயன் தருவதாகக் காணப்பட்ட போதிலும் அதன் நோக்கும் போக்கும் இனமொழி பண்பாட்டு உணர்வுகளை வெறியாக்குவதாகவே அமைந்திருந்தது.

அதேவேளை ஆரம்ப காலத்திலிருந்து தேசாபிமானி, யுவசக்தி, தொழிலாளி, பாட்டாளி, போராளி, செம்பதாகை, புதியபூமி வரையான பொதுவுடமை சார் பத்திரிகைகள் அரசியல் இலக்கியக் கருத்துக்களை வடபுலத்து மக்களிடம் எடுத்துச் செல்வதில் முன்னணி வகித்தன. இன்று புதியபூமி பத்திரிகை ஒரே ஒரு அரசியல் பத்திரிகையாக வெளிவருவதுடன் வடபுலத்தில் செல்வாக்குச் செலுத்தியும் நிற்கின்றது.

இலக்கியப் பரப்பிலே புதுமை இலக்கியம் ஈழத்து இலக்கியப் பரப்பிலே புதுமை இலக்கியம் ஈழத்து இலக்கியப் வளர்ச்சியில் கனதியும் திசைவழியும் காட்டி நின்ற சஞ்சிகையாக வெளிவந்தது. பொதுவுடமை சார் முற்போக்கு எழுத்தாளர்களது எழுத்துக் களமாகவும் விமர்சன நோக்கை வெளிப்படுத்தும் சாதனமாகவும் அமைந்து கொண்டது. ஆனால் அறுபதுகளுக்குப் பின் அதன் வீச்சும் வேகமும் குறைந்து இறுதியில் நின்று போனது. இருப்பினும் புதுமை இலக்கியம் சாதித்தவற்றையும் அக்காலகட்டத்தின் தேவையை நிறைவு செய்து கொண்டமையையும் நினைவில் கொள்வது அவசியம். இச் சஞ்சிகை வடபுலத்து இலக்கியத் தளத்திற்கு தனது பங்களிப்பை வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



படிப்பகம்

www.padippakam.com

அறுபதுகளின் முற்கூறிலே வடபுலத்து பொதுவுடைமைப் பரப்பிலிருந்து இரண்டு கலை இலக்கிய சஞ்சிகைகள் வெளிவந்தன. ஒன்று வசந்தம் மற்றறையது மல்லிகை. வசந்தம் ஒரு வருடம் மட்டுமே வெளிவர முடிந்தது. அச் சஞ்சிகை மக்கள் கலை-இலக்கியக் கோட்பாடு சார்பாக வெளிவந்தது. அதன் ஆயுட்காலம் குறுகியதாக இருந்தபோதிலும் மாக்சிச லெனினிச அடிப்படையிலான மக்கள் கலை இலக்கியப் பயணத்திற்கு வழி காட்டும் அடிப்படைகளைத் திசை காட்டி நின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதே காலப்பகுதியில் பாராளுமன்ற பொதுவுடமைக் கட்சியின் பக்கம் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட டொமினிக் ஜீவா மல்லிகையை ஆரம்பித்து நடத்தினார். அதன் இலக்கியக் கொள்கை, நடைமுறை விடயதானங்கள் என்பன டொமினிக் ஜீவா பற்றி நின்ற அரசியல் நிலைப்பாட்டிற்கு இணங்கவே அமைந்து கொண்டன. முற்போக்கு இலக்கியம் பற்றி உச்சரித்த போதிலும் மல்லிகை பொதுவுடமை கலை இலக்கிய மார்க்கத்தில் இருந்து திசைமாறிச் சென்று வெறும் மனிதாபிமான இலக்கிய சஞ்சிகையாகிக் கொண்டது. இருப்பினும் அதற்கு இருக்கும் ஒரே சக புள்ளி ஏதெனில் கடந்த நாற்பது ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவரும் ஒரே சஞ்சிகை என்பதேயாகும். அதேவேளை பழமைவாதம், சாதியம் போன்றவற்றை எதிர்த்த கலை இலக்கியப் படைப்புக்கள் எல்லைக்குட்பட்ட வகையில் மல்லிகை சஞ்சிகையில் இடம் பெற்றும் வந்துள்ளமையை நிராகரிக்க இயலாது.

வடபுலத்தில் எழுபதுகளின் முற்கூறிலே உருவாகிய தேசிய கலை இலக்கியப் பேரவையும் அதன் சஞ்சிகையான தாயகமும் நெருக்கடிகளின் மத்தியில் வர்க்க சமரசம், சந்தர்ப்பவாதம் இன்றி மக்கள் கலை இலக்கியத் தளத்தில் கனதியும் காத்திரமும் மிக்க பணியாற்றி வந்துள்ளது. இவற்றின் வளர்ச்சிக்கு வழிகாட்டுவதில் பேராசிரியர் க. கைலாசபதி, இ. முருகையன், பேராசியரியர் சிவசேகரம், கே.ஏ. சுப்பிரமணியம், சி.கா. செந்திவேல், இ. தம்பையா போன்றோர் இருந்து வந்துள்ளனர். மக்கள் கலை இலக்கியத்தை இவற்றின் வடபுலத்தில் செயற்பாடாக முன்னெடுத்துச் செல்வதில் க. தணிகாசலம், சோ. தேவராஜா, ந. இரவீந்திரன், வை. வன்னியசிங்கம், கா. மகாதேவன், சி. நவரத்தினம், அழ பகீரதன் போன்றோரும் ஏனைய தோழர்கள் நண்பர்கள் சளைக்காது முன்னின்று செயற்பட்டு வந்துள்ளனர். தேசிய கலை இலக்கியப் பேரவையின்-தாயகம் சஞ்சிகையின் தொடர்ச்சிக்கும் நீடிப்பிற்கும்



படிப்பகம்

www.padippakam.com

சரியான மக்கள் கலை இலக்கியப் பயணத்திற்கும் கொள்கை கூட்டு முயற்சி அடிப்படை ஆதாரமாகும். தனிமனிதப் பொறுப்பும் கூட்டுச்செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது.

தாயகம் சஞ்சிகை தனது மக்கள் இலக்கியக் கோட்பாடாக புதிய ஜனநாயகம், புதிய வாழ்வு, புதிய பண்பாடு என வகுத்து வழிநடந்து வந்துள்ளது. அதன் வருகை ஒழுங்காக இல்லாதுவிடினும் இடைவெளிகளின் ஊடே தொடர்ந்து வெளிவந்து கொண்டது. புதிய தலைமுறை எழுத்தாளர்களை அது உருவாக்கி வந்துள்ளது.

மேலும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் மிகப்பெரும் சாதனை அதன் நூல் வெளியீட்டு முயற்சி எனக் கூறலாம். 1981ல் பாரதி நூற்றாண்டு ஆய்வுக் கட்டுரைகளை பேராசிரியர் கைலாசபதி வழிநடத்தலில் வகுத்து தொகுத்து ''பாரதி பன்முகப் பார்வை'' என்ற நூலை முதலாவது நூலாக 1984-இல் வெளியிட்டது. இப்போது கந்தன் கருணை நாடக நூல் தொகுப்பை நூறாவது நூலாக வெளியிட்டுள்ளது. இந்நூல் வெளியீட்டில் மக்கள் கலை இலக்கியத்திற்கு வளமும் வனப்பும் வழங்கக்கூடிய ஆக்கங்கள் வடபுலத்திற்கும் அப்பால் நாட்டின் நாலா திக்குகளில் இருந்தும் வெளியிடப்பட்டு வந்தமை குறிப்பிடக்கூடியதாகும்.

மேலும் தேசிய கலை இலக்கியப் பேரவை வடபுலத்தில் நாடக வார்ப்பிலும் அரங்கேற்றுவதிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்துள்ளது. இசைப்பாடல் ஒலிப்பேழை ஒன்றினை வடபுலத்தில் வெளியிட்டது. மேலும் எழுத்துப் பயிற்சியினைப் புதிய தலைமுறையினருக்கு வழங்கி வந்துள்ளது.

அவ்வாறே புதியபூமி வெளியீட்டகம் அரசியல் நூல் வெளியீட்டில் இருபத்தைந்துக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளது.

இவையனைத்தையும் தொகுத்துப் பார்க்குமிடத்து தமிழ் மொழி தமிழ் பண்பாட்டுத் தளங்களில் பொதுவுடமை இயக்கமானது வடபுலத்துச் சூழலில் மிகவும் காத்திரம் மிக்க வழிகளில் செயற்பட்டு அவற்றின் வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை வழங்கி வந்திருப்பதைக் காணமுடியும். இவை அனைத்தும் சரியான ஆய்வுக்கும் முறையான கண்ணோட்டத்திற்கும் உள்ளாக்கப்படுவது அவசியம்.



படிப்பகம்

ஆனால் தேசியவாத நிலைப்பாட்டில் இருப்பவர்கள் பழமைவாத மரபுக் கோட்டைத் தாண்ட முடியாதவர்களும், பின்நவீனத்துவ கோளாறுகளின் குழப்பத்திற்கு உட்பட்டவர்களும், பொதுவுடமை சார் மக்கள் இலக்கியத்தின் வளர்ச்சியையும் அது மொழி பண்பாடு ஆகியவற்றுக்கு வழங்கிய பங்களிப்பையும் மறுத்து நிற்கவே செய்வர். அவர்களுடன் முன்னாள் மாக்சிச வாதிகளாக இருந்து தற்போது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டிற்குள் புகுந்து கொண்ட பேராசிரியர்கள் அறிஞர்கள் எனப்படுவோரும் உண்மைகளை உரைக்க முடியாத வக்கிரப் போக்கிலேயே இருந்து வருகின்றனர்.

ஆதலால் மேற்கூறிய விடயங்கள் வடபுலத்து பொதுவுடமை இயக்க வளர்ச்சியோடு இணைந்து வந்த கலை இலக்கிய வளர்ச்சியின் சிறுகுறிப்புகள் மட்டுமே. முற்பக்கங்களிலும் அவை பற்றித் தொட்டுக்காட்டப் பட்டனவாயினும் முழுமையான கண்ணோட்டமும் ஆய்வும் எதிர்காலத்தில் அவசியமானதாகும்.

## 29 முடிவுரை

வடபுலத்து பொதுவுடமை இயக்கத்தின் தோற்றம் வளர்ச்சி எழுச்சி பின்னடைவு தொடர்ச்சி என்பனவற்றை நோக்கும்போது வரலாற்று வளர்ச்சிப் போக்கில் அதன் பங்களிப்பு பாரியதாக இருந்து வந்துள்ளமையைக் காணலாம். வடபுலத்து சமூக அரசியல் வாழ்வுப் பரப்பினை கால கட்டங்களாக வகுத்துப் பார்ப்போமேயானால் ஒவ்வொரு காலகட்டத்திலும் நிலவுடமை ஆதிக்க வழிவந்த மேட்டுக்குடி அரசியல் சக்திகளே முன்னின்று தலைமை தாங்கி வந்துள்ளமையை அண்மைக்காலம் வரை காண இயலும். இன்றும்கூட அதன் பழமைவாத கருத்தியலின் பாதகமான அம்சங்கள் ஆயுதப் போராட்டச் சூழலால் கரைந்தோ கலைந்தோ போக முடியவில்லை.

இந்நிலையில் வடபுலத்து பொதுவுடமை இயக்கம் பல்வேறுபட்ட எதிர் நிலைச் சவால்களையும் எதிர்ப்புகளையும் கடந்தே தன்னை நிலைநிறுத்தி வந்துள்ளது. பல்வேறு சாதனைகளையும் பட்டறிவுகளையும் மட்டுமன்றி குறைபாடுகள் பின்னடைவுகளுக்கு ஊடாகவும் பயணித்து வந்துள்ள இப்

www.padippakam.com

பொதுவுடமை இயக்கத்தை குறைத்து மதிப்பிடுவது அல்லது கொச்சைப்படுத்திக் காட்டுவது யாவற்றுக்கும் மேலாக அப்படி ஒன்று இல்லை எனக் கூறுவது வரலாற்றை மறைத்தும் திரித்துக் கூறும் கூற்றுக்களேயாகும்.

பொதுவுடமை இயக்கம் சமூக இயக்கத்தை சமூக முரண்பாடுகள் மூலம் கண்டு கொள்கிறது. அம் முரண்பாடுகளின் அடிப்படை வர்க்க போராட்ட நிலைகளுக்கு உட்பட்டதாகும். தமிழ் நிலைக் கண்ணோட்டம் என்பது வர்க்கம் கடந்த ஒரு நிலைப்பாடல்ல.தேசிய வழிப்பட்ட தமிழ் நிலைப்பாடு என்பது தோற்றப்பாட்டில் வர்க்கங்கள் அற்றது போன்றே காணப்படும். ஆனால் ஆழ்ந்து நோக்கும்போதே அதன் வர்க்க நிலைகளும் ஏற்றுத் தாழ்வுகளும் ஒடுக்குமுறை அம்சங்களும் கண்டு கொள்ளப்பட முடியும். இவ்வாறுதான் மாக்சிசமும் பொதுவுடமை இயக்கமும் சமூக வாழ்வைத் தமது வர்க்கப் போராட்டவழி நின்று நோக்கி அதற்கமைவாக செயற்படுகின்றன. இதுவே வடபுலத்திலும் பொதுவுடமை இயக்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வந்ததாகும்.

மேலும் தேசிய இனப் பிரச்சினை இலங்கையின் பிரதான முரண்பாடாக இன்று காணப்படுகின்றது. சுயநிர்ணய உரிமை அடிப்படையில் முழுமையான சுயாட்சித் தீர்வையே பொதுவுடமை இயக்கம் மாக்சிச லெனினிச மாஓசேதுங் சிந்தனை அடிப்படையில் வற்புறுத்துகிறது. வடக்கு கிழக்கு இணைந்த தமிழர்களின் முஸ்லீம்களின் பாரம்பரிய பிரதேசத்தில் இச் சுயாட்சி அமைப்பு உறுதி பெறுவது அடிப்படையானதாகும். அதேவேளை அமெரிக்க இந்திய மேலாதிக்க சக்திகள் தமது நோக்கங்களை ஈடேற்றிக்கொள்ள இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையைப் பயன்படுத்தும் போக்கு தொடர்கின்றது. இவ்விரு புறத்து அபாயங்களுக்கு உட்படாது சுயநிர்ணய உரிமைப் போராட்டம் சரியான விடுதலைப் போராட்டத் தடத்தில் முன்செல்வதையே பொதுவுடமைக் கட்சி இயக்கம் தனது புரட்சிகர நிலைப்பாட்டின் ஊடாகக் காண்கிறது.

எனவே அரசியல் சமூக அறிவியல் தளத்தில் மேலும் உறுதியாக நின்று வடபுலத்து சமூக அமைப்புச் சூழலின் அம்சங்களை வகைப்படுத்தி கடந்த கால அனுபவங்கள் பட்டறிவுகள் மூலம் பொதுவுடமை இயக்கத்தை மேலம் செழுமைப்படுத்தி முன்னெடுப்பதே நம்முன் உள்ள பணியாகும்.



படிப்பகம்

www.padippakam.com

பழைய தலைமுறையைச் சேர்ந்த ஒவ்வொரு பொதுவுடமைப் போராளியும் புதிய தலைமுறையினரிடம் மிகுந்த எதிர்பார்ப்புடன் கையளித்துச் சென்ற கடமையும் அதுவேயாகும். அத்தகைய புரட்சிகர கடமைக்காக மென்மேலும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். உலகம் பூராவும் மாக்சிச லெனினிச இயக்கம் மீண்டும் அரங்கிற்கு வர ஆரம்பித்துள்ளது. ஒவ்வொரு பொதுவுடமைக் கட்சியும் தங்களை மறுசீரமைத்துக் கொண்டு பன்மடங்கு வேகத்துடன் மக்கள் மத்தியில் செயலாற்றிவரும் புதிய புரட்சிகர சூழல் வளர்ச்சிபெற ஆரம்பித்துள்ளது. எனவே எமது புரட்சிகரப் பயணத்தை வேகப்படுத்தி சமூக விடுதலை - சமூக மாற்றம் - தொழிலாளர் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களின் ஆட்சி அதிகாரம் என்ற இலக்கு நோக்கி வீறு நடைபோடுவோம்.



படிப்பகம்

www.padippakam.com

# பெயர் குறிகாட்டி


அண்ணாசாமி (புன்னாலைக்கட்டுவன்) 92
அல்பிரட் துரையப்பா 103, 104
அன்றூ வி. கொரி 111
ஐ.ஆர். அரியரத்தினம் 36, 59, 115
அ. அமிர்தலிங்கம் 41, 121, 151, 153
ச. அரியரட்ணம் 92
எஸ். அற்புதரத்தினம் 36
வி. அண்ணாமலை 129
அம்பிகைப்பாகன் 36
அகஸ்தியர் 48
அன்வர் ஹோஜா 56

ஆறுமுகநாவலர் 23
ஆரியவன்ச குணசேகரா 13, 67
டபிள்யூ. ஆரியரட்ணா 8, 13, 46.
க. ஆனந்தகுமாரசுவாமி 144
எம். ஆலாலசுந்தரம் 99
வீ. ஆனந்தசங்கரி 121

கே. இராமநாதன் 7, 8, 13, 65
எம்.ஏ.சி. இக்பால் 74, 79, 80, 81, 104, 105, 112, 119
இரத்தினம் (மந்துவில்) 92, 93
இ.இராஜசேகரம் (புன்னாலைக்கட்டுவன்) 92
அ. இராஜலிங்கம் 58
இளைய பத்மநாதன் 58, 114
ரி. இராஜசுந்தரம் 130
ந. இரவீந்திரன் 143, 155
ஆர். இராஜவரோதயம் 48
சி. இராஜதுரை 58
எஸ். இராசையா 33
ச. இராசையா 59
கே. இராமநாதன் 7, 8, 13

ஈரியகொல்லை 66
ஈழவேந்தன் 122

உசா நடராசா 42, 45, 59

வீ.ஏ. கந்தசாமி 61, 68, 69, 72, 73, 74, 75, 76, 84, 98, 100, 105, 113, 118.

பி. கதிரேசு 82
ஆ. கந்தையா 58, 87
எம்.ஏ. கமால் 80
கன்சூர் 80
சி. கணேசன் (அல்வாய்) 84
இ.செ. கந்தசாமி 95
கரவை கந்தசாமி 100, 105, 111
எஸ்.ஜி. கணேசவேல் 94
எஸ். கந்தசாமி 155
கே. கனகலிங்கம் 155
க. கதிர்காமநாதன் 144, 155
மு. கந்தவனம் (கரவெட்டி கிழக்கு) 92
கனகரட்ணம் 95
ஏ.எஸ். கனகரட்ணம் 17, 18, 26, 32, 36
ஏ.கே. கந்தையா 20, 23, 36, 51
வி. கந்தசாமி 31
அ. ந. கந்தசாமி 48
மு. கந்தப்பிள்ளை 58
மு. கணபதிப்பிள்ளை 58
இ. கணேசன் 58
செ. கணேசலிங்கன் 48
கதிரேசு மகாலிங்கம் 22, 23

மு. கார்த்திகேசன் 1, 8, 9, 11, 12, 13, 14, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 27, 28, 29, 30, 32, 35, 36, 39, 41, 42, 45, 46, 47, 49, 51, 58, 60, 61, 72, 73, 80, 84, 98, 118, 154
எஸ். காங்கேசு 58
எம்.ஏ. காதர் 22, 23, 45, 80
காமீத் 80
கிருஷ்ணபிள்ளை 33

கீரிமலை ராசா (வைரமுத்து) 42,64
எம். குமாரசுவாமி 61, 84, 100, 118
பொன். குமாரசாமி 59, 67
எஸ். குணேந்திரராசா 119
குமார் பொன்னம்பலம் 121
குழந்தை ம. சண்முகலிங்கம் 130
குமாரவேல் 130
வி.எம். குகராஜா 130




படிப்பகம்

www.padippakam.com

ஏ. குணசேகர 8
ஏ.ஈ. குணசிங்க 6
குலவீரசிங்கம் 20, 23
தி. குமாரலிங்கம் 58
இ. குணரத்தினம் 58
க. கைலாசபதி 29, 49, 58, 95, 140
கொல்வின் ஆர்.டி. சில்வா 6, 43
அ. கௌரிகாந்தன் 109

நா. சண்முகதாசன் 8, 13, 42, 46, 57, 60, 64, 67, 72, 76, 98, 99, 102, 104, 114, 116, 122, 124, 125, 154
எஸ். சண்முகநாதன் 58, 93
சா. சந்தியாபிள்ளை 33, 47,63
சலீம் 80
சமல் த சில்வா 98
செல்வி சி. சரஸ்வதி சிதம்பரி 52
சந்திரகாந்தி சீனிவாசகம் 52
சரணாங்க தேரர் 13, 34
சபாரத்தினம் 19

வே. சின்னையா(மட்டுவில்) 58, 84, 91
சின்ன கார்த்திகேசு 82
சின்ன அஸீஸ் 80
இ. சிவானந்தன் 94
கா. சிவத்தம்பி 49, 59, 94
சிவலிங்கம் 89
பூ. சின்னராசா 87
வ. சிதம்பரி 58, 87
சில்லையூர் செல்வராசன் 48, 94
வ. சின்னதம்பி 36, 42, 58,61
மு. சிவசிதம்பரம் 34, 40, 41, 72, 121
சிறீதரன் 130
எஸ். சின்னத்துரை 130
சிறிமாவோ பண்டாரநாயக்கா 53, 55, 123
எஸ். சிவநேசன் 130
இ. சீவரட்ணம் 130
சிறில் 98
சி.வி.கே. சிவஞானம் 103
எஸ். சிவதாசன் 58, 105
சின்னர் கார்த்திகேசு (சங்கானை) 92
நா. சிவராசா 93
கி. சிவஞானம் 58, 93, 119

கு. சிவராசா 36, 58, 74, 90, 93, 112, 114, 119.
சிவபாதசுந்தரம் 36, 42
எஸ். சிவலிங்கம் 36, 58
சி. சின்னராசா 58
வீ. சின்னத்தம்பி 42, 58

சீனி 80
சு.வே. சீனிவாசகம் 21, 32, 35, 42, 49, 50, 51, 58, 61, 63, 67, 74, 76, 84, 122
மா. சீவரட்ணம் (கன்பொல்லை) 92,93
செல்வி சீதா 52

கே.ஏ. சுப்பிரமணியம் 11, 33, 42, 45, 47, 58, 60, 61, 63, 68, 70, 72, 74, 75, 76, 77, 84, 86, 100, 104, 105, 112, 119, 124, 125, 126, 129, 133, 143, 155
ச. சுப்பிரமணியம் 109, 118
சி. சுப்பிரமணியம் 122
எம். சி. சுப்பிரமணியம் 22, 23, 33, 47, 59, 67, 68, 69, 116
சுபைர் இளங்கீரன் 48, 58, 80, 81.
இ. சுந்தரலிங்கம் 88, 89, 91
கே. சுப்பையா 58, 91
ப. சுந்தரமூர்த்தி 130
சந்திரா நவரட்ணம் 144
ஸி. சுப்பிரமணியம் 17, 36

இ.கா. சூடாமணி 45, 58, 60, 61, 72, 75, 77, 84, 112, 119, 144, 155

எம். செல்லத்தம்பி 36, 58, 61
சி.கா. செந்திவேல் 58, 72, 74, 75, 76, 79, 100, 101, 104, 105, 112, 113, 114, 119, 122, 124, 125, 144, 155.
எஸ்.கே.வி. செல்வநாயகம் 16, 41, 43, 50, 86, 88, 122, 123
க. செல்வராசா (கன்பொல்லை) 92
கா. செல்வராசா 93
செல்வ பத்மநாதன் 95
க. செல்வராசா 103
ஆர். செல்வநாயகம் 104, 155
ஆ. செல்வராசா 104
டாக்டர் செபஸ்தியாம்பிள்ளை 130
ப. சி. செல்வநாயகம் 130



படிப்பகம்

www.padippakam.com


ந. செல்வராசா 155
எம்.பி. செல்வரத்தினம் 36, 58

எஸ். சேவற் கொடியோன் 36
வை. சோதிஸ் 8, 13

ஞானியார் 52
ஞானியார் க. வெற்றிவேல் 58

டட்லி சேனாநாயக்க 34, 71

கே. டானியல் 33, 34, 35, 42, 45, 47, 48, 58, 61, 74, 75, 76, 84, 113, 114, 119.

டொமினிக் ஜீவா 33,48, 59, 94, 116

வி.என். நவரத்தினம் 86
க. நல்லப்பு (சங்கானை) 92
நந்தினி சேவியர் 94
க. நடேசபிள்ளை 104
எஸ். நல்லையா 104
சி. நவரத்தினம் 119, 155
எஸ். நவரத்தினம் 59, 134
கே.சி. நடராஜா 34
எஸ். நடேசன் 42
நடராசா (சுழிபுரம்) 58

பி. நாகலிங்கம் 17, 19,50, 51, 58
எஸ்.ரி.என். நாகரட்ணம் 42,74, 84, 85, 86, 90.
வ. நாகலிங்கம் 33, 41,82
எஸ் நாகேந்திரம் 58

நிசார் 80

நீர்வை பொன்னையன் 48, 58, 61, 64, 15, 98, 105, 113.

க. தணிகாசலம் 94, 119, 155
எஸ். தர்மராஜா 98
பொ. தர்மகுலராஜா 104
த. தர்மலிங்கம் 119, 155.
வி. தர்மலிங்கம் 122
இ. தம்பையா 126
க. தயாளன் 143
ந. தம்பிமுத்து 130

ஆ. தங்கராசா 155
ஓ.ஈ. தம்பர் 36
டபிள்யூ. தசநாயக்க 43
தருமலிங்கம் 58
தங்கரத்தினம் 9
தர்மகுலசிங்கம் (ஜெயம்) 17, 30, 32
தர்மலிங்கம் (சுழிபுரம்) 33
ஆர். ஆர். தர்மரட்ணம் 18, 51

மு. திருச்செல்வம் 16, 72
எஸ். தியாகராஜா 104
வி. திவ்வியராஜன் 130
மு. தியாகராஜா 144

துரைசாமி குருக்கள் 89
வே. துரைரட்ணம் 109
இ. துரைசிங்கம் 129
துரைராசா 45
ஆர். துரைராஜசிங்கம் 51
எஸ். துரைராஜசிங்கம் 18

சோ. தேவராஜா 104, 125, 126, 130, 143, 144, 155.
தையிட்டி சண்முகநாதன் 42

எஸ். தொண்டமான் 71

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா 36, 43, 48, 53, 55, 106, 144,
எஸ்.டி. பண்டாரநாயக்கா 76
கா. பஞ்சலிங்கம் 103, 104, 144, 155
பி. பசுபதி (சங்கானை) 33, 50, 90, 58, 155
பரமேஸ்வரி 42
ஜி. பண்டித 46
கவிஞர் பசுபதி 48
க. பசுபதி 33, 36, 42, 47, 58
எஸ். பத்மநாதன் 59

பாஸ்கரன் 155

பிரேம்ஜி ஞானசுந்தரம் 48, 94
ஆர். பிரேமதாஸ 133
பிரேம்லால் குமாரசிறி 60
பிலிப் குணவர்த்தனா 6
பீற்றர் கெனமன் 8, 13, 34, 46, 57, 59




படிப்பகம்

www.padippakam.com


புதுவை ரத்தினதுரை 94
வீ. புஸ்பரட்ணம் 104

பூமகன் 94
பூபதி செல்வராசா 52
ஆர். ஆ். பூபாலசிங்கம் 22, 23, 59

டி.டி. பெரேரா 74
பெனடிக்ற் பாலன் 58, 95
பெரிய அஸீஸ் 80
என்.எம். பெரேரா 6

ஆர்.கே. பேராயிவர் 36

ஜீ.ஜீ. பொன்னம்பலம் 16, 17, 24, 31, 32, 41, 45, 65, 72, 153
வ. பொன்னம்பலம் 36, 41, 42, 47, 59, 67, 86, 115, 122, 123
ஆசிரியர் பொன்னம்பலம் 130
பொன்னம்பலம் இராமநாதன் 16
எஸ். பொன்னுத்துரை 48
பொன் கந்தையா 8, 13, 20, 30, 31, 32, 34, 35, 42, 43, 44, 45, 51

எஸ்.எவ். போஜிஜா 58

வ. மகாதேவன் 130, 155
கா. மகாதேவன் 155
எஸ். மகேசன் 36
வி. மகாலிங்கம் 36, 42
எஸ் மகாலிங்கம் 45, 58
மகேஸ்வரி கந்தையா 51

மாதகல் வ. கந்தசாமி 36, 45, 58
கே. மாணிக்கவாசகர் 61
எஸ். மாணிக்கம் 109
மா ஓ சேதுங் 56, 62, 71, 137, 149

எம். முத்தையா 58, 74, 113
முருகு கந்தராசா 94
இ. முருகையன் 48
முருகு ரத்தினம் 94
முத்துலிங்கம் 95
நா. முத்தையா (man) 33, 34, 42, 47, 50, 58, 61, 81, 82, 84, 119.
பொ. முருகேசு 155
முருகுப்பிள்ளை 9

முதலி சின்னத்தம்பி 18

எம்ஜி. மென்டிஸ் 7,8,13, 46

கு. மோகன் 155

செ. யோகநாதன் 58, 65, 95
நா. யோகேந்திரநாதன் 74, 79, 108.

கு. வன்னியசிங்கம் 119
வை. வன்னியசிங்கம் 155
வாட்சன் பெர்னாண்டோ 98, 100
எஸ். வடிவநாதன் 113
வன்னியன் குமரேசு (சங்கானை) 92
வள்ளியம்மை சுப்பிரமணியம் 52
வரதராஜப் பெருமாள் 36

எஸ். விஜயானந்தன் 59, 115, 123, 129.
எஸ்.ஏ. விக்கிரமசிங்க 4, 6, 7, 8, 34, 57, 59, 142
அ. விஸ்வநாதன் 18, 41, 51
எஸ் விஜயானந்தன் 59

எஸ். வேலாயுதம் 65
கி. வேலும் மயிலும் (கன்பொல்லை-கரவெட்டி) 92, 93, 144
வேதவல்லி கந்தையா 51, 52

கே. வைகுந்தவாசன் 67
வைத்தி (சண்டிலிப்பாய்) 92
அ. வைத்திலிங்கம் 7, 8, 13, 30, 31, 32, 35, 36, 41, 42, 46, 58, 59,115
வி. வைரமுத்து 50

லெஸ்லி குணவர்த்தனா 6

ரபீக் 80
ரஜீவ் காந்தி 133
என்.கே. ரகுநாதன் 42, 48, 58, 94
எஸ். ரகுநாதன் 58, 144

எஸ். ராசா 113
அ. ராமசாமி ஐயர் 20
தி. ராம்குமார் 144, 155




படிப்பகம்

www.padippakam.com

ருத்ரா கந்தசாமி 52

றொபேர்ட் குணவர்த்தன 6

எஸ்.எச். றசீன் 80

கே. ஜனகன் 36, 58,61
ஜே.ஆர். ஜயவர்த்தன 43,127, 128, 130, 131, 132, 133, 144, 146

ப. ஜீவானந்தம் 50, 51

எஸ். ஜெயகுமார் 130
எஸ். ஜெயசிங்கம் 42, 51,59
எஸ். ஜெயசீலன் 58

எஸ். ஜோர்ஜ் 65

ஞா. ஸ்ரீமனோகரன் 58, 155

ஹெண்டி பேரின்பநாயகம் 17, 36

ஸ்டாலின் 56



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



இந்நூலின் ஆசிரியர் சின்னத்தம்பி காசிப்பிள்ளை செந்திவேல் வட புலத்து புத்தூர்-சிறுப்பிட்டியைச் சேர்ந்தவர். நிலவுடமை வர்க்க சாதிய அமைப்பு முறை இறுகி நின்ற சமூகச் சூழலை உடைத்துக் கொண்டு உழைப்பாளி வர்க்கக் குடும்பத்தில் இருந்து பொதுவுடமை இயக்கத்திற்கு வந்தவர். தனது பதினேழாவது வயதில் மாணவனாக இருந்தபோது மாக்சிசத்தால் ஈர்க்கப்பட்டவர். அதன் வழியில் பொதுவுடமை இயக்கத்தின் மாணவர் அமைப்பிலும் பின் 1960 களின் முற்கூறில் இளைஞர் இயக்கத்திலும் அவற்றின் ஊடாக கட்சியிலும் இணைந்து கொண்டவர். பாடசாலைக் கல்வியை முடித்த பின்பு 1965 ஆம் ஆண்டில் புரட்சிகரப் பொதுவுடமைக் கட்சியின் வட புலத்திற்கான முழு நேர அரசியல் ஊழியராகி இன்று வரை முழு நேர அரசியல் பணியில் இருந்து வருபவர். வாலிபர் இயக்கத்தின் வட பிரதேசச் செயலாளர், பின் வட பிரதேசக் கட்சிச் செயலாளராக இருந்து வந்தவர். 1989 இல் இருந்து புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளராகப் பணிபுரிந்து வருகிறார். புரட்சிகர பொதுவுடமைக் கட்சியின் இளைஞர் போராட்டங்கள், வெகுஜனப் போராட்டங்கள்,தொழிற்சங்கப் போராட்டங்கள் என்பனவற்றில் முன்னணியில் நின்று வந்த தோழர் சி.கா.செ. கட்சிப் பத்திரிகைகளான தொழிலாளி, பாட்டாளி, செம்பதாகை ஆகியவற்றின் ஆசிரியர் குழுக்களில் பொறுப்பாக இருந்து செயலாற்றி வந்தவர். புதியபூமி பத்திரிகையின் பொறுப்பாசிரியராக இருந்தும் வருகிறார். கலை, இலக்கியத்தின் மார்க்சிசப் பார்வையைச் செலுத்தி அதன் வளத்திற்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து வருபவர். ஏற்கனவே மூன்று நூல்களை எழுதியுள்ள தோழர் செந்தில் இப்போது வடபுலத்து பொதுவுடமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும் என்னும் இந்நூலை எழுதியுள்ளார். அவர் நாற்பது வருடங்களுக்கு மேலாக பொதுவுடமை இயக்க முழு நேர அரசியல் பணியூடாகச் செயற்பட்டு வருகிறார். அதன் மூலம் இலங்கைத் தமிழர் மத்தியில் இந்நூலை எழுதக் கூடிய தகுதிப்பாடுடையவராக தோழர் சி.கா.செ.விளங்குகின்றார்.

தமிழ் மக்களின் அரசியல் பரப்பில் மறக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட அரசியல் வரலாற்றின் மறுபக்கத்தைத் தோழர் செந்திவேல் இந்நூல் மூலம் பிரகடனப்படுத்தி சுவைபடத் தொகுத்துள்ளார்.

படிப்பகம்